# சொப்பன மாளிகை

(நாவல்)

79
1-54

கன்னட மூலம்: வி. எம். இனம்தார்

தமிழாக்கம்: ஆனந்ததீர்த்தன்

033,3 N1M,S
N153
1ை88௦௦ 2

லையம் லிமிடெட்

ட் :: சென்னை-18

# சொப்பன மாளிகை

(நாவல்)

79/1-54

★

கன்னட மூலம்: வி. எம். இனாம்தார்

தமிழாக்கம்: ஆனந்ததீர்த்தன்

★

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை – 18

போன்: 88574 தபால் பெட்டி 1457

உரிமை பதிவு
அமுதம் : 74
முதற் பதிப்பு : நவம்பர், 1953

108000
033,3N1M,5
N53

விலை ரூ. 2-10-0

நாஷனல் ஆர்ட் பிரஸ்,
தேனம்பேட்டை, சென்னை-18

# முகவுரை

'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அநுசரித்து நான் எப்போதும் ஏதாவது ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுதும், கியூவில் நிற்கவேண்டிய சந்தர்ப்பங்களிலும், சில சங்கீதக் கச்சேரிகளைக் கேட்கப் போகும் பொழுதும் என் கையில் ஒரு புத்தகம் கண்டிப்பாக இருக்கும்.

அன்றும் அப்படித்தான். ஞாயிற்றுக்கிழமை. ஏதாவது சினிமா பார்க்கலாமென நினைத்து மத்தியான்னம் இரண்டு மணிக்கு வீட்டை நிப் புறப்பட்டேன். போகும்போது முதல் நாள் தபாலில் வந்திருந்த புதுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு சென்றேன். பஸ்ஸிலும் ஈருவதற்கு வசதியாக இடம் கிடைக்கவே புத்தகத்தைப் பிரித்து க்க ஆரம்பித்தேன்.

"ஸார், டிக்கெட்" என்று கண்டக்டர் என்னை அழைத்த போது ா இன்னும் டிக்கெட் வாங்கவில்லை என்ற ஞாபகம் வந்தது. ல்றையைக் கொடுத்து, "மௌண்ட்ரோட். ஒரு டிக்கெட்" என்று றி விட்டு மீண்டும் புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தினேன்.

"மௌண்ட்ரோட்! மௌண்ட்ரோட் டிக்கட்டெல்லாம் இறங் க" என்று கண்டக்டர் நாலு முறை கத்தினானாம். ஆனால் எனக்குத் ரியாது. பஸ் ஜலண்டு மைதானத்தைத் தாண்டிச் சென்று கொண் ந்த போது நான் இன்னும் இறங்காமல் இருப்பதைக் கவனித்த ண்டக்டர் என்னுடன் சண்டைக்கு வந்தபோது தான் அதை அறிந்து காண்டேன்.

"கோபித்துக் கொள்ளாதே அப்பா! இதோ ஒரணா. அடுத்த ஸ்டாப்பில் இறக்கி விட்டு விடு" என்று அவனைச் சமாதானம் செய்து விட்டு மறுபடியும் புத்தகத்தில் ஆழ்ந்தேன்.

அடுத்த ஸ்டாப்பில் இறங்கி எதிர்ப்புறம் சென்று மைலாப்பூர் பஸ்ஸுக்காகக் காத்து நின்றேன். சினிமா பார்க்கும் எண்ணத்தை விட்டு விட்டேன்.

மூன்று மணிக்கெல்லாம் வீடு திரும்பிய என்னைக் கண்டதும் என் மனைவி, "என்ன இது, அதற்குள்ளே திரும்பி வந்து விட்டீர்களே? சினிமாவுக்குப் போவதாகச் சொன்னீர்களே!" என்று கேட்டாள்.

"இன்றைக்குப் போகவில்லை. அதை விட சுவாரஸ்யமான பொழுது போக்கு அகப்பட்டிருக்கிறது" என்று அவளிடம் சொல்லி விட்டு நேரே என் அறைக்குச் சென்றேன். புத்தகத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

"டங்...டங்..." என்று சுவர்க் கடிகாரம் எட்டு அடிப்பதற்கும் நான் படித்து முடித்து உள்ளத் திருப்தியோடு அப் புத்தகத்தை மூடி வைப்பதற்கும் சரியாக இருந்தது.

அந்தப் புத்தகம் பிரபல கன்னட எழுத்தாளர் ஸ்ரீ வி. எம். இனாம்தார் எழுதிய 'கனசின மனெ' என்ற நாவல்.

மேலே குறிப்பிட்ட சம்பவம் நடந்தது 1948ல்.

ஸ்ரீ இனாம்தார் அவர்களின் நடையழகும், கருத்தாழமும், பாத்திர நிருபணமும், கதையின் சுவாரஸ்யமும் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன. முக்கியக் கதா பாத்திரங்களான மோஹினி, வசந்தன்,

ஆனந்தன், பாஸ்கரராவ், இவர்களை என்னால் மறக்கவே முடியவில்லை. மறுபடியும் மறுபடியும் அந்த நாவலைப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் எழுந்தது. சுமார் ஏழு எட்டு முறை அதை வாசித்திருப்பேன். ஒரு தடவையாவது ஓர் இடத்திலாவது எனக்கு அலுப்புத் தட்டவே இல்லை. அவ்வாறு ஒரு முறை வாசித்துக் கொண்டிருந்த போது தான் திடீரென ஓர் எண்ணம் என்னுள்ளே எழுந்தது.

‘ஏன் இந்த நாவலைத் தமிழில் எழுதக்கூடாது?’

எண்ணம் தோன்றியது தான் தாமதம்; மொழி பெயர்ப்பு வேலையை ஆரம்பித்து விட்டேன். சொப்பன மாளிகை உருவா ஆரம்பித்து விட்டது.

மூல ஆசிரியரின் அநுமதி பெற வேண்டுமென்பதைப் பற்றி போ இந்த மொழி பெயர்ப்பு நூலை யார் வெளியிடுவார்கள் என்ப பற்றியோ அப்போது என் மனம் நினைக்கவில்லை.

எழுத வேண்டுமென்ற ஓர் ஆர்வம்; ஒரு வேகம். அ வேகத்தில் எழுதினேன். சுமார் பதினைந்து நாட்களுக்குள்ளாக எ முடித்து விட்டேன்.

அதன் பிறகுதான் மற்ற எண்ணங்கள் தோன்றின. ஸ்ரீ இ தார் அவர்களின் அநுமதி வேண்டி அவருக்கு எழுதினேன். ம உவந்து அவர் உடனே என் வேண்டுகோளுக்கு இசைந்தார். அவரு என் இதய பூர்வமான நன்றியைச் செலுத்துகிறேன்.

பிரசுரத்தைப் பற்றிய கவலை அடுத்ததாக எழுந்தது.

சொந்தக் கற்பனையால் எழுதிய நாவலையே பிரசுரத்திற் எடுத்துக்கொள்ளச் சிரமமாகவுள்ள இந்த நாட்களிலே மொழிபெயர்ப்பு நாவலை யார் பிரசுரிப்பார்கள்? அதுவும், நான் மொழி பெயர்த்திருப்ப ஹிந்தி, வங்காளி, மராத்தி நாவல் அல்ல. கன்னட நாவல்! யா இதைச் சீண்டுவார்கள் என்ற கலக்கம் ஏற்பட்டது. ஏதோ சில சிறு கதைகளை விட்டால், கன்னடத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுப் பிரசுரமான நூல் ஏதும் இதுவரை இல்லை என்பதே என் கல கத்திற்குக் காரணமாயிருந்தது.

அமுத நிலையத்தார் அந்தக் கலக்கத்தைப் போக்கி எனக்கு உற்சாகத்தை ஊட்டினார்கள். இன்று இதோ சொப்பன மாளிகை உங்கள் கைகளில் கிடைத்து விட்டது.

இந்த முயற்சியில் நான் ஈடு பட்டிருந்த போது தங்கள் அபிப்பி ராயங்களைத் தெரிவித்தும், கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்து என்னை உற்சாக மூட்டியும் உதவிய என் மனைவி ‘ஹேமு’ வுக்கும் நண்பர்கள் ஸ்ரீ எல்லார்வி, பி. வி. ஆர். இவர்களுக்கும் என் நன்றி.

*மயிலாப்பூர்*
*கார்த்திகைத் திருநாள்*
*20—11—53*

ஆனந்ததீர்த்தன்

# சொப்பன மாளிகை

## 1

சர்ச்கேட் ஸ்டேஷன் புக்கிங் ஆபீஸுக் கருகில் நின்று யாரையோ எதிர் பார்த்துக் கொண்டிருந்த வசந்தனுக்கு அலுப்புண்டாயிற்று. மணி 3–20 ஆகி விட்டிருந்த போதிலும் மூன்று மணிக்கே வருவதாகச் சொல்லியிருந்தவள் இன்னும் வரவில்லை. இன்னும் ஐந்து நிமிஷங்களில் இன்னொரு 'லோகல்' வர இருந்தது. வசந்தன் பக்கத்தில் உள்ள சுவரில் ஒட்டியிருந்த கால அட்டவணையைப் பார்க்கத் தொடங்கினான். இன்னும் இருபது நிமிஷங்களுக்குள் வரும் 'லோகல்' வந்து சேரும் வரை இருந்து பார்த்து விட்டு, பிறகு தாதருக்குத் திரும்பிப் போய் விடுவதென்று நிச்சயம் செய்து கொண்டான். குறிப்பிட்ட நேரத்திற்கு வருகிறேன் என்று சொல்லியுள்ளவர்கள் அதன்படி வராமலிருந்தால் அவர்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருப்பவர்களுக்கு ஏமாற்றம் உண்டாவது சகஜம். ஆனால் வசந்தனுக்கோ ஏமாற்றத்தை விட உற்சாக பங்கமே அதிகமாக இருந்தது. உற்சாக பங்கத்தையும் விட அதிகமாக, அவனுடைய ஆவல் தரைமட்டமாகிக் கொண்டிருந்தது. ஏனென்றால் மூன்று மணிக்கு அவனை அங்கே சந்திப்பதாகச் சொல்லியிருந்தவள் அவனுடைய தோழியோ, உறவினளோ அல்ல; போரிவிலியில் தன்னுடைய அறைக்கு நான்கு வீடுகள் தள்ளி ஐந்தாவது வீட்டில் வசித்துவந்த ஆனந்தனுடைய மனைவி, மோஹினி! வேறு யாராகவாவது இருந்தால் வசந்தன் இவ்வளவு நேரம் காத்திருக்கவே மாட்டான்; எப்பொழுதோ புறப்பட்டுப் போயிருப்பான். ஆனால் மோஹினி எதற்

காகத் தன்னைப் பார்த்துப் பேச விரும்பின
அறியாதிருந்த வசந்தனுக்கு, எவ்வளவுதான்
டாலும் மரியாதைக்காகவாவது காத்து நிற்ப
தோன்றிக்கொண்டிருந்தது.

ஒரு 'லோகல்' வந்து நின்றதும் ஸ்டேஷனில
ஜனத்திரள் இரண்டு நிமிஷங்களில் திபுதிபுவென்று உ
விட்டது. அன்று சனிக்கிழமையாகையால் காரியால
விருந்து வீடு திரும்புபவர்களின் கூட்டமும் ஏராளமாக இருந்
அந்த வண்டியிலும் மோஹினி வரவில்லை. இனி ஒரே ஒரு வண்டியை மட்டும் பார்ப்பது என்று நிச்சயம் செய்துகொண்டு பிளாட்பாரத்தில் உலாவத் தொடங்கினன். மனத்தில் ஒரே ஒரு எண்ணம் கேள்வியாகத் தோன்றி, பதில் கிடைக்காத காரணத்தால் ஊசலாடிக்கொண்டிருந்தது. தான் காலையில் ஒன்பது மணிக்கு ஆபீஸுக்குப் புறப்பட்ட பொழுது போரிவிலி பிளாட்பாரத்தில் அவள் தன்னைச் சந்தித்துப் பேசிய காட்சி மீண்டும் மீண்டும் அவன் கண்ணெதிரே நிழலாட்டம் காட்டியது. வசந்தன் எவ்வளவோ முறை அவள் அந்தக் காலை வண்டியில் செல்லுவதைப் பார்த்திருக்கிறன். அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் ஆனந்தனுடைய அதிருஷ்டத்தைக் குறித்து நினைக்காமலிருந்ததில்லை—அவளது அழகு அத்தகையது! இது வரையிலும் அவன் தானகச் சென்று அவளுடன் பேசியதில்லை. ஆனல் சமீபத்தில் சில நாட்களாக எங்கேயாவது வழியில் அவளைச் சந்திக்கும் பொழுது, "என்ன, எல்லோரும் சௌக்கியந்தானே? ஆனந்தன் என்ன சொல்லுகிறன்?" என்பன போன்ற சாதாரணமான கேள்விகளைக் கேட்டுப் புன்முறுவல் பூத்துவிட்டு முன் செல்வது வழக்கமாகி யிருந்தது. இதற்குக் காரணம், சென்ற ஒரு வருஷத்திற்குள் வசந்தனுக்கும் ஆனந்தனுக்கு மிடையே ஏற்பட்டிருந்த தொடர்பு வளர்ந்து நட்பாக மலரும் தறுவாயிலிருந்ததுதான். விடுமுறை கிடைக்கும்போது இரண்டிலே நாலிலே ஆனந்தன் வசந்தனுடைய அறைக்கு வந்து போய்க்கொண்டிருந்தான். பல விஷயங்களைப்பற்றி அரட்டை அடிப்பான்; படிப்பதற்கென்று வசந்தனிடமிருந்து நிறையப் புத்தகங்களை எடுத்துச் செல்வான். ஏதோ ஒரு வகையில் அவர்களிடை நெருங்கிய தொடர்பு வளர்ந்து கொண்டே வந்தது. வசந்தனும் ஆனந்தனுடன் அவன் வீட்டுக்குச்

செல்வது உண்டு. ஓரிரு சமயங்களில் பண்டிகையை முன்னிட்டு வசந்தன் ஆனந்தனுடைய வீட்டில் விருந்துணவு உட்கொண்டுமிருந்தான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நடு நடுவே மோஹினி வசந்தனுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசுவதுண்டு. பதினைந்து நாட்களுக்கு முன்னால் ஆனந்தன், மோஹினி, வசந்தன் மூவரும் ஒரு சினிமாப் பார்க்கச் சென்றிருந்தார்கள். அந்தப் படத்தின் கதாநாயகியின் ஸ்தானமானங்களைப்பற்றி அம் மூவருள்ளும் பலமான விவாதம் ஒன்று நடைபெற்றது. அந்த விவாதத்தில் ஆனந்தனும் மோஹினியும் எதிர் எதிர்க் கட்சி; வசந்தன் மோஹினியின் கட்சியை ஆதரித்தான். அவனுடைய ஆதரவு தனக்கிருப்பதை அறிந்துகொண்ட மோஹினி மிகுந்த உற்சாகத்துடனேயே தன்னுடைய வாதத்தை நடத்தியிருந்தாள்... ஆனால் இதுவரையில் அவள் தானாகவே வந்து அவனுடன் பேசியதில்லை; அப்படியிருக்க இன்று காலை அவளாகவே வந்து ஸ்டேஷனில் அவனுடன் பேசியது வசந்தனுக்கு விசித்திரமாகத் தோன்றியது. ஆனால் மறுநிமிடமே அவனுக்குத் தோன்றிற்று, அவர்களிருவருக்கு மிடையே நடைபெற்ற பேச்சு இது முதல் தடவையாக அல்ல என்று. வாரத்தில் குறைந்தது மூன்று நான்கு முறையாவது ஸ்டேஷனில் சந்தித்துக்கொள்ளுவதாலும், தனக்கும் ஆனந்தனுக்கும் இடையேயுள்ள தொடர்பு நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாலும், எவ்வளவோ முறை மோஹினியின் கண்களும் தன் கண்களும் வாய் பேசுவதைவிட அதிகமாகவே பேசிக்கொண்டுள்ளதையும் நினைத்த பிறகு மோஹினி அன்று தன்னுடன் பேசியதால் ஏற்பட்ட ஆச்சரியம் மறைந்து, அவள் எதற்காகத் தன்னைக் கண்டு பேசவேண்டுமென விரும்பினாள் என்னும் ஆவலே மேலிட்டு நின்றது.

அன்று காலை ரெயிலுக்காகக் காத்து நின்ற வசந்தன் தன்னை நோக்கி வந்துகொண்டிருந்த மோஹினியைக் கண்டு அரை நிமிடம் திடுக்கிட்டான். என்ன, ஏது என்று அவன் கேட்க வாயெடுக்கு முன்னரே மோஹினியே பேச்சை ஆரம்பித்தாள்.

"உங்களுடன் சில வார்த்தைகள் பேச வேண்டியிருக்கிறது."

"என்னுடனா?"

"ஊம்."

"சொல்லுவதுதானே?"

"எப்பொழுது?"

"எப்பொழுது என்ருல்? இப்பொழுதே சொல்லிவிடலாமே!"

"இன்று மத்தியான்னம் உங்களுக்கு ஆபீஸ் கிடையாதல்லவா?"

"இன்று மத்தியான்னம் நான் ஆபீஸை விட்டுப் புறப்பட இரண்டரை மணி..."

"உங்கள் ஆபீஸ் எங்கே?"

"போர்ட்."

"அப்படியானுல் நான் சர்ச் கேட்டுக்கு வந்தால் செளகரியமாயிருக்குமா?"

"ஏன்? அந்தப் பக்கம் வரவேண்டிய காரியம் இருக்கிறதா?"

"ஆமாம்."

"எவ்வளவு மணிக்கு?"

"மூன்று மணிக்கு வரட்டுமா?"

"உங்கள் செளகரியம்."

"நீங்கள் காத்துக்கொண்டிருப்பீர்களா?"

"ஊம்."

"எங்கே?"

"நீங்களே ஓர் இடத்தைச் சொல்லுங்கள்."

"புக்கிங் ஆபீஸ் பக்கத்தில் நான் நின்றுகொண்டிருப்பேன்."

"சரி. ஆனுல் என்ன விஷயம் என்பதைத் தெரிவிக்கக் கூடாதா?"

"தெரிவிக்காமலென்ன? தெரிவிக்கத்தானே வருகிறேன்."

"ஆனந்தனும் வருகிருனு?"

"இல்லை!"

"அப்படியானுல்..." என்று சொல்லுவதற் குள்ளாகவே வண்டி வந்துவிட்டது. மோஹினி பெண்கள் 'கம்பார்ட்மெண்டில்' ஏறிக்கொண்டுவிட்டாள்.

அந்த நாழிகையிலிருந்து இது வரையில் வசந்தனுக்கு அதுவே யோசனை. எதற்காக அழைத்திருக்கக் கூடும்? சொல்ல வேண்டிய விஷயம் என்னவாக இருக்கலாம்? ஆபீஸில் வேலையிலேயே அவனுல் கவனத்தைச் செலுத்த இயலவில்லை

ஆயிரம் எண்ணங்கள் அவன் மனத்திலே தோன்றிச் சென்றிருந்தன. என்ன விஷயம் என்பதை அறிய வேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம் இருந்தாலும், அவளை வரச் சொல்லி விட்டுத் தானும் அவளுக்காகக் காத்துக் கொண்டு நிற்பது சரியா என்ற கேள்வி மற்றொரு புறம் அவனைத் துளைத்துக் கொண்டிருந்தது. என்னவானாலும் அவள் மற்றொருவன் மனைவி. ஆனால் உடனே தனக்கே சமாதானம் சொல்லிக் கொண்டான்: 'அவளாகவே வந்து பேசினால் நான் என்ன செய்ய முடியும்? என் தவறு என்ன?' என்று. அவளுக்காக இனியும் காத்து நிற்க வேண்டுமா வேண்டாமா என்ற மனப் போராட்டத்தில், அழகை எங்கு கண்டாலும் பறி போய் விடும் சுபாவ முள்ள அவன் மனம் அவனது அறிவை மட்டந் தட்டி விட்டது. ஆனந்தன், மோஹினி இவர்களது இல்லற வாழ்க்கையைக் குறித்து எவ்வளவோ வதந்திகளை வசந்தன் பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தான். தனக்கும் ஆனந்தனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உத்தேசித்து, ஒருகால் அந்த விஷயங்களைக் குறித்துப் பேசத்தான் அழைத்திருப்பாளோ என்றும் யோசித்தான். ஆனால் அவனது அறிவு பல கேள்விகளைத்தான் கிளப்பி விட்டுக் கொண்டிருந்ததே அல்லாமல் ஒன்றுக்காவது பதில் சொல்லச் சக்தியுடையதாயிருக்கவில்லை.

நின்று நின்று போதுமென்றாகிவிட்டது. கால்களும் வலிக்க ஆரம்பித்தன. 3-40க்கு ஒரு 'லோகல்' வந்தது. அதிலும் அவள் வராவிட்டால் தான் புறப்பட்டுப் போய் விடவேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டான். முட்டி மோதிக்கொண்டு வந்து கொண்டிருந்த ஜனத்திரளில் காணப்பட்ட ஒவ்வொரு பெண்ணையும் வசந்தன் கவனித்தான். ஜனத்திரள் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று. கடைசியாக வந்துகொண்டிருந்த நான்கைந்து பேருக்குப் பின்னால் மோஹினி வந்து கொண்டிருந்தாள்! ஏனோ தெரியவில்லை, வசந்தனின் உடம்பு ஒரு கணம் ஜம்மென்றது. கையில் ஒரு கான்வாஸ் பையை வைத்துக் கொண்டு மோஹினி அவனையே தேடி வந்து கொண்டிருந்தாள்.

"மன்னிக்க வேண்டும். நிரம்ப நேரமாகிவிட்டது. நீங்கள் வந்து அதிக நேரமாய்விட்டதா?"

"சரியாக மூன்று மணிக்கு வந்தேன்."

"காலையில் அவசரத்தில் சொல்ல மறந்து விட்டேன். எங்களுக்கு இன்று கடைசி பீரியட் ஸ்பெஷல் கிளாஸ் இருந்தது. அதிலிருந்து தப்பித்துக் கொண்டு வரவும் முடியவில்லை. உங்களுக்கு மிகவும் அலுப்பாகப் போயிருக்கும்......"

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. ஆனால் இந்த வண்டியில் நீங்கள் வராமலிருந்தால் நான் புறப்பட்டுச் சென்றிருப்பேன்..."

"இன்னும் பத்து நிமிஷம் முன்னடியே வந்திருக்கலாம். மத்தியில் வண்டி வேறே நின்றுபோய் விட்டது......"

"ஆமாம். வண்டி பத்து நிமிஷம் தாமதித்துத்தான் வந்தது."

"இப்பொழுது எங்கே போவோம்? வெளியே செல்வோமா?"

"ஊம்... இங்கேயே ஏதாவது ரெஸ்டாரண்டிற்குச் சென்று டீ சாப்பிடலாமல்லவா?"

"செய்யலாம்" என்று மோஹினி மௌனமாகவே பதிலளித்தாள். ஸ்டேஷனுக்கு மேற்குப்புறமுள்ள பெரிய ரோட்டின் வழியே இருவரும் ஜோடியாக நடந்து சென்றனர். வசந்தனது கண்கள் நல்ல டீ கடை ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தன. வெறுமே டீ மாத்திரம் குடித்து விட்டு வந்து விடுவதானால் அங்கேயே பக்கத்திலிருந்த கடைக்குச் செல்லலாம். ஆனால் குடிக்க வேண்டிய டீயைவிட பேசவேண்டிய பேச்சுத்தான் முக்கியமானதாயிருந்ததால், நிச்சிந்தையாக உட்கார்ந்து பேச நல்ல இடமுடைய ரெஸ்டாரண்டை அவன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். பாதையின் முனை வரையில் வந்தாய் விட்டது. சாயங்கால வெயில் முகத்தில் அடித்துக் கொண்டிருந்தது. எதிரே கடல் விஸ்தாரமாகப் பரவியிருந்தது. அந்த மூலையிலிருந்த கடையே கடைசியானதாக இருந்ததால் இருவரும் அதற்குள்ளேயே நுழைந்தனர். எதிரே இருந்த நாற்காலியின்மேல் தனது தொப்பியைக் கழற்றி வைத்துக்கொண்டிருந்த வசந்தனிடம் மோஹினி, "ஏன் இங்கே? உள்ளே அந்த ரூமிலேயே உட்கார்ந்து கொள்ளலாமல்லவா?" என்றாள்.

எதிர்ப்புறம் இருந்த குடும்பஅறை (family room) காலியாகத்தான் இருந்தது. வசந்தனுக்கு ஒரு கணம் என்னவோ மாதிரி இருந்தது. இருந்த போதிலும் தொப்பியை மீண்டும் கையிலெடுத்துக் கொண்டு உள்ளே செல்லத் தொடங்கினான். அவனுக்கருகி

லுள்ள நாற்காலியில் மோஹினி உட்காருவதற்குள்ளாகவே ஹோட்டல் சிப்பந்தி உள்ளே நுழைந்தான்.

"நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்றான் வசந்தன்.

"எனக்கொன்றும் வேண்டாம்......"

"வெறும் டீ கூட வேண்டாமா?"

"உம். வெறும் டீ போதும்."

"சாப்பிடுவதற்கு?"

"சாப்பிடுவதற்கு ஒன்றும் வேண்டாம்."

"பிஸ்கட் கொண்டுவரச் சொல்லட்டுமா?"

"ஊம்......"

"தோ சாய், ஔர் பிஸ்கட் லாவ்."

ஹோட்டல் சிப்பந்தி வெளியேறினான். மோஹினி தனது கையிலணிந்துள்ள பொன் வளையல்களை முன்னும் பின்னும் சுருவிக் கொண்டிருந்தாள். வசந்தனது மனநிலை விசித்திரமாக இருந்தது. என்ன பேசவேண்டுமென்பதை அறியாமல் மோஹினியைப் பார்த்தான்; அதே சமயத்தில் அவளும் அவனைப் பார்த்துக் குறுநகையுடன், "என்ன?" என்றாள்.

"அதையேதான் நானும் கேட்கிறேன்?"

"முதலில் நீங்கள் சொல்லுங்கள்."

"நானென்ன முதலில் சொல்லுவது? என்னவோ சொல்ல வேண்டுமென்று அழைத்தவர் நீங்கள்!"

"ஆமாம். ஆனாலும், உங்களிடமிருந்து ஒரு விஷயம் தெரிய வேண்டியிருக்கிறது!"

"என்ன?"

"முந்தாநாள் நீங்கள் எங்கள் வீட்டைத்தாண்டிச் சென்று கொண்டிருந்த பொழுது என் கணவரின் தமையனார் பாஸ்கரராவ் உங்களுடன் பேச்சுக் கொடுத்தாரல்லவா?"

"ஆமாம்."

"என்னவென்று சொன்னார்?"

"ஒன்றும் இல்லையே!"

"ஒன்றும் இல்லையா? அப்படியானால் இருபது நிமிஷநேரம் அப்படி என்னதான் பேசினீர்கள்? என்னைப்பற்றித்தானே பேசினார்?"

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கா? அவருக்குப் பேசுவதற்கு என்னைத்தவிர வேறு விஷயமே கிடையாது. என்னைப்பற்றி எவ்வளவு துஷ்பிரசாரம் பண்ணினாலும் அவருக்குச் சமாதானமே ஏற்படுவதில்லை."

"ஆனால் என்னிடம் அவர் அப்படியொன்றும் பேசவில்லை."

"அப்படியானால் என்னதான் பேசினார்?"

"என்னவோ அவருக்குத் தப்பாகத் தோன்றியிருக்க வேண்டும்......பாவம்......"

"ஏன் இப்படி மூடுகிறீர்கள்? அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே உங்களிடம் வந்து பேசும் துணிவை ஏற்படுத்திக் கொண்டேன்......உங்களுக்கு விநோதமாகத் தோன்றலாம். ஆனால் என்னவோ இந்த விஷயத்தில் உங்களுடன் நம்பிக்கையாகப் பேசலாம் என்று தோன்றியது. அதற்காகத்தான் உங்களைக் கேட்டுக் கொண்டேன்."

இனி இதற்குமேல் தப்பமுடியாது என்று தோன்றியது வசந்தனுக்கு. அவளது குரலில் ஏதோ அறிய முடியாத துக்கம் அடங்கிக்கொண்டிருந்ததுபோல் தோன்றியது. அவளது பார்வை, "என்மேல் உங்களுக்கு இவ்வளவுகூடக் கருணையில்லையா?" என்று கேட்பது போல் இருந்தது. மோஹினி இதுவரையிலும் டீயையோ பிஸ்கட்டையோ தொடக்கூட இல்லை யென்பதைக் கவனித்த வசந்தன், "பிஸ்கட் வேண்டாமா உங்களுக்கு?" என்றுகேட்டான்.

"எடுத்துக் கொள்ளுகிறேன்......" என்று கூறி ஒன்றை எடுத்துக் கொண்டாள்.

டீ கோப்பையைக் கீழே வைத்துக்கொண்டே, "போன வாரம் பூராவும் ஆனந்தன் வீட்டுக்கே வரவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை!"

"அவனை வரச்சொல்லி நீங்கள் யாரிடமாவது சொல்லி அனுப்பினீர்களா?"

"ஆமாம்...ஏன்?"

"பாஸ்கரராவ் அதைத்தான் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார். அன்று சாயங்காலம் ஆனந்தன் வந்திருந்தானல்லவா?"

"வந்திருந்தார்......இதில் தப்பாக நினைத்துக்கொள்வதற்கு என்ன இருக்கிறது?"

"அவனை வரச்சொல்லி சொன்னது நான்தான் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார்......"

"ஏன் வரச்சொன்னீர்கள் என்று கேட்டாரா?"

"ஆமாம்."

"பிறகு?"

"பிறகென்ன? நான் சொல்லவே இல்லை யென்று எவ்வளவு சொன்ன போதிலும் அவருக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை போலிருக்கிறது."

"ஏன்?"

"பிறகு அவர் தம்முடைய பஞ்சாங்கத்தை அவிழ்த்தார். அவரே தான் ஆனந்தனை எட்டு நாட்கள் வராமலிருக்கும்படி சொன்னவராம்...எனக்கு விசித்திரமாகத்தான் இருந்தது."

"அதிசயம் ஒன்றும் இல்லை. நானும் அவரும் சந்தித்துக் கொள்ளக் கூடாதென்பதுதான் அவரது உத்தேசம். அன்றைக் கும் அவர் அதைச் சாதித்தே விட்டார்."

"ஆனந்தன் வந்திருந்தானல்லவா?"

"வந்திருந்த போதிலும் சந்திக்க இயலவில்லை!"

"அது எப்படி?"

"எப்படியா? அவருக்கு என்னைவிட அவரது அக்காவும் அண்ணாவும் தான் வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் நான் வேண்டாதவள். அவர்கள் பேச்சைக் கேட்டுக் கேட்டு இவருக்கும் வேண்டாதவளாகி யிருக்கிறேன்!"

மேலே என்ன பேசுவதென்பது தெரியாததால் வசந்தன் மௌனமாக இருந்தான். அதற்குள் ஹோட்டல் சிப்பந்தி உள்ளே நுழைந்ததால், "இன்னும் கொஞ்சம் டீ கொண்டுவரச் சொல்லட் டுமா?" என்று மோஹினியைக் கேட்டான்.

"எனக்கு வேண்டாம்."

"நிஜமாகவா?"

அவள் முகத்தில் சந்தேகத்தின் ரேகை படர்ந்தது. இன்னும் இரண்டு கோப்பை டீ கொண்டு வரும்படி வசந்தன் உத்தர விட்டான்.

"நான் இந்த விஷயத்தில் தலையிடலாமோ கூடாதோ; ஆனால் நீங்களாகவே பேச்சை ஆரம்பித்திருக்கிறீர்கள். ஏன் இந்த வீண் மனஸ்தாபங்களெல்லாம்? நாலுபேருக் கெதிரில் பேச்சுக்கு இடம்!"

"அதற்கு நானென்ன செய்யமுடியும்?"

"தப்பு யாருடையது என்று நான் என்ன சொல்ல முடியும்? ஆனால் பத்துப்பேர் வாயிலாக நான் உங்களிருவர் விஷயத்தைக் கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் தயவுசெய்து தப்பிதமாக நினைத்துக் கொள்ளக்கூடாது. உங்கள் இருவருக்காகக்கூட நான் கவலைப் பட்டிருக்கிறேன்......சுகமாகவே இருக்கலாமே?"

"இருக்கலாம்......லாம், அவ்வளவுதான்."

"அவனுடைய அக்கா, அண்ணாவுடன் சேர்ந்திருப்பது சாத்தியமில்லாவிட்டால் நீங்களிருவரும் மாத்திரம் தனியாக இருந்து விடலாமே..."

"பத்தாயிரம் தடவை சொல்லியிருக்கிறேன் இந்தப் பேச்சை. இவர் ஒத்துக் கொண்டால்தானே?"

"ஆனந்தன் இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டேனென்கிறானா?"

"ஒத்துக் கொண்டால் இவ்வளவு தூரத்துக்கு ஏன் வந்திருக்கப் போகிறது?"

"ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேனென்கிறான்?"

"அவர்களை விட்டு வேறு இருப்பது அவருக்குச் சாத்தியமில்லையாம்!"

"அப்படியானால் இப்படியே எவ்வளவுநாளைக்கு நடக்குமாம்?"

"எவ்வளவானால் அவர்களுக் கென்ன? அவர்களெல்லோரும் ஒன்று, நான் ஒன்று. அவர்களெல்லோருடைய ஹிம்ஸைக்கும் நான் பணிந்து போக வேண்டும். பொறுமையிருக்கும் வரையில் நடக்கிறது...பிறகு..."

மோஹினியால் மேலே பேச முடியவில்லை. கண்களில் நீர் நிரம்பி நின்றது. முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு விரல் நுனியால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளுக்கு எந்த வகையில் சமாதானம் சொல்லுவதென்று வசந்தனுக்குப் புரியவில்லை.

அவன் சொன்னான்: "நீங்கள் யோசனை செய்யாதீர்கள். நான் முயற்சி செய்கிறேன்."

"உங்களால் என்ன செய்ய முடியும்?"

"ஆனந்தனுடன் பேசிப் பார்க்கிறேன்."

"அவர் மனம் கெட்டுப்போயிருக்கிறது."

"எப்படி?"

மோஹினி பேசவில்லை. இருதயத்தின் சங்கடம் நாக்கை அழுத்தியது. வசந்தனே மேலே பேச்சைத் தொடர்ந்தான்:

"அவனுடைய குற்றச்சாட்டுதான் என்ன?"

"என் நடத்தை சரியில்லையாம்."

"அப்படி யென்றால்?"

"நான் காலேஜுக்குப் போவது ஒரு நொண்டிச் சாக்காம்."

"போகக் கூடாது என்கிறானா?"

"ஆமாம்..."

"வேண்டாமென்றால் விட்டு விடுவதுதானே? நீங்களாவது அவன் மனசுப்படி ஏன் நடந்து பார்க்கக்கூடாது?"

"எல்லாவற்றையும் பார்த்தாயிற்று. கல்யாணமானபோது ஜூனியரில் படித்துக் கொண்டிருந்தேன். வேண்டாமென்று சொன்னதால் நிறுத்திவிட்டு ஒரு வருஷம் வீட்டிலேயே இருந்தேன். இப்பொழுது அவர்களெல்லோருடைய இச்சைப்படி நடப்பதானால், நான் வெளிச்சத்தைக்கூடப் பார்க்கக்கூடாது!"

"இதில் இருவரும் அடங்கித்தான் போகவேண்டும். பிடிவாதத்தினால் சுகமில்லை. இருவரும் அடங்கியே வெற்றிபெறவேண்டும்."

"இல்லை யென்று நானெங்கே சொல்லுகிறேன்? அடங்கி அடங்கி மண்ணைக் கவ்வும் நிலைக்கு வந்துவிட்டேன்!"

"இப்பொழுது காலேஜுக்குப் போயே தீருவேன் என்னும் பிடிவாதம் ஏன்?"

"போகாமல் என்ன செய்யட்டும்? இந்தப் பதினெட்டு மாதங்களாக நான் அநுபவித்துள்ள ஹிம்ஸையின் கற்பனை சிறிதேனும் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்க மாட்டீர்கள். இவர்கள் வீட்டில் இனி நான் வாழ முடியாது என்பதைத் தெரிந்து கொண்டுள்ளேன். இன்றைக்கில்லா விட்டாலும் நாளைக்காவது என்னுடைய எதிர் காலத்தைப்பற்றி நான் யோசித்தே ஆகவேண்டியிருக்கிறது. நான் காலேஜை விட்டு விடுவது இயலாத காரியம்."

"இந்தப் பிடிவாதத்துடன் அந்த ஆசையையும் ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"எனக்கு ஆசையே கிடையாது. நான் குடும்ப ஆசை வைக்க வேண்டுமானால், என் நாத்தனாருடைய கால் தூசியாகச் சம்மதிக்க வேண்டும்; பாஸ்கரராவுடைய......"

"இதில் பாஸ்கரராவினுடைய சம்பந்தம் என்ன?"

"அவன் பேச்சை எடுக்காதீர்கள் என்னெதிரே! மனித மிருகம்!......"

"என்னவாம்?"

"மூன்று வருஷம் மனைவியைத் துன்புறுத்திக் கடைசியில் கொன்றே போட்டான். இப்பொழுது என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறான். நான் அவனுடைய தம்பியின் மனைவி என்ற நினைவே அவனுக்கு இல்லை......ஒருகால் நான் காலேஜை விட்டாலும் விடுவேன்; ஆனால் இந்தப் பேய் இருக்கு மிடத்தில் நானும் இருந்து என்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவது முடியாத காரியம்!"

"ஆனந்தனுக்கு இந்த விஷயம் தெரியாதா?"

"அது எப்படித் தெரிய முடியும்? எவ்வளவானாலும் அண்ணா! மேலும் பாஸ்கரராவ் தனக்கு எதிராக யாராவது பேசிவிடப் போகிறார்களே என்று அதற்கு முன்னால் என் மீதே ஆரோபத்தைச் சுமத்தி விட்டார்."

"இதெல்லாம் எப்படி ஆரம்பமாயிற்று?"

"கல்யாணமாகி ஆறுமாதங்களோ என்னவோ, ஆனந்தமாகத்தான் இருந்தோம். பிறகு அவர் தமையனார் நிதானமாகத் தம் வேலையைக் காண்பிக்க ஆரம்பித்தார். என் அழகே எனக்குச் சத்துருவாக இருக்கிறது. எங்கேயாவது வெளியே புறப்பட்டால் பத்துப்பேர் என்னையே பார்த்தால் நானென்ன செய்ய முடியும்? காலேஜ் நண்பர்கள் யாராவது எதிர்ப்பட்டால் அவர்களுடன் நான் பேசுவதுதான் தாமதம்; உடனே என்மேல் கெட்ட நடத்தையுடையவள் என்ற சந்தேகம் ஏன் கொள்ள வேண்டும்? வீட்டின் ஒரு மூலையிலே முடங்கிக்கொண்டு கிடக்கும் சுபாவம் எனக்கில்லை. நான்கு பேரிடையே வாழவேண்டும் என்ற ஆசை இருக்கிறது எனக்கு."

"அவர்களுடைய சந்தேகம் ஆதாரமற்றது என்பதை நிரூபிக்கும் வரையிலுமாவது நீங்கள் கொஞ்சம் பொறுமையுடன் ஏன் இருக்கக்கூடாது?"

"அவர்களுடைய சந்தேகத்தினால் ஆத்திரமடைந்து வர வர வேண்டுமென்றே அவர்களுக்கு விரோதமாக நடந்து வருகிறேன்."

"அது தப்பு!"

"இருக்கலாம். துஷ்டர்களுக்குப் பதில் துஷ்டத்தனம்!"

"பாஸ்கரராவ் - நீங்கள் இந்தப் பேச்சு எப்படியோ போகட்டும், ஆனந்தனுடைய மனத்தையாவது உங்கள் பக்கம் திருப்பிக் கொள்ள முயன்று பார்க்கலாமே?"

"அவர் தம் அண்ணாவின் தம்பி!"

"ஆனால் ஆனந்தனின் மனத்தைத் திருப்புவதற்கு நீங்கள் முயலாவிட்டால் எனக்கு இந்த இக்கட்டில் வேறு வழியே காண வில்லை."

"ஆமாம். எனக்கும் அது தெரியும். ஆனால் அது எப்படி முடியும் என்றுதான் விளங்கவில்லை. அவர் கிழக்கை நோக்கினால் நான் மேற்குப் பக்கம்..."

"புருஷன் - மனைவிக்குள் அப்படிப்பட்ட பெரிய அபிப்பிராய பேதம் என்ன இருக்கமுடியும்? ஏதோ அப்பொழுதைக்கப்பொழுது வார்த்தைக்கு வார்த்தை வளர்ந்திருக்கலாம். என் பேச்சைக் கேட்பதானால் நீங்கள் சிறிது பணிந்துபோனால் எல்லாம் சரியாகப் போய்விடும். எவ்வளவானாலும் இது புருஷன் மனைவியருள் பிணக்கு. என்னவோ சாஸ்திரம் சொல்லுவார்களே..."

"சாஸ்திரம் வெறும் சாஸ்திரம்!"

"சாஸ்திரத்தின் பேச்சு வேண்டாம். ஆனந்தனுடன் நான் பேசுகிறேன் இது விஷயமாக."

"மற்றவர் பேச்சுக்கு ஏதாவது மரியாதையோ நம்பிக்கையோ அவருக்கிருப்பதானால் நீங்கள் செய்யும் முயற்சிக்குப் பலன் உண்டு. ஆனால் அவரிடம் அதுதான் பூஜ்யம்."

"அவனுடன் நீங்கள் எல்லாம் முடித்துக்கொண்டு விட்ட மாதிரியே பேசுகிறீர்களே?"

"பேச்சினால் முடித்துக்கொள்ளாவிட்டாலும், பேச்சு முடிந்து விட்ட மாதிரிதான்!"

"உங்கள் பேச்சு எனக்குப் புரிவதேயில்லை."

"பேசி யாதொரு அர்த்தமும் இல்லை. நிஜமாக எவ்வளவு பேர் எங்களுடைய விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள். நீங்களே சொன்னீர்கள், நீங்களும் கேள்விப்பட்டிருப்பதாக. எனக்கும் தெரியும். ஆனால் இந்தப் பேச்சுக்களிலெல்லாம் குற்றம் என் பேரிலேயே. அவ்வளவு நல்லவருக்கு நான் வந்து வாய்த்து அவரது வீட்டைப் பாழ்படுத்தி விட்டேனாம். தாங்களே ஆரம்

பித்த அபவாதப் பேச்சு இன்று வளர்ந்து நிஜந்தானோ என்று அவர்களே நம்பும் நிலைக்கு வந்துள்ளது."

"உங்களுக்கு விரோதமாக அவர்கள் துஷ்பிரசாரம் செய்தார்கள் என்பதை ஒத்துக் கொள்வோம். ஆனால், நீங்கள் தப்பிதமாக எடுத்துக் கொள்ளாவிட்டால் நான் ஒரு வார்த்தை கேட்கிறேன். அவர்கள் இந்தத் தூஷணையைச் செய்ய நிஷ்காரணமாக ஆரம்பித்திருக்க முடியாதல்லவா? நான் இப்பொழுது உங்கள் மீது எந்த அபவாதத்தையும் சுமத்துவதாகத் தயவு செய்து எண்ண வேண்டாம்."

மோஹினி மௌனமாக இருந்தாள். முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். இவ்வளவு பகிரங்கமாக இந்தக் கேள்வியைத் தான் கேட்டிருக்கக் கூடாது என்று தோன்றியது வசந்தனுக்கு. ஏதோ பேச்சின் வேகத்தில் வாய் தவறி வந்து விட்டது. ஆனால் மறுகணமே தனக்குள் சொல்லிக்கொண்டான்: "தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் பூராவையும் தெரிந்து கொள்ளாவிட்டால் இந்த விவகாரத்தில் தலையிட்டது வியர்த்தமாகப் போகும். காரியத்தில் தலையிட்டுவிட்டதென்னவோ ஆயிற்று" என்று.

மோஹினியைச் சமாதானப் படுத்தும் முறையில் வசந்தன், "நான் முதலிலேயே சொன்னேனே. நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது. உங்கள் பிரச்னையை முழுதும் என் முன்னால் விவரிப்பதற்காகவே நீங்கள் இன்று என்னுடன் பேச முன் வந்ததாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

வசந்தனது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அல்ல மோஹினி மௌனம் சாதித்தது. பதில் அவள் இருதயத்தில் தயாராகவே இருந்தது. ஆனால் அதை எப்படிச் சொல்லுவது? தன்னைப்பற்றித் தன் கணவன் கேள்விப்பட்டிருந்த அபவாதத்தைக் குறித்து, விவாகம் நடந்து முதல் முதலாகக் கணவனும் மனைவியும் ஏகாந்தமாகச் சந்தித்துக் கொண்ட இரவிலேயே ஆனந்தன் அவளைக் கேட்டு அவள் ஆக்கிரோஷத்தைக் கிளப்பியிருந்தான் என்ற விஷயத்தை எவ்வளவானாலும் அந்நியனான வசந்தனிடம் எப்படிச் சொல்லுவது? மோஹினிக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவள் கண்ணெதிரே அந்த முதல் இரவின் நிகழ்ச்சி நிழலாட்டம் காட்டிச் சென்றது. கிரகப் பிரவேசம் செய்யும்பொழுதே வாசற்படியில் காலிடறி விழுந்தது போன்ற

மனதிலே ஏற்பட்டிருந்தது அவளுக்கு, அன்றையதினம். ஆனந்த னின் மனத்தைத் தன்பால் திருப்பிக் கொள்வதுதான் அறி வுடைமை என்றிருந்தால் அந்த ராத்திரியிலேயே' அத்தகைய விவேகம் அவளது சுபாவத்தில் மேலாக எழுந்து நின்று தன் பாதையைக் காட்டியிருக்கவேண்டும். அதற்கு மாருக, சமயா நுசிதமான தன் கணவனின் அந்தக் கேள்வி அவளுடைய அறிவுக் கும், வியவகார புத்திக்கும் பலத்த அடியைக் கொடுத்துச் சுகவாழ் வின் ஆசைக்குத் தர்ப்பணம் கொடுத்து விட்டது.

மோஹினி தலையைக் கவிழ்த்துக் கொண்டு தன் சிறிய கைக் குட்டையால் வாயை மறைத்துக் கொண்டு தீர்க்கமான ஆலோசனையில் இருப்பவள் போல் காணப்பட்டாள். அந்தக் கேள்விக்கு அன்று இரவு தான் சரியான பதில் சொல்லாமலிருந்த தனுலோ, அன்றி ஆனந்தனின் சரீர-சுபாவத்திற்குச் சரியாகவோ, அன்றிலிருந்து சுமார் ஆறுமாதங்கள் மேலுக்காவது எல்லாம் சுகமாகவே நடந்திருந்த போதிலும் மோஹினிக்கு மாத்திரம் ஒரு விஷயம் நன்ருக மனத்தில் பதிந்து விட்டது. அது, ஆனந்தன் தன்னிடம் வந்தபோதெல்லாம், வரும்போதெல்லாம் அவனுக்கு வேண்டியிருந்தது தன்னுடைய அழகான உடல், மற்றெதுவும் அல்ல என்னும் கடுமையான உண்மைதான். ஆனந்தனுக்கு இன்றைக்கும் தன்னுடைய தேகம் வேண்டியிருந்த தென்பதை அவள் உணர்ந்திருந்தாள். இந்த உண்மையை நினைக்கும் பொழுதெல்லாம் மோஹினியின் இருதயம் உணர்ச்சிக் கூட்டங் களின் போர்க்களமாகி பலதிறப்பட்ட, ஒன்றுக்கொன்று விரோத மான எண்ணங்களால் நிரம்பிவிடும்.

"அவன் உன் கணவன்; உன் தேகம் அவன் உடைமை" என்று ஒரு மனம் கூறும் போது மற்ரெரு மனம் கோபத்துடன் கூடிய வேதனையோடு ஆக்கிரோஷமாக, "இருக்கலாம். ஆனல் என் மனத்தை ஆட்கொள்ளாமல் என் உடலை மாத்திரம் அடைய வேண்டுமென்பவன் என் பதியல்ல, என்னுடன் விபசாரம் புரிய நினைக்கும் பரபுருஷன் அவன்!" என்று கூறும்.

"உன் உடல் பணிந்தால் அவன் மனமும் பணியக்கூடும்!"

"முதலில் இந்த மனம் பணிய வேண்டும்."

"ஏன் இந்தப் பிடிவாதம்?"

"இது பிடிவாதமல்ல. இயற்கையின் நியதி. நாங்கள் மணம்

புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் மனங்கள் ஒன்றுபட வேண்டும். கேவலம் இந்த உடல்கள் மாத்திரம் அல்ல."

"இன்றில்லாவிட்டால் நாளை மனம் உடலைத்தானே அநுசரிக்கும்!"

"நாளைய ஆசைக்காக இன்றைய விபசாரத்திற்கு நான் தயாரில்லை."

"இது விபசாரமாகாது."

"அப்படிச் சொல்வது மடமை! இந்த மடமையை மறைத்துக் கொள்ளவே விவாகம் என்ற பெயருடைய போர்வை வேண்டியிருக்கிறது இந்தச் சமூகத்திற்கு!"

இவ்வாறு பலவகை எண்ணச் சுழல்களிலே சிக்கி அலைப்புண்டு, தன்னுடைய நடத்தைக்கு ஆத்ம சமாதானத்தைப் பல தடவைகளில் அவள் தேடிக்கொண்டதுண்டு. இப்பொழுதும் அதே நினைவுச் சக்கரத்தில் அவள் அகப்பட்டுக் கொண்டாள். ஆனால் இவையெல்லாவற்றையும் வசந்தனிடம் சொல்லுவது எப்படி? அவளது இருதயத்து உணர்ச்சிகளின் குமுறல் அவள் முகமண்டலத்தில் சிகப்பு ரேகைகளாகப் படர்ந்தன.

அவள் ஏதும் பேசாமலே இருந்ததனால் வசந்தனுக்கு மிகவும் வேதனையுண்டாயிற்று. தன்னுடைய வார்த்தைகளினால் அவள் மனம் பெரிதும் புண்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்து மீண்டும் அவள் மன்னிப்பைக் கோரினான். அப்பொழுது மோஹினி தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவனை நோக்கி, "நீங்கள் வருந்தவேண்டிய அவசியமில்லை. உண்மையில் நான்தான் உங்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். உங்களுக்கு வீணில் மனவேதனை. இந்த விஷயங்களையெல்லாம் நான் உங்களிடம் பேசியிருக்கக்கூடாதோ என்னவோ. யாரிடம் சொல்லித்தான் என்ன பிரயோசனம் என்றும் தோன்றுகிறது ஒவ்வொரு தடவை. ஆயினும் பொறுக்க முடியாததனால் கூறிவிட்டேன். முக்கியமாக, துர்ப்பாக்கியவதி நான்..." என்று கூறி நிறுத்தினாள்.

வசந்தனுக்கு வாயைக் கட்டியிருப்பது போன்றிருந்தது. அவளே தொடர்ந்து பேசலானாள்: "உங்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. யாரிடமும் என் துக்கத்தைச் சொல்லிக் கொள்ள இயலாமலிருக்கிறது. யார் என்னுடையவராக இருக்க வேண்டுமோ அவரே எனக்கு எட்டாதவராகிவிட்ட பிறகு

மிஞ்சியவர்கள் யார் இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன? இருந்திருந்து என்னுடையவள் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய என் தாயிடமாவது என்னுடைய துக்கத்தைச் சொல்லி அழலா மென்றால், அவளிருக்குமிடம் போவதற்கும் எனக்குக் கட்டுப்பாடு......"

"அது ஏனும்?"

"ஏனோ, யார் கேட்பது அவர்களை? தாய் வீட்டிற்கு நான் போவதானால் அங்கேயே இருந்துவிட வேண்டுமாம். அவளுக்கு ஒரு கடிதங் கூட நான் எழுதக்கூடாது. இப்பொழுது ஒன்றரை வருடம் ஆயிற்று, அவள் முகத்தைப் பார்த்து. அவளைத்தான் நான் பார்க்க இயலவில்லை. என்னுடைய சமாசாரமாவது அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ! இன்று என்னுடையவர் என்று சொல்ல எனக்கு யாரும் இல்லை......"

மோஹினியின் கண்களினின்று கண்ணீர் மளமள வென்று பெருகிற்று. அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று வசந்தனுக்குத் தெரியவில்லை. அரை நிமிஷங் கூட யோசியாமல், மேஜையின் விளிம்பிலே விளையாடிக் கொண்டிருந்த அவளது இடதுகை விரல்களின்மீது சடக்கெனத் தன்னுடைய கையை வைத்து, "நீங்கள் யோசிக்க வேண்டாம். என்னால் முடிந்த தெல்லாவற்றையும் நான் செய்கிறேன்" என்று வசந்தன் சொன்னபொழுது மோஹினி தன் கண்களை அவன் பக்கம் திருப்பி அவனையே ஊடுருவிப் பார்த்தாள். சோகம் நிறைந்து வழிந்து கொண்டிருந்த அந்தக் கண்களைக் கண்ணுற்றபோது வசந்தனின் தேகம் முழுவதும் மின்சாரம் பாய்வது போன்ற ஒரு சலனம் ஏற்பட்டு, "உண்மையாகவே என்னால் முடிந்தவை யாவற்றையும் செய்தே தீரவேண்டும்" என்ற சங்கல்பம் நிலை பெற்றது. மோஹினி தன் கைவிரல்களை விடுவித்துக்கொள்ளாம லிருந்ததைக் கண்டு அவன் மனத்திலே வியப்புத் தோன்றிய போதிலும் அவன் அறிவு அவனை எச்சரித்தது, "உன்னுடைய இந்த அநுதாபமெல்லாம் சரிதான். ஆனல் விஷயம் அவ்வளவு சுலபமானதல்ல! உஷார்!" என்று.

மோஹினியின் கண்கள் வசந்தனை விட்டு அப்பால் நகர வில்லை. பரிதாபத்தின் வடிவமான அவளது முகத்தைக் கண்டு வசந்தனின் இருதயம் நெகிழ்ந்தது. ஏதோ ஒரு பழைய நினைவு

அவன் இதயத்தைக் கிறிச் சோர்வைக் கொடுத்தது. மெதுவாக அவளது கையை அழுத்திப் பிடித்து அவளைப் பார்த்தான். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "உங்கள் நிலைமை எனக்குப் புரிந்து விட்டது. மீண்டும் அதையே சொல்லுவதில் என்ன பிரயோசனம்? நான் ஆனந்தனைக் கண்டு விசாரிக்கிறேன்" என்று சொன்னான்.

"அவரிடம் போகப் போகிறீர்களா?"

"உம். ஆனால் அவனை எங்கே பார்க்கலாம்?"

"அவர் எங்கோ தாதரில் தன்னுடைய யாரோ ஒரு நண்பரின் அறையில் இருக்கிறாராம்."

"யாரென்று உங்களுக்குத் தெரியாதா ?"

"ஊஹூம் !"

"அப்படியானால்......"

"நீங்கள் அவருடைய ஆபீஸுக்கே போகலாமே?"

"ம். ஆபீஸுக்குப் போகலாம். ஆனால்......"

"ஆனால் என்ன?"

"அவனிடம் இந்த விஷயத்தைப்பற்றி எப்படிப் பேச்செடுப்பதென்று யோசிக்கிறேன்."

"ஆமாம். அது அவ்வளவு சுலபமல்ல......"

"எப்படியாவது ஆரம்பித்து விடலாமென்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நானும் நீங்களும் இங்கே கூடிப் பேசின விஷயம் அவருக்குத் தெரிந்தால் அவர் என்ன நினைத்துக் கொள்ளுவாரோ, யாரால் சொல்ல முடியும்?"

"அதை ஏன் சொல்ல வேண்டும்?"

"வேறு யாராவது பார்த்திருந்து அவருக்குச் சொன்னால்?"

"யார் பார்த்தாலென்ன?"

"ஒன்றும் இல்லை. எரியும் நெருப்பில் எண்ணெயை விட்ட மாதிரித்தான்."

"ஆனால், அப்படி நாம் இங்கே என்ன பண்ணி விட்டோம்?"

"ஒன்றும் இல்லாவிட்டாலும், ஜனங்கள் பேசுவதற்கு இது ஒரு நல்ல விஷயம்!"

"கடவுள் அறிவார்!"

"சமூகத்தில் இருப்பது கடவுள் அல்ல; மனுஷ்யர்கள் தாம். இந்த மனிதர்களுக்கு ஒரு சிறு இழை கிடைத்தால் போதும்!"

"உண்மை. ஆனால் அதற்கு நானென்ன செய்ய முடியும்? ஏற்கனவே நனைந்திருக்கிறேன். இனி எனக்கு ஏன் மழையைப் பற்றிய பயம்?"

"நனைந்திருந்த போதிலும், 'அந்த ஈர உடையிலேயே தான் நான் இருப்பேன்' என்று நீங்கள் சொல்லக் கூடாது. உடையை மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்காகவாவது நீங்கள் மழைக்குப் பயப்பட்டே ஆக வேண்டும்!"

"ஆகட்டும், பார்ப்போம்."

"அப்படியானால், புறப்படுவோமா?"

"ஊம்......"

"நானாக ஆனந்தனின் ஆபீஸுக்குப் போகப் போவதில்லை. தாதரில் பார்க்கிறேன், ஓரிரண்டு நாள். எங்கேயாவது கண்டு பிடித்தாலும் பிடிக்கலாம். இல்லாவிட்டாலும் அப்படியும் இப்படியும் செய்து இரண்டு மூன்று நாட்களில் அவனைப் பார்த்து விடுகிறேன்."

"அப்படியானால் என்ன நடந்ததென்பதை நான் அறிந்து கொள்ளுவது எப்படி ?"

"அதென்ன பிரமாதம்? எப்படியும் 9 மணி வண்டிக்கு நீங்கள் வந்தே தீருகிறீர்கள். அவனை நான் கண்டு பேசிய பிறகு நானாகவே உங்களுக்குத் தெரியப் படுத்துவேன்."

"அப்படி வேண்டாம். போரிவிலி ஸ்டேஷனில் எனக்குத் தெரிந்தவர்கள் வெகு பேர் இருப்பார்கள். இன்றைக்கு என்னவோ தைரியமாக உங்களுடன் பேசிவிட்டேன். ஆனால் நான் அங்கே யாருடனாவது பேசினால், ஜனங்களுக்கு அது மற்றொரு புதுக் கதையாய் விடும்."

"அப்படியானால்......"

"நீங்கள் வியாழக் கிழமை சாயங்காலம் தாதருக்கு வர முடியுமா?"

"வியாழக் கிழமை?......வியாழக் கிழமை முடியாது. கொஞ் சம் வேலை......"

"புதன் கிழமை?"

"ஊம். வர முடியும்."

"எங்கே வருகிறீர்கள்?"

"நீங்களே சொல்லுங்கள்."

"முதல் பிளாட் பாரத்திலேயே காத்து நிற்பேன். சாயங் காலம் 5–30 மணிக்கு வரமுடியுமா?"

"ஊம்."

"நிச்சயமாக?"

"வருவேன். ஆனால் அதற்குள்ளாக நான் ஆனந்தனைப் பார்க்க முடியாவிட்டால்?"

"முடியும்."

"முடியாமலும் இருக்கலாம்!" என்று கூறி வசந்தன் சிரித்தான்.

"பார்க்க முடியாவிட்டாலும் போகிறது. நீங்கள் எப்படியும் வந்தே ஆகவேண்டும்!" என்று கூறி மோஹினியும் முறுவலித்த பொழுது வசந்தன் யோசிக்கத் தொடங்கினான். சிறிது திறந்திருந்த அவளது அந்தச் சிறிய வாய், உதடுகளின் மீது தவழ்ந்துகொண் டிருந்த அப் புன்னகை, இவை அவனைப் பரவசமாக்கின.

"ஆல் ரைட். நான் கண்டிப்பாக வருவேன், சரிதானே?'

மோஹினி புன்சிரிப்பினால் தன் மனச் சமாதானத்தை வெளிப் படுத்தினாள். வசந்தனது அந்தக் கடைசி வார்த்தைகளில் என்ன மாயம் இருந்ததோ? ஒரு கணத்தில் மோஹினியின் முகத்தில் குடி கொண்டிருந்த துக்கமும் பரிதாபமும் எங்கோ மறைந்து அவ்விடத்தில் இனமறியாத ஒரு மகிழ்ச்சி நிலவ ஆரம்பித்தது. "எனக்கு இன்று வேறு ஒன்றும் வேண்டாம்! ஓர் இருதயத்தின் அநுதாபமாவது கிடைத்ததே" என்று கூறுவது போலிருந்தது அவளது முகம். இருவரும் ஹோட்டலை விட்டு வெளிப்பட்டனர். எதிரே சமுத்திரம் கம்பீரமாக, அழகின் சாம்ராஜ்ய மாகப் பரவிக் கிடந்தது. வசந்தனது மனத்தில் எண்ணங்கள் தலை யெடுத்தன. சமுத்திரம் இவ்வளவு கம்பீர சௌந்தரியத்துடன் பரவி நின்றுள்ளது. ஆனால் அதன் காம்பீர்யத்தின் பின்னால் எத்தகைய பயங்கரக் கோலாகலம் அடங்கியிருக்கிறதோ? அதன் ஆழத்தைக் கண்டறிந்தவர்கள் யார்? மோஹினியின் முகமும் இதே போலத்தானல்லவா? வசந்தன் மோஹினியைத் திரும்பிப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"என்ன?" என்றாள் மோஹினி.

"ஒன்றும் இல்லை!"

"ஏன், சொல்லக் கூடாதா?"

"சொல்லலாம்!"

"அப்படியானால் சொல்லுவதுதானே?"

"கடல் எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது, இல்லையா?"

"பேச்சை மாற்றுகிறீர்கள். இவ்வளவு கூட எனக்குத் தெரியாதா?"

"இல்லை. அதற்காகத்தான் சிரித்தேன்."

"எதற்காக?"

"என்னவோ ஒரு நினைப்பு!"

"என்ன அது?"

"அழகு உள்ள இடத்தில் அவதியும் இருக்கத்தான் வேண்டுமோ என்று!"

மோஹினி பேசாமலிருந்தாள். அவள் முகத்தில் ஒருவகை அபிமானத்தின் திரை படர்ந்தது. ஆனால் கூடவே ஒரு கம்பீர பாவம் அந்தத் திரையை அழித்துச் சென்றது.

"இருக்கலாம்" என்றாள் மோஹினி.

"ஆனால் அப்படி இருக்கக் கூடாது, அல்லவா?"

"நானும் நீங்களும் அப்படி விரும்பலாம். அவ்வளவுதான்!"

"சரி. போகட்டும் விடுங்கள். யோசிக்க யோசிக்கத் துக்கந் தான்; மறக்க மறக்கச் சுகம்!" என்று வசந்தன் பேச்சை முடிக்க வேண்டுமென்று பார்த்த போதிலும் அந்தப் பழைய நினைவு அவன் மனத்தைக் கிளறி அரைக் கணம் அவனைத் துக்கத்தில் ஆழ்த்தியது. அதை மறக்க வேண்டுமென்றே வசந்தன், "இனி நாம் தனித் தனியாகச் செல்ல வேண்டும். ஏன் வீணில் நாலு பேர் எதிரில்? நீங்கள் சர்ச் கேட்டுக்குப் போய்ப் போகிறீர்களல்லவா? நான் இந்தப் பக்கம் இப்படிச் சிறிது சுற்றிவிட்டுச் சாவகாசமாகப் போவேன்."

மோஹினி மௌனமாகவே தன் சம்மதத்தை அறிவித்தாள். ஆனால் ஏதோ ஒரு சக்தி அவளை அங்கேயே பிடித்திழுத்து நிறுத்தியது போலிருந்தது.

கடைசியாக, "அப்படியானால் நான் புறப்படட்டுமா?" என்றாள்.

"ஊம்."

"புதன் கிழமை சாயங்காலம்! ம்?" என்று கழுத்தை நெளித்துக் கொஞ்சலாகக் கையை நீட்டினாள். வசந்தன் பாதிச்

சந்தேகத்துடனும் பாதி ஆர்வமுடனும் அவள் கையைப் பிடித்துக் குலுக்கினன். ஆனல் கை குலுக்கிய பிறகு சந்தேகம் மாய மாயிற்று. "நிச்சயமாக வருவேன்" என்று கண் ஜாடை யினலேயே தெரிவித்தான்.

அன்று சனிக்கிழமை யாதலால் வசந்தன் போரிவிலிக்குத் திரும்பிப் போகவேண்டிய அவசியம் இல்லை. சாதாரணமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் தாதரிலிருந்த தன் நண்பனெருவ னின் வீட்டில்தான் இரவைக் கழிப்பது அவன் வழக்கமாக இருந் தது. தாதருக்குப் போவது என்று ஆனபிறகு இவ்வளவு சீக்கிரம் போய் என்ன செய்வது என்று யோசித்து 'ரிக்ளமேஷன் காட்' வழியாக நடக்கத் தொடங்கினன். நிதானமாக நடந்து சென்று சர்னி ரோட் ஸ்டேஷனில் வண்டி ஏறினல்கூடப் போதும். கால் கள் அடிமேல் அடி எடுத்து வைத்துக்கொண்டிருந்தன என்பதென் னவோ உண்மை. ஆனல் மனம்மாத்திரம் எங்கெங்கோ ஊசலாடிக் கொண்டிருந்தது. தன்னைவிட்டுச் சர்ச்கேட்டை நோக்கிச் சென்ற மோஹினியின் சித்திரம் அவன் கண்ணெதிரே பாய்ந்து சென்றது. யோசிக்க யோசிக்க ஒன்றுமே புரியாதவாறு இருந்தது. எல்லா எண்ணங்களையும் அமுக்கி மேலெழுந்து நின்றது மோஹினியின் மோஹன உருவம். "இது தவறு, நீ அவளுடன் இவ்வளவு தூரம் பேசியிருக்கக்கூடாது. யாருடைய துக்கத்திற்கு யார் பொறுப்பு? என்ன பரிகாரம்?" என்று மனத்தின் ஒரு குரல் கூறியபொழுது மற்றொரு குரல், "இந்தமாதிரி, யார் கஷ்டத்திற்கு யார் பொறுப் பாளி என்று கேட்பவர்களின் தொகை அதிகமாகிவிட்டதனலல் லவா இன்று உலகம் இத்தகைய துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது!" என்று கூறியது. ஆனல் ஒரு கேள்விக்கு மாத்திரம் எவ்வளவு தேடியும் வசந்தனுக்குப்பதில்கிடைக்கவில்லை. மோஹினி தானகவே வந்து தன்னுடைய சரித்திரத்தை ஏன் அவன் முன்னல் விவரித் திருக்கவேண்டும்? உடனே மற்றொரு எண்ணமும் தோன்றியது. "யாரால் அறியமுடியும்? இவள் நிஜமாகவே ஒரு மோஹினியாக இருந்தால்? ஜனங்கள் பேசிக்கொள்ளுவதெல்லாம் ஒருகால் உண்மையாகவே இருந்தால்?" ஆனல் மறு நிமிஷம் பரிதாபம் நிரம்பிய அவளது கண்கள், "அது பொய்; அது பொய்" என்று பறையடிக்கும்.

வசந்தன் நடந்துகொண்டே இருந்தான். சுற்றுமுற்றும் அவன் கவனம் செல்லவே இல்லை. வலது அடியுடன் அவன் அறிவும் இடது அடியுடன் அவனது இதயமும் அடிக்கு அடி தங்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டே இருந்தன. அறிவு கடுமையான கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தது. இதயம் சாவதானமாக, நயமாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தது.

"எவ்வளவானாலும் அவள் பரஸ்திரீ. அவள் விஷயம் உனக்கேன்?"

"அவள் பரஸ்திரீயாக இருக்கலாம். ஆனால் அவள் கஷ்டத்தில் இருக்கிறாள். அவளுக்கு வேண்டிய அநுதாபத்தைக் காட்டுவது எனது கடமை!"

"அந்தக் கடமையின் பொறுப்பு உன்னுடையதல்ல. சமூக நியதியின்படி அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டியவன் வேறொருவன் இருக்கிறான்!"

"அந்த வேறொருவன் அதை மறுக்கிறான்!"

"அது ஒரு தலைப் பேச்சு!"

"இருக்கலாம்."

"அப்படியென்றால் உன்னுடைய அநுதாபம் சுயநலம் அல்லவென்று எப்படிச் சொல்ல முடியும்?"

"சுயநலம் இல்லையென்று கடவுள் சாக்ஷியாக நான் கூற முடியும்."

"கடவுள் சாக்ஷியினால் சமூகத்தில் உள்ளவர்கள் திருப்தியடைய மாட்டார்கள்."

"அதனால் திருப்தியடையாவிட்டால் அவர்களுக்குத்தான் கெடுதல்."

"தத்துவம் பேசி உன்னுடைய சுயநலத்தை நீ மறைத்துக் கொள்ளப் பார்க்கிறாய்! இல்லையா?"

"என்னுடைய சுயநலம் என்ன?"

"மோஹினி குரூபியாக இருந்திருந்தால் நீ அவளுடன் இவ்வளவு கனிவுடன்பேசி உன் அநுதாபத்தைக் காட்டியிருப்பாயா?"

"இல்லையென்று சொல்ல முடியாது! ஆனால் இவ்வளவு தூரம் சென்றிருப்பேனோ இல்லையோ அதையும் கூற முடியாது."

"அதைத்தான் நான் சுயநலம் என்று குற்றம் சாட்டுகிறேன்."

இதயம் ஒரு கணம் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய தாயிற்று. ஆனால் தான் செய்வது தவறல்ல என்ற ஆத்ம சமா தானத்திற்காக அலேந்துகொண்டிருந்த அவனது இதயம் ஒரு கணம் கலவரத்தில் சிக்குண்ட போதிலும் மறு கணம் கேள்வி களைக் கேட்க ஆரம்பித்தது.

"அப்படியானல் அவள் பேச்சுக்கு நான் செவி சாய்க்காமல் அவள்பாட்டுக்கு அவளை விட்டிருந்தால் மனித திருஷ்டியில் நான் கடமையினின்றும் தவறியவனாகி யிருக்கமாட்டேனா?"

"அந்தக் கடமை உன்னுடையதல்ல. அதைச் செய்யாம லிருந்தால் உன்மேல் யாதொரு தவறும் இல்லை!"

"நான் அநுதாபம் காட்டினால் அதில் தவறென்ன?"

"உன்னுடைய அநுதாபம் தான்தோன்றித் தனத்திற்குத் தூண்டுகோல்."

"அவள் நடத்தை தான்தோன்றித் தனமா?"

"உன்னுடைய திருஷ்டியிலும் அவளுடைய திருஷ்டியிலும் இல்லாமலிருக்கலாம். சமூகத்தின் திருஷ்டியில் அது அப்படித் தான்."

"சுகத்தைப் பாழ்படுத்தும் சமூகத்தைச் சுட்டுவிட வேண்டும்!"

"சமூகக் கட்டுப்பாடு ஒருவருடைய சுகத்திற்காக ஏற்பட்ட தல்ல; பலபேரின் நலனுக்காக அது ஏற்பட்டிருக்கிறது."

மறுபடியும் இதயத்திற்குத் தோல்வி! தோல்வியை ஒப்புக் கொள்ள விரும்பாமல் மற்றொரு பாதையில் செல்ல நினைத்து அது கூறியது: "மோஹினி அழகி; நான் அழகின் அடிமை. இப்படிப் பட்ட அழகி சுகத்திலேயே வாழவேண்டுமென்பது என் ஆசை."

"நீ அவளுக்குச் சுகத்தை அடையும் பாதையைத்தான் காட்டுவதாகத் தன்னம்பிக்கை இருக்கிறதா உன்னிடத்தில்?"

"கண்டிப்பாக இருக்கிறது!"

"எனக்கு நம்பிக்கையில்லை!" என்று அறிவு பின்னுக்கிழுத்தது. இதயத்திற்கு ஆத்ம சமாதானம் ஏற்பட்டது போன்றிருயிற்று. ஆனால் அந்த ஆத்ம சமாதானத்தில் வெற்றி இருக்கவில்லை.

வசந்தன் சர்னி ரோட்டுக்கருகில் வந்துவிட்டான். எண்ணச் சுழலில் சிக்கியிருந்ததால் பொழுது சென்றதே தெரியவில்லை. மாலையின் பொன்வெயில் அலைகளின்மேல் நர்த்தனம் புரிந்து பூங்காவிலுள்ள செடி கொடிகளினூடே அடங்கி நின்றது. எங்கே

யாவது ஒரு பத்து நிமிஷம் உட்காரலாமென்று வசந்தன் பூங்காவின் பக்கம் திரும்பினன். அவனுக்குத் தனிமை வேண்டியிருந்தது கால்கள் பூங்காவின் பக்கம் அவனை இழுத்துச் சென்றுகொண்டிருந்த போதிலும் மனம் மோஹினியைப் பின்பற்றியே சென்று கொண்டிருந்தது. இப்பொழுது அவள் எங்கே இருப்பாள்? என்ன நினைத்துக் கொண்டிருப்பாள்? தன்னுடைய பேச்சினல் அவளுக்கு மனச் சமாதானம் ஏற்பட்டிருக்குமா? என்பன போன்ற பலவகைக் கேள்விக்குதிரைகளின் மீதேறி அவன் மனம் கற்பனை உலகில் சவாரி செய்துகொண்டிருந்தது.

கற்பனைக்குக் கடிவாளம் கிடையாது. வாழ்க்கையின் காலத்தை ரஸ நிமிஷங்களாகவோ அன்றி விஷ நிமிஷங்களாகவோ மாற்றும் மாயசக்தி அதற்கு உண்டு! மோஹினியை நினைத்த பொழுதெல்லாம் வசந்தனின் இதயம் சோர்வுற்று, கூறமுடியாத துன்பத்திற்காளாயிற்று. அப்படிப் பார்த்தால், அவள் சுகமாக இருந்தாலென்ன எப்படியிருந்தாலென்ன? ஆனல் அவளைப் பார்த்தபொழுதெல்லாம், அவன் மனம் அவளது அழகிற்குப் பறிபோன போதிலும் மனத்தை ஒரு கட்டுக்குள் அடக்கியிருந்த வசந்தன் அவள்பால் வருணிக்கமுடியாத ஒருவகை அந்நியோந்நியத்தைத் தன்னுள்ளே வளர்த்துக்கொண்டு வந்திருந்தான். அவளைப் பார்க்கும்பொழு தெல்லாம் அவன் மனத்துள்ளே ஒருவகைச் சமாதானம் பரவி நிற்கும். ஆனல் மறுநிமிஷம் ஏதோ ஒரு துக்கம் அவன் கண்களைக் கலக்கும். அவள் முகத்தில் தனிமையின் சுவட்டைக்கண்டுகொண்ட வசந்தனுக்குத் தன்னுடைய தனிமை வாழ்க்கையைக் குறித்தும் அநுதாபம் உண்டாயிற்று. இன்று மத்தியான்னம் அவள் அருகே அமர்ந்து மிகவும் அந்நியோந்நியமாகப் பேசிய பேச்சுக்களை நினைத்தபொழுது வசந்தனுக்குத் தனது வாழ்க்கையின் சாரமற்ற தன்மை இருமடங்காகப் பெருகிக் காணப்பட்டது. தன்னுடைய வாழ்க்கையையே கருணையுடன், கனிகரத்துடன் கண்டு சீர்தூக்கிப் பார்க்கும் மனநிலையில் இருந்ததனல், மோஹினியின் கண்கள் யாசித்து நின்ற அநுதாபத்தை அவன் இதயம் அவளுக்கு அள்ளி அள்ளி வழங்கிற்று.

கடந்த ஓரிரண்டு மணிகளில் நடந்தவைகளை யெல்லாம் நினைத்துக்கொண்டே வசந்தன் பசும்புல் தரையின் மீது ஹாயாகப் படுத்துக்கொண்டான். பொன் வெயிலை ஸ்பரிசித்த

இன்பத்தில் திளைத்து நின்ற செடி கொடிகளின் பசுமையினூடே ஆகாயத்தின் நிர்மலமான நீலவர்ணம் புகுந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மோஹினியின் தோற்றத்திலே என்ன மந்திர சக்தி இருந்ததோ! வசந்தனுக்கு ஒரே வியப்பாக இருந்தது. அவளை எவ்வளவோமுறை பார்த்திருக்கிறான். ஆனால் இன்றைய மத்தியான்னத்தியச் சூழ்நிலையே வேறு. அவன் கண்களுக்குக் காணமல் அவள் புறப்பட்டுப் போய்விட்டபோதிலும் அவன் மனத்தைவிட்டு அவள் சென்றிருக்கவில்லை. அப்படிப் போவதும் சாத்தியமாகக் காணப்படவில்லை. அவள் பேசிய ஒவ்வொரு பேச்சையும் நினைத்துக்கொண்டான். அவளது கையின் மீது தன்னுடைய கையை வைத்தபொழுது தனக்குண்டான மன நிலையை நினைத்தபொழுது அவன் உடல் ஜிவ்வென்றது. கடைசியாக அவள் புறப்பட்டுச் சென்றபொழுது கையை முன்னே நீட்டி, கழுத்தை நெளித்து, குறுநகைபூத்து, "நான் இனி புறப்படட்டுமா?" என்று கேட்டபோது அவளது தோற்றம்—அதை நினைத்து வசந்தனின் உடல் மயிர்க்கூச் செறிந்தது. "ஆஹா, உண்மையில் அவள் ஒரு அப்ஸரஸ் ஸ்திரீ" என்று சொல்லிக்கொண்டான்.

ஆனல் அந்த உணர்ச்சி மயக்கம் வெகுநேரம் நீடிக்கவில்லை. மனம் நான்கு வருஷங்கள் பின்னேக்கிச் சென்றது. இதுபோன்ற மாலை நேரம். மாலதி தன்னுடைய கையை அவன் முன்னல் நீட்டி, "நான் இனி புறப்படட்டுமா?" என்று கேட்டாள். அவள் புறப்பட்டுப் போன பொழுது அவள் கண்களினின்று மறையும்வரையில் தான் நின்ற இடத்திலேயே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். விதி விசித்திரமாக வேலை செய்திருந்தது. அன்று, "புறப்படட்டுமா?" என்று கேட்டு தன் அநுமதியைப் பெற்றுப் புறப்பட்டுச் சென்ற மாலதியை வசந்தன் மறுமுறை பார்க்கவே முடியாமல் போய்விட்டது! மோஹினி அதே வார்த்தைகளை இன்று கேட்டபொழுதிலிருந்து நான்கு வருஷங்களுக்கு முன் நடந்த அந்தச் சுகமும் துக்கமும் நிரம்பிய அதிசயமான சம்பவம் வசந்தன் கண்ணெதிரே வந்து வந்து நிற்க ஆரம்பித்தது. மோஹினியின் தோற்றத்திலே மாலதி காணப்பட்டாள்.

அப்பொழுது அவன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். கடைசி வருஷம். நான்கு வருஷங்களாக ஹாஸ்டலிலேயே இருந்த

போதிலும், அவனது தகப்பனாரின் பழைய நண்பரான தேஷ் பாண்டே சங்கரராவ் அவர்களது கண்காணிப்பில்தான் அவனது படிப்பு நடந்துவந்தது. மாலதி சங்கரராவின் மகள். வசந்தனுக்கும் மாலதிக்கும் விவாகம் நடைபெறக்கூடும் என்று அவர்களது நண்பர்களிடையே பாராபரியாக நடைபெற்றுவந்த பேச்சுக்கள், அந்தப் பேச்சுக்களிலே அடங்கி நின்ற ஆவல் இவை வசந்தன் காலேஜிலே சேர்ந்த பிற்பாடு வளர்ந்துவந்தது. கடைசியாக வசந்தன் கடைசி 'டர்ம்' காலேஜுக்கு வந்தபோது சங்கரராவ் தம்முடைய ஆசையை அவனிடம் பலவகைகளில் எடுத்துக் கூறிய தோடல்லாமல் அவனது தந்தைக்கும் கடிதமெழுதியிருந்தார். இருவரது பெற்றோரும் யாதொரு தடையும் சொல்லக்கூடிய வர்களல்ல. அடிக்கடி சங்கரராவ் வீட்டுக்கு வந்து சென்றுகொண் டிருந்த வசந்தன் மாலதியின்பேரில் அளவற்ற பிரியம் வைத்திருந் தான். ஹாஸ்டலுக்கு அருகிலேயே இருந்த அரசியல் கலாசாலையில் மாலதி படித்துவந்ததனால் மாலதியைப் பார்க்கவேண்டுமென்றால் வசந்தனுக்கு அவளது வீட்டிற்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தங் கூட அநேகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கவில்லை.

பரீக்ஷை சமீபித்துவிட்டது என்றபோது மாலதியைப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை வசந்தனுக்கு அதிகமாக உண்டாயிற்று. மாலதிக்கும் பரீக்ஷை சமீபித்துக்கொண்டிருந்தது. ஆனால் இருவருக்கும் புத்தகங்களைவிட தங்கள் அண்மையே ஆனந்த மயமாகக் காணப்பட்டது. பரீக்ஷை முடிந்ததும் ஹாய்யாக நான்கு நாட்கள் அங்கேயே தங்கியிருக்கவேண்டுமென்று வசந்தன் தீர்மானித்திருந்தான்.

அன்று சாயங்காலம் ஆறுமணிக்குப் பரீக்ஷையின் கடைசித் தாள் முடிந்ததும் வசந்தன் மாலதியின் வீட்டுக்கு ஓடினான். பரீக்ஷை நடந்த ஐந்தாறு நாட்களில் அவளது முகத்தைக்கூடக் காணாததால் அவன் மிக்க பரபரப்புடன் இருந்தான். என்றைக்கு முடிந்து தொலையுமோ இந்தப் பரீக்ஷை என்று சொல்லிக்கொண்டிருந்த வசந்தனின் மனம் அன்று பரீக்ஷை முடிந்துவிட்டதால் சிறகை விரித்துக் ககனமார்க்கத்தில் பறந்து திரியும் பறவையைப் போல் இருந்தது. மாலதியின் பரீக்ஷை ஏற்கனவே முடிந்து ஒரு வாரமாகி யிருந்தது. அவனுடைய பரீக்ஷை முடியும் வரையில் வசந்தனும் வர முடியாதாகையால் சென்ற ஐந்தாறு நாட்களாக அவளும் மிகவும்

தவித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் அன்று மாலை வசந்தன் வந்தபோது இருவருடைய ஆவலும் பூர்த்தியாகி ஆனந்த மாக மாறி முகங்களிலே புன்னகை மலர்ந்தது.

அதுவுமல்லாமல் அன்று மாலதியின் தாயும் வசந்த னுடைய வருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வசந்தன் மீண்டும் ஊருக்குத் திரும்புவதற்குள் அவனிடமிருந்து உறுதியான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, முடியுமானால் ஓரிரு மாதங்களிலேயே, மங்கள காரியத்தை முடித்துவிட வேண்டு மென்று அவள் நினைத்திருந்தாள். அதற்காகவேதான் சென்ற இரண்டு மூன்று மாதங்களாக மாலதிக்கு வசந்தனுடன் எங்கே வேண்டுமானாலும் போய்வரவும், உலாவச் செல்லவும் விசேஷ மான தடை இல்லாமல் அநுமதியளித்து வந்திருந்தார்கள். அன்றைக்கு வசந்தன் தனக்குள் நிச்சயித்துக்கொண்டிருந்த காரியக்கிரமம் மாலதியுடன் எங்காவது உலாவச் சென்று சில மணிநேரம் அவளுடன் மனம் விட்டுப் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்பதுதான். மாலதியும் அவ்வாறேதான் நினைத்திருந் தாள். ஆனால் இந்த விஷயத்தை அவள் தாய் எதிரில் எப்படிப் பிரஸ்தாபிப்பது என்பதுதான் இருவருக்கும் விளங்காத பிரச்னை யாயிருந்தது. ஆனால் சிற்றுண்டி அருந்திய பிற்பாடு அப்பிரச்னைக் குத் தானாகவே ஒரு வழி பிறந்தது. எதிர்பாராத வண்ணம் மாலதி யின் தாயே, "வேண்டுமானால் அவர்கள் இருவரும் எங்கேயாவது வெளியே சென்று வரட்டும்" என்று சொல்லிவிட்டாள். ஒரு கண்ணுக்காகப் பிரார்த்தித்த குருடனுக்கு இரண்டு கண்களும் கிடைத்துவிட்டது போலிருந்தது வசந்தனின் நிலை.

மாலதி வசந்தனுடன் வீட்டை விட்டுக் கிளம்பியபொழுது சூரி யாஸ்தமன நேரமாயிருந்தது. மாலையின் மஞ்சள் வெயில் அவளது நெற்றியின் மீது மிருதுவாகப் புரண்டு கொண்டிருந்த முன் கூந்த லுக்கு ஒரு வகைக் காந்தியை அளித்திருந்தது. கேட்டைத் தாண்டி யதுமே மாலதி, "எப்படி எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"சாதாரணமாகத்தான்."

"இன்றைக்கு என்ன பரீக்ஷை?"

"அர்த்த சாஸ்திரம்."

"ஓ! உங்களுடையது வியர்த்த சாஸ்திரம்!"

"வியர்த்த சாஸ்திரம் உன்னுடையது. என்னுடையதல்ல!"

மாலதிக்குச் சம்ஸ்கிருதத்தில் பிரியம். எவ்வளவோ முறை அவள் வசந்தனது இஷ்ட பாடமாகிய பொருளாதார சாஸ்திரத்தை வியர்த்த சாஸ்திரமென்று கேலி செய்திருக்கிறாள். பதிலுக்கு வசந்தனும் அவளது இஷ்ட பாடமாகிய சம்ஸ்கிருதத்தை வியர்த்த சாஸ்திரமென்று தாக்கிப் பேசுவான்.

"உங்களுக்குப் புரியவில்லை. ஏன் வீணாகச் சண்டை? உங்களுடையது அர்த்தத்தின் சாஸ்திரம்; என்னுடையது சாஸ்திரத்தின் அர்த்தம்! அவ்வளவுதான்."

"இரண்டிலும் அர்த்தம் இல்லை. அதுதான் உண்மை. அல்லவா?" என்று வசந்தன் கூறிய போது இருவரும் மனம் விட்டுச் சிரித்தனர். மாலதி கேட்டாள்:

"அது போகட்டும். மொத்தத்தில் பரீக்ஷை எப்படி?"

"இருக்கிறது!"

"அப்படி யென்றால் 'பெய்ல்' தானா?"

"அப்படி யென்றால் நீ ஒரு பைத்தியக்காரி என்று அர்த்தம். சாஸ்திரத்தின் அர்த்தம் சொல்லுபவளுக்கு இது கூடவா புரியவில்லை?" என்று வசந்தன் சிரித்தான்.

"அப்படியானால் 'இருக்கிறது' என்று இழுத்தால் என்ன அர்த்தம்?"

"அப்படியென்றால் 'டிஸ்டிங்ஷன்' இல்லை யென்று அர்த்தம்."

"நல்ல குறும்பு உங்களுடையது" என்று கூறி மாலதியும் சிரித்தாள். சிரிப்பைச் சிறிது அடக்கிக்கொண்டு, "எங்கே பரீக்ஷை தேறுது என்றுதான் சொல்லப் போகிறீர்களோ என்று..."

"ஏன், நான் பரீக்ஷையில் தேற வில்லை யென்றால் உனக்குப் பயமாக இருக்கிறதா?"

"ஆமாம்!"

"ஏன்?"

"ஏனென்றால்? போன தடவை நீங்களே சொன்னீர்களே! என்னால்தான் உங்கள் படிப்புக் கெட்டுப் போகிற தென்று!"

"ஆமாம். படிக்கும் போது புத்தகத்தில் எவ்வளவோ முறை எழுத்துக்களுக்குப் பதில் உன் உருவத்தையே கண்டு வந்தேன். ஆதனால்தான் அப்படிச் சொன்னேன்."

"அந்த உருவத்தை விரட்டியடித்திருக்க வேண்டும்."

"ஆயிரம் முறை அப்படிச் செய்து பார்த்தேன்."

"ஓ! அப்படியும் அது அங்கிருந்து அகல வில்லையா?"

"பிடிவாதக்கார உருவம் அது! இரண்டாயிரம் முறை மீண்டும் மீண்டும் திரும்பி வந்து கொண்டே இருந்தது!"

"மிகவும் குறும்பு வாய்ந்ததல்லவா அது?"

"நீ எப்படியோ அப்படியே தான்!"

"நீங்கள் ஒரு பைத்தியம்!"

"இல்லை யென்று நான் சொல்ல வில்லையே" என்று அவன் சொன்ன போது இருவரும் மனப்பூர்வமாகச் சிரித்தனர். மாலதியின் முகத்தில் அன்பும் வஸந்தனின் முகத்தில் ஆனந்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. வீட்டுக்கு அருகே இருந்த ரெயில் ஸ்டேஷனை இருவரும் சமீபித்திருந்தனர்.

வசந்தன், "இப்பொழுது நாம் எந்த ஊருக்குப் புறப்பட வேண்டும்?" என்று கேட்டான்.

"ஊருக்கா!"

"ஊம், பின்னே ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறோமே!"

"ஸ்டேஷனுக்கு வருபவர்களெல்லாம் ஏதாவது ஊருக்குப் போகத்தான் வேண்டுமா?"

"தாங்கள் போகாவிட்டாலும் வேறு யாரையாவது வழி அனுப்பவாவது வேண்டும்!"

"சும்மா கூட வரலாம்!"

"வேலையில்லாமலா?"

"வேறு ஏதாவது வேலை இருக்கக் கூடும்!"

"ஆமாம். வேலையில்லாமலும் ஸ்டேஷனுக்கு வரலாம், இல்லையா?"

"எதற்காக?"

"காலேஜில் வாசிக்கும் மாணவர்கள் ஸ்டேஷனுக்கு வருகிறார்கள், ஏன் தெரியுமா?"

"நீங்களும் இப்பொழுது அதற்காகத்தான் வந்திருக்கிறீர்களா?"

"நான் அதற்காக வரவேண்டியதில்லை."

"ஏன், நீங்களும் காலேஜில்தானே வாசிக்கிறீர்கள்?"

"காலேஜில் வாசித்தாலும் நான் ஸ்டேஷனுக்கு வரவேண்டிய வேலையில்லை. ஸ்டேஷனுக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு பங்களா

வுக்கு வந்தால் போதும்" என்று கூறி அவன் மாலதியைப் பார்த்த பொழுது அவனது பேச்சின் உட்கருத்தை அவள் எப்பொழுதோ அறிந்து கொண்டு விட்டிருந்தாள் என்று தெரிந்தது. பேச்சு மாத்திரம் நடந்ததே ஒழிய தாங்கள் எங்கு செல்ல வேண்டுமென்ற பிரச்னை விடுவிக்கப்படாமல் அப்படியே இருந்தது. ஆனல் ரெயில் பாதை வழியே நடந்துகொண்டே இருந்த அவர்களுடைய கால்கள் அந்தப் பிரச்னையைத் தாங்களாகவே விடுவித்து விட்டன.

இருவரும் ரெயில்வே கேபினைத் தாண்டி வந்து கொண்டிருந் தனர். அங்கிருந்து ரெயில்பாதை இறக்கத்தில் சென்று ஒரு வளைவு வளைந்து வலதுபுறமுள்ள ஒரு பெரிய பள்ளத்தாக்கில் மறைந்து விட்டது—வாழ்க்கைப் பாதை அறிய முடியாத எதிர் காலத்தில் மறைந்து நிற்பதுபோல.

"இங்கேயே எங்காவது உட்கார்ந்து கொள்ளுவோம். இருட் டிப்போய் விட்டது" என்ருள் மாலதி.

"இருட்டினுல் என்ன? இப்பொழுது நிலா வெளிச்சம் வரும்."

"இந்தப் பாதை வேறு கல்லும் முள்ளுமாக இருக்கிறது."

"அப்படியானல் இந்த மேட்டின்மேல் செல்வோமா?"

"ஊம்..."

இருவரும் இடது புறமிருந்த மேட்டின்மீது ஏறிச் சென்று அமர்ந்தனர். சுற்றுமுற்றும் யாரும் காணப்படவில்லை. தூரத்தே இருந்த கை காட்டி மரத்தின் மீதேறி விளக்கை ஏற்றிவிட்டுத் திரும்பிவந்து கொண்டிருந்தான் ஒரு போர்ட்டர். ஓரிரு நிமிஷங் களில் அவனும் அவர்களைத் தாண்டிச் சென்ருன்.

வசந்தனுக்கு அருகிலேயே மாலதி அமர்ந்திருந்தாள். வீட்டி லிருந்து புறப்பட்டபொழுது தலையில் சூட்டிக்கொண்ட மல்லிகைச் சரத்திலுள்ள மொக்குகள் மலர்ந்து நறுமணம் வீச ஆரம்பித்திருந் தன. அவ்வப்பொழுது வீசிய இளங் காற்று அந்த நறுமணத்தை ஏந்தி வசந்தனது அதரங்களிலும் முகத்திலும் முத்தமிட்டுச் சென்று கொண்டிருந்தது. அது அவனை மயக்கமுறச் செய்தது. வசந்தன் நினைத்தான்:—'மொக்குகள் மலர்ந்து புஷ்பம் ஆவது போல், மாலதியும் இப்பொழுது மலர்ந்து புஷ்பித்துக் கொண்டி ருக்கிருளல்லவா? அந்த மலர்ச்சிக்குச் சாட்சியாக, பார்க்கும்

கண்களுக்கு ஒரு கனவாக, அவளது அங்கங்கள் இதயத்தைக் கிறுகிறுக்கச் செய்வனவாக இல்லை?' என்று.

வசந்தன் இன்னும் சிறிது நகர்ந்து அவளுக்கு வெகு அருகில் அமர்ந்து மென்மையான குரலில், "மாலதி!" என்றான்.

"என்ன?"

வசந்தன் பேசாமலிருந்தான். அவன் மனத்தை அவள் அறியாமலில்லை. தன் பெயரை அவன் உச்சரித்த தொனியிலேயே அவனது பரபரப்பை அவள் உணர்ந்திருந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"என்னவோ ஒரு விசித்திரமான எண்ணம்!"

"என்ன அது?"

"நான் இந்த முறை பரீக்ஷையில் தேறாமலிருந்தால் நல்லது என்று!"

"தேறாமலிருந்தால் நல்லதா? என்ன பைத்தியம் இது?"

"இது பைத்தியம் அல்ல. பைத்தியத்தின் முடிவு!"

"கடைசி வரையிலும் காலேஜிலேயே இருந்து விடவேண்டுமென்பதா உங்கள் எண்ணம்?"

"காலேஜில் இல்லாவிட்டாலும் இங்கேயே இருக்க வேண்டுமென்ற ஆசை!"

மாலதி சிறிது நாணினாள். ஓர் அரை நிமிஷம் கழித்து, "இந்த ஊரிலேயே இருக்க வேண்டுமானால் பாஸானால் கூட இருக்கலாமே!" என்றாள்

"பாஸானால் காலேஜ் முடிந்தது!"

"ஏன்? எம். ஏ. க்குப் படித்தாலாயிற்று."

"எம். ஏ. என்னால் முடியாது!"

"ஏன்? படிப்பென்றால் அவ்வளவு கசப்பா?"

"படிப்பு கசப்பல்ல. பரீக்ஷைதான் கசக்கிறது. இதுவே கடைசியானதாக இருக்கட்டும். பரீக்ஷைக்குப் படிப்பது கூலிக்கு வேலைசெய்வது போல்!"

"அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அதைத்தான் யோசிக்கிறேன்!"

"என்ன வேண்டுமானாலும் ஆகட்டும். ஆனால் பரீக்ஷையில் தவறுவது வேண்டாம்!"

"ஏன்?"

"நாலு பேருக்கு முன்னல் அவமான மில்லையா?"

"அப்படியானல் பாஸ் செய்து விட்டு நான் இங்கிருந்து புறப்பட்டுப் போய் விடட்டுமா?"

"பாஸ் செய்து விட்டுப் புறப்பட்டு வந்து விடுங்கள்!"

அவளை இன்னும் நெருங்கி அவளது வலது கை விரல்களைத் தன்கையில் எடுத்துக் கொண்டு, "என் யோசனை வேறு" என்முன் வசந்தன்.

"என்ன அது?"

"நான் புறப்பட்டு வருவதை விட, நீயே புறப்பட்டு வந்து விடலாம்."

"எங்கே? உங்கள் ஊருக்கா?"

"ஆம்."

மாலதி பேசாமலிருந்தாள். வசந்தனது மனத்தில் ஆர்வம் துளும்பிக் கொண்டிருந்தது. அவளது கையை மெதுவாக அழுத்தி, "ஏன், என்ன சந்தேகம் மாலதி?" என்முன்.

"சந்தேகம் இல்லை. ஆசையிருக்கிறது. ஆனல்......"

"ஆனல் என்ன?"

"நீங்கள் அழைத்துக் கொண்டு போகவேண்டும்!" என்று பாதி வெட்கத்துடனும் பாதி சிரிப்புடனும் கூறிய பொழுது அவளது பேச்சிலே அடங்கியிருந்த உட்கருத்து வசந்தனுக்குப் புரிந்தது. அவனது ஆசை பலித்தது. "நான் உங்களுக்குப் பிடித்திருக்கிறேனல்லவா?" என்று கேட்பது போல் அவள் கண்கள் வசந்தன் முகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தன. வசந்தன் உற்சாகம் நிரம்பியவனய், ஆனந்தம் நிரம்பிய மனத்துடன் மாலதியைத் தன்பால் இழுத்துக் கொண்டு, "நீ என்னுடையவள்தானே மாலதி?" என்று கேட்டான்.

"......"

"ஊம். சொல்லு மாலதி. நீ என்னுடையவள்தானே?"

மாலதி மௌனமாகவே தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். கிழக்குத் திசையில் அப்பொழுதே உதயமாகி மேலே சென்று கொண்டிருந்த சந்திரனின் வெண்ணிலவில் மாலதியின் முகம் ஒப்புயர்வற்று விளங்கிக் கொண்டிருந்தது. அவள் தலையில் சூடியிருந்த மல்லிகை சம்பூர்ணமாக மலர்ந்திருந்தது.

திரும்பி வரும் பொழுது வழியில் மாலதி கேட்டாள்:

"நாளைக்குச் சாயங்காலம் மறுபடியும் இந்தப் பக்கம் வரு வோமா?"

"நாளைக்கு நான் ஊருக்குப் போகவேண்டும்."

"நாளைக்கா! பரீக்ஷை ஆனபிறகு ஐந்தாறு நாள் இங்கேயே இருக்கப் போவதாகச் சொல்லியிருந்தீர்களே?"

"ஆமாம். சொன்னேன். ஆனால் நேற்று என் தகப்பனாரிட மிருந்து கடிதம் வந்தது. தாய்க்கு ஏதோ உடம்பு சுகமில்லையாம்."

"என்னவாம்?"

"காய்ச்சலாம். அதிகமாக ஒன்றும் இருக்காது. எப்பவுமே அவள் அவ்வளவுதான். ஆரம்பத்திலிருந்தே பலஹீனமானவள்."

"நாளைக்கு நீங்கள் போயே ஆகவேண்டுமா?"

"ஆமாம் மாலதி, என் மனம் பொறுக்காது."

"அப்படியானால்......"

"போய்ப் பார்த்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டு மறுபடி யும் போகவேண்டு மென்றிருக்கிறேன்."

"அடுத்த வாரம் வருவீர்களா?"

"இப்பொழுது எப்படிச் சொல்வது? எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ வருகிறேன். ஆனால் அதற்குள்ளாக நீ எல்லாவற்றை யும் சரி செய்து வைத்துக் கொண்டிருக்கவேண்டும். ஊம்?"

"என்னத்தைச் சரி செய்து வைத்துக் கொள்ளுவது?"

"வீட்டில் சொல்ல வேண்டாமா?"

"எதை?"

"வேடிக்கை செய்கிறாயா மாலதி?"

கல கல வென்று சிரித்தாள் மாலதி. பிறகு சொன்னாள்:

"அது சரி. ஆனால் எப்படிச் சொல்வது?"

"நீ சொல்லவே வேண்டாம்!"

"அப்படியானால் அவர்களுக்குத் தெரிவது தான் எப்படி?"

"எல்லாம் அவர்களுக்குத் தெரிந்தேதான் இருக்கிறது."

"அப்படியானால் நான் செய்ய வேண்டியது தான் என்ன?"

"அவர்கள் உன்னைக் கேட்கும் படியாகச் செய்ய வேண்டும். கேட்கும் பொழுது பேசாமலிருந்து விட வேண்டும். அவ்வளவு தான்!"

"நல்ல கெட்டிக்காரர் தான், நீங்கள்!" என்று மாலதி கூறும் பொழுது அவள் வீட்டுக்குப் பக்கத்தில் இரண்டாகப் பிரிந்து

செல்லும் ரஸ்தாவுக்கு அவர்கள் வந்து சேர்ந்திருந்தனர். வசந்தன் அங்கிருந்து பிரிந்து தனியாகச் செல்ல வேண்டும். இருவரும் அந்தச் சந்தியில் நின்று விட்டனர். இருவருக்கும் வாயைக் கட்டினாற் போன்றிருந்தது. கடைசியாக வசந்தன் கேட்டான்:

"நான் புறப்பட்டுப் போன பிறகு கடிதம் எழுதுவாயா மாலதி?"

"எழுத மாட்டேன். எழுதச் செய்வேன்!"

"எழுதச் செய்வதிருக்கட்டும். நீயும் எழுத வேண்டும்" என்று அவளது கையைத் தன் கையில் ஏந்திக் கொண்டு, "நீ எழுதத் தான் வேண்டும்" என்று கண்டிப்புச் செய்தான்.

"அப்படியானால் நான் இனி புறப்படட்டுமா?" என்றாள் மாலதி. அவளை விட்டு விலகப் போகும் துக்கம் அவனைத் தீவிரமாக ஆட் கொண்டது. செய்வதறியாது மௌனமாகவே தலையாட்டினான். ஓரிரண்டு நிமிஷங்களில் வசந்தனுடைய கையிலிருந்து தனது கை விரல்களை விடுவித்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றாள். வசந்தன் நின்ற இடத்திலேயே நின்றிருந்தான். கேட்டின் சிறு கதவைத் திறந்து உள்ளே செல்லும் போது மாலதி மற்றொரு முறை திரும்பிப் பார்த்தாள். பிறகு அவன் பார்வையினின்றும் அவள் மறைந்தாள்.

வசந்தன் ஊருக்கு வந்தபோது தாயின் தேகநிலை நம்பிக்கை யூட்டுவதாக இருக்க வில்லை. தாயை இழந்து விட வேண்டுமோ என்னும் பயத்தில் சில தினங்களுக்கு மாலதியின் நினைவு அதிகமாக உண்டாக வில்லை. அடுத்த வாரம் வருவதாகச் சொல்லி வந்திருந்த போதிலும் அடுத்த வாரம் அவனால் திரும்பிச் செல்லக் கூடவில்லை. அவ்வப் பொழுது மாலதியின் நினைவு தோன்றி இதயம் வாட்டமுறும். ஒரு நாள் இரவு திடீரென்று அவன் தாய் இறந்தே போனாள். மறுநாள் இடி விழுந்தாற் போன்று சங்கரராவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'ஏழு நாட்களாகக் கொடிய விஷஜுரத்தினால் பீடிக்கப் பட்டிருந்த மாலதி எல்லோரையும் கைவிட்டுவிட்டுப் போய்விட்டாள்' என்று. துக்க மிகுதியால் வசந்தன் பைத்தியம் பிடித்தவன் போலானான்...

அந்தத் துக்க சம்பவங்களையெல்லாம் நினைத்துக் கொண்ட வசந்தனது இதய ஆழத்திலிருந்து பாரமானதொரு நீண்ட பெரு மூச்சு வெளிப் பட்டது. அப்பொழுது தான் அவன்

கனவிலிருந்து விழித்துக் கொண்டவன் போல் கண்களைத் திறந்து சுற்று முற்றும் பார்த்தான். சுற்றிலும் இருள் கவிந்திருந்தது. ஜனங்கள் ஒவ்வொருவராகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். பக்கத்து ரோட்டிலுள்ள காஸ் விளக்குகளின் ஒளி தூறி வந்து கொண்டிருந்தது. எழுந்து உட்கார்ந்து கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டான். சென்று போன நாட்களின் நினைவு இதயத்தைப் பிழிந்து கொண்டிருந்தது. "நான் ஒரு துர்ப்பாக்கியவான்" என்று கூறிக் கொண்டான். சுற்றிலும் வியாபித்திருந்த நிசப்தம் அவனது தனிமையின் பிரதிபிம்பம் என்னும்படி பரவியிருந்தது. தகப்பனார் இருந்த வரையில் தாயை இழந்த துக்கத்தைச் சமாளித்துக் கொள்ள முடிந்தது. மூன்று வருஷங்களுக்கு முன்னால் அவரும் இறந்து விட்டார். ரெய்ச்சூரில் கணவனுடனும் குழந்தைகளுடனும் வசித்து வந்த அக்காவை விட்டால் தனக்கு வேறு யாரும் இல்லை என்பதை நினைக்கும் போதெல்லாம் வசந்தன் துக்கத்தால் வெந்து கொண்டிருந்தான். தந்தை விட்டுப் போன ஆஸ்தியும், ரொக்கமும் சுமாராக இருந்தன. ஆனால் ஊரில் உட்கார்ந்து என்ன செய்வது என்ற யோசனையாலும், மனத்திற்குப் பிடித்தமான எதையாவது படிக்கலாமென்ற எண்ணத்தாலும் தந்தை இறந்த பிறகு வசந்தன் பம்பாயை வந்தடைந்தான். ஏகாந்தத்தையே விரும்பிய அவன் மனம் பம்பாயில் நெருக்கடி, அவசரம், அசாந்தி இவைகள் இல்லாத இடமாகிய போரிவிலிக்கு அவனை அழைத்துச் சென்றது. சும்மா உட்கார்ந்து, இருக்கும் ஆஸ்தியை ஏன் வீணில் கரைக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் செக்ரடேரியட்டில் ஒரு வேலையையும் சம்பாதித்துக் கொண்டிருந்தான். சென்ற மூன்று வருஷங்களுக்குள் வேலையிலும் நன்றாக முன்னேறி நல்ல சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தான். ஆனால் இவை யொன்றிலும் அவன் மனம் உற்சாகத்துடன் ஈடுபடவில்லை.

அழகைக் கண்ட போதெல்லாம் மாலதியின் உருவம் அவன் கண் முன்னால் வந்து நிற்கும். மனத்தில் துக்கம் மூளும். ஆனால் இந்த மூன்று வருஷங்களில் துக்கத்தின் கடுமை எவ்வளவோ குறைந்திருந்தது. மேலும் பழைய துக்க அநுபவம் அவனைக் குழைந்த இதய முள்ளவனாகச் செய்து விட்டது. மற்

ெருவர் துக்கத்தைத் தன்னுடையதாகச் செய்து கொண்டு சாத்தியப் பட்ட பொழுதெல்லாம் அவர்களுக்குச் சகாயத்தையும் அநுதாபத்தையும் அளிப்பது வசந்தனது சுபாவமாகி விட்டது. ஏகாங்கியான அவன் இதயம் சுற்றுப் புற உலகின் அநு தாபத்தை வேண்டி நின்றது. அதனுலேயே, தான் யாசித்துத் தனக்குக் கிடைக்காமற் போன அந்த அநுதாபத்தின் விலையை அவன் உணர்ந்திருந்தான். சென்ற ஒன்றரை வருஷகாலத்தில் மோஹினியின் முகத்திலே குடி கொண்டிருந்த ஏதோ ஒரு துக்கத்தின் சாயையை அவன் அறிந்திருந்தான். அவளைக் காணும் போதெல்லாம் அவன் மனத்துள் அவள் பால் அநுதாபம் பொங்கிப் பெருகும்.

சர்னிரோட் பூங்காவிலிருந்து புறப்பட்டு ஸ்டேஷனுக்கு வந்து சேரும் பொழுது மணி 7–30 ஆகிவிட்டிருந்தது. ரெயிலில் கும்பலுக்குக் குறை விருக்க வில்லை. தாதர் ஸ்டேஷனில் ஒருவன் கேட்டருகே கூடும் கும்பலைத் தாண்டிச் செல்ல வேண்டு மானல், பெரிய பயில்வானுக இருக்க வேண்டும்; அல்லது 'பூகம்பமே வந்தாலும் சரி; எதிர்த்து நிற்பேன்' என்னும் மனே திடமுள்ளவனுக இருக்க வேண்டும். வசந்தன் என்னவோ பயில்வான் அல்ல. எனவே கும்பல் சிறிது குறையட்டும் என்று காத்திருந்தான்! வெளியே செல்பவர்களின் கூட்டம் குறையும் வேளைக்கு உள்ளே வருபவர்களின் திரள். அதற்குள் இன்னெரு லோகல் வந்து விடும். எப்படியோ கடைசியில் சமாளித்துக் கொண்டு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்த வசந்தன் எதிரே இருந்த டீ ரெஸ்டாரெண்டிலிருந்து பாஸ்கரராவ் வந்துகொண்டிருந்ததைக் கவனித்தான். அவனுடன் என்ன பேசு வது என்று ஒரு கணம் நினைத்த வசந்தன் அவன் கண்களில் படாமலே போய் விடலாமென்று பார்த்தான். ஆனல் மறுகணமே, 'ஒரு சமயம் இவன் மூலமாக ஆனந்தன் இருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தாலும் முடியலாம்' என்று எண்ணினன். மோஹினி சொன்னவைகளைக் கேட்டதிலிருந்து அவன் மேல் வசந்தனுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்த போதிலும் அதைச் சிறிது மறந்து விட்டு நேரே பாஸ்கரராவை நோக்கிச் சென்றுன்.

"ஹல்லோ, வசந்தராவ். ஏது இங்கே இந்நேரத்தில்?" என்று பாஸ்கரராவே பேச்சை ஆரம்பித்தான்.

"இங்கே சில நண்பர்களைப் பார்க்க வேண்டியிருந்தது......"

"அப்படியானால் இப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வருகிறீர்களா?"

"ஆமாம்."

"அப்படியானால் போரிவிலிக்கு வருவதில்லையா இன்று?"

"பார்க்க வேண்டும். இங்கே ஒருவர் வீட்டில் சாப்பாடு. அதிக நேரமாகாமலிருந்தால் போகலாம். இல்லாவிட்டால் ராத்திரி இங்கேயே தங்கி விட்டு நாளைக்குத்தான்......ஊம் வேறென்ன சமாசாரம்? எல்லாம் சுகந்தானே?"

"என்ன சுகமோ என்னவோ. இப்படி நடக்கிறது போங்களேன்!"

"ஏன்? மிகவும் அலுத்துக்கொள்ளுகிறாற் போலிருக்கிறதே."

"அலுத்துக் கொள்ளாமல் பின் என்ன? இந்த ஹோட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்டு மனிதன் பிழைப்பதே கஷ்டமாக இருக்கிறது."

"ஏன் ஹோட்டல் சாப்பாடு, பாஸ்கரராவ்? நீங்கள் வீட்டில் சாப்பிடுவதில்லையா?"

"சாப்பிட்டுக்கொண்டு தான் இருந்தேன். ஆனால் அதுவும் என்னவோ சரிப்படவில்லை. மேலும், ஏன் நம்மால் மற்றவர்களுக்குத் தொந்தரவு? அவரவர்கள் குடும்பம் அவரவர்களுக்கு......"

"அப்படியானால் இப்பொழுதெல்லாம் நீங்கள் அங்கே இருப்பதே இல்லையா?"

"இப்படி இரண்டில் மூன்றில் ஒரு முறை போய் வருகிறேன். ஆனால் இப்பொழுது ஓர் இரண்டுமாதமாக வேறு அறை ஒன்றைப் பிடித்திருக்கிறேன்."

"எங்கே?"

"அங்கேயே, பக்கத்தில் இருக்கிறது. சினிமா தியேட்டர் இருக்கிறதோ இல்லையோ? அதற்கு அந்தண்டை இரண்டாவது பங்களா......ஒரு நாள் வாருங்களேன், எப்பொழுதாவது சாயங்காலமாக."

பேச்சு எப்படி எப்படியோ திரும்புகிற தென்று தோன்றியது வசந்தனுக்கு. ஆனால் அதற்குள்ளாகப் பாஸ்கரராவே எதையோ நினைத்துக் கொண்டவன் போல் பேச்சை மீண்டும் தொடங்கினான்.

"மூந்தா நாள் ராத்திரி நீங்களும் நானும் சந்தித்தோம். அப்பொழுது நான் தப்பாக நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனந்தனை வரச்சொல்லி சொன்னது நீங்கள் அல்லவென்று அப்பொழுது எனக்குத் தெரிந்திருக்கவில்லை."

"அப்படியா? எனக்கும் அப்படித்தான் தோன்றியது. 'சரி, யார் சொல்லியிருந்தால் என்ன' என்று நான் பேசாமலிருந்து விட்டேன்."

பேச்சு தானாகவே ஆனந்தன்-மோஹினி விஷயமாகத் திரும்பியதும் வசந்தன் தைரியம் அடைந்து பேசத் தொடங்கினான்.

"இப்பொழுது எல்லாம் சரியாகத்தானே நடந்துவருகிறது?"

"தூ. அதைப்பற்றிக் கேட்கவேண்டாம்."

"ஏன்? மறுபடியும் என்ன தொந்தரவு?"

"தொந்தரவா? அவள் இருக்குமிடமெல்லாம் தொந்தரவு தான். உபயோகமற்ற பெண். என்ன செய்தாலும் அவ்வளவு தான்."

வசந்தனுக்குத் தனது அபிப்பிராயத்தை வெளியிடவேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆகவே பேசாமலிருந்தான். பாஸ்கர ராவ் தொடர்ந்து பேசினான்:

"உங்களைப்போலச் சிநேகிதர்கள் நான்கு பேர் ஆனந்தனுக்குப் புத்தி சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவன் அந்தப் பெண்ணினால் பாழாகப் போய்விடுவான்."

இதை வசந்தனால் பொறுக்க முடியவில்லை. சிறிது உஷ்ணமாகவே அவன் பேசினான்.

"இந்த விஷயத்தில் வெளியார் தலையிட்டுப் பேசுவதென்பது சிறிது கஷ்டம், பாஸ்கரராவ். என்னவோ குடும்ப சம்பந்தமான பேச்சு. அதுவுமல்லாமல் 'விவாகம் செய்துகொண்ட மனைவியிடமிருந்து விலகியிரு' என்று எப்படிப் புத்தி கூறுவது? எப்படியோ எல்லோரும் ஒருமனப்பட்டு, இருக்கும் பிளவைச் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டும்."

"ஸ்... அவள் விஷயம் உங்களுக்குத் தெரியாது, வசந்தராவ். மரியாதைப்பட்ட எந்த மனுஷனும் ஒரு நாய்க்குச் சமமாகக்கூட அவளை மதிக்கமாட்டான்."

"இதில் நீங்களும் நானும் பேசி என்ன பிரயோசனம்? ஆனந்தன் தான் இந்த விஷயத்திற்கு ஒரு முடிவு காணமுடியும்."

"ஆனந்தன் ஒரு முட்டாள். அவள் முகத்தைக் கண்டு அவன் மயங்கிக் கிடக்கிருன்."

வசந்தன் மனத்திற்குள்ளேயே நினைத்தான்: "யார்தான் அந்த முகத்தைக் கண்டு மயங்காமல் இருக்கமுடியும்?" என்று.

"எவ்வளவானாலும் அவள் அவனது மனைவி......"

"ஆமாம். அதையாவது அவள் தெரிந்துகொள்ள வேண்டாமோ? தனக்குப் புருஷன் என்பவன் ஒருவன் இருக்கிருன் என்பதையாவது அவள் நினைக்கிருளோ இல்லையோ!"

"நான் என்ன சொல்லப்போகிறேன், பாஸ்கரராவ்? இருவரிடமும் குற்றம் இருக்கலாம். என்ன சொன்னாலும் அவள் பெண். வீட்டில் எல்லோரும் ஒத்துப்போனால் தானாகச் சரியாகப் போய்விடும்."

"எல்லோரும் ஒத்துப் போவதென்ருல் என்ன அர்த்தம்? உண்மையில் பார்க்கப்போனால் வீட்டிலுள்ள அனைவருக்கும் போதும் போதுமென்ருகியிருக்கிறது. இவர்கள் சண்டையைப் பொறுக்கமாட்டாமலே நான் இப்பொழுது வேருக இருக்கத் தலைப்பட்டேன்."

"இருக்கலாம். என் அபிப்பிராயம் இப்படி. நாலு பேர் சேர்ந்து ஒரு பெண்ணைக் கெட்டவள் என்று சொல்லிவிட்டால் மற்றவர்களும் அதையே பேச ஆரம்பித்துவிடுகிருர்கள். ஒருகால், புருஷனையும் மனைவியையும் தனியாகக் குடித்தனம் நடத்த விட்டுவிட்டால் அவர்கள் சரியாகப்போய் விடுவார்களோ என்னவோ."

"நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லையே? நூறு தடவை சொல்லியிருக்கிறேன் ஆனந்தனிடம். 'வீணில் இரண்டாம் பேருக்கு அபவாதம் வேண்டாம். இஷ்டமிருந்தால் நீங்கள் இரண்டுபேரும் வேருகக் குடித்தனம் வைத்துக்கொண்டு இருக்கலாம்' என்று."

"ஆனந்தன் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லையா?"

"இவ்வளவு நாள் ஒன்ருக இருந்துவிட்டு இப்பொழுது தனியாகப் போவது அவனுக்கு இஷ்டம் இல்லை. என்னதான் சொன்னாலும் சொந்த அக்காவுடைய வீடு. மேலும் அவனுக்கு வரும் சம்பளம் அவன் துணிமணிகளுக்கே போதாமலிருக்கிறது..."

"இருந்தாலும் ஒரு முறையாவது தனிக் குடித்தனம் நடத்திப் பார்க்கலாமே!"

"நீங்கள் ஓர் அப்பாவி. ஆனந்தன் இதற்கு ஒத்துக்கொண்டாலும் அவள் ஒத்துக்கொள்ள வேண்டுமே! முக்கியமாக வீட்டை நம்பிக்கொண்டு இருக்கவேண்டிய தேவையே அவளுக்குக் கூடாது. நடத்தை கெட்டவள்......"

இந்தப் பேச்சை வளர்த்துவதில் பிரயோசனம் இருப்பதாக வசந்தனுக்குப் படவில்லை. பேச்சை வேறு திசையில் திருப்ப வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் பொழுதே பாஸ்கர ராவே மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"விஷயம் என்ன வென்றால், அவளுக்குத் தன்னுடைய அழகைப்பற்றிய கர்வம்! நான்கு பேரைத் தனது விரல் நுனியில் ஆட்டிவைக்கும் சக்தி தனக்கு உண்டு என்ற அகங்காரம்! ஒரு நான்கு நாட்களுக்கு அவளுடைய தாசர்கள் அவள் இஷ்டப்படி கூத்தாடலாம். ஆனால்......"

வசந்தனால் பொறுக்க முடியவில்லை. பாஸ்கரராவ் அளவு மீறிப் பேசுவதாக அவனுக்குத் தோன்றியது. 'இவன்பேரில் மோஹினி சாட்டிய குற்றம் பொய்யாக இருக்கமுடியாது' என்று அந்தக் கணமே அவனுக்குத் தெரிந்துபோய் விட்டது. தன்னுடைய காமப் பித்தை அவளிடத்திலே தீர்த்துக்கொள்ள முடியாமற்போன பாஸ்கரன் இப்பொழுது பழிவாங்கும் எண்ணத்துடன் அவளைப் பாழ்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான் என்பது நன்றாகத் தெரிந்தது.

"இப்படியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது, பாஸ்கரராவ். எவ்வளவானாலும் அவள் உங்கள் தம்பியின் மனைவி."

"உங்களுக்கு என் வார்த்தையில் நம்பிக்கையில்லை யென்று தெரிகிறது. விஷயம் எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருந்தால் இதைவிடக் கேவலமாக நீங்களே பேசுவீர்கள்."

"இதில் எனக்கு என்ன வந்தது சொல்லுங்கள்? என்னவோ ஆனந்தன் எனக்கு வேண்டியவன். வீணில் நாலுபேர் வாயில் ஏன் அபவாதம்? இருவரும் சுகமாகக் கூடி வாழட்டுமே என்பது என் ஆசை."

"யார் இவர்களை வேண்டா மென்றார்கள்?"

"அப்படிச் சொல்லிவிட்டால்? எல்லோரும் சேர்ந்து அதற்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்துகொடுக்க வேண்டும். நான் வேண்டுமானால் ஆனந்தனுடன்பேசி அவனை ஒப்ப வைக்கிறேன்."

"சரிதான். நாங்களெல்லாம் முயன்று பார்த்தாய்விட்டது. இனி நீங்கள்......"

"அதையும் பார்த்துவிடுவோமே. ஆனந்தன் இப்பொழுது ஏன் வீட்டுக்கு வருவதில்லை?"

"அவன் ஆபீஸ் பரீக்ஷைக்காகப் படித்துக்கொண்டிருக்கிறான். வீட்டில் அவன் படிக்க விடுவதில்லை. ஆகையால் 'பரீக்ஷை முடியும் வரையில் எங்கேயாவது நண்பர்கள் வீட்டிலேயே இருந்துகொள்கிறேன்' என்று கூறி இங்கே தாதருக்கு வந்திருக்கிறான்."

"தாதரில் எங்கே?"

"எங்கே என்று நானும் பார்க்கவில்லை. எங்கோ சிவாஜி பார்க்குக்குப் பக்கத்திலாம்."

"ம்... வேறென்ன விசேஷம்?"

"ஒன்றும் இல்லை. இப்பொழுது மணி என்ன?"

"எட்டரை."

"எட்டரையா? போரிவிலிக்கு இப்பொழுது ஒரு லோகல் இருக்கவேண்டும். நான் வரட்டுமா?"

"அச்சா!"

"ரூமுக்கு வாருங்களேன், சௌகரியப்பட்டபோது."

"ஓ. கே!" என்று கூறி வசந்தன் திரும்பினான். பாஸ்கரனது விசித்திர சுபாவத்தைப்பற்றி நினைத்துக்கொண்டே தனது நண்பன் வீட்டை நோக்கி நடந்தான். விசித்திர எண்ணம் ஒன்று அவன் மனத்தில் தோன்றியது. 'மோஹினி—பாஸ்கரராவ்: ஒன்று கிளி, மற்றொன்று பருந்து' என்று சொல்லிக்கொண்டான்.

பாஸ்கரராவ் கும்பலில் இடித்துத் தள்ளிக்கொண்டு வண்டியிலேறி நல்ல இடமொன்றைப் பிடித்து அமர்ந்துகொண்டான். எதிர்ப்புறத்துப் பெஞ்சியில், யாரோ இரு யுவதிகள் உட்கார்ந்திருந்தனர். பாஸ்கரராவ் அடிக்கடி அவர்களைத் திருட்டுப் பார்வை பார்த்துக்கொண்டிருந்தான். அடிக்கொருதரம் கையில் வைத்திருந்த ஏதோ ஒரு மாதச் சஞ்சிகையின் வருட மலரைப் புரட்டிப் பார்ப்பது போன்று நடித்துக்கொண்டிருந்த அவனது செய்கை அவனிடம் எஞ்சி நின்ற நன்னடத்தைக்குச் சாட்சி கூறுவதுபோல் இருந்தது. திறந்திருந்த புத்தகத்தைவிட எதிரே அமர்ந்திருந்த பெண்களின் மீதே அவன் நாட்டம் அதிகமாகச் சென்றுகொண்

டிருந்தது என்பதை அறிந்துகொள்ள அரை நிமிஷங்கூட வேண்டியதில்லை. இரண்டு ஸ்டேஷன்கள் தாண்டியதுமே அந்த இரு யுவதிகளும் இறங்கிச் சென்றனர். அவர்கள் தன் பார்வையினின்று மறையும் வரையில் அவன் கண்கள் அவர்களைத் தொடர்ந்து சென்றன. பிறகு கையிலிருந்த புத்தகத்தின் பக்கங்களைத் திருப்பினான்.

ஒரு பக்கத்தில் அரைநிர்வாணமான பெண்ணின் வர்ணச் சித்திரம் ஒன்றிருந்தது. பாஸ்கரன் இதுவரை அந்தப் படத்தை எவ்வளவு முறை பார்த்திருப்பானோ! இருந்தாலும் மீண்டும் அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனது பக்கங்களில் உட்கார்ந்திருந்தவர்கள் ஒரு முறை இதைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டனர். பாஸ்கரராவுக்கோ அதை எவ்வளவு முறை பார்த்தபோதிலும் சலிப்புத் தட்டவில்லை. அந்தக் கணத்தில் அவன் மனத்துள் புகுந்து பார்த்தால் அவனது ஊடுருவிய பார்வையின் பொருளைத் தெரிந்துகொள்ளலாம். அந்த அரைநிர்வாணப் பெண் அவனைப் பொறுத்தமட்டில் யாரோ ஒரு பெண் அல்ல; அந்தப் பெண்ணின் உருவத்திலே அவன் மனக் கண்கள் மோஹினியையே கண்டுகொண்டிருந்தன! காமாந்தகாரச் சேற்றிலே அழுகிக்கொண்டிருந்த அவனது மனத்தின் ஒவ்வோர் அணுவிலும் தொண்ணூறு சத விகிதத்திற்கு மேல் பெண் இச்சையே நிரம்பி இருந்தது. பாஸ்கரன் அச் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது அவன் மனக் கண்ணெதிரே மற்றொரு சித்திரம் நிழலாடியது. சுமார் ஒரு மாதத்திற்குமுன் மோஹினி குளிக்கும் அறையில் இருந்தபொழுது சமயமறிந்து ஏதோ சாக்கு வைத்துக்கொண்டு பாஸ்கரன் அந்த அறைக்குள்ளே நுழைந்துவிட்டான்! அங்கே அவன் கண்ட காட்சி!

ரெயில் அந்தேரியைத் தாண்டி இருட்டினூடே செல்லத் தொடங்கியிருந்தது—பாஸ்கரனுடைய மனத்தைப்போல. அவன் மனம் மோஹினியின் ரூபலாவண்யத்தைச் சுற்றிச்சுற்றியே வந்துகொண்டிருந்தது. கடந்த பத்துப் பன்னிரண்டு மாதங்களாக நூறு வகைகளில் அவளைத் தன்பால் இழுக்க அவன் செய்த பிரயத்தனங்களெல்லாம் தவிடுபொடியாகிவிட்ட கோபம் ஒரு

புறம், அந்தக் கோபத்தினால் பழிவாங்கும் ஆத்திரம் ஒரு புறம்! ஓரிரு சமயங்களில் மோஹினி அவன் முகத்திலறைந்தாற்போல் பதில் கூறியிருந்தாள். மற்றும் அவனது அந்தரங்கத்தை வெட்ட வெளிச்சமாக்கவும் முற்பட்டிருந்தாள். தனது தோல்வியின் அவமானத்தை மறக்க வேண்டுமென்பதற்காகவே சமீப காலத்தில் ஆனந்தனுக்கும் மோஹினிக்கும் இடையே விஷத்தைக் கக்கி அது வளர்வதற்கு வேண்டிய யத்தனங்களைச் செய்து வந்தான். ஆனந்தன் தன்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் தன்னுடைய நீச மனோபாவத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டிருந்தான் பாஸ்கரன். மோஹினியின் சுபாவத்திலிருந்த பிடிவாத குணம் அவனது துஷ்பிரசாரத்திற்குப் பெரிதும் சகாயமாக இருக்குமென்பதைப் பாஸ்கரன் அறிந்திருந்தான்.

வசந்தனிடம் கூறியபடி பாஸ்கரன் வேறு அறை ஒன்றில் இருந்து வருவது உண்மையானாலும் 'சமீப காலமாக' என்று அவன் சொன்னது மாத்திரம் உண்மையல்ல. ஆனந்தனின் விவாகம் நடைபெற்ற ஓரிரண்டு மாதங்களுக்குள்ளேயே, பாஸ்கரனின் மனைவி அவனது துர்நடத்தையின் காரணமாகப் பெற்ற கொடிய வியாதியினால் அவதியுற்று, தக்க சுசிரூஷையும் வைத்திய உதவியும் இல்லாததனால் உயிர் நீத்தாள். மனைவி இறந்து போவது நிச்சயம் என்று தெரிந்த உடனே தன் எதிர்காலத் திட்டங்களுக்கு அநுகூலமாக வேறு அறையொன்றை வாடகைக்கு ஏற்படுத்திக் கொண்டான். சமீப காலத்தில் அவன் அதிகமாக அந்த அறையிலேயே வசித்து வந்த போதிலும் அடிக்கடி தன் அக்கா வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தான். சில தடவைகளில் அவனது நடத்தை அவனது அக்காவுக்கு மாத்திரம் அல்லாமல் அவளது கணவர் நாராயணராவுக்கும் பிடிக்காமற் போகவே அவன் தனது சாப்பாட்டிற்கு வேறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியதாயிற்று. மொத்தத்தில் அந்த வீட்டில் பாஸ்கரன் யாருக்கும் வேண்டியவனாக இருக்கவில்லை. ஆனந்தனைப் பொறுத்தவரையில், அவனும் சில விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தபோதிலும் பகிரங்கமாகத் தனது தமையனிடத்தில் அவநம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை. இது பாஸ்கரனுக்கு அநுகூலமாகவே இருந்தது.

போரிவிலியில் வண்டியிலிருந்து இறங்கும்போதே பாஸ்கரன் வசந்தனைப்பற்றி நினைக்க ஆரம்பித்தான். வசந்தனின் ஞாபகம் வந்ததும், மோஹினியைப் பற்றிய நினைப்பு இரட்டிப்பாகத் தோன்றி, நேராகத் தனது அறைக்குச் செல்லாமல் அக்கா வீட்டிற்குப் போய்விட்டுப் பிறகு தனது அறைக்குப் போகலாமென்று தீர்மானித்தவனாய் வேறு வழியில் திரும்பினான். வசந்தனது பேச்சில் காணப்பட்ட கருணை பாஸ்கரனுக்குப் பிடித்திருக்கவில்லை. மேலும் தன் மனநிலைக்குத் தக்கவாறு ஒரு கணம் வசந்தனது கருணை நிரம்பிய சொற்களுக்கு விபரீதமான பொருளைக் கற்பித்துக் கொண்டான். ஆனால் அது ஒரே கணம்தான். "வீட்டிலுள்ளவர்களெல்லாம் சேர்ந்து மோஹினிக்குக் 'கெட்ட நடத்தை யுள்ளவள்' என்ற 'பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்" என்னும் வசந்தனது அபிப்பிராயத்தை அவன் நிராகரித்ததோடு அவன் அப்படிச் சொல்லுவதற்கு அவனுக்கு என்ன ஆதாரம், ஏது அதிகாரம் என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அவன்மேல் பாஸ்கரனுக்குக் கோபமும் வந்தது. ஆனால், 'வசந்தன் அந்நியன். அவன் என்ன சொன்னால் நமக்கென்ன?' என்று சமாதானப் பட்டுக் கொண்டான்.

பாஸ்கரன் தன் அக்கா வீட்டை அடைந்த பொழுது நாராயணராவ் எதிரேயுள்ள அறையிலேயே படுக்கையில் சாய்ந்து கொண்டு தினப்பத்திரிகை ஒன்றின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். வீட்டுக்குள் நுழைந்ததுமே அங்கே நிலவியிருந்த மௌனம் அவனுக்கு ஏதோ சம்சயத்தைத் தோற்றுவித்தது. நாராயணராவ் முகபாவமும் அவனது சந்தேகத்தைப் பலப்படுத்துவதாக இருந்தது. வீட்டில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் பாஸ்கரனுக்குப் புதியவையல்ல. ஆகையால் அவன் நேரே சமையலறைக்கே சென்றான். நடு வீட்டில் விளக்கு வெளிச்சம் படாத ஒரு மூலையில் மோஹினி சுவரில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். அக்கா, சாப்பிட்டானதும் செய்ய வேண்டிய காரியங்களில் ஈடுபட்டிருப்பதுபோல் காணப்பட்டது. வெளியேயிருந்து நாராயணராவ் கூப்பிடும் குரல் கேட்டது.

"பாஸ்கர்......"

"வந்தேன்...என்ன?"

"ஆனந்தனைப் பார்த்தாயா, இன்றைக்கு?"

"இல்லை. முந்தாநாள் பார்த்ததுதான். ஏன்?"

"அவனை இப்பொழுதே இங்கே அழைத்துக் கொண்டு வந்தாக வேண்டும். நானே இப்பொழுது புறப்பட வெண்டுமென்று இருந்தேன்."

"ஏன்?......என்ன நடந்தது?"

"நடப்பதென்ன மண்ணுங்கட்டி? எனக்குப் போதும் இந்தக் கண்ணராவி. அவன் இப்பொழுதே வந்து தன் பெண்டாட்டியை அழைத்துக்கொண்டு போகட்டும். என்னால் இனிமேல் சாத்தியப்படாது".

"என்ன!......நடந்ததுதான் என்ன?"

"காலையிலிருந்து சாயங்காலம் வரையில் காரியாலயத்தில் வேலைத் தொந்தரவு. பிறகு வீட்டுக்கு வந்தாவது உஸ் அப்பாடா என்று சிறிது விசிராந்தியாக உட்காரலாமென்றால் இவர்கள் ரகளை. என்னால் இனிப் பொறுக்க முடியாது. இனி, ஒன்று அவர்கள் இங்கே இருக்கவேண்டும்; இல்லை நாங்கள் இருக்கவேண்டும்..."

"என்ன ஆயிற்று? நடந்ததைச் சொல்லக் கூடாதா?"

இதற்குள்ளாக வாசலருகில் வந்து நின்ற அக்கா நடுவே பேச்சை ஆரம்பித்தாள்.

"எனக்கு எப்பொழுதோ தெரியுமே! அவளுடன் பேச்சுக் கொடுப்பதே தப்பு. 'இன்று சனிக்கிழமைதானே; காலேஜ் விட்டு வீட்டுக்கு வருவதற்கு ஏன் இவ்வளவு நாழிகை?' என்று சகஜமாகக் கேட்டேன்; அதற்கு ஆயிரம் பேச்சுப் பேசுகிறாள்."

"நீ ஏன் அவளைக் கேட்கிறாய்? உனக்கு என்ன வந்தது?" என்று நாராயணராவ் மனைவியின்மேல் பாய்ந்தார். அவள் கேட்டதில் தவறொன்றுமில்லை என்பதை அவர் அறிந்திருந்த போதிலும் அவள் கேட்டதனால் ஏற்பட்ட விளைவுகளினால் ஆக்கிரோஷம் கொண்டிருந்த அவர் இப்பொழுது மனைவியை மிரட்டுவதில் இறங்கிவிட்டார்.

"ஆமாம். என் தப்புத்தான். நான் கேட்டிருக்கக் கூடாதுதான். காலையிலிருந்து சாயங்காலம் வரையில் இவள் ஊர் சுற்றிவிட்டு வருவாள், ஒய்யாரமாக. நான் வீட்டிலே உழைத்துச் சாக வேண்டும். ஏன் நேரங்கழித்து வந்தாய் என்று ஒரு வார்த்தை நான் கேட்கக்கூடாது. என் தலைவிதி அப்படி. உங்களை ஏன் சொல்லவேணும்?"

மோஹினி உள்ளிருந்தபடியே எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் வாயைத் திறக்கவில்லை. 'பார்ப்போம். இவர்களெல்லாம் பேசி என்ன முடிவுக்கு வருகிறார்களோ' என்று சொல்லிக்கொண்டது அவள் மனம். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தை அவள் எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது இது முதல் தடவையல்ல.

"எங்கே போயிருந்தாய்? என்று கேட்டதற்கு, 'போயிருந்தேன் இப்படியே ஒருவரோடு' என்று சொல்கிறாள். கொஞ்சமாவது வெட்கம் வேண்டாமா இவள் பிழைப்புக்கு?" என்று நாத்தனார் சொன்னபோது மாத்திரம் மோஹினியால் பொறுக்க முடியவில்லை. உள்ளேயிருந்தபடியே எல்லோர் காதிலும் கேட்கும்படியாக, "ஆமாம். அப்படித்தான் சொன்னேன். உங்களுக்கு வேண்டிய பதில் எதுவோ அதையே சொன்னேன். உண்மையைச் சொன்னால்தான் உங்களுக்குப் பொய்யாகத் தோன்றுகிறதே" என்றாள்.

"ஆமாம். மஹா சத்தியவதியடீ நீ. என்றும் பொய்பேசி அறியாதவள்!" என்று நாத்தனார் அவளைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள். நாராயணராவுக்கு இந்த நாடகத்தை மீண்டும் பார்க்க வேண்டியிருக்கவில்லை.

அவர் சொன்னார்: "பாஸ்கரா, இது முடியும் வழியாக இல்லை. என்னால் ஆனவரையிலும் பொறுத்தேன். விடிந்தெழுந்தால் வீட்டில் இது கொஞ்சங்கூட நன்றாயில்லை. நீ ஆனந்தனை அழைத்துக்கொண்டு வா."

"இப்பொழுது மணி பத்தடித்துவிட்டது..." என்று பாஸ்கரன் தயங்கினான்.

"இன்று சனிக்கிழமை. ஒருகால் அவனே வந்தாலும் வரலாம். போன சனிக்கிழமை மாலை தான் வந்தான்..." என்று நாத்தனார் கூறிய பொழுது மோஹினியின் இதயத்தில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தாற்போன்றிருந்தது. ஆனந்தன் வருவான் என்ற ஆசையாலோ, ஆர்வத்தினாலோ அல்ல; அவன் வந்தால், ஒருவாறாக முடிவு பெற்றிருக்கும் இந்தச் சச்சரவு பெரும் பிரளயமாகிவிடும் என்ற பயத்தினால்தான். நாத்தனாரின் வாய் ஓயவே இல்லை.

"மூன்று நாளாக வீட்டில் ஒரு துளி தண்ணீர் கிடையாது. 'இரண்டு மூன்று குடம் தண்ணீராவது எடுத்துக்கொடுடீ' என்றேன். ஊஹூம். உட்கார்ந்தவள் இடத்தை விட்டு நகரவில்லை."

"பொய் சொல்லாதீர்கள் அக்கா. நீங்கள் சொல்லுவதற்கு முன்பே குடத்தை எடுத்துக்கொண்டு நான் புறப்பட்டேன். தடதட வென்று ஓடிவந்து குடத்தைப் பிடுங்கிக் கொண்டு, 'உன்னுடைய தண்ணீரும் வேண்டாம்; நீ வேலை செய்யவும் வேண்டாம்' என்று படக்கென்று உதறிவிட்டுச் சிடுசிடுத்துக்கொண்டு போனீர்கள். ஆணையிட்டுச் சொல்லுங்கள்..." என்றாள் மோஹினி, உள்ளிருந்த வாறே.

"கேட்டுக்கொண்டாயா? இதே மாதிரி பேச்சுத்தான் எப்போதும். போறுண்டாப்பா, பாஸ்கரா. நாங்கள் அவளுக்குச் சொல்லவும் வேண்டாம்; அவளிடமிருந்து கேட்டுக்கொள்ளவும் வேண்டாம். அவளாயிற்று, அவள் புருஷனாயிற்று. எப்படியோ போகட்டும்."

"சாப்பாட்டுக்கு வா என்று கூப்பிட்டால், எல்லோருடைய சாப்பாடும் முடிந்த பிறகு கூட வரவில்லை. பசி இல்லை என்றாள். நான்தான் எவ்வளவு நாழிகை காத்திருக்க முடியும்? அலுப்பாகப் போய்க் கடைசியில் சாப்பிட்டேன். சாப்பிட்டுவிட்டு அவளுக்கு இலை போட்டுப் பரிமாறி, வா என்று கூப்பிட்டால்..." என்று நாத்தனார் மேலும் தொடர்ந்தாள்.

"இவ்வளவையும் கேட்டுக் கொண்டு சாப்பிடுவதை விட பட்டினி கிடந்தால் என்ன கெட்டுப் போகும்? எனக்குப் போடும் சாப்பாடு ராக்ஷஸி கொட்டிக்கொள்ளும் பலியாம்..." என்றாள் மோஹினி.

"போதும் உன் பேச்சு. நிறுத்திக்கொள் இனிமேல்" என்று நாராயணராவ் நிரம்பவும் ஆயாசத்துடன் கூறிவிட்டு எழுந்திருந்து தெருப்பக்கம் சென்றார். நாத்தனார் மோஹினியை எரித்து விடுபவள் போல் பார்த்துவிட்டு நிதானமாக உட்புறம் சென்றாள். பாஸ்கரராவுக்கு இரண்டு நிமிஷங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை. யோசித்துக்கொண்டே அவனும் நாராயணராவைப் பின்பற்றி வந்தான். அவன் புறப்படத் தயாரா கிக் கொண்டிருந்ததை அறிந்த நாராயணராவ் கேட்டார் :

"என்ன செய்யப் போகிறாய், பாஸ்கரா?"

சமாதானம் செய்யும் குரலில் பாஸ்கரன் சொன்னான்: "பார்ப்போம். ஒரு வேளை அவனே வந்தாலும் வரலாம். இப்பொழுது போய் அழைத்து வரலாமென்றாலும் மிகவும் நேரமாகி விட்டது. ஒருகால் அவன் வராமலிருந்தால் நாளைக்குக் காலையில் போய் அழைத்து வருகிறேன்."

பாஸ்கரன் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்கும் வாசற் குறட்டின் படிகள் மீது காலடியோசை கேட்பதற்கும் சரியாக இருந்தது. "யாரோ வருகிறார்களே! அவனேதான் போலிருக்கிறது" என்றான் பாஸ்கரன். ஆம், ஆனந்தனேதான் வந்திருந்தான்!

வாசற் குறட்டில் ஏற்பட்ட காலடியோசை மோஹினியின் செவிகளுக்கும் எட்டியிருந்தது. யாரோ அவள் இதயத்தை மிதித்துத் துவைத்துக்கொண்டு மேலேறி வருவது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. மனம் பக்பக் என்று அடித்துக் கொண்டது. பீதி, இதயத்தின் துடிப்பு இவைகளினால் அவள் மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. மற்றொரு புறம், வந்தது வரட்டும்; எதிர்த்து நின்றே தீருவது என்ற திடமும் அவளிடத்தே உருவாகிக் கொண்டிருந்தது. எல்லாம் இருக்க வேண்டியபடி இருந்தால் கணவன் வீட்டுக்கு வரும்பொழுது எவ்வளவு உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் அவனை வரவேற்று உபசரிக்கலாம் என்னும் மிருதுவான எண்ணமும் அவளகத்தே அப்பொழுது தோன்றி அவளது இதயத்தைப் பிழிந்து கொண்டிருந்தது.

வாசற்படிகளை மிதித்தபோது ஆனந்தனிடத்தில் இருந்த உற்சாகம் கதவுக்கெதிரே நின்றிருந்த பாஸ்கரனையும் நாராயணராவையும் பார்த்த பிறகு நிலைபெற்றிருக்கவில்லை. தன்னையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் நின்றிருந்த அவர்களைக் கண்டு ஏதோ விசேஷம் நடந்திருக்க வேண்டுமென்பதை ஊகித்துக்கொண்டான். அவன் மோஹினியை ஒரு வாரமாகப் பார்க்கவும் இல்லை.

மோஹினியை நினைக்கும் போதெல்லாம் ஆனந்தனின் மனத்தில் ஒரு போராட்டத்தின் சங்கநாதம் கிளம்பும். அவனது பெண்மை மனம் அவளது எல்லாக் குற்றங்களையும் மறைத்து அவளது அண்மையை வேண்டி நிற்கும்படி செய்யும். ஆனால்

தனது பரிபூரண அதிகாரத்தை அவள்மேல் செலுத்த வேண்டு மென்னும் இச்சை, தான் அவளது புருஷன் என்ற மமதை அவள் மனத்தை மகிழ்விக்க முயல்வது ஆத்ம கௌரவத்திற்குப் பங்கம் விளைவித்தாற் போல என்ற எண்ணத்தை உண்டாக்கி அவனைப் பின்னடையச் செய்யும். எவ்வளவோ முறை அவனது இதயம் வெற்றிபெற்று, மோஹினியைத் தன்பால் கவர்ந்துகொள்ள அவன் முயன்று பார்த்ததென்னவோ உண்மை. ஆனால் கடந்த ஆறு மாதங்களாக மோஹினி அவனைத் தன் பக்கத்தில் கூட நெருங்கவிடவில்லை. அவளது சகவாசம் தனக்குக் கிடைக்காமற் போனதற்காக ஒவ்வொரு கணம் ஆனந்தனின் மனம் கடின மடைந்து அவள் பேரில் கொடூரமான நடத்தையைப்பற்றி யோசிக்கும். ஆனல் மறுகணமே, 'எவ்வளவானலும் பெண் ஜன்மம் பாவம். அழகின் சுரங்கம் அவள். மிருதுவான அவளை மிருதுவாகத்தான் வசப்படுத்திக் கொள்ளவேண்டும்' என்று மனச்சமாதானம் செய்து கொள்வான். இவ்வாருக ஆனந்தன் மோஹினியைக் கையெடுத்து அடித்தாலும் அடிக்கலாம் அன்றி அவள் கூந்தலை வருடி நேர்படுத்தினலும் படுத்தலாம். இன்று அவன் இவ்வளவு நேரம் கழித்துப் போரிவிலிக்கு வந்ததன் காரணம் அந்த இரண்டாவது மனநிலையே. ஆனல் தன்னையே எதிர் நோக்கி நின்றிருந்த அண்ணனையும் அக்காவின் கணவரையும் பார்த்த பொழுது அவனது இதயம் இறுகியது. தனக்காக இராசை இப்படி வாசலிலேயே காத்திருக்க வேண்டாம் என அவனுக்குத் தோன்றியது.

ஆனந்தன் உள்ளே நுழைந்த உடனே பாஸ்கரனும் நாராயண ராவும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். நாராயணராவின் முகம் உக்கிர மூர்த்தியாக இருந்தது. கோட்டை ஆணியில் மாட்டிவிட்டுச் சமையல் அறை வரைக்கும் வந்தான். அக்கா படுக்கையை விரித்துக் கொண்டிருந்தாள். மோஹினி உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந் திருந்தாள். ஐந்து நிமிஷங்கள் கழிந்தும் ஒருவரும் ஒன்றும் பேசா திருந்ததைக் கண்டு ஆனந்தனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பாதி சிரிப்புடனும் பாதி மிரட்டுகிற பாவனையிலும் அக்காவைக் கேட்பது போல, "ஏன்?........எல்லோரும் ஏன் இப்படிப் பேசாமல் உட்கார்ந்து விட்டீர்கள்?" என்று கேட்டான். யாரும் பதில் கூறவில்லை. நாராயணராவ் அறையில் எண்ணி எண்ணி

அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். பாஸ்கரன், ஆனந்தன் தன்னைப் பார்க்க முடியாதபடி முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான். ஆனந்தன் நடுக்கூடத்திற்கு வந்து, "என்ன அக்கா, என்ன சமாசாரம்?" என்று மீண்டும் கேட்டான்.

"அவளையே கேட்டுக்கொள், அப்பா!"

"என்ன ஆயிற்று?"

அக்கா பேசவில்லை. ஆனந்தன் மோஹினியைப் பார்த்தான். 'உம்' மென்று முறைத்துக் கொண்டு சுவரிலே சாய்ந்து உட்கார்ந்திருந்த அவள் சிறிதுகூட அசைந்து கொடுக்க வில்லை. 'சரக்' கென்று வெளியேவந்து பாஸ்கரனைப் பார்த்து, "என்ன பாஸ்கரா, என்ன இது? என்னதான் நடந்தது?" என்று கேட்டான்.

பாஸ்கரனுக்குப் பேச்சை எப்படி ஆரம்பிப்பதென்று தெரியவில்லை. நாராயணராவ், தாம் பேசுவதற்காகக் காத்திருந்தாரோ என்னவோ; உலாவுவதை நிறுத்தி விட்டுச் சொன்னார்:

"ஆனந்தா, ஒரே பேச்சில் சொல்லி விடுகிறேன். இது வரையில் பொறுமை இருந்தது; நடத்திக் கொண்டு வந்தேன். இனிமேல் எனக்குச் சக்தியில்லை. தினமும் இதே பாட்டானல் வீடு என்று ஒன்று எதற்காக? என் பேச்சு உனக்குக் கடுமையாகத் தோன்றலாம். இனிமேல் இந்த வீட்டில் ஒன்று நீயும் உன் மனைவியும் இருக்க வேண்டும்; இல்லை நாங்கள் இருக்க வேண்டும்......"

"அல்ல. நடந்தது தான் என்ன அத்திம்பேரே? அதைச் சொல்லக் கூடாதா?"

"நானென்றும் சொல்லப் போவதில்லை. என்னவானாலும் நீங்கள் புருஷனும் மனைவியும். நாங்கள் சொல்வதெல்லாம் நாளைக்கு 'கோள் சொன்னார்கள்' என்ற பேச்சாகிவிடும். ஒன்றும் வேண்டாம். உன்னை இப்பொழுதே அழைத்துக் கொண்டு வரச் சொல்லிப் பாஸ்கரனிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீயே வந்து விட்டாய்."

"என்னதான் நடந்தது இங்கே?"

"நாங்கள் ஒன்றையும் சொல்லப்போவதில்லை. அவள் சொன்னால் கேட்டுக் கொள்."

ஆனந்தனின் பொறுமை எல்லை மீறியது. நாராயணராவுக்குக் கோபம் வந்தால் அதிகமாகப் பேசமாட்டார் என்பதை ஆனந்தன் அறிந்திருந்தான். அவர் இவ்வளவு தூரம் மனத்தி

விருப்பதை ஒளிக்காமல் எடுத்துக் கூறிவிட்டதனால் ஏதோ பிரமாதம் நடந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். கேட்டதற்கு ஒருவரும் நேரான பதில் கொடுக்காததால் அவனது பரபரப்பு அபரிமிதமான கோபமாக மாறி எரியத் தொடங்கியது. அரை நிமிஷம் பொறுத்தான். நேராக மோஹினியிடம் சென்று குதிங்கால்களின்மீது உட்கார்ந்துகொண்டு கேட்டான்.

"என்னடி ஆயிற்று இன்றைக்கு? என்ன சண்டை?"

மோஹினி உதட்டைக்கூட அசைக்கவில்லை. கண்களில் நீர் துளும்பிக் கொண்டிருந்தது. நீண்ட பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது. அவள் இதயம் விம்மித் தணிந்தது. அதனுள் எத்தகைய போராட்டம் நடக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளும் நிலையில், அல்லது தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் நிலையில் ஆனந்தன் அப்பொழுது இருக்கவில்லை. மோஹினியின் முன்னால் நகர்ந்து அவளை அதட்டிக் கேட்டான்.

"என்ன நடந்தது, சொல்லுவாயா மாட்டாயா?"

மோஹினி வாயைத் திறக்கவில்லை. நீர் நிறைந்த கண்களால் ஆனந்தனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனந்தனால் கோபத்தை அடக்கமுடியவில்லை. "என்ன நடந்தது? சொல்லித் தொலைக்கிறாயா இல்லையா?" என்று சொன்னவன் 'பட்'டென்று பலமாக அவளது கன்னத்தின்மீது ஓர் அறை அறைந்தான்.

மோஹினி அப்படியே நிலத்தின்மீது உருண்டாள். இரண்டாவது அடி இடது தோளில் விழுந்தது. "ஐயோ!" என்னும் அவளது அடிவயிற்றின் அலறல் வீட்டின் பயங்கர மௌனத்தைப் பத்து மடங்காக்கிக் காட்டியது. வெளியேயிருந்து நாராயணராவ் பாய்ந்தோடி வந்து ஆனந்தனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று கூடத்தில் உட்கார வைத்தார். ஆனந்தன் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து தலைமீது கையை வைத்துக் கொண்டான். நடு நடுவே மோஹினியின் விம்மல் கேட்டுக்கொண்டே இருந்தது.

மோஹினியின் இதயம் அலறிக்கொண்டிருந்தது, "நீ விலைக்கு வாங்கிய தாசியல்ல. கொள்ளைக்காரன் கொண்டு வந்த பொருள் அல்ல. இவர்கள் வாசலில் விழுந்து ஊளையிட வேண்டிய நாயுமல்ல. மனுஷ ஜன்மம் நீ! மனுஷ ஜன்மமாக வாழ்" என்று. ஆனால் அவளது அறிவின் குரல் ஹீனமாக இருந்த போதிலும் ஸ்பஷ்டமாகக் கூறிக்கொண்டிருந்தது: "நீ மனிதப் பிராணி

என்பது நிஜம்! ஆனால் இந்தச் சமூகத்தில் நீ அவனுடைய மனைவி. அவனில்லாமல் இந்தச் சமூகத்தில் உனக்கு ஸ்தானம் இல்லை; கதியும் இல்லை." என்று. இதயம் வெகுண்டெழுந்து ஆக்கிரோஷத்துடன், "நான் இந்த மனித மிருகத்தின் மனைவியாக வாழ்வதைவிட, எனக்கு கணவனே இல்லாவிட்டாலும் பரவாயில்லை; மனுஷ்யப் பிராணியாக, மனுஷத்தனமாக வாழ வேண்டும்; இவனில்லாமல் சமூகத்தில் எனக்குக் கௌரவம் இல்லாமலிருக்கலாம், ஆனால் சந்தேகமில்லாமல் எனக்குக் கதி இருக்கிறது" என்று கூறியது "அப்படியானால் என்ன செய்யப்போகிறாய்?" என்று அறிவு கேட்டபொழுது இதயம் பதிலைத் தேடிக் கொண்டிருந்தது.

மோஹினியின் இதயத்தைக் கொதித்தெழுந்த எரிமலையாக்கியிருந்த அந்த இரண்டு அடிகள் மற்றவர்களுக்குச் சமாதானத்தை உண்டாக்கியிருந்தன. நாத்தனார் கதவருகே வந்து நின்றவள் நிலத்திலே உருண்டது போன்றாகி விட்டாள். நாராயணராவ் கருணை மூர்த்தியே ஆகியிருந்தார். பாஸ்கரன் மாத்திரம் ஸ்திதப்ரஜ்ஞனைப்போல ராக த்வேஷாதிகளினின்றும் அப்பாற்பட்டவனாகவே இருந்தான். ஆனந்தனிடமோ, கோபம் கனிகரமாக மாறிக் கண்ணீராக வெளிவரவிருந்தது. நாராயணராவ் சமாதானப் படுத்தும் வகையில் பேசிக்கொண்டிருந்தார்.

"அப்படி அடிக்கக்கூடாது, ஆனந்தா. அடிப்பதனால் என்ன ஆனாற்போல்? என்ன ஆனாலும் பெண் ஜீவன். என்னவோ கோபத்தின் வேகத்தில் நானே இரண்டு வார்த்தை அதிகமாகப் பேசிவிட்டேன்..." நாராயணராவ் உண்மையில் மிகவும் பச்சாத்தாபத்துடன்தான் பேசினார். சாத்விக ஜீவனம் அவருடையது ஆனால் அன்று சாயங்காலம் அவருக்குப் பொறுமை தவறிப்போய் விட்டது. ஆனந்தன் பேரில் அவருக்கு மிகவும் அநுதாபம் உண்டு. இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கு எல்லாம் சரியாகி விடக் கூடும் என்ற எண்ணத்திலே தற்காலிகமாகப் பிரதிகூலங்களை அவர் சகித்துக் கொண்டு புருஷன் - மனைவி இருவரினாலும் தனக்கு ஏற்பட்ட தொந்தரவுகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு பேசாமலிருந்தார். ஆனால் அன்று சாயங்கால்ம் மோஹினி பேசிய பேச்சுக்கள் வரம்பு மீறி இருந்தன. எப்பேர்ப்பட்ட சாந்த சொரூபியையும் கோபங் கொள்ளச் செய்யும்படியான வார்த்தைகளை அன்று அவர் கேட்கவேண்டி நேரிட்டது. அதனால்

வார்த்தைக்கு வார்த்தை வளராமல் தனது மனைவியை அடக்கி விட்டு மோஹனியும் ஆனந்தனும் தனியாக எங்காவது தூரத்தில் இருந்துவிட்டால் இந்தச் சங்கடங்களிலிருந் தெல்லாம் தப்பிக்க லாம் என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தார்.

இந்தச் சம்பவம் இவ்வளவு தூரத்திற்கு வளரக்கூடுமென்று சிறிதும் எதிர்பார்க்காத ஆனந்தனின் தமக்கை மாத்திரம் அநு தாபம் காட்டுவதுபோல நடிப்பதுதான் அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தக்க மருந்தென்பதை அறிந்து எல்லாவற்றையும் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டாள்.

"எவ்வளவானாலும் அவள் சின்னவள் தானே, ஆனந்தா. நீ அவளுக்குப் புத்தி சொல்ல வேண்டும். சும்மா அடிப்பதனால் யாருக்கு என்ன லாபம், சொல்லு......எழுந்திரு இனி. சாப்பிடு வாயாம். அவளும் இன்னும் சாப்பிடவில்லை."

ஆனந்தனின் மனநிலை விசித்திரமாக இருந்தது. மோஹினி யுடன் எவ்வளவோ முறை சச்சரவு நேர்ந்திருந்த போதிலும் கைதூக்கி அவளை அவன் அடித்தது இதுவே முதல் தடவையாகை யால் ஒரு கணம் அவன் தன்னைத் தானே கேவலமாகப் பழித்துக் கொண்டான். மறுகணம் தம் இருவர் குற்றத்தையும் மறந்து இச்சம்பவம் இவ்வளவுதூரம் வளரக் காரணமாயிருந்தவர்கள் மற்ற மூவரும் அல்லவா என்று நினைக்கத் தொடங்கினான். நடு நடுவே மோஹினியின் விம்மல் சப்தம் காதில் விழும்போதெல்லாம் அவன் இதயத்தைப் பிழிந்தெடுப்பதுபோலிருந்தது.

நாராயணராவ் மீண்டும் சொன்னார்: "எழுந்திரு ஆனந்தா. நேரமாகிவிட்டது. எழுந்திருந்து சாப்பிடு. அவளையும் எழுந்து சாப்பிடச் சொல்லு. மற்றதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!"

நாராயணராவின் இந்த அநுதாப மொழிகள் அடக்கி வைக் கப்பட்டிருந்த ஆனந்தனுடைய கண்ணீரைக் கரைபெயர்த்துக் கொண்டு ஓடும்படி செய்தன. அவரிடமிருந்து இதுநாள் வரை அவன் பெற்றிருந்த சகாயமும் போஷணைகளும் ஒருங்கே திரண்டு அவன் மனக்கண் முன் வந்து நின்றன. அவை அவனுக்குப் பெரும் சுமையாகக் காணப்பட்டன. அவன் சொன்னான்: "நானென்ன செய்யட்டும் அத்திம்பேரே, நீங்களே இப்படி வீட்டை விட்டுப் போகச்சொல்லும்போது. இது வரையிலும்..."

ஆனந்தனல் பேச்சை முடிக்க இயலவில்லை. அவனது இந்த நிலையைக் கண்டு மோஹினிக்குக்கூட ஓர் அரைக்கணம் 'ஐயோ பாவம்' என்று தோன்றியது. ஆனல் மறுகணம் சமாதானமும் ஏற்பட்டது. இவரிடமிருந்து இதற்கு முன் எவ்வளவு சகாயமும் அநுதாபமும் அடைந்திருந்தாலும் அதற்காகத் தன் கணவன் தன் எதிர்காலத்தையே பாழ்படுத்திக்கொள்ளுகிருனே. அதோடுகூட மனைவியாகிய தன்னையும் பலிகொடுத்துக் கொண்டிருக்கிருனே! என்று கலவரமடைந்தாள்.

அக்கா தழுதழுக்கும் தொண்டையுடன் சொன்னுள்: "அப்படியெல்லாம் செய்யக் கூடாது, எழுந்திரு. எப்பொழுது சாப்பிட்டாயோ என்னவோ, எழுந்திரு."

"எனக்குப் பசி இல்லை அக்கா. வேண்டிய மட்டும் ஆய்விட்டதே. வயிறு நிரம்பி இருக்கிறது."

நாராணராவ் நடுவே வந்து பேச ஆரம்பித்தார்: "எழுந்திரு என்று சொல்கிறேன். பசி இல்லாவிட்டால் பரவாயில்லை. பசித்த வரையிலும் சாப்பிடு. எழுந்திரு, ஊம்..." என்று கூறி அவன் கையைப் பிடித்து எழுப்பினர்.

ஆனந்தன் எழுந்திருந்து உள்ளே நடந்தான். மோஹினி உட்கார்ந்த இடத்திலேயே நிலத்தில் சாய்ந்து விட்டிருந்தாள். அவள் புறம் திரும்பிப் பார்க்கும் தைரியம் கூட ஆனந்தனுக்கு உண்டாகவில்லை. ஆனந்தன் உள்ளே சென்ற பிறகு பாஸ்கரன் மறுநாள் வருவதாகக் கூறிவிட்டுத் தன் அறைக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

ஆனந்தன் மௌனமாகவே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு இதயத் துடிதுடிப்பு மாத்திரம் இருந்துகொண்டே இருந்தது. தன்னுடைய கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள நடந்ததெல்லாவற்றையும் சொல்ல வேண்டுமென்று தவித்துக் கொண்டிருந்த அக்காவுக்கு ஆனந்தனின் இந்த மௌனம் நிராசையை உண்டாக்கிற்று. ஆனலும் எப்படியோ பேச்சை ஆரம்பித்துக் கடைசியாகத் தன் மனத்திலிருந்ததைச் சொல்லியே விட்டாள்.

"எங்கேயாவது ஒரு இரண்டு ரூம் கிடைத்தாலும் போதும், பார்த்து ஏற்பாடு பண்ணிவிடப்பா. ஏன் வீணில் நாலு பேரிடம்? எங்களுக்கும் இது நல்லதல்ல; அவளுக்கும் நல்லதல்ல. நீங்கள் எங்கேயாவது சுகமாக இருந்தால் சரி."

ஆனந்தன் ஏதும் பதில் கூருமல் கை கழுவச் சென்ருன். எந்தப் பதிலும் கிடைக்காததனல் சிறிது அலுத்துக் கொண்டவளாக "அக்கா, அவளைக் கொஞ்சம் எழுந்திருக்கச் சொல்லு, ஆனந்தா. சாப்பிட்டு விட்டு நன்ருகப் படுத்துக் கொள்ளட்டும். நான் வேண்டாமென்று சொல்ல வில்லை" என்ருள்.

ஆனந்தன் ஒரு வார்த்தையும் கூருமல் கூடத்திற்கு வந்து பிறகு வாசற் பக்கத்தை நோக்கி நடந்தான். மோஹினி படுத்தே இருந்தாள், அங்கேயே நிலத்தின் மீது. நாத்தனர் ஓரிரண்டு முறை அழைத்தும் எழுந்திருக்க வில்லை. உடம்பைத் தொட்டு எழுப்பிய போதும், "எனக்குப் பசி இல்லை" என்று கூறித் தட்டிக் கழித்து விட்டாள். வாசற்புறத்திலிருந்து ஆனந்தன் இவையெல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான். கடைசியாக வேறு வழியில்லாமல் அக்கா ஆனந்தனிடம் வந்து, "நீ நடு அறையிலயே படுத்துக்கொள். நீயே அவளை எழுப்பிச் சாப்பிடச் சொல்லு" என்று கூறிய பொழுது அவளது உட்கருத்து அவனுக்கு விளங்காமற் போக வில்லை. "நாங்கள் கூடத்தில் படுத்துக் கொள்ளுகிருேம், நீ அப்படியே திண்ணையில் நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?" என்று கேட்பது போன்றிருந்தது.

ஆனந்தன் மோஹினி படுத்திருந்த நடு அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு மோஹினியின் அருகில் வந்தமர்ந்தான். அவள் தூங்க வில்லை யென்பதை லேசாக அசைந்து கொண்டிருந்த அவளது இமைகள் அறிவித்தன.

"மோஹினி......" என்று அழைத்தான்.

மோஹினி அசையவில்லை, பேசவும் இல்லை.

"மோஹினி......" மீண்டும் அழைத்தான் ஆனந்தன்.

மெதுவாக அவளது இடது தோளைப் பற்றி மீண்டுமொரு முறை, "மோஹினி" என்ருன். மோஹினி 'சடக்' கென்று பின்னுக்கு நகர்ந்து கொண்டாள், பேசாமல். ஆனந்தன் அவளை மிகவும் நெருங்கி அவளது உடலை வருடிக் கொண்டே மற்ருெரு முறை அவளை அழைத்தான். அவனது குரலில் தான் என்ன ஆர்வம், என்ன உத்வேகம்? அவளது ஸ்பரிசம் அவனுக்கு அமிருத தாரையாக இருந்தது. ஆனல் மோஹினிக்கு

அவனது கை கொலையாளியின் கத்தியைப் போலிருந்தது. எவ்வளவு முடங்கிக் கொண்டாலும் விடாமல் முன்னுக்கு நகர்ந்து வந்து கொண்டிருந்த ஆனந்தனின் ஸ்பரிசத்திலிருந்து தப்புவது அசாத்தியமாகி விட்ட படியால் எழுந்து உட்கார்ந்தாள். ஆனந்தனின் ஆசை பொங்க ஆரம்பித்தது. அவளது கூந்தலை நேர் படுத்த நினைத்து அவன் கைதூக்கினான். மோஹினி அதைப் பிடித்துத் தள்ளிவிட்டுப் பெரிதாக விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

மோஹினியின் துக்கம் ஆனந்தனைக் கலக்கியது. 'இவளைப் போன்ற சுகுமாரியை, கோமள வல்லியை நிர்த்தயவாக அடிக்கும் படியான என்ன குற்றத்தை இவள் செய்தாள் என்பதைக்கூட யோசியாமல் நான் இவள் மனத்தைப் புண்படுத்தி விட்டேனே,' என்று தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டான். அவன் மனம் அவளது உடலை விட மிருதுவாக மாறி விட்டிருந்தது.

தீனமான குரலில் கேட்டான்: "மோஹினி, நீ ஏன் இப்படிச் செய்கிறாய்?"

மோஹினி அழுகையை அடக்க முயன்றாள். ஆனந்தன் அவள் முதுகின் மீது கையை வைத்து, "ஏன் மோஹினி, என்னோடு பேசக் கூட மாட்டாயா? இப்படி ஏன் செய்தாய்?" என்று மீண்டும் கேட்டான்.

"என்ன செய்தேன் நான்?"

"நான் கை ஓங்கியிருக்கக் கூடாது, மோஹினி. ஆனால் யாரும் ஒன்றும் சொல்ல வில்லை. என்னால் கோபத்தை அடக்க முடிய வில்லை."

"அப்படி நான் என்ன செய்து விட்டேன்?"

"எனக் கென்ன தெரியும்? எல்லோரையும் கேட்டேன். உன்னையும் கேட்டேன். நீ கூட ஒரு வார்த்தையும் பேசவே யில்லை."

மோஹினியின் உள்ளம் மெதுவாகக் கனிய ஆரம்பிப்பது போன்றிருந்தது. நடு நடுவே துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தாலும் சமாளித்துக் கொண்டே பேசினாள். கையை ஓங்கிக் கன்னத்தில் அறைவது என்றால் புருஷன் என்று சொல்லிக் கொள்பவன் மனைவிக்குப் பரம அநியாயத் தைச் செய்கிறான் என்று நினைக்கும் மோஹினிக்கு ஆனந்தன்

அடித்ததனல் ஏற்பட்ட வலியை விட அதனுல் ஏற்பட்ட அவமானமே பெரிதாக இருந்தது. அந்த அவமானத்தைக் காட்டிலும், அதனுள் அடங்கிய அநியாயமே அவளுக்குப் பொறுக்க முடியாத தாயிற்று.

அவள் ஆனந்தனைக் கேட்டாள்: "நான் பேசாமலிருந்த தற்கு இது தண்டனையா?"

"என்ன நடந்தது என்பதை நீ தான் சொல்லியிருக்கக் கூடாதா? ஏன் சொல்லாமலிருந்தாய்?"

"ஏன் சொல்லாமலிருந்தேனு? நான் அப்பொழுது வாய் திறந்து பேசியிருந்தால் இன்னும் என்ன என்ன நடந்திருக்குமோ? நான் என்ன சொல்லித்தான் என்ன பிரயோசனம்? என்னை விட அவர்கள் தான் உங்களுக்கு வேண்டியவர்கள். நான் சொல்லுவ தெல்லாம் உங்களுக்குப் பொய்யாகவே படும்."

மோஹினி கூறுவது நிஜமாக இருந்ததால் ஆனந்தன் ஒரு கணம் தயங்கி விட்டுப் பிறகு பேச்சை மாற்ற எண்ணி, "நீ ஏன் சாப்பிட வில்லை?" என்று கேட்டான்.

"பசிக்க வில்லை."

"அது பொய்."

"பொய் என்ருல் இருக்கட்டும்!"

"அப்படியானுல் பட்டினியாகவா படுத்துக் கொள்வாய்?"

"நான் எப்படிப் போனுல் என்ன உங்களுக்கு?"

"அப்படிப் பேசாதே, மோஹினி!"

"ஆமாம். எப்பொழுதும் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் எப்படி வேண்டுமோ அப்படித்தான் நான் பேச வேண்டும், அல்லவா? இல்லாவிட்டால்......"

"அது போகட்டும், சாப்பிட எழுந்திரு என்ருல் ஏன் எழுந்திருக்க வில்லை?"

"நீங்கள் வருவதற்கு முன்னுல் அவர்கள் பேசிய பேச்சை நீங்கள் கேட்டிருக்க வேண்டும். அப்பொழுது தெரிந்திருக்கும்..."

"என்ன ஆயிற்று? அவர்கள் என்ன சொன்னுர்கள்?"

"நான் சொல்ல மாட்டேன். நல்லவர்களான அவர்களிட மிருந்தே கேட்டுக் கொள்ளுங்கள்."

"நீ இப்பொழுது சாப்பிடப் போகிருயா, இல்லையா?"

"இல்லை!"

"இந்தப் பைத்தியக்காரத்தனமான பிடிவாதம் வேண்டாம், மோஹினி."

"பைத்தியக்காரத்தனமான பிடிவாதம் நான் பிடிக்க வில்லை, மற்றவர்கள் தான்."

"அவர்களுடைய பிடிவாதம் என்ன?"

"நான் கெட்டவள். என்னைப் பற்றி உங்களுக்கு என்ன?"

"இந்தக் கோணல் பேச்சு வேண்டாம் மோஹினி......நான் சொல்லுகிறதைக் கேட்பாயா மாட்டாயா?"

"நீங்கள் சொல்லுவது என்ன?"

"நீ இப்பொழுது போய்ச் சாப்பிட்டுவிட்டு வா......"

"நான் சாப்பிட மாட்டேன் என்று தான் சொல்லி விட்டேனே."

"சொன்னல் என்ன? இப்பொழுது சாப்பிட்டால் யார் வேண்டா மென்று கூறப் போகிருர்கள்?"

"எப்பவோ ஒரு முறை வரும் உங்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? போகட்டும். உங்களுக்கு ஏன் அந்தத் தொந்தரவு?..." என்று கூறிக் கொண்டே உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருந்தாள். ஆனந்தன் அவளைப் பின்தொடர்ந்து சென்ருன். அவளது கன்னத்தின் மீது படிந்திருந்த கைவிரல் அடையாளங் களைக் கண்டு தன்னைத் தானே சபித்துக்கொண்டான்.

"அடி பலமாகப் பட்டுவிட்டதா மோஹினி ?" என்ருன்.

மோஹினி பேசவில்லை. அவள் வேறு யோசனையில் இருந்த தாகக் காணப்பட்டது. அவளருகிற் சென்று ஆனந்தன் மிருது வாகக் கூறினன் :

"நான் அடித்திருக்கக் கூடாது மோஹினி. நான் செய்தது தவறு......"

"இது ஆயிரம் தவறுகளில் ஒன்று......"

அந்தக் கணத்தில் மாத்திரமாவது ஆனந்தனின் மனம் 'ஆம்' என்று ஒப்புக்கொண்டது. ஆனல் பகிரங்கமாக அதை ஒப்புக் கொள்ளுவதற்கு அவனது ஆத்ம கௌரவம் குறுக்கே நின்றது. ஆனந்தன் பேசாமலிருந்தான். மோஹினி அவனுக்காகத் தன் படுக்கையை விரித்துக் கொண்டிருந்தாள். படுக்கையை விரித்து விட்டு ஒரு ஜமுக்காளத்தையும் போர்வையையும் தனக்காக எடுத் துக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்ருள்.

"எங்கே புறப்பட்டுவிட்டாய் மோஹினி?"

"சமையலறைக்கு."

"ஏன்?"

"நான் அங்கேயே படுத்துக் கொள்கிறேன்."

"ஏன்? இங்கே படுத்துக்கொள்ளக் கூடாதா?"

கூடத்துக் கதவுக்குப் பக்கத்தில் 'டக்' கென்று சப்தம் கேட்டது. மோஹினி கதவருகே சென்று எட்டிப் பார்த்தாள்.

"என்ன அது?" என்றான் ஆனந்தன்.

"உங்கள் அக்காவின் நல்லதனம்."

"அப்படியென்றால்?"

"இது வரையில் நாம் பேசியதையெல்லாம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார்."

"அப்படி இருக்குமா?"

"இது ஒன்றும் புதிதல்ல!"

ஆனந்தனுக்கு இது அசங்கியமாகப்பட்டது. மோஹினியின் முகத்தின் மீது ஒருவகை வெற்றிச் சின்னம் காணப்பட்டது. அவள் சமையலறையை நோக்கிப் புறப்பட்டதும் ஆனந்தன் மீண்டும் அவளைக் கேட்டான்:

"உள்ளே ஏன் போகிறாய்?"

"நான் படுத்துக்கொள்வது அங்கேதான்!"

"மோஹினி, இங்கே வா இங்கே, இதைப் பார்......"

"அது முடியாது!"

"மோஹினி,......" என்று ஆனந்தன் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்பொழுதே மோஹினி உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டுவிட்டாள். ஆனந்தன் இரண்டு மூன்று தடவை தட்டினான். மெதுவாகக் கூப்பிட்டுப் பார்த்தான்; கெஞ்சும் குரலில் அழைத்தான்; மிரட்டியும் பார்த்தான். ஆனால் சமையலறையினுள் எரிந்து கொண்டிருந்த விளக்கு ஓரிரண்டு நிமிஷங்களில் அணைந்துபோயிற்று.

மறுநாள் காலை ஆனந்தன் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது நாராயணராவ் அவனுடன் பேசவேண்டியிருந்த விஷயங்களைக் குறித்து மெதுவாக ஆரம்பித்தார்.

"பாஸ்கரன் வருவதாகச் சொல்லியிருந்தான். இன்னும் வரவில்லை."

"வருவான். ஏன்?"

"எல்லோரும் சேர்ந்து சிறிது பேசுவோம் என்று பார்த்தேன்."

"என்ன?"

"நான் நேற்று சாயங்காலம் சொன்னேனே......"

ஆனந்தன் பேசாமலிருந்தான். மோஹினி புழைக்கடைப் பக்கம் ஏதோ வேலையாக இருந்தாள். அந்தச் சமயத்தைப் பார்த்து நாராயணராவ் பேச்செடுத்தார். அதற்குள் பாஸ்கரனும் வந்து சேர்ந்தான்.

"உன்னுடைய பரீக்ஷை என்றைக்கு ஆனந்தா?"

"இன்னும் ஒரு மாதம் இருக்கிறது."

"அப்படியானல் ஒரு காரியம் செய்யலாம். உன்னுடைய பரீக்ஷை முடியும் வரையில் மோஹினியைப் பிறந்தகத்திற்கு அனுப்பிவிடு. பின்னல் மற்றவைகளைப் பார்த்துக்கொள்ளலாம்."

"ஆனல் இப்பொழுது..." என்று ஆனந்தன் தயங்கினன்.

"ஏன்?"

"அவளுக்கும் பரீக்ஷையாயிற்றே....."

"எப்பொழுது?"

"இன்னும் இரண்டு மூன்று வாரங்கள்தான் இருக்கும்."

"அவளுடையது என்ன மகா பரீக்ஷை..." என்று பாஸ்கரன் நடுவில் புகுந்து கூறியது நாராயணராவுக்கும் பிடிக்கவில்லை, ஆனந்தனுக்கும் பிடிக்கவில்லை.

"இருக்கட்டும். காலேஜுக்கு என்னவோ இப்பொழுது போகவேண்டியதில்லை. பரீக்ஷை சமயத்திற்கு வந்து போகட்டுமே. இங்கேயிருந்தால் வீணில் மனஸ்தாபம்...எல்லோருக்கும். உனக்கும் படிப்பு நடைபெறவேண்டும். தினமும் இதே பாட்டென்ருல் எப்படி நடைபெறும்? வீணில் ஜனங்களெதிரே அவமானம்......"

ராத்திரி ஏற்பட்ட அநுபவத்தினல் இப்பொழுது ஆனந்தன் எதற்கும் தயாராக இருந்தான். இவள் இங்கே இருந்தால்தான் என்ன, எங்கே இருந்தால்தான் என்ன என்று தோன்றினலும் கூடவே இங்கேயே இருந்தால்தான் தேவலை என்றும் தோன்றிக் கொண்டிருந்ததால் தயங்கினன். ஆனல் நாராயணராவ் ஸ்பஷ்டமாகக் கூறியபிறகு அவன் பேச்சு ஒன்றும் எடுபடும் நிலையில் இல்லை.

கடைசியாக அவன் சொன்னான்: "ஆனால் யார் இப்பொழுது அவளை அழைத்துக்கொண்டு போய் விட்டுவிட்டு வருவது?"

"அதற்கென்ன? காலையில் போய்ச் சாயங்காலம் திரும்பி விடலாம்......" என்று இதுதான் சமயமெனப் பேசினான் பாஸ்கரன். மேலும் தொடர்ந்து "ஆமாம். அதற்கென்ன, நான்கு மணி நேரப் பிரயாணம். ஒரு வேளை உன்னால் முடியாதென்றால் நான் போய் வருகிறேன்......" என்றான்.

நாராயணராவுக்குப் பாஸ்கரனின் இந்த மத்தியஸ்தம் பிடிக்கவில்லை.

"யார் வேண்டுமானாலும் போய் வரலாம், ஆனந்தா. ஆனால் நீயே போய்வருவது நல்லது. உன் மாமியாருடனும் இரண்டு வார்த்தை பேசிவிட்டு வரலாம்."

"எப்பொழுது புறப்படவேண்டும்?" ஆனந்தன் கேட்டான்.

"எப்பொழுது என்ன? உன் சௌகரியம்."

"இன்னும் மூன்று நான்கு நாட்கள் கழித்துப் புறப்பட்டாலும் ஆயிற்று."

"ஊம். இன்று ஞாயிற்றுக்கிழமை...வியாழக்கிழமை......"

பாஸ்கரன் மீண்டும் குறுக்கே பேசினான். மோஹினியுடன் தான் செல்லவேண்டும் என்று அவனுக்கிருந்த ஆதுரத்தை மூடிவைக்க அவனால் இயலவில்லை.

"வியாழக்கிழமையானால் சரிதான். அன்று எனக்கும் ஒரு வேலையும் இல்லை" என்றான் பாஸ்கரன்.

கடைசியாக, மோஹினியை யார் அழைத்துச் செல்வது என்பது நிர்ணயிக்கப்படாவிட்டாலும் வியாழக்கிழமை அவள் தாய் வீடு செல்ல வேண்டுமென்பது மாத்திரம் நிச்சயமாகி விட்டது. அவளை அனுப்புவதென்றால் ஆனந்தனின் மனத்திற்குச் சிறிது சங்கடமாகத்தான் இருந்தது. ஆயினும் சில நாட்கள் வரையிலாவது அவள் தனியாக இருப்பதே நல்லது என்று சமாதானப் படுத்திக் கொண்டான். கடந்த ராத்திரியின் அநுபவம் அவனுடைய இந்த எண்ணத்திற்கு உரமாக அமைந்தது. மோஹினிக்கு இதைத் தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காக ஐந்து நிமிஷங்கள் காத்திருந்தான். ஆனால் அவள் உள்ளே வரவே இல்லை. அவளது நடத்தையினால் ஆக்கிரோஷமடைந்த அவன் அவளுக்காகக்

காத்திருக்கவில்லை. வெறுப்புற்ற மன நிலையுடன் வீட்டை விட்டு வெளிக்கிளம்பினான்.

## 2

**பு**தன் கிழமை சாயங்காலத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருந்த மோஹினி நடுவில் இருந்த மூன்று நான்கு நாட்களில் வசந்தனைக் குறித்து எவ்வளவோ தடவை நினைத்துக்கொண்டாள். சனிக்கிழமை சாயங்காலம் வீட்டில் நடந்தவைகளையெல்லாம் நினைத்துக்கொண்ட பொழுது அவளுக்கு, ஆனந்தனுக்கும் வசந்தனுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பது புலப்பட்டது. நினைக்க நினைக்க வசந்தனது அநுதாபமும், அவனது மென்மையான உள்ளமும் அவளுடைய மனத்திற்குளெல்லையற்ற சமாதானத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. வசந்தனே தன் புருஷனாக வாய்த்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று அவள் நினைக்காவிட்டாலும், ஆனந்தன் வசந்தனைப்போல இருந்தால் எவ்வளவு சுகமாக இருக்கலாம் என்ற நினைப்பு மாத்திரம் தோன்றித் தோன்றி அவள் இதயத்தில் அலைப்புண்டாக்கிக் கொண்டிருந்தது. 'நானும் என் புருஷனும் சேர்ந்து சுகமாக வாழ வேண்டும் என்றல்லவா வசந்தன் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறான்? எவ்வளவு உதார குணம்!' என்று எவ்வளவோ முறை அவனை மனத்துள்ளே வாழ்த்தியிருந்தாள்.

ஆனால் நடுநடுவே ஒரு பயமும் தலைகாட்டிச் சென்றுகொண்டிருந்தது. வசந்தனுடன் தான் உட்கார்ந்து பேசியது யாருக்காவது தெரிந்து விட்டால்? வீட்டிற்கு நேரங்கழித்துச் செல்ல முடியாது. காலேஜுக்கும் 'மட்டம்' போட முடியாது. காலேஜுக்கு 'மட்டம்' போட்டாலும் வசந்தன் தனக்கு வேண்டும் போதெல்லாம், வேண்டிக் கொண்ட போதெல்லாம் கிடைக்கக் கூடிய வஸ்துவா? இப்படி, வசந்தனைக் காணவேண்டு மென்ற ஆசை அவளை அவன்பால் முன்னேக்கி இழுத்துச் சென்றாலும், யாராவது பார்த்துவிட்டுப் புதிதாக இன்னொரு கதை கட்டிவிட்டால் என்ன செய்வது என்ற பீதி அவளைப் பின்னுக்கிழுத்துக் கொண்டிருந்தது. ஆனால் மறுகணமே தனக்குள் சொல்லிக் கொள்வாள்—'நாங்கள் இருவரும் சேர்ந்து அப்படி என்ன பாவ காரியம் செய்து விடப்போகிறோம்? வசந்தனுடைய முயற்சியின்

பலனுக ஆனந்தன் சம்பூரணமாக என்பால் திரும்புவதானல் நல்லதே ஆயிற்று அல்லவா?' இத்தகைய எண்ணங்களினல் மோஹினி புதன்கிழமை மாலையை எதிர்நோக்கிக் கொண்டிருந் தாளே அல்லாமல் வசந்தன் விஷயத்தில் அவள் வேறு சந்தோஷம் எதையும் கொண்டிருக்க வில்லை.

சரியாக ஐந்தரை மணிக்கு தாதர் ஸ்டேஷன் முதல் பிளாட் பாரத்தில் மோஹினி வசந்தனுக்காகக் காத்து நின்ருள். காலேஜி லிருந்து நேராக வந்திருந்ததால் கையில் சில பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் இருந்தன. ஐந்தேமுக்காலாகியும் வசந்தன் வரவில்லை. மோஹினி நிராசை யடைந்தாள். முதல்முறை சந்தித்த பொழுது வசந்தன் தனக்காக முக்கால் மணிநேரம் காத்திருக்க வில்லையா? அதற்கு இது பதிலா? என்ற எண்ணமும் தோன்றியது.

ஆனல் வசந்தனே வேண்டுமென்று நேரத்தைக் கடத்த வில்லை. காலையிலிருந்தே அதைப்பற்றி யோசித்துக்கொண் டிருந்த வசந்தன் கூடிய மட்டும் சீக்கிரமாகவே தாதருக்கு வந்து விடவேண்டு மென்றுதான் நினைத்திருந்தான். ஆனல் அன்று காரியாலயத்தில் முதுகு ஒடிகிறபடி வேலை இருந்தது. மணி ஐந்தான பிறகுங்கூட வேலை வந்துகொண்டே இருந்தது. பிரதி நிமிஷமும் வசந்தன் கடியாரத்துடன் போராடிக்கொண் டிருந்தான். காரியாலயம் சரியாக 5-30 மணி வரையில்தான் என் ருலும், அன்று ஒரு மணி முன்னதாகவே செல்லவேண்டு மென்று தீர்மானித்திருந்த வசந்தன் ஐந்தரை மணிக்கும்கூடக் காரியால யத்தைவிட்டு நகர முடியாதபடி இருந்தது.

மணி ஆறடித்தும் வசந்தன் வராததைக் கண்ட மோஹினி மிகவும் நம்பிக்கையற்றவளானுள். ஒவ்வொரு சமயம் அவளது அவ நம்பிக்கை அவளுக்கே விசித்திரமாகப்பட்டது. "ஏன் அவ நம்பிக்கை கொள்ளவேண்டும்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளுவாள். ஆனல் அவளை அறியாமலே அவள் மனம் வசந்தனின் வரவை யாசித்துக் கொண்டிருந்தது. இனி அவன் வரமாட்டான் என்று தோன்றியதும் பிளாட்பாரத்தில் உலாவத் தொடங்கினுள். 'வராவிட்டால்? வராவிட்டால் இல்லை! யார் துக்கம் யாருக்கு?' என்று ஒருசமயம் தோன்றும். ஆனல் வந்தாலோ? எவ்வளவோ நன்ருக இருக்கும் என்றும் அதே மனம் மற்ரெரு சமயம் சொல்லும். அந்தப் பக்கத்துப் பிளாட்

பாரத்தில் 'பாஸ்ட்' வண்டி ஒன்று வந்து நின்றது. இரண்டாவது வகுப்பு ஒன்றிலிருந்து வசந்தன் வெளிவருவதைப் பார்த்த மோஹினியின் கால்கள் மெத்தைப்படிகளை நோக்கிச் சென்றன. வசந்தனின் கண்கள் மோஹினியையே தேடிக்கொண்டிருந்தன. படிகளினின்று இறங்கும்போதே கீழே நின்ற மோஹினியைப் பார்த்து முறுவலித்தான். கீழே வந்ததும், "நிரம்ப நேரமாய் விட்டது, அல்லவா?" என்றான்.

"ஏன்? வண்டி கிடைக்கவில்லையா?"

"வண்டி கிடைக்காமலென்ன? ஆபீஸில் இன்று சரியான வேலை."

"அப்படியா? நான் நினைத்தேன், வருவதாகச் சொன்னதை அடியோடு மறந்து விட்டீர்களோ என்று......"

"மறப்பது இயலாத காரியம். பார்க்கப்போனால் நான் இன்று நாலரை மணிக்கே ஆபீஸைவிட்டுக் கிளம்பிவிட வேண்டு மென்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் மணி ஐந்தரையான பிறகும் புறப்பட முடியாமற் போய்விட்டது."

"எனக்கு நீங்கள் வருவீர்கள் என்ற நம்பிக்கையே இல்லா மற் போய்விட்டது."

"ஏன், நீங்கள் வந்து நிரம்ப நேரமாயிற்றா?"

"ஐந்தரைக்குச் சரியாக வந்துவிட்டேன்; சொன்ன 'டய'த் திற்கு......"

"சரிதான். போனதடவை நீங்கள் நாழிகை கழித்து வந்தீர் கள்......"

"அதற்காகத்தான் இந்தமுறை நீங்கள் நாழிகை செய்தீர்களா?"

"அப்படியெல்லாம் இல்லை. வேலை இருந்தது என்று சொன்னேனே......"

"என்னவோ, போனதடவை நான், இந்த முறை நீங்கள். இருவரும் சரியான ஜோடிதான்!"

மோஹினி சகஜமாகவே இப்படிக் கூறிவிட்டாள். அவளது கடைசி வார்த்தைகள் வசந்தனுக்கு வியப்பை அளித்தன. ஆனால் அவள் முகத்திலே அப்படிப்பட்ட பாவம் ஒன்றும் காணப்பட வில்லை. கேட்டைத் தாண்டி வெளிவந்து கொண்டிருக்கும்போது வசந்தன், "முதலில் வரக்கூடாதென்றுதான் இருந்தேன்......" என்று ஆரம்பித்தான்.

"ஏன்?"

"செய்திருக்கவேண்டிய முக்கியமான காரியத்தைச் செய்ய முடியவில்லை."

"என்ன அப்படிப்பட்ட வேலை?"

"ஆனந்தனைப் பார்க்க வேண்டியதுதான்."

"ஓ! ஏன், அவரைச் சந்திக்க முடியவில்லையா?"

"இல்லை. அதனால்தான் இங்கே வந்து செய்யப்போவது என்ன என்று யோசித்தேன்."

"நீங்கள் வராமலிருந்திருந்தால்......"

"என்ன நடந்திருக்கும்?"

"நடப்பதென்ன? ஒரு மணி நேரம் காத்துக் காத்து அலுத்து உடைந்த உள்ளத்துடன் திரும்பிப் போயிருப்பேன்."

"உடைந்த உள்ளம் ஏன்?"

"நீங்கள் வராததனால்தான்" என்று சொல்லவேண்டுமென்று நினைத்த மோஹினி ஒன்றும் கூறாது புன்னகை புரிந்தாள். அந்தச் சிரிப்பில் அவள் பேச்சிலிருப்பதைவிட ஆழமான பொருள் இருப்பதாகப் பட்டது, வசந்தனுக்கு. வசந்தனின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லுவது அவளால் முடியாத காரியமாக இருந்தது. பேச்சை மாற்ற விரும்பி, "யாராவது வருவதாகச் சொல்லி வராமலிருந்துவிட்டால் காத்திருப்பவர்களுக்கு மனம் நோவது சகஜந்தானே?" என்று கூறிக் கலகலவென்று அவள் சிரித்தபொழுது அவளது மோஹன உருவம் யாரையும் மெய்ம்மறக்கச் செய்வதாக இருந்தது. அந்தச் சிரிப்பு வசந்தன் மீதும் தன் பிரபாவத்தைக் காட்டாமல் இருக்கவில்லை.

"இப்பொழுது எங்கே புறப்பட்டீர்கள்?" என்று வசந்தன் கேட்டான்.

"எங்கே என்ன? இப்பொழுதே நேரமாகிவிட்டது. சிறிது 'டீ' குடித்துவிட்டுப் புறப்பட வேண்டியதுதான்."

"என்ன அவ்வளவு அவசரம்?"

"உங்களுக்கென்ன தெரியும்? என் நாத்தனார் கடியாரத்தைக் கையில் வைத்துக்கொண்டே காத்துக்கொண்டிருப்பாள்."

"எதற்காக?"

"நான் வந்ததும் விசாரிப்பதற்காக."

"என்னவென்று?"

"நான் நாழிகை கழித்து வந்ததனால் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் காரணம் கூறவேண்டும். இல்லாவிட்டால்......"

"இல்லாவிட்டால் என்ன?"

"இல்லாவிட்டால் தக்கபடி மரியாதை!"

"நல்லதாயிற்று. இல்லையா? நாழிகை கழித்துச் சென்றால் மரியாதை என்ற பிறகு......"

"அவ்வளவொன்றும் ஆசையுடன் பெற்றுக்கொள்ளக் கூடிய மரியாதை அல்ல. சனிக்கிழமை அன்று வேண்டியமட்டும் பெற்றுக் கொண்டாயிற்று......"

இருவரும் ஒரு டீ கடையை அடைந்து எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டபொழுது மோஹினியின் முகம் நிச்சலனமாகவே இருந்தது. சனிக்கிழமை நடந்த சம்பவங்கள் அவள் மனத்தை வேதனைக்குள்ளாக்கி யிருந்தன. அந்த வேதனையே அவளது முகத்தில் ஸ்பஷ்டமாகப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அன்றைச் சாயங்காலம் நடந்த சம்பவங்களையெல்லாம் வசந்தனுக்கு அவள் விரித்துரைத்தபொழுது வசந்தன் மிகவும் வருத்தப்பட்டான்.

"அப்படியானால் இன்று நீங்கள் இங்கே வந்திருக்கக் கூடாது" என்றான்.

"வந்திருக்கக் கூடாதா?"

"ஆமாம்."

"ஏன்?"

"என்னால் உங்களுக்கு அவ்வளவு தொந்தரவு உண்டாயிற்று!"

"அப்படிப்பட்ட தொந்தரவு எனக்கு ஏறக்குறைய தினமும் தான் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது."

"ஆனால் அதை அப்படியே விடக்கூடாது அல்லவா?"

"கூடாதுதான். அதற்கு நானென்ன செய்ய முடியும்?"

"நீங்கள் சிறிது நிதானமாகப் பதில் கூறியிருந்தால் அவ்வளவு தூரம் ஏற்பட்டிருக்காதோ என்னவோ?"

"சரிதான். வாயினாலாவது அவர்களை அடக்குகிறேனே இதுவரையிலும் பிழைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் என்ன என்னவெல்லாம் நடந்திருக்குமோ?"

மோஹினியின் பேச்சு உண்மையென்றே பட்டது வசந்த னுக்கு. ஏமாந்தவர்களைக் கண்டால் காலின்கீழே போட்டு மிதித்து விட்டு முன் செல்லும் இந்த உலகத்தில் வசந்தனுக்கும் எவ் வளவோ முறை அவனது மிருதுவான சுபாவத்திற்குக் கொஞ்ச மும் பொருந்தாத பதில் மரியாதைகள் பலபேரிடமிருந்து கிடைத்த துண்டு.

"எனக்கு இதுதான் வியப்பாக இருக்கிறது. மனிதன் எப் படி இவ்வளவு கொடியவனாகிறான்?"

"மனிதர்களாக இருப்பவர்களுக்கு இது வியப்புக்குரிய விஷயந்தான். மனிதரல்லாதவர்களுக்கு இது சகஜம். பிறரைக் கொடுமைப் படுத்துவது அவர்களது சுபாவத்தோடு ஒன்றி விடுகிறது......"

மோஹினியின் முகத்தில், பேச்சில், வேதனை இருந்தது.

சமாதானப்படுத்தும் முறையில் வசந்தன் சொன்னான்: "போகட்டும். அவரவர்கள் பாவம் அவரவர்களுக்கு. நாம் என்ன செய்ய முடியும்? நம்மைப் பொறுத்தவரையில் நாம் சரியாக நடந்துகொண்டு விட்டால் ஆயிற்று......"

"நாம் இருக்கலாம். அவர்கள் பாட்டுக்கு அவர்கள் இருந்து விட்டாலும் பாதகமில்லை. ஆனால் மற்றவர்களின் துஷ்டத்தனம் நமது சுகத்தைப் பாழ்படுத்தும்போதுதான் பொறுமை இல்லாமல் போய்விடுகிறது..."

வசந்தன் ஆழ்ந்த யோசனையில் இருந்தாற்போல் காணப் பட்டான். அவன் சொன்னான்: "எனக்கென்னவோ ஒவ்வொரு முறை தோன்றுகிறது, மொத்தத்தில் யார் சரி, யார் தப்பு என்று சொல்லுவதே மிகவும் கடினம் என்று. யாருக்குத் தெரியும்? நானும் நீங்களும் நினைக்கும் வழியே தவறானதாக இருக்கலாம். அவர்களுடையதே சரியாகவும் இருக்கக்கூடும்......"

வசந்தனின் இந்த வாதம் மோஹினிக்குச் சரியென்று பட வில்லை. "உங்கள் பேச்சை ஒப்புக் கொண்டால் தீர்ந்தது. யாரும் பிழைத்திருக்கவே முடியாது" என்று சொன்னாள்.

"அப்படியானால் ஒவ்வொருவருக்கும் தனக்குத்தோன்றியதே தான் சரியான வழியா?"

"ஏன் இருக்கக்கூடாது?"

"தனக்குத் தோன்றியதே சரியான வழியாக இருக்கலாம். ஆனால் அது தன்னைத்தவிர இன்னும் பத்துப் பேருக்கும் சரியான வழியாகப்பட வேண்டும்" என்றான் வசந்தன் சாந்தமாக. வசந்தன் தனக்கு விரோதமாக எதையோ சுட்டிக் காட்டுகிறானே என்னும் சந்தேகம் மோஹினியின் மனத்துள் தோன்றியது. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அப்படியானால் கருத்துச் சுதந்தரத்திற்கே இடமில்லை யென்று ஆயிற்று. அப்படித்தானே?" என்றாள்.

"கருத்துச் சுதந்தரம் இருக்கலாம். ஆனால் அதனால் இரண்டாம் பேருக்குக் கெடுதல் விளையும் என்றால் அது சுதந்தரமே அல்ல."

மோஹினிக்கு வசந்தன் தன் பக்கமாகப் பேசுகிறானா தனக்கு எதிராகப் பேசுகிறானா என்பதே புரியவில்லை. தனக்கு விரோதமாகப் பேசுகிறான் என்றே ஊகித்துக்கொண்டு, "என்னால் பிறருக்குத் தொந்தரவாக இருப்பதனால் நானேதான் தவறு செய்கிறவள் என்பதா உங்கள் அபிப்பிராயம்?"

"நானெங்கே அப்படிச் சொன்னேன்? உங்களால் அவர்களுக்கும் அவர்களால் உங்களுக்கும் அவஸ்தை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இருவரும் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக இல்லை ......இதற்கு முடிவு என்ன?"

"இதற்கு முடிவு ஏது? பரிகாரமேது? இருவரில் யாராவது ஒருவர் இல்லையென்று ஆனால்தான் இதற்குப் பரிகாரம்......"

மோஹினி கோபத்தோடு பேசினாள். அவளது குரலில் ஆவேசம் நிரம்பியிருந்தது. முகம் சிவப்பேறியது.

அவள் சொன்னாள்: "நான் நூறு முறை யோசித்து விட்டேன். கண்டவரைப் பின்பற்றி மேஜையருகே உட்கார்ந்து காலத்தைக் கடத்துவதல்ல என் உத்தேசம். என் இதயத்திலே பொங்கி எழும் குமுறலை அறிந்து கொள்ளும் தகுதி அவர்கள் யாருக்கும் கிடையாது. மனைவி என்றதனால், என்ன வேண்டுமென்றாலும் செய்துவிடலாமா? பெண் என்றதனால் என்ன வேண்டுமென்றாலும் பேசிவிடலாமா? பொறுப்பறியாத பைத்தியக்காரத்தனமான துணிச்சல் கொண்ட பெண் அல்ல நான்! இவர்களது கொடுமையைவிட இவர்களது அறிவீனமே என் மனத்திற்கு வெறுப்பை அளிக்கிறது......"

மோஹினி சற்றுத் தயங்கினாள். கோபம் அவளது முகத்தில் ஸ்பஷ்டமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வசந்தனுக்கு அந்த ஒரு கணத்தில் அவள் ஆனந்தனின் மனைவி மோஹினியாகத் தோன்றவில்லை. புருஷனின் பைத்தியக்காரக் கொடுமைகளுக்கு ஆளாகி நிலத்தில் உருண்டு எழுந்திருக்க முடியாமல் முனகிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண் இனங்களின் ருத்திரமூர்த்தியாக, அவர்களது நிராசையின் பிரதிநிதியாகக் காட்சியளித்தாள். அவளின் ஒவ்வொரு வார்த்தையையும் வசந்தன் ஒப்புக்கொண்டான். ஆனால் அவளது எண்ணங்கள், சாமானியமான சமுதாயக் கோட்பாடுகளின் நிழலிலே வளர்ந்த ஆனந்தனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் சரியாகக் காணப்படவில்லை. மோஹினிக்கு நிராசையைத் தவிர வேறு வழியில்லை என்பது அவனுக்குப் பட்டதும், அவளுக்காக அவன் இதயம் வருத்த முற்றது.

''உங்கள் அபிப்பிராயத்தை நான் அப்படியே ஒப்புக் கொள்கிறேன். எந்த விகிருதியின் பலனோகவோ யார் அறிவார்கள்! தனி மனிதனின் சுகத்திற்கும் சமூகத்தின் கோட்பாடுகளுக்கும் இன்றையதினம் ஒவ்வொரு கணமும் கைகலப்பு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. மனிதன் தனது தனித் தன்மைக்கு இரையாக வேண்டும். இன்றேல் சமூகமென்னும் குதிரையின் கால்களில் இடறப்பட வேண்டும்......''

''இரண்டாவது என்னால் முடியாத காரியம்.''

''அப்படியானால் சுகத்தின் ஆசையை விட்டுவிட வேண்டும்!''

''அதை என்றோ விட்டு விட்டேன். ஆனாலும் ஒவ்வொரு சமயம், சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும் சதிபதிகளைப் பார்க்கும் பொழுது மனம் புழுங்குகிறது, மற்றவர்களுக்கு இருப்பது நமக்கு இல்லையே என்று. நாமும் ஏன் அதேமாதிரி சந்தோஷமாக இருக்கக்கூடாது என்று......''

சிறிது நேரம் இருவரும் பேசாதிருந்தனர். டீ எப்பொழுதோ முடிந்து போயிருந்தது. மோஹினி கைக்கடியாரத்தைப் பார்த்துவிட்டு, 'இனி புறப்பட வேண்டும்' என்று நினைத்துக்கொண்டாள்.

''புறப்படலாமா?'' என்று கேட்டாள்.

''ஊம்......'' என்று அரை நிமிஷம் தயங்கிப் பிறகு கூறினான்.

"என்னால் உங்களுக்கு என்ன சமாதானமோ, எனக்கொன்றும் தெரியவில்லை. நீங்கள் வரும்போது ஏதோ பேசலாம் என்ற எண்ணத்தினால் என்னுடைய தனிமை எவ்வளவோ இன்பமயமாகி விடுகிறது. இதனால் நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்."

"இந்தப் பேச்சு மாத்திரம் தயவு செய்து பேசாதீர்கள். இம்மாதிரி உபசார வார்த்தைகள் ஆரம்பமானால் பிறகு நாம் சந்திப்பதே கஷ்டமாகிவிடும்."

"இல்லை. நிஜமாக எனக்குத் தோன்றியதைத்தான் சொன்னேன்."

"இருக்கலாம். நான் சொல்லவேண்டியதையே நீங்கள் சொன்னீர்கள். நானும் அதே பேச்சைத்தான் சொல்லவேண்டுமென்றிருந்தேன், ஆனால் உபசார வார்த்தைகள் வேண்டாமென்று பேசாமலிருந்தேன். நிஜமாகவே, என்னுடைய துக்கத்தைக் காது கொடுத்துக் கேட்க இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவராவது தயாராக இருக்கிறார் என்று எனக்கு ஏற்பட்ட மனச்சமாதானத்தை வார்த்தைகளால் கூறமாட்டேன்......"

மோஹினியின் குரல் தழுதழுத்தது.

வசந்தன் கூறினான்: "அன்று நீங்கள் புறப்பட்டுச் சென்றதும் தனிமை எனக்கு வெறுப்பையுண்டாக்கிற்று. எதை எதையோ நினைத்துக் கொண்டே அப்படியே சர்னிரோடு வரைக்கும் சென்றேன்......"

"பிறகு?"

"பிறகு தாதருக்குப் போயிருந்தேன், ஒரு நண்பனைத் தேடிக் கொண்டு...ம்...மறந்தேபோய் விட்டேன், சொல்வதற்கு. தாதரில் உங்கள் பாஸ்கரராவைக் கண்டேன்."

"என்ன சொன்னார்?"

"சொல்வதென்ன? அதே பேச்சுத்தான், திருப்பித் திருப்பி. தூஷணை. எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை."

"இன்னும் போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள்."

"எங்கே உத்தியோகம் அவருக்கு?"

"அவர் செய்யாத உத்தியோகமே கிடையாது. பரேலில் எங்கேயோ ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக இருக்கிறார். அங்கே இன்னும் எவ்வளவு நாளோ?"

"ஏன் ?"

"எங்கே போனாலும் ஒரே பாட்டுத்தான். இது மூன்றாவதோ நான்காவதோ பள்ளிக்கூடம். எல்லா இடங்களிலும் அதே காரணத்திற்காக 'அர்த்த சந்திரப் பிரயோகம்'......இப்பவும் கூடப் பெண்கள் இருக்கும் எந்த வகுப்புக்கும் அவரைப் பாடம் சொல்ல விடுவதில்லையாம்......"

இவ்வாறு பாஸ்கரராவைக் குறித்துப் பேசிக்கொண்டே இருவரும் டீ கடையிலிருந்து வெளிப்பட்டனர். ஆனால் வலது பக்கத்துத் திருப்பத்தில் பாஸ்கரராவே நின்று கொண்டிருந்ததை இருவரும் கவனிக்கவில்லை. யாருடனோ பேசிக்கொண்டு நின்றிருந்த பாஸ்கரன் அவர்கள் இருவரும் கடையை விட்டு வெளி வந்ததையும் நேராக ஸ்டேஷனை நோக்கிச் செல்வதையும் கவனித்ததோடு, பேசிக்கொண்டிருந்தவனை அப்படியே விட்டு விட்டு அவர்களைப் பின்தொடரவும் ஆரம்பித்தான்.

"அப்படியானால் மறுபடியும் எப்பொழுது சந்திப்பது?" என்று வசந்தன் கேட்டான்.

கேட்பதென்னவோ கேட்டு விட்டான். ஆனால் மறுகணமே அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது, தன்னை யறியாமலே, தான் அவளது சகவாஸத்தை விரும்புகிறோமே என்று.

"எப்பொழுது வேண்டுமானாலும். உங்கள் சௌகரியம்."

"எனக்குச் சௌகரியம் கிடைக்கும். உங்களுக்குத்தான் தொந்தரவு."

"தொந்தரவு ஒன்றும் இல்லை. எப்பொழுது சொல்லுங்கள்."

"சனிக்கிழமை?"

"சரி."

"எங்கே?"

"நீங்களே சொல்லிவிடுங்கள். எங்கேயாவது கொஞ்சம் தொலைவான இடத்திற்கேபோய் உட்கார்ந்துகொள்வோம். மறுபடியும் இந்த டீ கடை என்றால் அலுப்பாக இருக்கிறது. அதுவுமல்லாமல் இங்கே சுற்று முற்றும் நம்மைத் தெரிந்தவர்கள் எத்தனை பேரோ?"

பாஸ்கரன் இருவரையும் பார்த்துக் கொண்டே இருந்தான் ஆனால் அவர்கள் பேச்சை மாத்திரம் கேட்க முடியவில்லை.

"எங்கே போகலாம்?" என்று வசந்தன் யோசனை செய்பவனைப்போல் கேட்டான்.

"ஜுஹுவுக்குப் போகலாமா?" என்று அபிப்பிராயம் தெரிவித்தாள் மோஹினி.

"ஜுஹுவுக்கு வேண்டாம்!"

"ஏன்?"

"சனிக்கிழமை அங்கே விபரீதக் கும்பல்......"

"ஜனங்கள் வருவது சாயங்காலம். நாம் அங்கே மூன்று மணிக்கே போய் விட்டு ஐந்து மணிக்குள்ளாகத் திரும்பிவிடலாம்."

"அப்படியானால் சரி. நீங்கள் எங்கே காத்திருப்பீர்கள்?"

"சாண்டாக்ரூஸ் ஸ்டேஷனில் இருப்பேன். கடியாரத்திற்குப் பக்கத்தில். ஊம்?

"ஆல் ரைட்..."

"நீங்கள் எவ்வளவு மணிக்கு வருகிறீர்கள்?"

"சுமார் இரண்டரை. சரிதானே?"

"உம்."

மூன்று நான்கு அடிகள் முன் சென்று திரும்பி வசந்தனையே பார்த்து, "நான் இனி புறப்படுகிறேன்" என்று கழுத்தையாட்டி விடைபெற்றுக் கொண்டாள் மோஹினி. வசந்தன் கண்களினாலேயே தன் அநுமதியைத் தெரிவித்தான்.

ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த வசந்தன் தன்னைப் பார்த்துவிடப் போகிறானே என்பதற்காகப் பாஸ்கரன் தான் நின்ற இடத்திலிருந்து திரும்பி வேறு வழியில் நடக்க ஆரம்பித்தான். பல நாட்களாகக் காத்திருந்த சந்தர்ப்பம் இன்று அவனுக்குக் கிடைத்திருந்தது. தன் கையில் ஜயிக்க முடியாத ஆயுதம் ஒன்று கிடைத்த வெற்றிப் பெருமிதம் அவனை உற்சாகத்தின் உச்சாணிக் கிளையில் ஏற்றியது. இந்த ஆயுதத்தினாலே மோஹினியைக் கண்டிப்பாகப் பணிய வைக்கலாம் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் தான் அவளைப் பணிய வைத்து விடலாம் என்ற நம்பிக்கையை, தன் கண்ணெதிரிலேயே அவளுடன் வசந்தன் சிரித்துக் குலாவினான் என்பதனாலேற்பட்ட அசூயை கிளறிக் கொண்டிருந்தது. வசந்தன் மீது அளவற்ற கோபம் கொண்டான் பாஸ்கரன். நல்லவன்போல் வேஷம்

போட்டுக் கள்ளத்தனம் செய்பவன் இவன் என்று தீர்மானித்துக் கொண்டான். அவர்களிருவருக்குள்ளும் தொடர்பு இதுவரையில் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதோ என்னும் சந்தேகம் கொண்டான். ஆனால் அவனது சந்தேகம், கோபம் இவைகளி னூடே பொறுமைதான் நிரம்பியிருந்ததே ஒழிய, மோஹினி மற்றொரு ஆடவனுடன் சலுகையோடு பழகுவது பற்றிய நியாயமான ரோஷமும் வெறுப்பும் இருக்கவில்லை. வசந்தனுடன் மோஹினியைப் பார்த்ததிலிருந்து அவர்களிருவரும் அப்பொழுதே தவறான வழியில் இறங்கி விட்டிருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான். ஆண் - பெண் இருவரிடையே காமத்தைத் தவிர வேறு என்ன சம்பந்தம் இருக்க முடியுமென்பதை அறியாத பாஸ்கரன் அவர்களிருவரையும் அப்பொழுதே விபசாரிகள் என்ற அபவாதத்திற்கு ஆளாக்கியிருந்தால் ஆச்சரியமில்லை. ஆனால் அகஸ்மாத்தாகத் தன் கண்களிலே பட்ட இக்காட்சியை எப்படித் தனது நலத்திற்கு உபயோகப் படுத்திக் கொள்வது என்ற யோசனையிலே மனத்தை ஓடவிட்ட பாஸ்கரன் முதலில் தோன்றிய அருவருப்பைக் கணத்தில் மறந்தான்.

தான் கண்ணாரக் கண்டதை ஆனந்தனுக்குச் சொல்ல வேண்டுமா, கூடாதா என்று பாஸ்கரன் பலமுறை யோசித்தான். இன்றில்லாவிட்டால் நாளை தெரியப்படுத்துவது நிச்சயம். எப்படி யும் அவளைத் தாய்வீடு அனுப்புவதாகத் தீர்மானமாகியிருந்தது. மறுநாளே புறப்பட வேண்டிய தேதி. அவளை யார் அழைத்துச் செல்வது என்பது மாத்திரம் தீர்மானமாகி யிருக்கவில்லை. ஆகையால் ஆனந்தனைப் போய்ப் பார்த்தால் இந்தச் சமாசாரங் களைத் தெரிந்து கொள்வதோடு, வசந்தன் பெயரைச் சொல்லா விட்டாலும் வேறு யாரோ ஒருவனுடன் அவளைப் பார்த்தேன் என்பதை அவனுக்குச் சொல்லலாம் என்றெல்லாம் பலவாறாகச் சிந்தித்து ஆனந்தனைப் போய்க் காண்பது என்ற முடிவுக்கு வந்தான். ஆனால் அவனது அறையின் விலாசம் நிச்சயமாகத் தெரியாது. கடைசியாக ஒரு யோசனை தோன்றியது. ராத்திரி சாப்பாட்டுக்கு அவன் வரும் ஹோட்டல் பாஸ்கரனுக்குத் தெரியும். விடுவிடுவென்று அங்கே சென்று ஹோட்டல் மானேஜரிடம் ஆனந்தன் வந்தால் தனக்காகச் சிறிது காத்திருக்கும்படி சொல்லச் சொல்லிவிட்டு வந்தான்.

எட்டரை மணிக்கு ஆனந்தன் ஹோட்டலில் பாஸ்கரனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒரே படபடப்பு; இன்றைக்கு என்ன நடந்ததோ, நாராயணராவ்தான் மறுபடியும் தன்னைக் கூப்பிட்டனுப்பியிருப்பாரோ என்று. எப்படியிருந்தாலும் மோஹினியை மறுநாளே பிறந்தகம் அனுப்புவது என்று தீர்மானமாகியிருந்ததால் சமாதானம் செய்து கொண்டான். பாஸ்கரன் வருவதைக் கண்டதுமே சட்டென்று எழுந்து சென்று, "என்ன பாஸ்கரா, என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை!"

"எனக்கு மிகவும் பயமாய்ப் போய் விட்டது."

"அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை. இந்தப் பக்கமாக வந்தேன். இரண்டு மூன்று நாட்களாக உன்னையும் பார்க்க வில்லை. பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான்......"

"இவ்வளவு தானே?"

"இல்லை. நாளைக்கு ஊருக்குப் போக வேண்டியதைப்பற்றி என்ன முடிவு பண்ணினாய்? இப்பொழுது போரிவிலிக்கு வருகிறாயா?"

"மத்தியான்னம் போயிருந்தேன். அக்காவிடம் சொல்லிவிட்டு வந்தேன், 'நாளைக்குப் பதினொரு மணி வண்டிக்குப் புறப்பட வேண்டும்; அவளைத் தயாராக இருக்கச் சொல்' என்று."

"நீயே இப்போழுது வந்தால் நன்றாக இருக்கும். அக்கா பேச்சு எவ்வளவு தூரம் நடைபெறப் போகிறது?"

"மறுபடியும் நான் வரவில்லை, பாஸ்கர். இன்று மத்தியான்னமும் படிப்பு இல்லை. இப்பொழுது வந்தால் இன்று ராத்திரியும் வீணாகிவிடும். இனி நாளைக்கு வேறு பிரயாணம்......"

"அப்படியானால நாளைக்கு நீயே போகிறாயா?"

"நாளைக்குத்தான் பார்க்கவேண்டும். தனியே போகிறேன் என்று சொன்னால் போகட்டும். இல்லாவிட்டால் நான் கல்யாண் வரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறேன்."

"நாளைக்கு எனக்கு வேறு வேலை ஒன்றும் இல்லை. வேண்டுமானால் நான் போய் விட்டுவரக் கூடும்......"

"என்னத்திற்கு வீணாக, வண்டி வாடகை நஷ்டம். அவ்வளவொன்றும் தூரப் பிரயாணமும் அல்ல."

பாஸ்கரனுக்கு மீண்டும் ஏமாற்றம்.

ஞாயிற்றுக்கிழமை காலை தான் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்த பிறகு மோஹினியை மீண்டும் பார்க்க இயலாததால் அவள் எப்படி இருக்கிருள் என்று அறியவேண்டும் என்னும் ஆவல் கொண்டான் ஆனந்தன். தான் அங்கிருந்து புறப்பட்டு வந்த போது சிடுசிடுவென்றே வந்திருந்த போதிலும், ஓரிரண்டு நாட்களில் அவன் மனம் சமாதானம் அடைந்து அன்றிரவு நடந்தவைகளுக் கெல்லாம் தானே காரணம் என்று நினைக்குமளவுக்கு வந்திருந்தான்.

"அக்கா வீட்டிற்கு நீ போயிருந்தாயா?" என்று அண்ணனைக் கேட்டான்.

"ஏன்?"

"நான் இன்று மத்தியான்னம் போயிருந்த பொழுது மோஹினி காலேஜுக்குப் போயிருந்தாள். எப்படியிருக்கிருளோ......"

"எப்படி என்ன? சந்தோஷமாகத்தான் இருக்கிருள், எப்பொழுதும் போல. இப்பொழுது தான் இங்கிருந்து போனுள்."

"இப்பொழுதா?"

"இப்பொழுது என்றல் ஓர் அரை மணி நேரமாகியிருக்கும், அவ்வளவுதான்."

உண்மையில் மோஹினி தாதனை விட்டுப் புறப்பட்டு இரண்டு மணி நேரம் இருக்கும். ஆனல் ஆனந்தனின் மனத்தில் விஷ வித்தை ஊன்றி வளர்க்க வேண்டும் என்னும் யோசனையில் உள்ள பாஸ்கரனுக்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

"இங்கே யார் வீட்டுக்கு வந்திருந்தாள்?"

"எனக் கென்ன தெரியும்?"

"நீ எங்கே பார்த்தாய்?"

"ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் யாருடனே பேசிக் கொண்டு நின்றிருந்தேன். அந்தப் பக்கம் நடந்து போனர்கள்."

"அவளுடன் வேறு யார் இருந்தது?"

"யாருடனே பேசிக் கொண்டே ஸ்டேஷனுக்குள் சென்ருள். யார் என்று எனக்குத் தெரிய வில்லை!"

"நீ முன்னலே போய்ப் பார்த்திருக்க வேண்டும், பாஸ்கர்."

"என்னத்தைப் பார்ப்பது? யாராவது தெரிந்தவர்களை அவள் சந்தித்திருக்கலாமென்று நினைத்துக் கொண்டேன்."

"அப்படி இருக்கு மென்கிருயா?"

ஆனந்தனின் மனநிலே விபரீதமாக மாறத் தொடங்கியது. அவனது சந்தேகம் பெரிய உருக் கொண்டு தன்னுடைய பயங்கர சொரூபத்தை அவன் கண்களெதிரே நிறுத்துவது போலிருந்தது. மேகம் சிறிய தானுலும் தொலேவிருந்து சூரியனேயே மறைத்து விடுவது போலப் பாஸ்கரன் மூலமாக அறிந்த சமாசாரம் ஆனந்தனின் மனத்தை ஆட் கொண்டது. அவன் ஏதும் பேசாமலிருப்பதைக் கண்டு அவனது மன நிலேயை அறிந்து கொண்ட பாஸ்கரன் பொய்ச் சமாதானத்துடன், "அப்படி யெல்லாம் ஒன்றும் இருக்காது, ஆனந்தா. வீணுக யோசனே செய்யாதே. எப்படியும் நாளேக்குத்தான் ஊருக்குப் புறப்பட்டுப் போய் விடுகிருளே."

"போனுல் என்ன? நாளேக்குக் காலேயில் வரும் பொழுது கேட்டே விடுகிறேன்."

"பைத்தியமடா நீ ஆனந்தா. கேட்டு விடுவதனுல் என்ன ஆகும்? மீண்டும் சண்டைதான். ஒரு முடிவும் ஏற்பட்டு விடாது. அப்படி உனக்குச் சந்தேகமாக இருந்தால் இன்னும் நான்கு நாள் பொறுத் துப்பார். அவசரப் படுவதில் ஒன்றும் பிரயோசனம் இல்லே."

ஆனந்தன் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். அவன் மனம் ஒரே கேள்வியைச் சுற்றிச் சுற்றி வட்ட மிட்டது: 'அவன் யாராக இருக்கக் கூடும், அவளுடன் இருந்தவன்?'

"நானும் இப்பொழுதே வந்து விடுகிறேன் பாஸ்கரா. என்னுல் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது."

"மறுபடியும் பைத்தியம் போல் பேசாதே ஆனந்தா. நான் இதை உன்னிடம் சொல்லியிருக்கக் கூடாது. என்னவோ பேச்சோடு பேச்சாக வந்து விட்டது; சொல்லி விட்டேன். துரும்பை மலேயாக எண்ணி மாய்ந்து போகாதே. பரீக்ஷை வேறு நெருங்கி விட்டது......"

"அப்படியானுல் இப்பொழுது வரவேண்டாமென்கிருயா?"

"வேண்டாம். நாளேக்கு வரும் போதும் அந்தப் பேச்சை எடுக்காதே."

"பார்ப்போம்.."

"நாளேக்கு நானும் ஸ்டேஷனுக்கு வரட்டுமா?"

"எதற்கு? அவள் போய் விட்டு வருவது ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்கு. சாமான்கள் ஒன்றும் அதிகம் இல்லை."

"டிக்கெட்?"

"நாளைக்கு வாங்கிக் கொள்ளலாமே? பதினொரு மணி பாஸஞ்சருக்கு அவ்வள வொன்றும் கூட்டம் இருப்பதில்லை."

"நான் நாளைக் காலையில் தாதருக்கு வரவேண்டியிருக்கிறது. நான் டிக்கெட் வாங்கி வைத்து விடுகிறேன். ஏன் புறப்படும் வேளையில் வீணகத் தொந்தரவு?"

"அப்படியானால் சரி. நீ அங்கேயே ஸ்டேஷனிலேயே இருக்கிறாயா?"

"ஆமாம். நீங்கள் வந்து விடுங்கள். நான் பிளாட்பாரத்தி லேயே இருக்கிறேன்."

அவளுடன் ஊருக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைக்கா விட்டாலும் ஸ்டேஷனிலாவது பார்ப்போம் என்று நினைத்து, ஏதோ சாக்குச் சொல்லி வெற்றி பெற்று விட்டான் பாஸ்கரன். அந்த எண்ணத்தில் வாங்க வேண்டிய டிக்கெட் ஒன்ரு இரண்டா என்பதைக் கேட்டுக் கொள்ள மறந்து விட்டான். அப்பொழுதே புறப்பட்டுக் கொண்டிருந்த ஆனந்தனை அழைத்து, "ஆனந்தா, எவ்வளவு டிக்கெட் என்று சொல்லவே இல்லையே" என்று கேட்டான்.

"ஒன்று வாங்கிக்கொள் முதலில். பிறகு பார்த்துக் கொள்வோம்."

பாஸ்கரன் ஆனந்தனை மீண்டுமொரு முறை எச்சரித்தான். "சும்மா வீணில் யோசனை செய்யாதே ஆனந்தா. அதில் ஒன்றும் விசேஷம் இருக்காது."

இப்படி வாயால் சொன்னானே ஒழிய, 'எப்படியோ கொள்ளி வைத்து விட்டேன்' என்று அவனது நீச ஸ்வபாவம் எக்களிப்புக் கொண்டது.

ஆனந்தன் நடந்து கொண்டே இருந்தான். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் பொழுதும், "யார்?", "யார்?" என்னும் தீனமான குரல் அவன் செவிகளில் விழுந்து கொண்டே இருந்தது.

ஆனந்தன் தன் அறைக்கு வந்து படுக்கையில் படுத்துக் கொண்டான். எவ்வளவு வகைகளில் மனத்திற்குச் சமாதானத் தைத் தருவித்துக் கொண்டாலும், மனம் ஒரு நிலைக்கு வர

மறுத்தது. ஒரு கணம், 'நிஜமாகவே மோஹினி கெட்டுப் போனவள், பாதை தவறியவள்; அவளை நன்ருகத் தண்டிக்க வேண்டும்' என்று நினைப்பான். மற்ருெரு கணம் 'அப்படி இருக்காது, இருக்க முடியாது' என்று எண்ணுவான். ஆனல் சந்தேகம் என்னும் வித்து பெரும் மரமாக வளரத் தொடங் கியிருந்தது. 'யாராக இருக்கும்?...... யாராயிருந்தாலென்ன? அவள் சம்பந்தத்தையே விட்டு விட்டால் போயிற்று. என்ன வேண்டுமானலும் செய்து கொள்ளட்டும் அவள்' என்று தோன்றி யது. ஆனல் அவளை விட்டு விடுவதும் அவ்வளவு சுலபமாகத் தோன்றவில்லை. அவளோ மோஹினி! விவாகம் செய்து கொண்டு, வீட்டுக்காரியாகி, உள்ளத்தரசியாக விற்றிருக்க வந்தவள். தன் கனவுகளுக்குக் கலசம் வைத்தவள். இன்று அந்தச் சொப்பன மாளிகை தரை மட்டமாகப் பெயர்ந்து விழும் நிலையில் இருக்கிறது. அழகிய அந்த மாளிகையை, அழகியான அந்த மாளிகையின் எஜமானியே இடித்துத் தள்ளிக் கொண்டிருக் கிருள். ஆனந்தனுக்கு எல்லையற்ற துக்கம் உண்டாயிற்று. இன்னெருவன் பேரில் பொருமை, தன்பேரில் அநுதாபம், உலகத்தின் பேரில் ரோஷம் இவை மூன்றும் அவன் இதயத்தில் அந்த நிமிஷத்தில் போராட்டம் நடத்த ஆரம்பித்தன.

மோஹினியின் விஷயமாக ஏதேனும் ஒரு முடிவைக் காண வேண்டுமென்று அலைப்புக் கொண்ட ஆனந்தனின் மனம் பெரும் வேதனைக் குள்ளாகியிருந்தது. மத்தியான்னம் படிக்க முடியாமற் போனதால் ராத்திரியாவது ஓர் இரண்டு மணி நேரம் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனல் இப்பொழுதோ படிப்பும் இல்லாமல் தூக்கமும் இல்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். ஆனந்தனின் இந்த நிலை, உண்மையை அறியாத அவனது தோழனின் கிண்டலுக்கு இடமாயிற்று.

"என்ன ஆனந்தா, இன்றைக்குப் படிப்பு கிடையாதா?"

"என்னவோ உடம்பு சரியாக இல்லை இன்றைக்கு" என்று ஒரு பொய்யைக் கூறினன் ஆனந்தன்.

"உடம்பில் கோளாரு, மனத்திலா?" என்ருன் நண்பன்.

"மனத்திற்கு என்ன கேடு?" என்று மற்ருெரு பொய்யை அவிழ்த்தான் ஆனந்தன்.

"இல்லை, விவாகமானவர்களுடைய மனம்......அதற்காகத் தான் கேட்டேன்" என்று நண்பன் சிரித்தான்.

"ஆமாம். நீ சொல்லுவதும் சரிதான். மணமானபின் படிப்பதென்பது கூடாதுதான்......"

"அல்லது படிக்கவேண்டு மென்கிறவர்கள் கல்யாணம் செய்துக்கொள்ளக் கூடாது. அதனால்தான் நான் இன்னும் விவாகத்தைப்பற்றியே நினைக்கக்கூட இல்லை......"

"அப்படிப் பார்க்கப்போனால், விவாகத்தைப்பற்றி எப் பொழுதுமே நினைக்காமல் இருப்பது நல்லதென்று காண்கிறது!"

"ஆமாம். விவாகம் செய்துகொண்ட பிறகு எல்லோரும் இப்படித்தான் சொல்வார்கள். விவாகம் ஆகும் வரையில் இது அவர்களுக்குத் தெரிவதில்லை போலிருக்கிறது!"

"விவாகம் ஆன பிறகு அது தெரிந்தும் பிரயோசனமில்லை" என்று ஆனந்தன் சிரித்துவிட்டான். ஆனால் அந்தச் சிரிப்பு சாந்தமான மனத்திலிருந்து பிறந்த சிரிப்பாக இல்லை. வேண்டாமென்றாலும் தனக்கு வந்துவாய்த்த அநுபவமொன்றின் துக்க அறிகுறி அந்தச் சிரிப்பிலே இருந்தது. ஆனந்தன் பேசாமலிருந்துவிட்டதைக் கண்டு மீண்டும் அவனைச் சீண்டவேண்டுமென்றே நண்பன் மறுபடியும் கேட்டான்.

"நீ இன்று சாயங்காலம் போரிவிலிக்குப் போயிருக்க வேண்டும், பார்."

"ஏன்?"

"ஏன் என்ன? மனம் அங்கேயும் உடல் இங்கேயும் இருந்தால் படிப்பு எப்படி ஓடும்?"

ஆனந்தன் நினைத்துக்கொண்டான்: 'ஆமாம். மனம் அங்கேதான் இருக்கிறது. ஆனால் நீ நினைக்கிற அர்த்தத்தில் அல்ல.'

"இதுவெல்லாம் விவாகமாகாத பிரம்மசாரிகளின் பைத்தியக்காரக் கற்பனை!" என்று வாய்விட்டுச் சொன்னான் ஆனந்தன்.

"இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு கற்பனையின் வடிவத்தைத்தான் நான் என் கண் முன்னால் காண்கிறேன்."

ஆனந்தன் மீண்டும் மௌனமாக இருந்தான். நண்பனுக்கு இன்னும் தூக்கம் வந்ததாகத் தெரியவில்லை.

அவன் சொன்னான்: "சும்மா படுத்துக் கிடப்பதில் என்ன

பிரயோசனம்? எங்கேயாவது ஒரு 'பிக்ச'ருக்குப் போகலாம் வா. நீயோ இன்று படிப்பதாகத் தெரியவில்லை."

"வேண்டாமப்பா. எனக்கு மிக அலுப்பாக இருக்கிறது."

"அவ்வளவு அலுப்பு உண்டாவதற்கு என்னடா ஆயிற்று உனக்கு?"

"என் சங்கடம் உனக்கென்ன தெரியும்?" என்று ஆனந்தன் தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனால் பகிரங்கமாக, "என்னவோ, மனசுக்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை" என்றான்.

"ஒன்றும்?" என்று நண்பன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"ஆமாம்......"

"போரிவிலுக்குப் போவதற்குக்கூட?"

"போடா, நீ ஒரு பைத்தியம்!"

நண்பன் வாயை மூடிக்கொண்டான். ஏதோ நாவல் ஒன்றைப் படித்துக்கொண்டே இருந்து அவன் தூங்கிப்போய்விட்டான்.

அவன் தூங்குவதைப் பார்க்க ஆனந்தனுக்குப் பொறுமையாக இருந்தது.

யோசிக்க யோசிக்கப் பிரச்னை இன்னும் சிக்கலாயிற்றே ஒழிய விடுபடும் வழியாகக் காணவில்லை. வெளித் திண்ணைக்கு வந்து நின்றான். நேர்த்தியான ரோடு காலியாக வெறிச்சென்றிருந்தது. ஆனால் அங்கே நிலவிய சாந்தியில் ஆனந்தன் ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதைக் கண்டான். இன்னொருவருக்காக உழைத்து உடல் ஓய்ந்து அயர்ந்து தூங்குபவனின் நித்திரையிலே காணப்படும் சாந்தியைப் போன்றிருந்தது அது. ஆனந்தனின் உள்ளம் அப்படிப்பட்ட சாந்திக்காக அவாவுற்றது.

மோஹினியின் மனத்திலுழத்தைத் தன்னால் அறிய முடியாது என்பதைத் தெரிந்துகொண்டே ஆனந்தன் எவ்வளவோ முறை தங்களிருவரிடையே தப்பெண்ணம் வளர இடங்கொடுத்து வந்தான். 'நான் மோஹினிக்கு வேண்டாதவனாக இருக்கிறேனே' என்ற சந்தேகத்தோடு இன்று, 'மோஹினிக்கு வேண்டியவன் வேறுயாரோ ஒருவன் இருக்கிறானே' என்ற எண்ணமும் தோன்றி அவனை வாட்டின. அவனுக்கு மோஹினி வேண்டியவளாக இருந்தாள். ஆனால் அவனை வளர்த்து வாழ்க்கையில் ஒரு வழி செய்து

கொடுத்த அக்கா, அவள் கணவர், அண்ணு இவர்கள் வேண்டாத வர்களாக இருக்கவில்லே. அவர்களே விட்டு விலகியிருப்பதென் ருல் அது நன்றி மறந்த பாவமாகும் என்று நினேத்தான். மோஹினியுடன் அவன் நடந்துகொள்ள வேண்டிய வகையில் நடந்துகொள்ளவில்லே என்பதையும் அறிந்திருந்தான். இன்றைக் கில்லா விட்டாலும் நாளேயாவது மோஹினி தன் மனத்தை அறிந்துகொண்டு தன் பால் இணங்கி வரலாம் என்னும் ஆசையி லேயே நாட்களேக் கழித்துக்கொண்டு வந்திருந்தான். ஆனல் பாஸ்கரன் அந்த விஷயத்தைச் சொன்ன உடனே அவனது ஆசை யெல்லாம் பஸ்மீகரமாகிவிட்டது.

என்னவானுலும் சரி, மறு நாள் காலே போகும்பொழுது முடிந்தவரையிலும் அவளேத் தன் பால் இழுத்துக்கொண்டு அவ ளிடமிருந்து உண்மையை அறிந்தே தீரவேண்டும் என்று உறுதி செய்து கொண்டான். அப்பொழுது அவன் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன.

அதே சமயத்தில் வசந்தன் போரிவிலியிலுள்ள தனது அறையில் எதையோ படித்துக்கொண்டிருந்தான், படுத்தவாறே. சாயங்காலம் தாதர் ஸ்டேஷனில் அவளிடம் விடைபெற்றுக் கொண்ட பிறகு எவ்வளவோ முறை அவளேக் குறித்து யோசித் திருந்தான். மனம் இனமறியாத ஓர் உல்லாசச் சுழலில் சிக்கி ஆனந்தித்துக் கொண்டிருந்தது. மோஹினியின் பேரில் அவனுக்கு மரியாதை ஏற்பட்டிருந்தது. 'தான்' என்ற பாவத்தை இழக்கச் சம்மதிக்காதவர்களேக் காணும்போதெல்லாம் வசந்தனுக்கு அவர்கள்பேரில் பிணைப்பு ஏற்படுவது வழக்கம். அத்தகைய பிணேப்பே வசந்தனே மோஹினிக்கு நெருங்கியவனுகச் செய்தது. ஆனல் அவள் கடைப்பிடித்திருக்கும் முறையில் அவளுக்கு வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை இல்லாததை நினேத்த பொழுது அவன் மனம் சங்கடப்பட்டது. 'அவள் சந்தோஷமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சௌந்தர்யவதி சந்தோஷமாக இருந்தால்தான் ரத்தினமும் தங்கமும் சேர்ந்தாற் போல! இல்லாவிட்டால் என்ன? பிரம்மனின் சிருஷ்டித்திறன் அவ்வளவும் பாழ்!' என்று நினேத் தான். இரவு நெடுநேரமாகி விட்டதால் புத்தகத்தை மூடி வைத்து விட்டு விளக்கை அணேத்தான். மனம் மீண்டும் மோஹினியைத்

தொடர்ந்து ஓடியது. அவளை நினைக்கும் பொழுதெல்லாம் வசந்தன் தன்னையே கேட்டுக்கொள்வான். 'மோஹினி என் பேரில் இவ்வளவு நம்பிக்கை வைக்கக் காரணம் என்ன? என்னை மீண்டும் மீண்டும் சந்திக்கவேண்டும் என்னும் ஆசை அவளிடம் தோன்றக் காரணம் என்ன?' என்று. அது விஷயமாக அவன் ஒவ்வொரு சமயம் தன்னைப்பற்றியே பெருமையாக நினைத்துக் கொள்வான். சில சமயங்களில் அவன் மனம் வெகுதூரம் ஓடி விடும். மற்றும் சில சமயங்களில் பயம் அவனைக் கவ்விக் கொள்ளும். மோஹினி ஒரு தாழம்பூ. முள் நிறைந்த மலர். அதோடுகூட தாழம்பூ உள்ள இடத்தில் பாம்புகளும் அதிகம் உண்டு! ஆனால் எவ்வளவுதான் முட்களும் பாம்புகளும் சூழ்ந்திருந் தாலும் அவைகளால் தாழையின் நறுமணத்தைக் குறைக்க இயலுமா? மொத்தத்தில் மோஹினியை நினைக்கும்பொழுதெல் லாம் வசந்தன் தன் நினைவை இழந்தான். யோசித்துக் கொண் டிருக்கும் பொழுதே தன்னையறியாமலே தான் அவளைக் காணும் செயலில் ஓர் ஆசை தலை எடுக்கிறது என்பதை மறந்து விடுவான். அந்தச் சந்தேகம் வரும்போதெல்லாம் அவள் நினை வைத் தடுத்து நிறுத்தி, 'அவள் மனத்தைத் தணிவிக்கும், ஆட்டு விக்கும் வாழ்க்கையின் ஒரு சக்தி; விடுவிக்க முடியாத ஒரு புதிர்' என்று கூறிக்கொள்வான். ஆனந்தனைப் போலவே வசந்த னுக்கும் அவள் ஒரு விடுபடாத விடுகதையாய் அமைந்தாள். ஆனால் அந்த விடுகதை மனக் கண்ணெதிரே நின்றபோது ஆனந் தனின் மனம் நிராசை கொள்ளும்; வசந்தனின் மனம் சந்தோஷத் தின் நிறைவால் பொங்கும்.

## 3

மறு நாள் காலை ஆனந்தன் போரிவிலிக்கு வந்தபொழுது மணி சுமார் எட்டரை இருக்கும். மோஹினி ஏதோ வேலையாக இருந்தாள். ஆனந்தன் உள்ளே அடிஎடுத்து வைக்கும்போதே பலவகை யோசனைகளால் பிடிக்கப்பட்டிருந்தான். 'அக்கா சொற்படி மோஹினி புறப்படத் தயாராக இல்லாவிட்டால்? ஊருக்கே போகமாட்டேன் என்று பிடிவாதம் செய்தால்? அல்லது தான் அவளைக் கேட்கவேண்டுமென்றிருந்த கேள்வி யால் சினமுற்றுப் பெரிய அமர்க்களம் பண்ணினால்?'

ஆனால் நடுவீட்டில் இருந்த சாமான்களின் நிலைமையைக் கண்டபோது மோஹினி புறப்படத் தயாராக இருப்பதாகத் தோன்றியது. மனத்திற்கு எவ்வளவோ சமாதானமாக இருந்தது. சமையலறைக் கதவண்டை மோஹினியைச் சந்தித்ததும், "சரியாகப் பத்து மணிக்குப் புறப்படவேண்டும். என்ன?" என்றான்.

மோஹினி பதில் கூறவில்லை. ஆனந்தனுக்கு ஒரு கணம் இது விசித்திரமாகப் பட்டது. சமையலறையில் அக்கா சமைக்கத் தொடங்கியிருந்தாள். நாராயணராவ் குளிக்கச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். ஆனந்தன் கூடத்திற்கு வந்து சைகை காட்டி மோஹினியைத் தன்னருகே அழைத்தான்.

"ஊருக்குப் போக வேண்டுமென்று உனக்கு எப்பொழுது சொன்னார்கள்?"

"நேற்று சாயங்காலம்."

"நேற்று சாயங்காலமா? ஞாயிற்றுக்கிழமை நான் புறப்பட்டுப் போகும்போதே அக்காவிடம் உனக்குச் சொல்லும்படி சொல்லியிருந்தேனே! நேற்று நான் கேட்டபொழுதுகூடத் தெரிவித்து விட்டதாகச் சொன்னாளே......"

"எனக்குச் சொன்னதென்னவோ நேற்று சாயங்காலம் தான்......"

ஆனந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மூன்று நாட்களாக அக்கா இந்தச் சமாசாரத்தை மோஹினியிடம் சொல்லாமலிருக்கக் காரணமென்ன வென்று அவனுக்கு விளங்கவில்லை.

ஊருக்குப் புறப்படவேண்டுமென்பதைக் கடைசி நிமிஷத்தில் தெரிவித்திருந்த போதிலும் மோஹினி ஏதும் தடை சொல்லாது புறப்படச் சித்தமாகவே இருந்தாள். ஆனால் ஒரு பயம் மாத்திரம் மனத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. தான் தாய் வீட்டிற்குப் போவதாகச் சொன்ன பொழுதெல்லாம் ஆனந்தன் கண்டிப்பான குரலில், "அங்கே போனால் அங்கேயே இருந்துவிட வேண்டியது தான். திரும்பி இங்கே வரமுடியாது" என்று கூறியிருந்தான். இப்பொழுது மோஹினியைப் பிடித்த பீதி அதுதான். 'இது கடைசி விடுதலையா?' இப்படி எண்ணி, போகக்கூடாதென்றே நினைத்தாள். ஆனால் தாயைப் பார்த்துப் பல நாட்களாகியிருந்தன. அதுவுமல்லாமல் பிரதிதினமும் இங்கே ஒன்றில்லாவிட்டால் மற்றொன்றுக்காக இவர்களுடன் போராடுவதைவிட சில நாட்களுக்

காவது சந்தோஷமாக இல்லாவிட்டாலும் அமைதியாகக் காலம் கழிக்கலாம் என்ற நினைப்பால் புறப்படுவதென்று முடிவு செய்தாள். ஆனால் தான் ஊருக்குப் புறப்பட வேண்டியிருந்ததைக் கடைசி நிமிஷம் வரையிலும் தனக்குத் தெரிவிக்காமலிருப்ப தென்றால்? தன்னை அவர்கள் நடத்தும் அற்பத்தனத்தை நினைந்து அவள் மனம் ஒரு கணம் வெகுண்டாலும் தாயைக் காண வேண்டும் என்னும் ஆவலால் அந்த அவமானத்தை மறந்தாள். அதுவுமன்றி நாராயணராவின் பலவந்தத்தினாலேயே ஆனந்தன் தன்னை அனுப்பச் சம்மதித்தான் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். ஆனால் ஆனந்தனின் அபிப்பிராயம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலில் இருந்த மோஹினி அவனது சைகையைக் கண்டு அவனருகில் வந்தாள்.

"உன் பரீக்ஷைக்கு இன்னும் எவ்வளவு நாட்கள்?"

"மூன்று வாரம்."

"அந்தச் சமயத்திற்கு நீ இங்கே வந்து விடலாம். இன்னும் ஒரு மாதத்தில் என் பரீக்ஷையும் முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு யோசித்துக் கொள்வோம்."

"எதைப்பற்றி?"

"பின்னால் என்ன செய்யவேண்டு மென்பதைப் பற்றி."

"அப்படி யென்றால்?"

"முந்தாநாள் ராத்திரி என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? நீ கேட்கவில்லையா?"

"கேட்டேன். ஆனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"பார்ப்போம். இப்பொழுதே ஏன் யோசிக்க வேண்டும்? இன்னும் ஒரு மாதம் இருக்கிறது."

"இப்படி எவ்வளவு மாதங்கள் இத்துடன் ஆயிற்றோ......"

ஆனந்தன் பேசாமலிருந்தான். ஒரு நிமிஷம் தயங்கி விட்டுப் பிறகு கேட்டான். "எல்லாச் சாமான்களையும் எடுத்து வைத்துக் கொண்டாயிற்றா?"

"எல்லாவற்றையுமா?"

இந்தக் கேள்வி மோஹினியின் மனத்திலே குடிகொண்டிருந்த பீதியின் பிரதிபலிப்பாக இருந்தது. அவள் ஆனந்தன்

முகத்தையே பார்த்தாள். ஆனந்தன் சிரித்துக்கொண்டே, "அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. சாமான்களைக் கட்டிவைத்தாயிற்ரு என்று கேட்டேன். வேறென்றும் இல்லை" என்றான்.

முகத்தைச் சிறிது கம்பீரமாக்கிக் கொண்டு, மோஹினி ஆனந்தனைக் கேட்டாள்:

"இப்பொழுது நான் ஊருக்குப் போகத்தான் வேண்டுமா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதாம்."

"அப்படியானால் நான் திரும்பி வரக்கூடாதா?"

"யார் சொன்னார்கள் அப்படி?"

"சொல்ல வேறு வேண்டுமா?"

"அப்படி ஒன்றும் இல்லை. பின்னால் யோசனையை அப்புறம் தெரிவிக்கிறேன்......" என்று அவன் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே நாராயணராவ் கூடத்திற்கு வந்ததால் மோஹினி உள்ளுக்குச் சென்று விட்டாள்.

"என்ன ஆனந்தா; கூட நீதானே போகிறாய்?" என்று நாராயணராவ் கேட்டார்.

"இல்லை."

"அப்படியானால் பாஸ்கரன் போகிறானா?"

"போகட்டுமா என்று என்னைக் கேடடான்......"

"நீ போவதாக இருந்தால் போ, உன் படிப்புக்கு இடையூறாக இல்லாமலிருந்தால். பாஸ்கரனை அனுப்பாதே."

ஆனந்தனுக்கு இது விசித்திரமாகப் பட்டது. இருந்தாலும் நாராயணராவ் எப்பொழுதுமே தன் அண்ணன் விஷயத்தில் குற்றம் கூறும் சுபாவம் உடையவராயிருந்ததால் அந்தப் பேச்சை வளர்க்க விரும்பவில்லை.

"பார்ப்போம். போவதானால் நானே போகிறேன். இல்லாவிட்டால் அவள் தனியே போகட்டும்" என்றான்.

"அதுசரி... வா. நீயும் சாப்பிட்டு விடு......" என்று சமையலறைப் பக்கம் நோக்கி நடந்தார். ஆனந்தன் அவரைப் பின்பிற்றிச் சென்றான்.

ஆனந்தனும் நாராயணராவும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்ததும் அக்கா மோஹினியைப் பார்த்து, "நீயும் ஒரு வட்டில் எடுத்துக்

கொண்டு வந்து உட்கார்ந்துகொள். கையோடு பரிமாறி விடுகிறேன். அப்புறம் நாழிகையாகிவிடப் போகிறது......" என்றாள்.

மோஹினியின் பேரில் அக்காவுக்கு எந்த விதமான நல்ல அபிப்பிராயமும் இல்லாவிட்டாலும் கூட இப்படி அவளைத் திடீரென்று ஊருக்கு அனுப்புவதில் அவள் மனம் சிறிது கலங்கியது. இதற்கு முக்கியமான காரணமென்னவென்றால், சனிக்கிழமை நடந்த சம்பவங்களின் விளைவு ஆனந்தனிடம் வெகுவாகப் பரிணமித்திருக்கிறது என்பதை அவள் அறியாததுதான். முதல் நாள் மத்தியான்னம் ஆனந்தன் வந்த பொழுது எவ்வளவோ வகைகளில் அவன்வாயைக் கிளற உத்தேசித்துப் பேசின போதிலும் ஆனந்தன் தன் உள்ளக் கருத்தை வெளியிடவே இல்லை. ஆகையால் பேச்சைப் போலவே அவளது நடையிலும் ஒருவிதத் தயக்கமும் தடுமாற்றமும் காணப்பட்டன. அந்தத் தடுமாற்றத்தை அப்புறப் படுத்தும் எண்ணத்துடன், "நீயே அவளுக்கு ஒரு நல்ல பேச்சு சொல்லிச் சரிப்படுத்தியிருந்தால் போதும். எதற்காக இப்பொழுது ஊருக்குப்போக வேண்டும், மறுபடியும் திரும்பி வரவேண்டும்? வீண் அலைச்சல்" என்று கூறினாள்.

"இதில் என்ன வந்தது, அக்கா? அவளும் தாயைப் பார்த்து வெகு நாளாயிற்று. போய்விட்டு வருகிறாள்."

"போகிற ரீதியில் போனால் எல்லாம் நல்லதுதான். யார் வேண்டாமென்று சொல்லப் போகிறார்கள்?"

ஊருக்குப் போனதும் மோஹினி அங்கே தனக்கு எதிராகப் பேசுவாள் என்ற பயம் அக்காவுக்கு இருப்பதாக மோஹினிக்குத் தோன்றியது. அதனால் அவள், "நான் ஒன்றும் யாரைப் பற்றியும் கோள் சொல்லுவதற்காக இப்பொழுது ஊருக்குப் போக வில்லை" என்று சொன்னாள்.

மோஹினியின் இந்த வார்த்தை மூவருக்கும் துக்கத்தை உண்டு பண்ணிற்று. ஆயினும் வார்த்தையை வளர்க்க வேண்டாமென்று பேசாதிருந்தனர். அக்காவால் மாத்திரம் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. வெடுக் கென்று அவள் கூறினாள்: "வீட்டிற்குள் பேசுவதே கஷ்டமாக இருக்கிறது. ஒருவார்த்தை நான் சொல்லி வாய் மூடினேனோ இல்லையோ; அதற்கொரு குதர்க்க அர்த்தம் தான்......"

"நீ பேசாதே பேசாதே என்று ஆயிரம் தடவை முட்டிக் கொள்கிறேன்......" என்று நாராயணராவ் மனைவியைக் கடிந்து கொண்டார். ஆனந்தன் இலையிலேயே கவனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஆனந்தனும் மோஹினியும் வீட்டை விட்டுப் புறப்படும் வேளைக்கு நாராயணராவ் ஆபீஸுக்குக் கிளம்பிப் போய் விட்டார். போகும் பொழுது மோஹினி நாத்தனாரிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனந்தனுக்கு இது தப்பிதமாகப் பட்டது. எனவே அவர்கள் இருவரும் 'லோகல்' வண்டியில் வந்து உட்கார்ந்ததுமே அவன் மோஹினியைப் பார்த்து, "வரும் போது அக்காவிடம் சொல்லிக் கொண்டு வர வேண்டாமா? பேசாமல் வந்து விட்டாயே" என்று கேட்டான்.

"என்னவென்று சொல்லிக் கொள்ளுவது?"

"ஊருக்குப் புறப்பட்டுப் போகிறவர்களெல்லாம் என்ன சொல்லிக் கொண்டு போகிறார்கள் உலகத்தில்?"

"அது சொல்லிக் கொண்டு போகிறவர்களை விட யாரைப் பார்த்துச் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறதோ அவர்களைப் பொறுத்து இருக்கிறது."

"என்ன இருந்தாலும் நீ ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு வந்திருந்தால் அவளுக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருந் திருக்கும். பார்க்கவில்லையா நீ, அவள் முகம் எப்படிச் சுண்டிப் போயிருந்த தென்பதை?"

"முகம் சுண்டுவது மனசு சுண்டிப் போனதற்கு அடையாளம்; எனக்காக அல்ல. அதுவுமல்லாமல் நான் ஒழிந்தால் போதும் என்றிருப்பவர்களின் முன், 'போய் விட்டு வருகிறேன்' என்று சொன்னால் அவர்கள் எப்படி சந்தோஷம் கொள்ள முடியும்?"

ஆனந்தன் பேசவில்லை. ஒவ்வொரு முறை அவளுடன் பேசும் பொழுதும் இப்படியே தான் பதில் சொல்ல முடியாத வாறு வாயை அடைத்து விடுகிறாள் என்ற நினைவு அவனுக்கு நோவையுண்டாக்கிற்று. கூடவே ரோஷமும் பொத்துக் கொண்டு வந்தது. எப்படியாவது அவளைப் பணிய வைக்க வேண்டும்

என்னும் ஆத்திரம் ஏற்பட்டது. மோஹினியை அடக்கி வைப்பது அசாத்தியம் என்பதைக் காணக்காண அவளை எப்படியும் படிய வைத்தே தீரவேண்டும் என்னும் ஆக்கிரோஷமும் அவனுள்ளே வளர்ந்து கொண்டே வந்தது. அந்த ஆக்கிரோஷத்திற்குச் சரியாக முதல் நாள் பாஸ்கரன் கூறிய விஷயத்தைப் பற்றி அவளைக் கேட்க வேண்டு மென்னும் பரபரப்பும் பலத்தது. அந்த விஷயத்தை எப்படித் தொடங்குவது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மோஹினியே பேச்சைத் துவக்கினாள்.

"நான் இப்பொழுது ஊருக்குப் புறப்பட்டிருக்கக் கூடாது!"

"ஏன்?"

"ஏன் என்றால்? ஆயிற்று, இன்னும் பத்துப் பதினைந்து தினங்களில் பரீக்ஷை வந்து விடுகிறது. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அங்கே போகும் நான் படிப்பில் எப்படிக் கவனம் செலுத்த முடியும்?"

"படிப்புக் கென்ன? இங்கே இருந்தாலும் தான் படிப்பில் கவனம் செல்லாது!"

இதைக் கேட்டு மோஹினி ஆனந்தனைக் கூர்ந்து நோக்கினாள். அவன் பேச்சில் வேறு அர்த்தம் இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். இருந்த போதிலும் சாந்தமாகவே கேட்டாள்.

"இங்கே ஏன் படிப்பு ஓடாது?"

"அவ்வளவு தான்!"

"அப்படி என்றால்?"

ஆனந்தன் ஒரு நிமிஷம் தயங்கினான். தன் மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த விஷயத்தை எடுக்க இது தான் சமய மென்றறிந்து, "எப்படிப் படிக்க முடியும்? காலேஜ் விட்டதும் இங்கே அங்கே என்று கண்ட கண்ட இடங்களில் அலைந்து விட்டுப் பிறகு தான் வீடு திரும்புகிறாய். வீட்டுக்குப் போன பிறகு தான் இருக்கவே இருக்கிறதே......" என்றான்.

ஆனந்தனுடைய பேச்சின் மர்மம் மோஹினிக்கு விளங்கியது

"காலேஜ் விட்டதும் நான் நேரே வீட்டுக்குப் போவதில்லை யென்று யார் சொன்னார்கள்?"

"யார் சொன்னா லென்ன? மூந்தா நாள் நடந்த சங்கதியே போதும்."

"ஒரு நாள் ஓர் அரை மணி நேரம் தாமதமாகி விட்டால் தினமும் அப்படியே தான் என்று ஏன் முடிவு கட்ட வேண்டும்?"

"அப்படியானால் நேற்று ஏன் நாழிகையாயிற்று?"

இந்தக் கேள்வி தன்னெதிரே நிற்கும் என்று அவள் எண்ணியிருக்க வில்லை. மின்சாரக் கம்பியைத் தொட்டு விட்டது போன்று அவள் உடல் திடுக்கிட்டு விட்டது. சட்டென அவளால் பதில் கூற இயலவில்லை. உடனே அவள் பதில் சொல்லாததால், ஆனந்தனுக்கு மோஹினி இனி தன்னிடமிருந்து தப்ப முடியாது என்று தோன்றியது.

"நேற்று நாழிகை கழித்துப் போனேனென்று யார் சொன்னது?" என்று கேட்டாள்.

"யார் சொன்னா லென்ன? 'லேட்' டாகப் போனது வாஸ்தவமா இல்லையா?"

"அவ்வளவொன்றும் பிரமாதமாக நாழிகையாகி விடவில்லை. ஓர் அரை மணியோ முக்கால் மணியோ 'லேட்' ஆகியிருக்கும்."

"அவ்வளவு தான் ஏன் ஆக வேண்டும்?"— இந்தக் கேள்வி மோஹினியின் ஆத்ம கௌரவத்திற்குப் பங்கம் விளைவிப்ப தாயிருந்தது. இப்படிப் பட்ட கேள்விகளே தான் அவர் களிருவருக்கு மிடையே ஏற்பட்டிருக்க வேண்டிய பிணைப்பைப் பாழ் படுத்தியிருந்தன. இத்தகைய கேள்விக்குப் பதில் சொன்னா லென்ன சொல்லாவிட்டால் என்ன என்று கோபத்துடன் மோஹினி பேசாதிருந்தாள். ஆனால் ஆனந்தன் அவள் மௌனத் திற்கு விபரீதமான பொருளைக் கற்பித்துக் கொண்டான். கேள்விக்குத் தக்கவாறு ஏதோ சாக்குப் போக்குச் சொல்ல அவள் யோசித்துக் கொண்டிருப்பதாக அவன் நினைத்தான்.

"ஏன்? நேற்று ஏன் நாழிகையாயிற்று?" என்று மீண்டும் அவன் கேட்டான்.

"இந்த மாதிரி கேள்விகளை நீங்கள் கேட்கக் கூடாது......"

"ஆமாம், நீ என்ன வேண்டுமானாலும் செய்வாய்; நான் கேட்கக் கூடாது. அப்படித் தானே?"

ஆனந்தனால் கோபத்தைக் கட்டுப் படுத்த முடியாமலிருந்தது. மோஹினியின் முகமும் சிவந்து போயிருந்தது.

"என்ன வேண்டுமானாலும் என்று சொல்லும்படி என்ன செய்து விட்டேன்? இவ்வளவு சந்தேகம் உங்களுக்கு

இருக்குமானால் உங்களுடன் பேசவேண்டிய தேவை இல்லை எனக்கு.''

''சரியான பதிலைச் சொல்லி என்னுடைய சம்சயத்தைப் போக்கடிக்கலாமே!''

''உங்களுடைய ஆயிரம் சந்தேகங்களைத் தீர்ப்பதிலேயே என்னுடைய ஜன்மம் கழிந்து போகும்போலிருக்கிறது......''

''அதற்கு நானென்ன செய்யட்டும்? எல்லாம் உன்னுடைய......''

''என்ன செய்தேன் நான்?''

''அப்படியானால் நேற்று ஏன் நேரங்கழித்து வந்தாய், சொல்.''

''எவ்வளவு நேரமாய்விட்டது நேற்று? காலேஜ் விட்டதும் நேரே தாதருக்குச் சென்று கடைவீதிக்குப் போனேன். வளை வாங்க வேண்டியிருந்தது. ஸ்டேஷனுக்குத் திரும்பி வருவதற்குள் போரிவிலி 'லோகல்' போய்விட்டது. அரை மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.''

''ஸ்டேஷன் அருகில் யாரைச் சந்தித்தாய்?''

''யாரைச் சந்தித்தேன்? எதிர்ப்புறம் வசந்தராவ் வந்துகொண்டிருந்தார்.''

''எந்த வசந்தராவ்?''

''நம் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருக்கிறாரே, அவர்.''

''அவனும் நீயும் சேர்ந்தே சென்றீர்களா?''

''இல்லையே! ஓர் இரண்டு நிமிஷம் நின்று பேசியிருப்போம். அவ்வளவுதான். அவர் எங்கோ தாதரில் போகவேண்டியிருந்ததாம்.''

''அப்படியானால் நேற்று நீ ஸ்டேஷனில் பேசியது வசந்தராவுடன்தானா?''

''ஆமாம்!''

''இதை முதலிலேயே சொல்லக் கூடாதா, மகாராஜி?''

''இதை என்ன பெரிய விஷயமென்று உங்களிடம் சொல்ல வேண்டும்?''

''என் எண்ணம் தப்பாகப் போயிற்று.''

''உங்கள் எண்ணத்தில் இடி விழ!''

மோஹினி கூறிய பதிலிலிருந்து ஆனந்தனுக்கு எவ்வளவு சமாதானம் உண்டாயிற்றோ அவ்வளவுக்கு மோஹினியின் மனம் அசமாதானம் அடைந்தது. 'இவரைப் பிடித்துக் கொண்டிருக்கும் சம்சயப் பேயை அடித்து விரட்டுவது இயலாத காரியம்' என நினைத்து அவள் மனம் நிராசையடைந்தது. ஒவ்வொரு கணமும் தன்னுடைய நடத்தையைக் குறித்து எல்லோரும் சேர்ந்து விபரீதமான வியாக்கியானங்கள் செய்வதிலேயே தொடங்கினால், அவர்களுடைய தப்பெண்ணங்களைக் களைவதிலேயே தனது மனச்சாந்தியெல்லாம் பாழாகிப் போகுமாதலால் தான் சுகமாக வாழ அவகாசம் ஏது என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள். ஆனந்தனுக்கு மாத்திரம் முந்திய நாள் இரவெல்லாம் அவனைப் பீடித்த வேதனை அரைக் கணத்தில் மாயமாய் மறைந்தது. வசந்தனைப் பற்றி அவன் மனத்தில் தப்பபிப்பிராயம் ஏற்படவே இடமிருக்கவில்லை. போரிவிலியில் அவர்களது வீட்டுக்கு அக்கம் பக்கத்திலெல்லாம் வசந்தனைப் போன்ற கண்ணியமுள்ளவன் இல்லை என்ற அபிப்பிராயம் பரவி இருந்தது. அதே அபிப்பிராயம் ஆனந்தனின் மனத்திலும் நிறைந்திருந்தது.

மோஹினி மீண்டும் அவனைக் கேட்டாள்: "உங்களுக்கு யார் இதையெல்லாம் சொன்னது?"

"பாஸ்கரன்."

"அவருக்கு வசந்தராவைத் தெரியாதா என்ன?"

"தெரியாமல் என்ன?"

"அப்படியானால் நான் பேசிக்கொண்டிருந்தது வசந்தராவுடன்தான் என்று ஏன் அவர் சொல்லவில்லை?"

இது ஆனந்தனுக்கும் வியப்பளித்தது. வசந்தனைப் பாஸ்கரன் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ள முடியும். அப்படியிருக்க பாஸ்கரன் ஏன் அவன் பெயரைச் சொல்லவில்லை என்பது அவனுக்கு விளங்காததாக இருந்தது.

"என்னவோ, கவனித்துப் பார்க்காமலிருந்திருக்கலாம்!"

மோஹினிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"ஆமாம், பார்க்காமலிருந்திருக்கலாம்! உங்களுக்கு இப்பொழுதாவது தெரியவேண்டும், எப்படி அணுவும் மலையாகப் பரிணமிக்கக் கூடும் என்று. இப்படியும் ஒருத்தியை அலைக்கழிக்கக் கூடாது......"

மோஹினியின் மனம் மிகவும் நொந்து போயிருந்தது. வசந்த னிடமிருந்து அவள் கற்றுக்கொண்ட பொறுமையும் சிறிது சிறிதாகக் கரைந்து வந்தது.

நாதர் ஸ்டேஷனில் பாஸ்கரன் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் மோஹினிக்கு ஆத் திரம் பொங்கிற்று. தனக்கு வெகு அருகிலேயே அவன் சுற்றிச் சுற்றி வருவதைக் கண்டு அவள் நெருப்பாக மாறினாள். காரண மில்லாமல் தன்னுடன் பேச முயலும் அவனைத் திரஸ்காரத் துடன் ஒதுக்கினாள். மௌனம் சாதித்தாள்.

பாஸ்கரன் ஆனந்தனைக் கேட்டான்: "நீ சொன்னது போலவே ஒரே டிக்கட்தான் வாங்கியிருக்கிறேன் ஆனந்தா. நீ போவதைப்பற்றி என்ன முடிவு செய்தாய்?"

ஆனந்தன் மோஹினியின் முகத்தைப் பார்த்தான், "நான் உன்னுடன் வரட்டுமா?" என்று கேட்பது போல.

மோஹினி முகத்தைச் சுளுக்கிக்கொண்டே, "என்னுடன் யாரும் வரவேண்டிய தேவையில்லை" என்றாள். அப்படிச் சொல்லிவிட்டுப் பேசாதிருந்தாள். 'யார் வந்தா லென்ன, வராவிட்டாலென்ன' என்று நினைப்பதுபோலிருந்தது அவள் தோற்றம். அவளது குரலில் காணப்பட்ட கூர்மை மாத்திரம் பாஸ்கரன் வாயை அடைத்துவிட்டது.

சில நிமிஷங்கள் கழித்து ஆனந்தன் கேட்டான்.

"அடுத்த வாரம் நான் ஒரு முறை பூனாவுக்கு வரவேண்டு மென்றிருக்கிறேன்."

"ஏன்?"

"சும்மாதான். வரட்டுமா?"

"அங்கே வருவதால் என்ன பிரயோசனம்? அங்கே உங்க ளுக்கு மௌன விரதம்தான். யாரும் உங்களுடன் பேசுவதாக இல்லை. அதுவுமன்றி உங்கள் படிப்பும் கெடும்."

மோஹினி கொஞ்சமும் தாட்சிண்ணியமின்றிப் பேசினாள்.

சரியான நேரத்திற்கு வண்டி வந்தது. அவ்வளவாகக் கும்பல் இல்லாமலிருந்ததால் ஆனந்தன் நல்ல இடம் ஒன்றைப் பிடித்து மோஹினியை உட்கார வைத்தான். மோஹினிக்கு ஒன்

றிலும் உத்ஸாகம் இருந்ததாகத் தெரியவில்லை. அவள் மனம் சொல்லிற்று: "இப்பொழுது நீ இங்கிருந்து புறப்பட்டது உன்னுடைய தோல்வி. இவ்வளவு சுலபமாக நீ தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கக் கூடாது" என்று.

"எப்பொழுது திரும்பி வருகிறாய்?" ஆனந்தன் கேட்டான்.

"பரீக்ஷைக்கு முதல் நாள்."

"போனதும் கடிதம் எழுதுகிறாயா?"

"என்னவென்று?"

அவள் கேள்வி விசித்திரமாகப்பட்டது ஆனந்தனுக்கு. அந்தப் பேச்சை விட்டுவிட்டு, "நான் எழுதுவதற்குப் பதில் எழுதுகிறாயா?" என்று கேட்டான்.

"ஊம்" என்றாள்.

வண்டி புறப்படவிருந்தது. ஆனந்தன் என்ன என்னவோ சொல்ல வேண்டுமென்று நினைத்தான். ஆனால் அவன் வாயினின்று வார்த்தைகள் வெளிவர மறுத்து விட்டன. அவனைப் பார்த்து மோஹினிக்கு ஒரு கணம் பரிதாபம் தோன்றியது. ஆனால் மறு கணமே, "இப்படிப்பட்டவர்களுக்கு இது தான் பிரதி பலன். இவ்வளவு கூட மனோதிடம் இல்லாதவர்களுக்கு வாழ்க்கையில் இனி என்னதான் கிடைக்கும்?" என்று நினைத்துக் கொண்டாள்.

வண்டி புறப்படும் வரையில் ஆனந்தனும் பாஸ்கரனும் நின்று கொண்டிருந்தனர். விசேஷமான பேச்சுவார்த்தை ஒன்றும் நடைபெறவில்லை. பாஸ்கரன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்த மோஹினி அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. வண்டி நகர ஆரம்பித்ததும் ஜன்னலின் பேரில் இருந்த அவளது முழங்கையை ஆனந்தன் மெதுவாக அழுத்திப் பிடித்துக்கொண்டு, "போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுதுகிறாயா?" என்று கேட்டான். மோஹினி பதிலே பேசவில்லை.

தாயைக் காணவேண்டுமென்னும் ஆவல் கடந்த நான்கைந்து மாதங்களில் எவ்வளவோ முறை அவளுக்குத் தோன்றியிருந்த போதிலும் பூனாவுக்குச் செல்லவேண்டுமென்றால் அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அங்கேயே பிறந்து, விவாகம் ஆகும் வரையில் அங்கேயே வளர்ந்திருந்த போதிலும் அங்கு திரும்பிச் செல்ல

வேண்டுமென்றால் மாத்திரம் ஏனே அவள் மனம் பின் சரிந்தது. பார்க்கப் போனால் சென்ற வருஷம் ஆனந்தனுடன் மிகவும் அதிகமான மனஸ்தாபம் ஏற்பட்ட ஓரிரு சந்தர்ப்பங்களில் அவள் பூனாவுக்குச் செல்லவேண்டுமென்றுதான் இருந்தாள். ஆனால் பூனா என்ற மாத்திரத்தில் அவளுக்குத் தன்னுடைய, மற்றும் தன் தாயினுடைய கடந்தகால வாழ்க்கையின் நினைவுகள் தோன்றும். சென்றுபோன அந்த நாட்களில் சுகத்தைவிடத் துன்பமே அதிகமாக இருந்ததாலோ, அன்றி அவ்விடத்திய சில பழைய நினைவுகள் அவள் மனத்தை வாட்டிக் கொண்டிருந்ததனாலோ, மோஹினிக்குத் தன் தாயிடம் செல்ல மனம் பின்வாங்கிக் கொண்டிருந்தது. பூனாவைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் தன் தாயின் துரதிருஷ்டம், வாழ்க்கையில் அவள் அநுபவித்த துயர் இவையெல்லாம் ஒரு பெரிய சுமையாக அவள் மனத்தை அழுத்தி அவளைச் சங்கடத்திற்கு ஆளாக்கிக்கொண்டிருந்தன.

தாதரிலிருந்து புறப்பட்ட புகைவண்டி மோஹினியை அவள் விரும்பாத அந்தக் கடந்த காலத்திற்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தது. அவள் மனம் அப்பொழுதே இரண்டு வருஷங்கள் பின்னேக்கிச் சென்று விட்டிருந்தது. வெளியே வெயில் தகித்துக் கொண்டிருந்தது. சகாயமில்லாத இருதயத்தின் கண்ணீர் போன்று அவள் அங்கங்களில் வியர்வைத் துளிகள் அரும்பிக் கொண்டிருந்தன.

அப்பொழுது மோஹினிக்கு விவாக வயது. தந்தையின் முகத்தைக் கண்டறியாத அவள், அண்ணனின் ஆசிரயத்தில் இருந்த தன் தாயின் அபிமானத்தில் வளர்ந்து பெரியவளாகியிருந்தாள். தாய், தாயின் தகப்பனர் இருவருக்கும் அவள் விவாகத்தைச் சீக்கிரம் முடித்து விடவேண்டும் என்றிருந்தது. ஆனால் அவர்களிருவருடைய காரணங்களும் வெவ்வேறாக இருந்தன. கிழவர் மிகவும் லோபி. தன்னுடைய நிலம் நீச்சிலிருந்து வரும் வருமானத்தையெல்லாம் முடிச்சுப் போட்டு வைப்பதே அவரது வாழ்க்கையின் லட்சியமாக இருந்தது. மகள், பேத்தி இவர்களைத் தவிர அவருக்கு வேறு யாரும் இல்லாமலிருந்த போதிலும், இருக்கிற சொத்தை அவர்களுடன் சேர்ந்து ஆண்டு அநுபவிக்காமல் அவைகளையெல்லாம் யாருக்காகவோ

சேர்த்துவைத்துக் காவல் காத்துக்கொண்டிருந்தார். அவரது திருஷ்டியில் மோஹினியும் அவருக்கு ஒரு ஆஸ்தியாகவே தோன்றினாள். மோஹினியை யாராவது ஒரு சீமானுக்கு மணம் செய்வித்தால் தமக்கும் அநுகூலமாகும் என்னும் லோபத்தனம் அவரைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது. அந்த எண்ணத்துடன் அவர்கள் வீட்டுக்கு அருகிலேயே வசித்து வந்த நடுவயது ஆன தினகரராவுடன் பேச்சுவார்த்தைகளும் நடத்தியிருந்தார். தினகரராவுக்கு அந்த ஊரில் ஒரு பெரிய ஜவுளிக்கடை சொந்தமாக இருந்தது. வேண்டிய செளகரியங்கள் அவருக்கு இருந்தன. ஆனால் அவரது முதல் மனைவிக்குப் பிறந்த குழந்தைகள் ஐந்துபேர். "குழந்தைகள் இருந்தால் என்ன? அவருக்கென்ன குறைச்சல்? வேண்டிய வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளலாம். தினகரராவைப்போன்ற புருஷன் கிடைக்கவேண்டுமானால் மோஹினி புண்ணியம் செய்திருக்க வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டதும் அல்லாமல் தம் மகளுக்கும் தம் அபிப்பிராயத்தைக் கூறி அவளையும் தம் எண்ணத்திற்குத் திருப்ப முயற்சி செய்து கொண்டிருந்தார் கிழவர்.

ஆனால் தினகரராவைப் போன்ற வயது முதிர்ந்த வரனுக்கு மோஹினியைக் கொடுக்க அவள் தாய்க்குச் சிறிதும் மனம் ஒப்பவில்லை. சிறு வயதிலேயே கணவனை இழந்து விதவையாகிவிட்ட அவளுக்கு வாலிப இதயத்தின் நிராசையில் ஏற்படும் துன்பம் நன்றாகத் தெரிந்திருந்தது. உடலின் வேட்கை எவ்வளவு கொடுமையானது என்பதையும், வாழ்க்கையின் சகல சுக செளகரியங்களும் அந்த வேட்கையைத் தணிக்கச் சக்தியற்றவை என்பதையும் அறிந்திருந்த மோஹினியின் தாய் தன் மகளை அத்தகைய நிலைமைக்குப் பலி கொடுக்கச் சித்தமாக இருக்கவில்லை. தினகரராவிடமிருந்து மோஹினியைத் தப்புவிக்க வேண்டுமென்பதற்காகவே அவளை வேறு இடத்தில் பார்த்துக் கொடுத்து விட அவள் துடித்துக் கொண்டிருந்தாள். அந்த விஷயமாகக் கிழவனாருக்கும் மோஹினியின் தாய்க்கும் பலமுறை சச்சரவு ஏற்பட்டிருந்தது. கிழவனார் தமது நம்பிக்கை யூட்டும் வார்த்தைகளினால் தினகரராவின் ஆசையை வளர்த்திருந்தார். மோஹினியின் சுந்தர வடிவத்தைக் கண்ணுற்ற தினகரராவ் அவளுக்காக எதையும் கொடுக்கச் சித்தமாக இருந்தார். முதலில் மோஹினிக்கு இந்த

விஷயம் தெரியாது. எப்பொழுதும் போல் அவள் பள்ளிக்குச் சென்று கொண்டும் குதித்து விளையாடிக் கொண்டும் இருந்தாள். பத்துப் பேரின் கவனத்தைத் தன்பால் இழுக்கும் சக்தி தன்னிடம் இருப்பதை உணர்ந்த மோஹினிக்கு, தான் குழந்தையல்ல, பெரியவள் என்னும் பாவமும் வளர்ந்து வந்த போதிலும், தன்னையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்த பத்துப் பதினைந்து வாலிபர்களில் ஒருவரிடமாவது அவள் லட்சியம் சென்றிருக்க வில்லை. அவ்வப்பொழுது ஏதோ சரச மதுரபாவம் அவள் இதயத்திலே கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது. எவ்வளவோ முறை அவள் தினகரராவைப் பார்த்திருந்த போதிலும் அவளது மதுரபாவக் கனவுகளில் அவருக்கு இடமிருக்கவில்லை. தினகர ராவ் அவளது கற்பனைத் திரைக்குப் புறம்பானவராக இருந்தா ரென்றாலும் சரியே.

ரெயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இறந்தகாலச் சுழலில் சிக்கிய அவள் மனம் அங்கிருந்து நகர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. உள்ளம் தடாரென்று மாறியது. தினகரராவ் அவள் மனத்தைத் தம்பால் திருப்புவதற்காகச் செய்த பிரயத்தனங் களை நினைத்துக் கொண்டபொழுது அவள் மனம் துணுக்குற்றது.

ஒருநாள் அவள் பாட்டனர், "உனக்காக இரண்டு புடைவைகள் பார்த்து வைத்து விட்டு வந்திருக்கிறேன், மோஹினி. இருந்தாலும் நீயே போய்ப் பார்த்துவிட்டு உனக்குப் பிடித்திருந்தால் எடுத்துக் கொண்டு வந்து விடு" என்றார். புதுத்துணி என்றால் பத்து மைல் ஓடி வரும் மோஹினி காற்றைப்போலப் பறந்தோடினள், தினகர ராவின் கடையை நோக்கி. மோஹினி தானே கடைக்கு வந்ததைக் கண்ட தினகரராவுக்குச் சுவர்க்கமே இறங்கி வந்தாற்போன்று ஆயிற்று. கடையிலிருந்த பட்டாடைகளை எல்லாம் அவள் முன் எடுத்துப் பரப்பி, "எது வேண்டுமோ பார்த்துக்கொள்" என்றார்.

"நான் வேண்டியதை எடுத்துக் கொண்டால் தாத்தா ஒத்துக் கொள்ள வேண்டுமே" என்றாள் மோஹினி.

"தாத்தாவுக்கும் இதற்கும் சம்பந்தம் என்ன? புடைவை உடுத் திக் கொள்ளப் போவது நீயா, தாத்தாவா?" என்று கூறிச் சிரித்து மோஹினியையும் சிரிக்கவைத்தார்.

"உடுத்திக் கொள்ளுவது நானானாலும், பணம் கொடுக்கவேண் டியவர் அவர்!"

"அவ்வளவுதானே? அவரிடமிருந்து பணம் வாங்கிக்கொள்ள எனக்குத் தெரியும். உனக்கு வேண்டிய எந்தப் புடைவையையும் நீ எடுத்துக்கொள்ளலாம்" என்று கூறி நயமான இரண்டு பட்டுப் புடைவைகளை எடுத்து அவள் முன்னால் வைத்தார். அந்தப் புடைவைகளை இவ்வளவு சகஜமாக, வலியவந்து ஏன் கொடுக்கிறார் அவர் என்பது மோஹினிக்கு அப்பொழுது புரியவில்லை. ஆனால் அவைகளை எடுத்துக்கொண்டு அவள் வீட்டுக்கு வந்தபொழுது மோஹினியின் தாய் அதைக்கண்டு மிகவும் விசனப்பட்டாள்.

"இவ்வளவு விலையுள்ள புடைவைகளை ஏன் கொண்டுவந்தாய் மோஹினி?"

"நான் வேண்டாமென்று சொன்னேன். 'தாத்தா சொல்லி யிருக்கிறார், எடுத்துக்கொண்டு போ' என்றார்"

"புத்தி மழுங்கித்தான் போயிருக்கிறது உங்க தாத்தாவுக்கு" என்று வெடுக்கென்று மொழிந்தாள் மோஹினியின் தாய். தன் தந்தையின் இங்கிதத்தைப் பூர்ணமாக அறிந்திருந்த அவள், "மோஹினி, அந்த இரண்டு புடைவைகளையும் இப்பொழுதே திருப்பிக் கொடுத்துவிட்டு வா" என்றாள்.

"ஏன்?"

அந்தப் புதுப்புடைவைகளின் மீது அவளுக்குள்ள மோகம், அவைகளை அப்பொழுதே உடுத்திக் கொள்ளவேண்டும் என்னும் உற்சாகம் இவைகளை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. கைக் குக் கிட்டியதை வாய்க்குக் கிட்டாமல் பறித்துவிட நினைக்கும் அவள் தாயின் மனத்தை அவளால் அப்பொழுது அறிய முடியவில்லை.

"ஏனம்மா? அவரே வலியக் கொடுத்து, தாத்தாவையும் சம்மதிக்க வைப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஒரு முறையாவது நான் நல்ல புடைவைகளையே உடுத்தக்கூடாதா?" என்று அவள் கேட்டதற்கு அவள் தாய் கண்ணீர் விட்டுக்கொண்டே, "உனக்குத் தெரியாது மோஹினி. நான் வேண்டாமென்று சொன்னால் விடு" என்றாள்.

உண்மையை மகளுக்கு எடுத்துக்கூறி ஏன் அவள் மன நிம்மதியைக் குலைக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் அவள் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே கிழவனார் தாயும் மகளும் பேசுவதைக் கேட்டுக்கொண்டே மெத்தைப்படிகளினின் றும் இறங்கி வந்தார்.

"ஏன் சும்மா வேண்டாம் வேண்டாம் என்று சொல்லுகிருய்? நான்தான் சொல்லி வைத்திருந்தேன், பண்டிகைக்குக் குழந்தைக்கு இரண்டு நல்ல புடைவைகள் இருக்கட்டுமே என்று" எனக் கூறினர் கிழவனர்.

தாய் பதிலொன்றும் கூறவில்லே. ஆனல் மனத்திற்குள்ளேயே கலவரப்பட்டுச் சொல்லிக் கொண்டாள்: "இந்த உதார குணத்தின் அர்த்தம் எனக்குத் தெரியும். இந்தப் புடைவையின் இழையினலேயே என் குழந்தையின் கழுத்தை அறுக்காதீர்கள்" என்று.

நான்கைந்து நாட்கள் கழித்து நடந்த மற்ருெரு சம்பவம் தினகரராவின் உதார குணத்தின் அர்த்தத்தை மோஹினிக்குப் புலப்படுத்தியது. அன்று சாயங்காலம் தினகரராவ் வீட்டில் சத்தியநாராயண பூஜை நடந்தது. மோஹினிக்கும் மற்றவர்களுக்கும் விருந்துச் சாப்பாட்டுக்கு அழைப்பு வந்திருந்தது. பூஜைக்கு வந்த பெண்களுக்கு மஞ்சள் குங்குமம் வழங்கும் வேலே மோஹினிக்கு அளிக்கப்பட்டது. கிளிப்பச்சைக் கலர்புடைவையை உடுத்துக் கொண்டிருந்த மோஹினியைக் கண்டு தினகராவின் உள்ளம் சலனமுற்றது. மோஹினியின் மோகம் அவர் உடல் முழுவதிலும் வியாபித்து நின்றது. மோஹினியின் தாய் சமையலறையில் இருந்தாள். வருவோர் போவோரின் கூட்டமும் குறைந்திருந்தது. மச்சுப்படிகளின் மீது நின்று கொண்டு, "மோஹினி!" என்று கூப்பிட்டார் தினகரராவ்.

"என்ன ?" என்ருள் மோஹினி.

"மேலே தாத்தா கூப்பிடுகிருற் போலிருக்கிறது" என்ருர்.

"ஏனம் ?"

"எனக்கென்ன தெரியும்? வந்து கேட்டுக்கொண்டு போகக் கூடாதா?" என்று கூறிவிட்டு தினகரராவ் மெத்தை ஏறிச் சென்று விட்டார். முன் பக்கத்து ஹாலேத் தாண்டித் தம் அறைக்குப் பக்கத்தில் சென்று நின்று. கொண்டார். மோஹினி மாடி ஏறி வந்து, "எங்கே இருக்கிருர் தாத்தா ?" என்று கேட்டாள்.

"ஹாஹா !......மோஹினி !......இதோ பார்......இங்கே" என்ருர் தினகரராவ்.

மோஹினிக்கு அவர் என்ன சொல்லுகிருரென்றே புரியவில்லே. நான்கு அடி முன்னுக்கு நகர்ந்தாள். அறையின் நிலே

வாசற்படியில் கையை வைத்துக் கழுத்தை நீட்டி உள்ளே எட்டிப் பார்த்து, "எங்கிருக்கிறூர்?" என்று மீண்டும் கேட்டாள்.

"பைத்தியம் நீ...மோஹினி. சும்மாவாவது சொன்னேன் அப்படி" என்று கூறிச் சிரித்தார், தினகரராவ்.

"சும்மாவா?"

"சும்மா அல்ல. நீ இங்கே வரவேண்டு மென்பதற்காகச் சொன்னேன். வா மோஹினி. வா இப்படி" என்று மோஹினி நின்றிருந்த இடத்தை நோக்கிச் சென்றூர்.

மோஹினி திகிலடைந்தாள். 'சடக்' கென்று திரும்பிச்செல்ல முயன்றுள். ஆனால் கால்கள் நின்ற இடம் விட்டு நகர மறுத்தன. தினகரராவ் அவளுக்கு மிக நெருங்கி வந்து விட்டார்.

"வா மோஹினி, இப்படி வா......ஏன், பயமா? வா இப்..."

"எதற்காக?......" என்று குழறினுள் மோஹினி.

"இப்படி வா...உனக்கு ஒரு பேச்சு சொல்ல வேண்டும்......"

"என்ன அது? அங்கிருந்தே சொல்லுங்கள்..."

"இந்தப் புடைவை நன்ருக இல்லே? .உனக்குப் பிடித்ததா?"

"ஊம்."

"எவ்வளவு அழகாக இருக்கிருய் நீ, மோஹினி!" என்று கூறிக்கொண்டே மோஹினியின் கையைப் பிடித்துத் தமதறைக் குள் இழுத்துச் சென்றூர். 'ஹோ' என்று கத்தவேண்டுமென நினைத்த மோஹினியின் வாயைத் தமது கையால் அழுத்தி அவளைக் கத்த விடாமல் அடக்கினுர் தினகரராவ். மோஹினியின் உடல் எல்லாம் வியர்த்து விட்டது. தினகரராவுக்கோ வெறி தலைக்கேறியது.

"விடுங்கள் என்னை- நான் போகவேண்டும்......விடுங் கள்......" என்று கூறி தினகரராவின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டாள் மோஹினி.

அவர் அவளைக் கெஞ்சிக் கொண்டிருந்தார்: "பைத்தியம் போல் நடந்து கொள்ளாதே, மோஹினி. உனக்கு வேண்டியதை எல்லாம் கொடுக்கிறேன். உனக்காக நான் என் சர்வத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்..." என்று கூறி அவளை இன் னும் தம் அருகே இழுத்துக்கொள்ள முற்பட்டார். தினகரராவிட மிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது இயலாததாகத் தோன்றியது மோஹினிக்கு. 'ஐயோ' என்று கத்த வேண்டுமென நினைத்தாள்,

ARCHIVES LIBRARY

அதற்குள்ளாகச் சமையலறையிலிருந்து, "மோஹினி, மோஹினி" என்று தாயின் அழைப்பு வந்தது. தினகரராவ் பயந்துபோய் அவள் கையை விட்டு விட்டார். மின்னலைப்போல் மோஹினி கீழே ஓடிச்சென்றாள். அவள் தாய் கூடத்திற்கு வருவதற்குள்ளாக மோஹினி வெளிக்கதவண்டை வந்து நின்று விட்டாள். அவளது முகம் வாடியிருந்தது.

வீட்டை அடைந்ததுமே மோஹினி தன் முகத்தைத் தாயின் மடியில் புதைத்துக்கொண்டு தன் துக்கத்தை எல்லாம் வெளிக் கொட்டினாள். நடந்த சங்கதியைக் கேட்ட அவள் தாய்க்குத் தனது வாழ்க்கையின் துன்பங்களெல்லாம் மீண்டும் அவளை ஆக்கிரமித்துக் கொண்டதுபோல் தோன்றியது. பெண்ணாகப் பிறந்து சகாயமற்ற நிலையிலே வாழ்வதிலே உள்ள கஷ்டங்களெல்லாம் அவள் கண்ணெதிரே நின்றன. அந்தக் கஷ்டங்களெல்லாம் தன் மகளாகிய மோஹினிக்கும் வந்து வாய்த்த நிலைமையை எண்ணி எண்ணி உள்ளம் உருகினாள். அந்தத் துக்கத்தின் வேகமே அவளை, 'எந்த ஏழைக்காானாலும் பரவாயில்லை; சீக்கிரமே ஒரு வாலிபனுக்கு மோஹினியைக் கட்டிக்கொடுத்துவிட வேண்டும்' என்ற தீர்மானத்திற்கு உந்தித் தள்ளியது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகும் தினகரராவ் பேசாமலிருக்கவில்லை. ஆயிரம் முறைகளைக் கையாண்டு அவளைக் கைப்பற்ற முயன்றார். சாம தான பேத உபாயங்கள் யாவும் நிஷ்பலனாகப் போகவே தினகரராவ் பழி வாங்கும் தீர்மானம் கொண்டார். மோஹினியின் தாய் நடத்தை கெட்டவள் என்றும், மோஹினியை ஒரு பணக்காரன் ஆசிரயத்தில் வைத்திருக்கிறாள் என்றும் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டார். அவர் மூட்டிய தீ ஓரிரு தினங்களில் நன்றாகப் பரவி அக்கம் பக்கத்து ஜனங்களெல்லாம் இதைக் குறித்துப் பேச ஆரம்பித்து விட்டனர். இதற்காகவே அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ! இழை கிடைத்தால் போதும், கதை கட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்.

மோஹினிக்கும் அவள் தாய்க்கும், 'வேண்டாம் இந்த வாழ்க்கை, என்னும் அளவுக்கு விரக்தியும் வெறுப்பும் ஏற்பட ஆரம்பித்துவிட்டன. கிழவனாரும் தினகரராவின் இழிந்த தன்மையைக் கண்டு அலுப்படைந்து கூடிய சீக்கிரம் மோஹினியை

033, 3N2P3

யாருக்காவது மணம் செய்து கொடுத்தாலொழிய கதிமோட்சம் இல்லை என்னும் முடிவுக்கு வந்துவிட்டார். ஆனால் தந்தைக்கும் மகளுக்கு மிடையே அந்த விஷயத்தில் ஏகப்பட்ட மனஸ்தாபம்.

"இவ்வளவு தூரம் ஆனதற்கெல்லாம் நீயேதான் காரணம்......" என்று மகளைத் தூற்றினார் கிழவர்.

"அப்படியானால் பேசாமல் பிடிக்காமல் அந்தக் கிராதகனுக்கு பெண்ணைக் கொடுத்திருக்க வேண்டுமாக்கும்?"

"என்ன கெட்டுப் போயிருக்கும்? சுகமாக இருந்திருக்கலாம். அவனுக்குக் கொடுக்காததனால் வந்த வினைதான் இவ்வளவும்!"

"இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்காவது இந்த அவச்சொல் மறைந்து விடலாம்; ஆனால் அவனுடைய யோக்கியதை இப்பொழுது அம்பலமாகி விட்டது. இப்படிப்பட்டவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதைவிடக் கிணற்றில் பிடித்துத் தள்ளுவது மேல்...கிராதகன்!..."

வீட்டிலே நடந்துகொண்டிருந்த இந்த வாதப் பிரதிவாதங்களின் பயனாக மோஹினி தன் விவாகத்தைப்பற்றி நினைத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறைந்தது பி. ஏ. பாஸ் செய்யும் வரையிலாவது கல்யாணம் என்ற பேச்சே கூடாது என்று தீர்மானித்திருந்த மோஹினிக்கும் அவள் தாய்க்கும் பலமுறை வாக்குவாதம் நடந்தது. தினகரராவின் நீசச் செய்கையால் மோஹினியின் மனத்தில் ஆண் வர்க்கத்தின் பேரிலேயே சில அசைக்க முடியாத அபிப்பிராயங்கள் ஊன்றிவிட்டன. கேவலம் காம இச்சையை உத்தேசித்து ஒருவன் தன்னை மணக்க முன்வருவதானால் அவன் தன் புருஷனாக யோக்கியதையற்றவன் என்று அவள் முடிவு செய்திருந்தாள். ஆனால் தனக்குப் புருஷனாக வரப்போகிறவன் எப்பேர்ப்பட்டவனாக இருப்பான், அவனது எண்ணங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பவைகளை யெல்லாம் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? 'ஒருவருடன் ஒருவர் பேசிப் பழகி ஒருவர் மனத்தை மற்றவர் அறிந்து கொண்டால் அல்லாது விவாகம் என்னும் வாழ்க்கை முழுதும் பரவிக் கிடக்கும் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது' என்ற தீர்மானத்தைச் செய்துகொண்டிருந்தாலும், தினம் தினம் நச்சரித்து வரும் தாயின் தொந்தரவைத் தாங்காது

சம்பிரதாயமான விவாகத்திற்கு அவள் இசைய வேண்டிய தாயிற்று. 'கல்யாணம் என்று ஒன்று நடந்துவிட்டால் பின்னல் எல்லாம் தானே சரியாகப் போய்விடும்' என்று அவள் தாய் சொல்லிவந்தாள். ஆனல் மோஹினிக்கு மாத்திரம் சந்தேகம் தான். முக்கியமாகத் தினகரராவின் தொந்தரவிலிருந்து தப்ப வேண்டியிருந்தது. கல்யாணம் செய்துகொள்ள ஒத்துக்கொண்டால் மேலே வேண்டியமட்டும் படிப்பதற்கும் அநுகூலம் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையால் மோஹினி தன் தாயின் யோசனைக்கு இணங்க வேண்டியதாயிற்று.

தன்னைப் பற்றியும் தன் தாயைப் பற்றியும் அந்த நாட்களில் தினகரராவ் செய்த இந்தத் துஷ்பிரசாரத்தை யெல்லாம் நினைத்துக்கொண்ட மோஹினி நெருப்பாக மாறினள். அன்று ஆரம்பித்த மனஸ்தாபம் இன்றும் முடிந்த பாடில்லையே என்று வருந்தினள். ஆனல் மறுகணமே தனக்குள் சொல்லிக் கொண்டாள்: 'வருந்தி, பேசாது உட்கார்ந்துவிட்டால் இந்த உலகம் சிறிதும் கருணையின்றி என்னை மிதித்துப் பாதாளத்தில் தள்ளி விடும்' என்று. அவனுடைய துஷ்பிரசாரத்தைக் கேட்டவர்கள், தன்னெதிரே கண்சிமிட்டிக் கச முச வென்று பேசிக்கொண்டவர்கள், இவர்களெதிரே தான் ஆத்ம விஸ்வாசத்தால் ஏற்பட்ட பிடிவாதத்தோடு நிர்த்தாட்சிண்யமாக நடந்துகொண்டதை நினைத்தபொழுது மோஹினிக்குத் தோன்றியது: 'சமூகம் என்னை நிஷ்காரணமாக அந்த மாதிரி சந்தேகித்தபொழுது நான் ஏன் அந்தக் 'கச முச வார்த்தைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும்? எனக்குச் சரியென்று சந்தேகமில்லாமல் தோன்றிய வழியிலேயே நடந்துகொண்டது நல்லதே ஆயிற்று' என்று. அந்த நாட்களில் அவள் தாய் பட்ட துக்கம், தான் மனத்திற்குள்ளேயே அநுபவித்த அவமான உணர்ச்சி இவையெல்லாம் அவளது ஆத்மாபிமானத்தைக் கிளறிவிட்டிருந்தன. பம்பாய்க்கு வந்த பிறகும் அதே சரித்திரம் மற்றொரு ரீதியில் புனர் ஜன்மம் எடுத்தபொழுதோ அறிவற்ற இந்த வம்புப் பேச்சுகளுக்கு இடம் கொடுப்பவர்களை எதிர்த்து நின்ருலொழிய வேறு வழியில்லை என்ற திடமான முடிவுக்கு வந்தாள். மேலும் தன்னுடைய அந்த முடிவைக் கிரியாம்சத்திலும் சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் காட்டிக்கொண்டிருந்

தாள். இவைகளையெல்லாம் நினைத்துக்கொண்ட பொழுது மோஹினிக்கு ஆத்ம கௌரவம் பொங்கி வந்தது,, "என்ன இடுக்கண்கள் வந்தாலும் சரி, இப்படிப்பட்ட குருட்டுச் செய்கைகளுக்கு நான் பலியாகப் போவதில்லை" என்று சொல்லிக் கொண்டாள். இதற்குச் சில தினங்களுக்குப் பிறகுதான் மோஹினிக்கும் ஆனந்தனுக்கும் விவாகம் நிச்சயமாயிற்று. பெண் பார்க்க வந்தபொழுதே ஆனந்தன் தன்னுடைய பூர்ண சம்மதத்தைத் தெரிவித்துவிட்டான். ஆனால் தாயாதியைப் போல் மூளைத்த தினகரராவ் பெண் பார்க்க வந்தவர்களின் காதுகளில் படும்படியாகத் தம் கதையைப் பரப்பி விட்டு விட்டார். பாற்கிண்ணத்தில் உப்பை அள்ளிக் கொட்டினாற் போன்றாகி விட்டது நிலைமை. ஆனால் மோஹினியின்பால் மனத்தைப் பறிகொடுத்து விட்ட ஆனந்தன் யார் பேச்சையும் காதில் போட்டுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. "பார் ஆனந்தா, நன்றாக யோசித்துப் பார். நாலு பேர் என்ன என்னவோ சொல்லிக்கொள்ளுகிறார்கள்" என்று நாராயணராவ் ஆனந்தனை அப்பொழுதே எச்சரித்தார். ஆனால் இவைகளினாலெல்லாம் ஏதும் தடை ஏற்படாமல் மறுமாதமே மோஹினி ஆனந்தனின் மனைவியாகிப் பம்பாய் வந்து அடைந்தாள்.

ரெயில் மேட்டைத் தாண்டி முன்னே சென்று கொண்டிருந்தது. காற்று பம்பாயைப் போல மூச்சுத் திணறும்படியாக இருக்கவில்லை. மோஹினியின் மனநிலையும் பம்பாயை விட்டுப் புறப்பட்ட போது இருந்ததைப் போல அல்லாமல் மாறியிருந்தது. தினகரராவ் தனக்கு விரோதமாகச் செய்த சூழ்ச்சி சந்தேகப் பேயாக உருவெடுத்துக் கடந்த இரண்டு வருஷ காலமாகத் தனது தாம்பத்திய ஜீவனத்தில் தன்னைத் துரத்தித் துரத்தி வாழ்க்கையைப் பாழ்படுத்துவதில் இருந்தது. ஆனால் பூனாவுக்குப் புறப்பட்ட பொழுது மோஹினி நினைத்தாள், இந்தச் சந்தேகப் பேயின் பிடியிலிருந்து விலகிச் சில நாட்களாவது தாயின் அருகே சுகமாக வாழலாம் என்று.

பூனா நிமிஷத்திற்கு நிமிஷம் நெருங்கிக்கொண்டிருந்தது. மோஹினியின் படபடப்பும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. ஒன்றரை வருஷ காலமாகத் தாயைக் காணாத அவள் ஜீவன் மீண்டும் அவளைக் காணத் துடித்துக்கொண்டிருந்தது. தாய்க்

குத் தன்னைப் பற்றிய சமாசாரம் எவ்வளவு தெரியுமோ? தாத்தா என்ன சொல்லுவாரோ? என்ற பல கேள்விகள் அவளெதிரே நின்றன.

மோஹினி வீட்டை அடைந்த பொழுது அவள் தாய் டீ சாப்பிட்டு விட்டுப் பாத்திரங்களைக் கழுவுவதில் ஈடு பட்டிருந்தாள். தாத்தா வெளியே சென்றிருந்தார். சற்றும் எதிர்பாராமல் மோஹினி வந்து நின்றதைக் கண்டு அவள் தாய்க்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கைவேலையை அப்படியே விட்டு விட்டு ஓட்டமாக ஓடிவந்து மோஹினியைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

"என்னடி மோஹினி, திடுதிப்பென்று வந்து விட்டாய்? ஒரு கடிதமாவது எழுதக் கூடாதோ, புறப்பட்டு வருவதாக?"

தாயின் அரவணைப்பிலே மோஹினி உலகத்தையே மறந்தாள். அவளது உள்ளத்து உணர்ச்சிகளை வார்த்தைகளால் விவரிக்க இயலாது.

"எப்போது புறப்பட்டாய்? சாப்பாடு ஆயிற்று இல்லையா?"

"சாப்பிட்டு விட்டுத்தான் புறப்பட்டேன்."

"எவ்வளவு இளைத்துப் போய் விட்டாயடி, மோஹினி? உடம்பு சுகமில்லையா?"

மோஹினி பேசாமல் இருந்தாள். அவளால் துக்கத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. தாய் - மகள் இருவரின் உள்ளமும் உருகி இருவர் கண்களிலும் கண்ணீர் துளிர்த்து நின்றது. அவர்களது சந்திப்பில் வேதனையும் இருந்தது; ஆனந்தமும் இருந்தது. சில நிமிஷங்களுக்குப் பிறகு மோஹினி கை கால் அலம்பிக் கொண்டு வரச் சென்றாள்.

மோஹினிக்கு டீ தயாரித்துக் கொண்டே தாய் கேட்டாள்: "உன் பரீக்ஷை முடிந்து விட்டதா?"

"இல்லை. பரீக்ஷைக்கு இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன."

"அப்படியானால் பரீக்ஷைக்காக நீ மறுபடியும் போக வேண்டுமா?"

"ஆமாம்......"

"பரீக்ஷையை முடித்துக் கொண்டே வந்திருந்தால் நன்றாயிருந் திருக்குமே. இரண்டு மாசமாவது இருக்கலாம்......"

"முடிந்த பிறகு பார்த்துக் கொள்வோம். இப்பொழுது ஏன்?......"

"உன்கூட யாரும் வரவில்லையா?"

"எதற்காக வர வேண்டும்? நான்கு மணி நேரப் பிரயாணம்!"

"உன் அகத்துக்காரரும் வந்திருக்கலாமே? அவரும் இரண்டொரு நாட்கள் இருந்து விட்டுப் போகலாம்" என்று கூறும் போதே தாய் சந்தேகத்துடன் மோஹினியைப் பார்த்தாள்.

"அவருக்குப் பரீக்ஷை, ஆபீஸில்."

மோஹினி சாதாரணமாகவே பதில் கொடுத்து வந்தாள். ஆனந்தன் வராததற்கு ஏதோ ஒரு காரணத்தைக் கூறினாள். அதுவும் உண்மை தான். ஆனால் அது ஒன்றே காரணமாக இருந்தால் மோஹினி உற்சாகமாக அதைச் சொல்லக் கூடும். அவள் முகத்தில் எந்த விதமான உற்சாகமும் காணப்படாதது அவள் தாயின் இதயத்தைத் துளைத்துக் கொண்டிருந்தது.

"கல்யாணமான பிறகு ஒரே ஒரு முறை தான் வந்து போனாய். அதற்குப் பிறகு ஒரு கடிதம் கூட எழுத வில்லை. ஏன் அப்படிச் செய்தாய், மோஹினி? கடிதம் ஏன் எழுதவில்லை?"

"என்னத்தை எழுதுவது?"

"அங்கே எல்லாம் சரியாக நடக்கிற தென்னுவது எனக்குத் தெரிய வேண்டாமா, மோஹினி?"

"தெரிய வேண்டியது தான். ஆனால்......"

மோஹினி தயங்கினாள். தான் கடிதம் எழுதக் கூடாதென்று ஆனந்தன் தடை விதித்திருந்ததைத் தாய்க்கு எப்படி எடுத்துச் சொல்வது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே தாய் குறுக்கிட்டுக் கேட்டாள்.

"உன் புருஷன் கடிதம் எழுதக் கூடாதென்று சொல்லி யிருக்காரா?"

"ஆமாம்........"

"ஏனும்? இப்படியா......விசித்திர சுபாவம்......என் காதுக் கும் வேண்டிய மட்டும் சமாசாரம் எட்டியிருக்கிறது, மோஹினி......உன்னிடமிருந்து கடிதம் வரவில்லை யென்று நான் பேசாமல் உட்கார்ந்திருந்தேன் என்று நினைக்கிறாயா? எவ்வளவோ பேர் மூலமாக விசாரித்து அறிந்து கொண்டேன். உன் துக்கம் எனக்குத் தெரியும் மோஹினி......"

இருவருடைய உள்ளங்களும் நெகிழ்ந்து கொண்டிருந்தன. மோஹினி தாயின் தொடை மீது தலையை வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

அவள் கூந்தலை வருடிக் கொண்டே தாய் கேட்டாள்: "இப்பொழுது அவரே தான் உன்னை இங்கே அனுப்பினரா?"

"ஆமாம்......"

"ஏன்?"

"வீட்டிலே அவருக்குப் படிக்கச் சௌகரியமில்லையாம். ஆகையால் தாதரிலேயேதான் இருந்து கொண்டிருக்கிறார். வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு என்னால் தொந்தரவாம்!"

"உன்னால் அவர்களுக்கு என்ன தொந்தரவு?"

"என்னவா? நான் காலேஜுக்குப் போவதே என் நாத்தனாருக்கு எரிச்சலாக இருக்கிறது. நான் அவள் கைப்பொம்மையாக ஆடவேண்டுமென்கிறாள். அப்பொழுதுதான் அவள் மனத்திற்குச் சமாதானம். எல்லாரும் சேர்ந்து என் ஜீவனைப் பிழிந்து விடுகிறார்கள்......"

"உன் புருஷருக்கு இதெல்லாம் தெரியாதா?"

"எல்லாம் தெரியும். ஆனால் இவர்களெல்லாம் சாமானியப்பட்டவர்களா? எப்பொழுதும் ஏதாவதொரு சாக்கு அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. வீட்டுக்கு நான் அரை மணி நேரம் கழித்து வந்தால் போதும்; தீர்ந்தது. அதற்கொரு கதை கட்டி விடுகிறார்கள். இங்கு என் மேல் தோன்றிய சந்தேகம், அங்கே இன்னும் பெரிதாக வளர்ந்து யாருக்கும் என் மேல் நம்பிக்கையே இல்லை..."

"அப்படியானால் ஆனந்தராவ் உன்னோடு சரியாக நடந்து கொள்ளுவதில்லையா?"

"அவர் மனத்தை மற்றவர்களெல்லாம் போட்டுக் குழப்பி விட்டிருக்கிறார்கள். முதலில் வேண்டியமட்டும் பிரயாசைப்பட்டேன். முடியவில்லை. கடைசியில் ஏன் இவர்களுக்குப் பணிந்து பணிந்து சாகவேண்டுமென்று எதிர்த்து நிற்க ஆரம்பித்தேன்..."

மோஹினியை அவள் நாத்தனார் கொடுமைப் படுத்துகிறாள் என்றும், மொத்தத்தில் புருஷன் வீட்டில் அவளுக்குச் சுகமில்லை என்றும் மாத்திரம் கேட்டறிந்திருந்த அவள் தாய் இந்தப் புது விஷயத்தைக் கேட்டு மனம் நொந்தாள்.

தாயும் மகளும் வெகு நேரம் பேசிக்கொண்டே இருந்தனர். கடைசியில் தாய் கேட்டாள்.

"இப்பொழுது அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?"

"அவர்கள் ஒன்றுமே சொல்லுவதில்லை."

"அப்படியானால் எப்படித்தான் இனி நடப்பதாம்?"

"நடக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு இல்லை. அதற்கு வேண்டிய ஏற்பாட்டை அவர்களெல்லாம் சேர்ந்து செய்திருப்பதாகத் தெரிகிறது."

"என்ன ஏற்பாடு?"

"இவரது தமையனார் இவருக்கு இன்னொரு கல்யாணம் செய்து வைக்கிறேனென்று பறந்தார்; ஆனால்......"

"இன்னொரு கல்யாணம் என்றால் அவ்வளவு எளிதாக இருக்கிறதோ இவர்களுக்கு?"

தாய்க்குக் கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் பெண் உள்ளம் அஞ்சியது; மகளைக் கேட்டாள்:

"இன்னொரு விவாகத்திற்கு உன் புருஷனும் சம்மதித்தாரா?"

"அவரை நான் ஏன் கேட்கிறேன்? மனம் ஒரு நிலையில் இருப்பவரானால் கேட்டுப் பயனுண்டு. மற்றவர்களெதிரில் அவர்களுக்குத் தகுந்தபடி தாளம் போட்டு விட்டு என்னிடம் வரவேண்டிய பொழுது நயமாகப் பேசுபவருடன் என்னத்தைக் கேட்டால் என்ன, விட்டால் என்ன?"

"உன்னோடு அவர் சரியாகப் பேசுவதுகூட இல்லையா?"

"நானே பேசுவதில்லை."

தாய்க்கு மகளின்மீது அபிமானம் தோன்றியது. ஆனால் மின்னலுக்குப் பின்னர் இருள் கவிந்து கொள்வதுபோல் அவளது இந்த அபிமானத்தின் முடிவு நிராசையும் துக்கமும்தான் என்ற எண்ணமும் கூடவே தோன்றியது.

"நீ அங்கிருந்து புறப்படும்பொழுது என்ன சொன்னார்?"

"ஒன்றும் இல்லை. முடியுமானால் அடுத்த வாரம் இங்கே வந்து போவதாகச் சொன்னார்."

"இங்கே வருகிறாரா?"

"வருகிறாராம். ஆனால் நானே வேண்டாமென்று சொன்னேன்!"

"ஏன் அப்படிச் சொன்னுய், மோஹினி? இங்கே வந்தாலாவது அவர் மனத்தை அறிந்து கொண்டு முடிந்த வரையில் அவரை நம் பக்கம் திருப்ப அநுகூலமாயிருந்திருக்குமே."

"உனக்கென்ன பைத்தியமா, அம்மா? நான் வேண்டும் என்று தோன்றும்பொழுது எவ்வளவு வேண்டுமானுலும் தேனெழுகப் பேசுவார். இங்கே வந்தாலும் அப்படியே நடக்கக் கூடும். அதற்காகத்தான் வேண்டாமென்றுசொன்னேன்".

தாய்க்கு மோஹினி கூறியதன் பொருள் விளங்கியது. இளமையில் புருஷனை இழந்து உடல் வாடிய அவளுக்குத் தன்னுடைய பழைய் துக்கம் ஒருபுறம்; புருஷன் இருந்தும் மோஹினி அவனிடம் சுகம் காணுமல் உடல் நலிவதைக் கண்ணுற்று இன்னெருபுறம் வருத்தம்; ஆக அவள் கண்களில் மளமளவென்று கண்ணீர் பெருகிற்று.

"உன்னை ஒரு துக்கத்திலிருந்து விடுவித்து நீ சுகமாக வாழ வேண்டுமென்று செய்து வைத்தேனே இந்த விவாகத்தை......நீ சுகமாக வாழ்வதைப் பார்க்க இந்தப் பாவியின் தலையெழுத்தில் இல்லை என்று தோன்றுகிறது."

பேச்சு நடந்துகொண்டே இருந்தது. இரவுச் சமையல் நடந்து கொண்டிருக்கும்பொழுது மோஹினி தாய்க்கு அருகிலேயே உட்கார்ந்து கொண்டு ஒன்றரை வருடத்திய சமாசாரங்களை யெல்லாம் 'ரிப்போர்ட்' சமர்ப்பித்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே தாய் தன்னுடைய கஷ்டத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தாள். மோஹினி விவாகம் செய்து கொண்டு சென்று விட்ட பொழுது கிழவனுரின் தொந்தரவு மேலும் வளர்ந்துகொண்டிருந்தது. அடிக்கடி தந்தைக்கும் மகளுக்கும் சண்டைகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. ஆனல் ஒருவரை விட்டால் மற்றவருக்கு விதி இல்லாததால் அவர்கள் வாழ்க்கைச் சக்கரம் எப்படியோ உருண்டு கொண்டிருந்தது.

தாத்தா வீட்டுக்கு வந்ததும் மோஹினியைக் கண்டு ஆனந்த பரவசமடைந்தார், பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு க்ஷேம சமாசாரங்களை விசாரித்தார். வயது முதிர்ந்து கிழவராகி விட்டிருந்த தாத்தாவுக்கு ஏன் வீண் மன உளைச்சல் என்று நினைத்து மோஹினி அவருக்கு உண்மையான விஷயம் ஒன்றையும் சொல்லவில்லை. அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம்

அவள் கூறி வந்த பொய்கள் அவளெதிரே ஒரு சொப்பன மாளிகையாக உருவெடுத்து நின்றன. 'உண்மையாகவே அப்படியே இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்?' என்று நினைக்கும்பொழுது அவள் உள்ளம் கூனிக் குறுகியது.

தாத்தா கேட்டார்: "கல்யாணமானதுமே எங்களையெல்லாம் மறந்தே போய் விட்டாயா? சௌக்கியமாக இருக்கிருேம் என்று ஒரு கடிதம்கூட எழுதக் கூடாதா?"

"ஆமாம் தாத்தா. எழுதியிருக்க வேண்டியதுதான். ஆனல் பாருங்கள்! காலையிலிருந்து மாலை வரையில் காலேஜ். அதற்குப் பிறகு வீட்டு வேலை......"

"அங்கேயும் காலேஜுக்குப் போகிருயா? வீட்டிலும் வேலையைக் கவனித்துக்கொண்டு காலேஜுக்கும் போய்க்கொண்டு வருகிருயா? பலே...பலே..." என்று அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"நான்கூட ஒரு முறை பம்பாய்க்கு வரவேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனல் எங்கே? முன்போல் கை கால்களில் பலமில்லை. அதுவுமல்லாமல் வண்டியிலும் ஏகப்பட்ட ஜனசந்தடியாம்......"

"ஆமாமாம். விபரீதக் கும்பல்..." என்ருள் மோஹினி.

"பின்னே என்ன அம்மா......எனக்கோ நாள் ஆகிவிட்டது...... கொள்ளுப் பேரனைப் பார்த்து விட்டுத்தான் கண் மூடவேண்டுமென்றிருக்கிறேன். என்ன?" என்று கூறிச் சிரித்தார் கிழவனர்.

மோஹினிக்குத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வெட்கத்தால் அவள் பேசாமலிருந்து விட்டதாக நினைத்துக் கொண்டார் கிழவர். ஆனல் மோஹினியின் இதயத்தை அவளது வாழ்வின் நிராசை வாள்போல் அறுத்துக் கொண்டிருந்தது. அதற்குள்ளாகக் கிழவர் பேச்சை வேறு விஷயமாகத் திருப்பினர்.

"ஊம்...அது இருக்கட்டும் விடு. குழந்தைகள் தானகப் பிறக்கின்றன, வருஷத்திற் கொன்ருக......அதுபோதும்......"

தாத்தா இதைக் கூறியபோது மோஹினிக்கு வேதனையுண்டாயிற்று. அவரது கனவு நனவாக இருந்தால்? என்ற எண்ணம் மின்னிட்டது. மனத்தின் உணர்ச்சி வேகத்தைத் தாங்காமல் எழுந்து புறப்பட்டாள்.

"பாரம்மா, உள்ளே. நான் கை கால் அலம்பிக் கொள்ள லாமா கேள் அம்மாவை" என்று கூறினர் தாத்தா.

பாதி ராத்திரி ஆகியும் தாயும் மகளும் பேசிக் கொண்டே இருந்தனர். "இனி படுத்துக்கொள்ளுங்கள். நேரம் நிரம்ப ஆகி விட்டது" என்று கிழவர் இரண்டு மூன்று முறை சொல்லி விட்டார். மெதுவான குரலில் இருவரும் மறுபடியும் பேசிக் கொண்டனர். மோஹினியிடமிருந்து எவ்வளவோ அந்தரங்க விஷயங்களைத் தாய் அறிந்து கொண்டாள். அவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்தபொழுது அவள் கண்ணெதிரே ஒரே ஒரு கேள்வி தான் நின்றது. "அப்படியானல் மோஹினியின் கதி என்ன?"

மோஹினி அரைத்தூக்கமும் அரைவிழிப்புமாகப் புரண் டாள். தாய் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். உடம்பிலே போர்வையில்லாமல் தாயுள்ளத்தின் அன்புப் போர் வையையே போர்த்துக் கொண்டு நெடிதாகப் படுத்திருந்த மோஹினியைக் கண்டு தாயின் உள்ளம் விம்மியது. இரண் டொரு நிமிஷம் மோஹினியையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். பதினெட்டு வருஷங்களுக்கு முன்னல் மோஹினியின் தகப்பனர் இருந்தபொழுது ஓர் இரவு தம்மிருவ வருக்கும் மத்தியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மோஹினி யைக் கண்டு அவள் தகப்பனர், "பார்த்தாயா, குழந்தை எவ்வ ளவு அமைதியாகத் தூங்குகிருள்? திருஷ்டி பட்டுவிடும் போல் இருக்கிறது, அழகிய முகம்! இவள் விவாகத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சம் கூடக் கவலையில்லை!" என்று சொன்னது நினைவுக்கு வர, "ஆமாம், கல்யாணத்தைப்பற்றிய கவலையை வைக்காமல் சாவு அவரைக் கொண்டு சென்றது! மோஹினிக்கு விவாகமும் நடந்துவிட்டது! திருஷ்டி பட்டுவிடும் போன்ற அதே முகமும்கூட! ஆனல்......" இதயத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த சங்கடம் மேலே நினைக்க ஒட்டாமல் தொண்டையை அடைத்தது. மற்றொரு முறை மோஹினியைக் கண்ணாரப் பார்த்தாள். உண்மை யாகவே, இப்படி அவளைப் பார்த்தால் திருஷ்டி பட்டுவிடுமென்று பயந்து உடனே முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு ஈசுவர னைப் பிரார்த்தித்தாள். மோஹினியின் நெற்றியின்மீது புரண்டு கொண்டிருந்த இரண்டொரு கூந்தலை அன்புடன் வருடிப் பின் னல் ஒதுக்கிவிட்டு, மெத்தெனப் போர்வையை எடுத்து அவளுக்

குப் போர்த்தி விட்டு, விளக்கை அணைத்தாள். பிறகு மோஹினிக்கு ஒட்டினாற் போன்று வந்து படுத்துக் கொண்டு, "பகவானே! என் குழந்தையைக் காப்பது உன் பொறுப்பு! உன்னையல்லாமல் என்போன்ற துர்ப்பாக்கிய ஜீவன்களுக்கு வேறு யார் கதி?" என்று உள்ள முருகப் பிரார்த்தித்தாள்.

## 4

பம்பாயிலிருந்து புறப்பட்டது முதல் ஒரு யோசனை அடிக்கடி தோன்றித் தோன்றி மோஹினியை வதைத்துக் கொண்டிருந்தது. சனிக்கிழமை காலையிலிருந்தோ அந்த எண்ணத்தை மனத்தை விட்டு அப்புறப்படுத்துவதே அவளால் இயலாமற் போயிற்று. வசந்தனை சாண்டாக்ரூஸ் ஸ்டேஷனில் சனிக்கிழமை மாலை தனக்காகக் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு வந்தோமே என்னும் எண்ணம் தான் அது. காலையில் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பொழுதும், பத்து மணி சுமாருக்குக் கடைவீதிக்குச் சென்று வந்த பொழுதும், வழியில் எதிர்ப்பட்ட பழைய தோழிகள் ஒவ்வொருவருடனும் பேசிக் கொண்டிருந்த பொழுதும், வீட்டுக்கு வந்த பிறகு தாயுடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுதும் அவள் இதயம் ஒரே ஒரு தந்தியைத்தான் மீட்டிக் கொண்டிருந்தது; ஒரே ஒரு கேள்வியைத் தான் அவளைக் கேட்டுக் கொண்டிருந்தது. 'வசந்தன் இன்று மாலை எனக்காகக் காத்துக் காத்துக் கடைசியில் எவ்வளவு நிராசையுடன் வீடு திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்?' என்ற கேள்விதான் அது. தான் ஊரை விட்டுப் புறப்பட வேண்டுமென்ற விஷயத்தைத் திடுதிப்பென்று புதன்கிழமை ராத்திரிதான் தெரிவித்தார்கள். ஒரு நாள் முதலில் சொல்லியிருந்தாலாவது வசந்தனுக்குத் தான் வாக்குக் கொடுக்காமலிருந்திருக்கலாம். தான் புறப்படுவது நிச்சயமாகத் தனக்குத் தெரிந்த பிறகோ வசந்தனுக்கு விஷயத்தைத் தெரியப் படுத்தப் போதுமான நேரமில்லை. இவ்வாறு வேறு வழியே தோன்றாமல் அவனிடம் சொல்லாமலே வர வேண்டியதாகி விட்டது. பூனாவுக்கு வந்து சேர்ந்த பிறகும் எவ்வளவோ யோசித்துப் பார்த்தாள், 'எப்படியாவது விஷயத்தைத் தெரியப்படுத்த முடியுமா' என்று. அவன் வீட்டு விலாசம் அவளுக்குத் தெரியும். ஆனால் கடிதம் எப்படி

எழுதுவது? எழுதுவதற்கு அவள் மனம் பின்னடைய வில்லை. ஆனால் பயம் மாத்திரம் தோன்றியது—கடிதம் அகஸ்மாத்தாக வேறு யார் கையிலாவது கிடைத்து விட்டால்? 'அவர் வீட்டில் வேறு யாரும் இல்லை. யார் கையில் கிடைக்க முடியும்? எழுதியே விடுவோம்' என்று தீர்மானித்து வெள்ளிக் கிழமை காலையிலேயே கடிதம் எழுத உட்கார்ந்தாள். ஆனால் மறுபடியும் மனம் மாறியது. கடிதம் எழுதித் தான் என்ன பிரயோசனம்? எவ்வளவு சீக்கிரம் என்றாலும் சனிக்கிழமை சாயங்காலம் வசந்தன் வீட்டுக்கு வந்த பிறகு தான் கடிதம் அவன் கையில் கிடைக்கும்! ஆபீஸுக்கு எழுதுவதானால் சரி. ஆனால் ஆபீஸ் விலாசமோ அவளுக்குத் தெரியாது! இப்படிப் பலவாறாக எண்ணிக் கடைசியாக வசந்தனது நிராசையைத் தவிர்க்க மார்க்க மில்லை என்றறிந்து பேசாதிருந்துவிட்டாள்.

சாப்பிட்டானதும் மோஹினி மஞ்சத்தில் சாய்ந்து படுத்துக் கொண்டு ஏதோ பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். படித்துக் கொண்டிருக்கும் பொழுதே தூக்கம் கண்ணைக் கவ்வியது. வெளியே வெயில் உக்கிரமாகத் தகித்துக் கொண் டிருந்தது. வெயில் ஏற ஏற மோஹினிக்குத் தூக்கம் நன்றாகக் கண்களை அழுத்தியது. நடு நடுவே புத்தகத்திலுள்ள எழுத்துக்கள் மங்கலாகத் தொடங்கி எழுத்துக்களுக்கு மத்தியில் வசந்தனது உருவம் காணப்பட்டது. அவளைச் சுற்றியுள்ள சுவர்களெல்லாம் மாயமாய் மறைந்து அந்த வீடு சாண்டாக்ரூஸ் ஸ்டேஷனாக மாறியது. கடியாரத்திற்குப் பக்கத்தில் வசந்தன் உலாவிக் கொண்டிருந்தான். நிமிஷத்திற்கு நிமிஷம் அவள் கண் இமைகள் கனமாகிக்கொண்டே வந்தன. கடைசியாக அவள் பிடித்துக் கொண்டிருந்த புத்தகம் அவள் கைகளிலிருந்து நழுவி அவள் மார்பின் மீது விழுந்தது. கண் இமைகள் அதன் பிறகு அசையவே இல்லை.

தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்த அவள் மனம் சொப்பன சாம்ராஜ்யத்தை எட்டிப் பிடித்து விட்டது. மூடியிருந்த அவளது கண்களின் எதிரே வசந்த ருதுவின் ரமணீயத்துடன் கூடிய நந்தவனம் போல் பரவிக் கிடந்தது உலகம். இங்கே தூங்கிக் கொண்டிருந்த மோஹினி அங்கே விழிப்புற்றாள். உற்சாகத்துடன் குதித்துக்கொண்டிருந்

8

தாள். அழகான கனவைப் போல அழகிய ஜுஹூ கடல் அவளெதிரே மண்டிக் கிடந்தது!

ஆனால் அங்கே வசந்தன் இருக்க வில்லை!

சூரியன் மறைந்து கொண்டிருந்தான். அப்பொழுது தான் அலைகளால் கழுவப்பட்ட மணற்பரப்பு பொன் வண்ணக் கண்ணாடி யெனப் பிரகாசித்துக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது. மென்மையாக வீசிக்கொண்டிருந்த காற்றினூடே தவழ்ந்து வந்த பொற்கிரணங்கள் மாலை மாலையாகத் தூரத்தே வளர்ந்து நின்றிருந்த தென்னை மரங்களின் ஓலைகளில் பட்டு அவைகளுக்கும் பின்னலிருந்த நீல வானில் ஐக்கியமாகிக் கொண்டிருந்தன. மோஹினி இங்கும் அங்கும் சுற்றிப் பார்த்துக் கொண்டே முன்னால் நடந்தாள். அவள் இதயத்தினின்று ஏதோ ஓர் உணர்ச்சி உன்மத்தமாகப் பொங்கிக் கொண்டிருந்தது—எதிரேயிருந்த நீலக் கடல் அலைகளின் சௌந்தரியத்தைப் போல! வசந்தனை எதிர் பார்த்துக் கொண்டிருந்த உள்ளம் சூழ்ந்திருந்த சந்தியா காலத்துச் சௌந்தரியத்திலே எங்கு நோக்கினும் வசந்தனைத்தான் கண்ணுற்றது. சூரியன் மறைந்தே விட்டான். மோஹினியின் இதயத் துடிப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது.

"வசந்தா!" என்ருள்.

குரல் எடுபடவில்லை; வசந்தன் வரவில்லை. மேற்கே சூரியனின் மஞ்சள் நிறக் கதிர்கள் மறைய, கிழக்கே சந்திரனின் வெளிச்சம் சிறிது சிறிதாகப் பரவிக் கொண்டிருந்தது. நீல வானம் நீலமயமாக மாறத் தொடங்கியது. சுற்றிலும் பார்த்தாள். எங்கேயிருந்தும் வசந்தன் வரவேயில்லை. இதயம் கூவிக் கூவி அழைத்தது, "வசந்தா......வசந்தா......" என்று.

மிதந்துவந்த மென்காற்று அவள் காதுகளில் இன்பநாதத்தைப் பொழிந்தது; மிருதுவாகப் பேசியது, காந்தனைப் போல. அவளது மேலாக்குடனும், நெற்றியில் புரண்ட கூந்தலுடனும், கன்னங்களுடனும் சரசம் புரிந்தது, காதலனைப் போலே. எங்கோ தூரத்திலிருந்து கந்தர்வ கானம் ஒன்று தவழ்ந்து வந்துகொண்டிருந்தது. மோஹினியின் இதய தாகமே பாட்டாகத் தவழ்ந்து வருவது போலிருந்தது; விரக வேதனை சப்தமாகி, மேலும் உணர்ச்சிப் பெருக்காகி மிதந்து வந்து இதயத்தில் கலந்து

அவளைத் துன்புறுத்தியது. இந்தச் சங்கீதம் கேட்டுக் கொண்டே இருந்தது. முழுமதி மேலே மேலே வந்து கொண்டிருந்தது. தென்னங் குருத்துக்கள் வெள்ளி மயமாக மாறிக் காற்றில் மெல்ல அசைந்து கொண்டிருந்தன.

மோஹினியின் இதயம் மீண்டும் அழைத்தது...... "வசந்தா, வசந்தா......" என்று. வெண்ணிலவு கம்பீரமாகப் பரவிக் கிடந்த சமுத்திரத்தைத் தழுவி முத்தமிட்டுக்கொண்டிருந்தது— இதயத்தைப் பிரமை தழுவுவது போல. சமுத்திரமும் மிருதுவாகச் சந்திரனைத் தழுவிக் கொண்டிருந்தது. சுற்றிலும் சூழ்ந்திருந்த சௌந்தரியம் ரதியாகி, சரசமாடுவதற்காக மன்மதனை அழைப்பது போலிருந்தது. மோஹினியின் இதயம் வசந்தனை அழைத்துக் கொண்டிருந்தது.

"வசந்தா......"

யாரோ தோள் மீது கை வைத்தாற் போலிருந்தது. திடுக்கிட்டு மோஹினி திரும்பிப் பார்த்தாள். கண்கள் கூசும்படியான சௌந்தரிய புருஷனாக அங்கே நின்றிருந்தான் வசந்தன்!

"இவ்வளவு நேரம் எங்கே இருந்தாய், வசந்தா?"

"இங்கேயேதனே இருந்தேன்; உனக்குப் பின்னால்!"

"நான் உன்னைத் தேடி முன்னே முன்னே சென்று கொண்டிருந்தேன்!"

"நான் உனக்காக உன் பின்னே வந்தேன்!"

"எவ்வளவு முறை நான் உன்னை அழைத்தேன்?"

"நீ அழைத்தாய், நானும் அழைத்தேன். உன் அழைப்பிலே கலந்துவிட்ட என் அழைப்பை நீ கேட்க முடியவில்லை!"

தூரத்திலிருந்து இன்ப கீதம் மன மோஹனமாகத் தவழ்ந்து வந்துகொண்டிருந்தது, இதயராணியை வென்று விட்ட பெருமிதத்தால் மலர்ந்த முகத்துடன் கூடிய உணர்ச்சி குதித்து வருவது போலே! மோஹினி வசந்தனுக்கு மிகவும் அருகில் வந்து, "எவ்வளவு காத்திருப்பேன், வசந்தா......நான் எவ்வளவு காத்திருக்க வேண்டும் உனக்காக?" என்றாள்.

"கடைசியில் வந்தேவிட்டேனே!"

வசந்தன் மோஹினியை இறுகத் தழுவிக் கொண்டான். அவள் முகவாயைப் பிடித்து முகத்தை நிமிர்த்தினான். வெண்ணிலவு அவளது முகத்தின் மீது நர்த்தனம் புரிந்து கொண்

டிருந்தது. பாதி திறந்திருந்த அவள் கண்களில் ஆதி சிருஷ்டியின் மாயை இருந்தது. அவளை இறுகப் பற்றி அணைத்துக் கொண்டே வசந்தன், "மோஹினி......" என்றான்.

"வசந்தா......"

"அப்ஸரஸ் ஸ்திரீயா நீ?"

"நீ கந்தர்வன்......"

"அழகுக் கொடி நீ......"

"அந்தக் கொடியில் புஷ்பித்துள்ள மலரின் நறுமணம் நீ......" என்று கூறி மோஹினி முகத்தை மெதுவாக மேலே நிமிர்த்தி, "நீ என்னுடையவன் தானே வசந்தா?" என்று கேட்டாள்.

வசந்தன் அவளை ஆர்வமுடன் பற்றி முத்த மிட்டான். சூழ்ந்திருந்த வனப்பெல்லாம் அவர்களிருவரிடையே வந்து தங்கினாற் போன்றிருந்தது.

இருவரும் ஜோடியாகக் கையில் கை கோத்துக் கொண்டு நடந்து போனார்கள். தவழ்ந்து வந்து கொண்டிருந்த இசை வெள்ளத்தின் மீது மிதந்து கொண்டே சென்றனர். எங்கேயோ சென்று தங்கினர். அவர்களுக்கு மேலே வெண்மதியின் நில விலே முழுகித் திளைத்துக் கொண்டிருந்த தென்னை மரங்கள் பட்டுக் குடைகள் போல் காட்சியளித்தன. வசந்தனது தொடை மீது தலையை வைத்துப் படுத்த மோஹினி அவன் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கூந்தலை வருடிக் கொண்டிருந்த வசந்தன், "இரவு மனோஹரமாக இருக்கிறதல்லவா மோஹினி?" என்று கேட்டான்.

"ஆம் வசந்தா. இத்தகைய மனோஹரத்தை நான் என்றும் கண்டதில்லை......"

"சந்திரனைப் பார்த்தாயா மோஹினி?"

"ஆஹா, என்ன அழகு!"

"ஆனால் உன் அழகு அவனுக்கில்லை, மோஹினி!"

"அப்படிப் பட்ட அழகியா நான்?"

"ஆமாம்......"

"அப்படியானால் என் அழகும் சந்திரனுடைய அழகைப் போலத்தான்!"

"அப்படி என்றால் என்ன?"

"என்னைப் போல அவனும் பிறரைச் சார்ந்து நிற்பவன். சூரியனில்லா விட்டால்......"

" அப்படியானால் உன்னுடைய சூரியன் யார்?"

"நீ."

"இல்லை. நானில்லாவிட்டாலும் நீ அழகியே!"

"இருக்கலாம். ஆனால் அந்த அழகு நிலவற்ற இரவு! வசந்தத்தின் ஸ்பரிசம் படாத வனம்!"

" அப்படியானால் நான் வசந்தமா?"

"ஆம். நீ வசந்தம் என்பதனாலேயே நான் மோஹினி!"

இதயப் பிணைப்பின் மாயை அவர்களிருவரையும் ஒன்றாகக் கூட்டியிருந்தது. பேச்சை மீறிய உணர்ச்சி அவர்களிருவரையும் சேர்த்திருந்தது. சூழ்ந்திருந்த சிருஷ்டியை யெல்லாம் அழகுக் கனவாக மாற்ற வல்ல சந்திரன் அவர்களது காதற் பெருக்கைக் கண்டு ஆனந்தம் கொண்டு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். தூரத்திலிருந்து சமுத்திர ராஜன் சங்கீதத்தைப் பொழிந்து கொண்டே இருந்தான். ஆதியந்த மற்ற சிருஷ்டியின் தாள லயங்களுக்கு அநுகுணமாக அவர்களுடைய இதயங்கள் அன்புக் கீதத்தை மீட்டிக் கொண்டிருந்தன. காலதேவன் தன்னையே மறந்து விட்டாற் போன்றிருந்தது.

இருவரும் நடந்துகொண்டே இருந்தனர். மற்றெங்கோ தங்கினார்கள். இரு உடல்களிலும் குடி கொண்டிருந்த ஒரே உள்ளம் ஒரே கனவைக் கண்டு கொண்டிருந்தது போலிருந்தது. நடுவானத்தில் சந்திரன் தனது மாயையில் தானே மதியிழந்து நின்றிருந்தான். காற்று இசைரூபத்தில் ககனமார்க்கத்தில் சென்றுகொண்டிருந்தது. உலகம் இந்திரனின் அமராவதியாகத் திகழ்ந்தது; சுக போக ராசியாகப் பிரகாசித்தது. மோஹினி மணலில் நீண்டு படுத்துக் கொண்டாள். வசந்தன் அவள் முகத்தினழகைப் பருகிக் கொண்டிருந்தான்.

"எவ்வளவு அழகாயிருக்கிறது, இந்த மணல்? இதன் ஸ்பரிசம் வெண்ணிலவைப் போன்றிருக்கிறது!"

" இது மணலல்ல, மோஹினி. வெண்ணிலவே வானினின்று நிலத்திற்கு வந்து மீண்டும் திரும்பிப் போகாமல் இங்கேயே பரவிக் கிடக்கிறது, மோஹினி!"

"வசந்தா, இந்த இன்பநாதம் எங்கிருந்து வருகிறது?"

"கந்தர்வ லோகத்திலிருந்து!"

"நாமும் அங்கே போகலாம், எழுந்திரு."

"பைத்தியமடி நீ, மோஹினி!"

"ஏன்?"

"இப்பொழுது நீ இருப்பது எங்கே?"

மோஹினி சுற்றுமுற்றும் கண்களைச் சுழற்றிப் பார்த்தாள். அவர்களிருவரும் ஒருவர் தோள்களில் மற்றவர் சிறைப்பட்டிருந்தனர்.

"இதுவே கந்தர்வ லோகம் மோஹினி. கந்தர்வ லோகமே தான் இது!"

"அப்ஸரஸ் ஸ்திரீகளேயே காணுமே!"

"நீதான் இங்கே இருக்கிறுயே என்று இன்று அவர்கள் வேறு எங்கோ போய்விட்டார்கள்!"

"கந்தர்வர்கள் எங்கே?"

"அவர்கள் அப்ஸரஸ்ஸுகளுக்குப் பின்னுலே போனர்கள்!"

"ஏன்?"

"உன் பின்னல் நான் இங்கே வந்தது எதற்காக?"

"அப்படியானல் இந்திரன் எங்கே?"

"அதோ பார் வானத்தில், சந்திரனக மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறுன்!"

"இன்று நான் சுகம் பெற்றேன், வசந்தா..."

"நான் இருக்குமிடமெல்லாம் சுகம்தானே?"

"இன்று என் ஜன்மம் சாபல்யமாயிற்று!"

"நான் இருக்குமிடமெல்லாம் சாபல்யமே!"

"உன் வருகைக்காகவே நான் இந்த ஜன்மத்தைப் பெற்றேன், வசந்தா!..."

"நீ வருவாய் என்றே நான் அவதரித்தேன், மோஹினி."

"எதற்காக?"

"உன் ஜன்மம் சாபல்ய மடையட்டுமென்று..."

"நான் கொடுத்து வைத்தவள்!"

"நானும் கொடுத்து வைத்தவன்!"

"நீ எப்பொழுதும் என் அருகிலேயே இரு, வசந்தா..."

"அருகில் எதற்காக? உன்னுள்ளேயே இருக்கிறேன். உன் இதயமே என் மனே!"

"அப்படியானல் நாமிருவரும் ஒருவரே!"

"சந்தேகமென்ன? நீ உடல், நான் உள்ளம். நீ இதயம், நான் உணர்ச்சி..."

மோஹினியின் உள்ளம் பொங்கி வந்துகொண்டிருந்த கானமுதத்தின் அலைச் சிகரத்தின் மீது துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. வசந்தன் மோஹினியின் உள்ளத்தைக் கவர்ந்து அவளது உணர்ச்சிப் பெருக்குக்குக் காரணனாய் இருந்தான். உலகம் அழகுக்கு அடி பணிந்து நின்றது. நிலம், நீர், காற்று, வெளிச்சம் என்ற வேறுபாடுகள் மறைந்து சிருஷ்டியின் அநாதியான மாயையாக நின்றது. இப்படி எவ்வளவு நேரம் சென்றதோ!

களைத்துப் போன சந்திரன் மேற்கே மங்கலாகத் தோன்றத் தொடங்கினன். இன்பம் துய்த்துக் களைத்துப் போன காமினியின் சோர்வு காணப்பட்டது அவனது முகத்திலே! அந்தச் சோர்வு மோஹினியின் முகத்திலும் இருந்தது. வசந்தனது கழுத்தை மாலையாகச் சுற்றிக் கொண்டிருந்த மோஹினி, "என்னருகில் நீ எப்பொழுதும் இருப்பாயா வசந்தா?" என்று கேட்டாள்.

"இப்பொழுதென்னவோ இருக்கிறேன். பிறகு எப்படியோ? சொல்வது எப்படி?"

"ஏன் இப்படிப் பேசுகிருய்?"

"உண்மையைத்தான் சொன்னேன்."

"ஏன் அப்படி? நீ மனம் வைத்தால் எப்பொழுதும் என்னுடனேயே இருக்கலாம்!"

"நீ மோஹினி!"

"அதனல்தான் சொல்லுகிறேன், வசந்தன் மோஹினியுடனேதான் இருக்க வேண்டுமென்று! வாழ்க்கை அழகிய சொப்பனமாக வேண்டும்......"

"உன் ஆசை சரிதான். ஆனல் நான் வேறெங்கோ செல்ல வேண்டும்!"

"எங்கேயும் போகாதே வசந்தா...எங்கேயும் போகாதே!"

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது?"

"கிழக்கே உதித்த சந்திரன் மேற்குக்கு வந்து விட்டான். அவன் ஏன் கிழக்கிலேயே நின்றுவிட வில்லை?"

"......"

"அழகு வடிவமாக இருந்த அவன் இப்பொழுது தேய்ந்து வாடிச் சோர்வுற்றிருக்கிறனே, ஏன்?"

"நீ நின்றுல் அவனும் நிற்பான்."

"அவன் நிற்கமாட்டான் என்றேதான் நானும் நிற்கப் போவதில்லை!"

"வசந்தா, என் இதயம் இதைத் தாங்காது......"

"எனக்கு அது தெரியும். ஆனல் எனக்காகக் காத்து நிற்கும் இதயங்கள் பத்து ஆயிரம்......"

"கருணையற்றவன் நீ, வசந்தா......"

"அந்தப் பத்தாயிரம் உள்ளங்களை மலர்களாக்கி, அவைகளின் நறுமணத்தால் அந்த உயிர்களையெல்லாம் உயிர்ப்பித்து ஆனந்திக்கச் செய்ய வேண்டும். இன்று நீ சுகியானய். நாளை மற்ருெருவர். இன்று இங்கே பௌர்ணமி. நாளை மற்ருேரிடத்தில்."

"நீ இல்லாமல் நான் வாடிப்போவேன். என்ன செய்வேன்! வசந்தா...நீ போகாதே."

"நீ ஒரு புஷ்பம் மோஹினி..."

"அப்படியானல் நான் வாடித்தான் போக வேண்டுமா?"

"பார், சந்திரனும் கூட வாடிப்போனன். அவனுக்கு முன்னல் நீ யார்?"

"அவனும் வாடாமலிருக்கட்டும்; நீயும் இரு; நானும் நறுமணம் வீசிக் கொண்டிப்பேன்!"

"பைத்தியக்கார ஆசை உன்னுடையது, மோஹினி!"

"ஐயோ......"

"ஏன் துக்கம்? மோஹினி, மீண்டும் வருவேன் நான்!"

"எப்பொழுது?"

"நீ அழைக்கும் போழுது!"

"நிஜமாகவா?"

"ஆம். உண்மையாகவே வருவேன். பெண் உள்ளம் நீ, கற்பனையின் வடிவம் நான்!"

மோஹினி கண்களை மூடிக்கொண்டாள். எவ்வளவு நேரம் இப்படிக் கழிந்ததோ!

வானத்தில் சந்திரன் மறைந்தான். வசந்தனுடன் மோஹினி நடந்து கொண்டிருந்தாள். மிருதுவான மணற்பரப்பின் மீது

நிதானமாக அடிமேல் அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தனர். எதிரே வழி மாத்திரம் காணப்படவில்லை. வலப்பக்கம் இருந்த தென்னை மரங்கள் அடிவானத்தில் மிதந்து கொண்டிருக்கும் மணி மேகங்களைப்போல் காட்சி யளித்துக் கொண்டிருந்தன. இடப் பக்கம் சமுத்திரம் பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டிருந்தது. மோஹினியின் உள்ளத்தைப் பயம் கவ்வத் தொடங்கிற்று. அலை அலையாக, உருத்தெரியாத பயம் அவள் இதயத்திலே அறைந்து கொண்டிருந்தது—இடப்பக்கமிருந்த கடல் அலை போல!

"வசந்தா, இருட்டிப்போய் விட்டதே. எனக்கு ஏனோ பய மாக இருக்கிறது."

"பயமேன் மோஹினி? பக்கத்தில் நான் இல்லையா?"

"நீ இருந்தும் கூட பயமாகத்தான் இருக்கிறது. சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடலாம் புறப்படு."

"போவோம். ஆனால் ஏன் இவ்வளவு சீக்கிரம் இருட்டிப் போய் விட்டது?"

"ஆமாம். இங்கே நாம் வந்திருக்கக் கூடாதோ என்னவோ?"

"என்ன பைத்தியமடி உனக்கு, மோஹினி... இங்கே வந்தத னால் தான் சிறிது நேரமாவது சந்தோஷமாகவும் அமைதியாகவும் கழித்தோம்... யோசிக்காதே......"

"இதுவரையில் சரிதான். ஆனால் இதென்ன இப்படிப்பட்ட இருட்டு! முன்னால் வழியே காண்பதில்லையே! வசந்தா, என் கையை விட்டுவிடாதே......"

மோஹினியின் குரலில் நடுக்கம் தோன்றியது. நொந்த ஜீவ னின் அலறலைப்போல் அமைதியைக்கிழித்துக்கொண்டு வந்த சமுத் திரத்தின் கர்ஜனை வசந்தனின் உள்ளத்தையும் நடுங்கவைத்தது.

"என்ன பயங்கரமான இருட்டு, மோஹினி. உண்மை யாகவே இது ஓர் இருட்கடல் போலல்லவா இருக்கிறது! என் அருகிலேயே இரு, மோஹினி. தூரப் போகாதே. நீ இருந்தால் எனக்கும் எவ்வளவோ தைரியம்......"

முன்னே செல்லச் செல்ல இருள் இன்னும் பயங்கரமாகத் தோன்றத் தொடங்கியது. எங்கே பார்த்தாலும் ஒரே இருட்டு. இருவரும் தட்டுத் தடுமாறி முன்னே சென்றனர். மோஹினி பயத்தால் பிடிக்கப்பட்டு, "வசந்தா, இப்படியிருந்தால் நாம் வீடு போய்ச் சேருவதெப்படி?" என்றாள்.

"இந்த இருட்டில் இந்த வழியில் வீடு சேருவது கஷ்டம்...!"

"அப்படியானால் நாம் வீட்டுக்கே போய்ச் சேர முடியாதா?"

"இல்லை. இதுவே நம்முடைய வீடு......!"

வசந்தன் கால் இடறிக் குப்புற விழுந்தான். மோஹினியின் கையிலிருந்து அவன் கை நழுவியது. அவள் சட்டென்று குனிந்து என்ன ஆயிற்று என்று பார்த்தாள். இருட்டில் ஒன்றும் புலப்பட வில்லை.

"வசந்தா..." என்று அலறினாள்.

"......"

"வசந்தா...என்ன ஆயிற்று? எங்கே இருக்கிறாய்?"

எங்கோ தூரத்திலிருந்து வசந்தனின் குரல் கேட்டது.

"இங்கேயே இருக்கிறேனே...இதோ, இங்கே. நீ எங்கே?"

"அவ்வளவு தூரத்தில்...எங்கே நீ? வீட்டுக்குப் போக வேண்டாமா?"

அவன் குரல் இன்னும் அதிகத் தூரத்திலிருந்து கேட்டது.

"இதுவே தான் நம் வீடு என்று சொன்னேனே?"

மோஹினியைப் பீதி கவ்வியது. இருட்டிலேயே கூர்ந்து நோக்கினாள். யாரோ எதிரே வந்தாற் போன்றிருந்தது. உற்றுப் பார்த்தாள். யாரோ ஆண் உருவம். படபடக்கும் இதயத்துடன் அலறினாள்:

"வசந்தா, வசந்தா... எங்கே இருக்கிறாய்?"

"நான் வசந்தனல்ல, ஆனந்தன்" என்றது அந்த உருவம்.

"ஆனந்தன்!"

"இந்த இருட்டில் என்ன செய்து கொண்டிருந்தாய், மோஹினி?"

"வசந்தா... வசந்தா..."

அவளெதிரே நின்றிருந்த ஆனந்தன் கோபத்தால் உட லெரிந்து கொண்டிருந்தாற் போன்று காணப்பட்டான். விர்ரென்று அவளருகே நெருங்கித் துடிதுடிக்கும் ஆத்திரத்துடன், "இங்கே என்ன செய்து கொண்டிருந்தாய்? சொல்... சொல்..." என்று உறுமினான்.

மோஹினியின் மனம் இருட்டிலே வழிகாணாது தடுமாறியது. ஏதோ சொல்ல வேண்டுமென்று அவள் முயன்று கொண்டிருந்த பொழுதே ஆனந்தன் கோபத்தால் தன் வசமிழந்து அவள்

கைகளைப் பிடித்துப் பலமாக இழுத்தான். 'தடக்'கென்று மோஹினி கண்களைத் திறந்து, "ஆ, என்னது!" என்றாள்.

அவளெதிரே அவள் தாய் நின்று அவளை எழுப்பிக் கொண்டிருந்தாள். "என்ன தூக்கமடி இது, மோஹினி? நாலு தடவை எழுப்பியாயிற்று...டீ ஆறிப் போகிறது. எழுந்திரு" என்றாள்.

மோஹினி எழுந்து உட்கார்ந்தாள். கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள். அவளுக்குச் சரியான நினைவு வர ஐந்து நிமிஷங்களாவது வேண்டியதாயிற்று.

* * *

சாண்டாக்ரூஸ் ரெயில்வே ஸ்டேஷனில் வசந்தன் மோஹினிக்காகக் காத்துக் காத்து அலுத்துப் போனான். இரண்டரை மணிக்கு வருவதாகச் சொன்னவள் மணி மூன்றே கால் ஆகியும் ஏன் வரவில்லை என்ற யோசனை அவனைப் பிடித்தது. அவள் வராததால் அவன் மனம் நிராசை கொண்டது. அவனது சிந்தனை பத்துத் திசைகளிலும் ஓடியது. ஆனால் ஒரு விதமான பதிலும் எட்ட வில்லை அவன் புத்திக்கு. இன்னும் பதினைந்து நிமிஷம் காத்திருந்து பார்த்து விட்டுத் தாதருக்குத் திரும்பிப் போய் விடவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான். கடியாரத்திற்கு அருகிலே இருந்த ஓர் இரும்புப் பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டான்.

மூன்றரையும் ஆயிற்று. இன்னும் இரண்டு நிமிஷங்களில் இன்னொரு 'லோகல்' வந்து விடும். இவ்வளவு நேரம் காத்திருந்தாகிவிட்டது. இந்த ஒரு வண்டியைப் பார்த்துக்கொண்டு போய் விடலாம் என்று தங்கினான். வண்டியும் வந்து நின்று புறப்பட்டு விட்டது. ஆனால் மோஹினி வரவில்லை. பிறகு தாதருக்குச் செல்லும் 'லோகலும்' வந்தது. வசந்தன் உடனே அதில் ஏறி ஒரு மூலையில் ஒரு பலகையில் 'தொப்'பென்று போய் விழுந்தான். அவன் உடலெல்லாம் வியர்த்து விட்டிருந்தது. மனம் நிராசையால் வாடிப் போயிருந்தது. அவள் ஏன் வரவில்லை என்ற காரணத்தைவிட அவள் வராமற் போன ஏமாற்றமே அவனைப் பெரும் வேதனைக் காளாக்கிற்று. மோஹினி வராததால் தனக்கு ஏற்பட்ட நிராசை எவ்வளவு என்பது வண்டியில் வந்து உட்காரும் வரையில் வசந்தனுக்குத் தெரியவில்லை. 'வராவிட்டால் இல்லை; என்ன முழுகிப்

போய்விட்டது?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்ளக்கூட முடியாமல் போயிற்று அவனால். 'வராவிட்டால் என்ன போயிற்று' என்பதைவிட, 'வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந் திருக்கும்' என்னும் எண்ணமே அடிக்கடி தோன்றி மனத்தின் நிராசையை இரட்டித்துக் கொண்டிருந்தது.

மறுபடியும் வேறு எண்ணங்கள். 'கண்டிப்பாக வருகிறே னென்று சொன்னவள், ஜூஹூவுக்குப் போவோம் என்று தானே முதலில் தெரிவித்தவள், ஏன் வராமலிருந்து விட்டாள்?' மேகத்திடையே பளிச்சிட்டுச் செல்லும் மின்னலைப் போல் அவன் மனத்திலே ஏதோ பயம் மின்வெட்டியது. மூந்தாநாள் தானும் அவளும் டீ கடையில் உட்கார்ந்திருந்ததையும் பிறகு வெளியில் வந்து ஸ்டேஷனுக்கருகில் பேசிக்கொண்டு நின்றதையும் வேறு யாராவது பார்த்திருந்தால்? அதனால் வீட்டில் மோஹினிக்கு ஏதாவது விபரீதம் நேரிட்டிருந்தால்? தான் அவள் பால் கருணைகாட்டப் போக அது அவள் தலைக்குத் தீம்பாக வந்து முடிந்திருந்தால்? 'நாம் நினைப்பது ஒன்று, நடைபெறுவது மற்றொன்று' என்று தோன்றியது அவனுக்கு. வசந்தன் இன்னும் எவ்வளவோ வகையில் அவள் வராமலிருந்ததற்காகக் காரணங்களை ஆராய்ந்தான். ஆனால் ஒன்றும் சரியான காரணமாகப் படவில்லை. அவள் ஊரில் இல்லையோ என்னும் சந்தேகம் மாத்திரம் அவன் புத்திக்கு எட்டவே இல்லை. தன்னால் அவளுக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டு விட்டதாகத் தீர்மானித்து வெகுவாகத் துக்கப்பட்டான்.

யோசனை வேறு திசையில் திரும்பியது. 'இன்றுதான் சந்திக்க முடியவில்லை; இனிமேல்? எப்படியிருந்தாலும் மறுநாள் காலை 9 மணி வண்டியில் அவள் காலேஜுக்குப் போவாளல்லவா? அப்பொழுது பார்த்து விசாரித்தால் போயிற்று' என்று மனத் தைச் சமாதானப்படுத்திக் கொண்டான். ஆனால் உடனே பளிச் சிட்டது, மறு நாள் ஞாயிற்றுக்கிழமை என்பது. எனவே அவள் அன்று வராமற் போனதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் திங்கட்கிழமை காலை வரையிலும் காத்திருக்க வேண்டும் என்று நினைத்தபொழுது அவனுக்கு மிகவும் கஷ்ட மாக இருந்தது. 'மறுநாள் காலையில் அவள் வீட்டுக்குப் போய் வந்தால்?' என்று யோசித்துப் பார்த்தான். ஆனால் அவள்

வீட்டில் ஆனந்தன் இருப்பதில்லையாகையால் தான் அங்கே செல் வதற்குத் தக்க காரணம் ஒன்றும் கிடையாது என்று தோன்றவே அந்த யோசனையைக் கைவிட்டான். எனவே திங்கட்கிழமை காலை வரையில் பொறுமையாகக் காத்திருப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஆனால் தன் அந்தரங்கத்தை அவன் தொட்டுப் பார்த்துக்கொண்ட பொழுது தன்னிடம் அவ்வளவு பொறுமை இல்லை என்பதை உணர்ந்தான்.

மனம் அமைதிக்காக அல்லலுற்றது. "வராவிட்டால் போகட்டும்" என்று தைரியமாகச் சொல்லிக்கொண்டான். ஆனால் அது பொய்ச் சமாதானம். மோஹினி வராமற் போனதற்குச் சரியான காரணத்தைத் தெரிந்து கொண்டால் அல்லாமல் தனக்கு உண்மையான சமாதானம் ஏற்படாது என்பதை நினைத்தபொழுது அவனுக்குத் தன் நிலை விசித்திரமாகப் பட்டது. தான் மோஹினியின் கவர்ச்சியில் எவ்வளவு தூரம் சிக்குண் டிருக்கிறோம் என்ற அறிவு அப்பொழுதுதான் உண்டாயிற்று, வசந்தனுக்கு.

ஆனால் அதோடு கூடவே, "இது சரியல்ல. மனத்தை அவளிட மிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கலக்கம் அர்த்த மற்றது" என்று சொல்லிக்கொள்ளவும் யத்தனித்தான். ஆனால் அவன் இதயத்து உணர்ச்சிகள் அவனை அப்படிச் சொல்லிக் கொள்ள விடவில்லை. அவன் அறிவுக் கெதிரே நிற்கும்படியான தைரியம் அவன் இதயத்திற்கு இல்லாமற் போனாலும், தான் ஒரு விதத்தில் தோற்றாலும் அறிவை மற்றொரு விதத்தில் தோற் கடித்துவிட்டோம் என்ற பெருமையில் அது திளைத்துக்கொண் டிருந்தது. அவன் மனத்தைக் கவ்விக்கொண்டிருந்த நிராசை யைப் பார்த்தால், அவனது உணர்ச்சிகள் அவன் அறிவை வெற்றிகொண்டு விட்டன என்பது நிதரிசனமாக விளங்கிக் கொண்டிருந்தது.

நாதரில் இறங்கிச் சனிக்கிழமை தான் வழக்கமாகச் செல்லும் நண்பன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். மோஹினியின் மோகத்தில் சிக்குண்ட அவன் உள்ளத்திற்கும் அந்தச் சுழலி லிருந்து அவனை விடுவிக்க முயன்ற அவன் புத்திக்கும் போராட்டம் நடந்துகொண்டே இருந்தது.

"நான் உனக்கு முதலிலேயே சொல்லியிருந்தேன்; நீ மோஹினியுடன் இவ்வளவு நெருங்கிப் பழகக் கூடாது என்று" என ஏளனம் செய்தது அறிவு.

"இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது?"

"இனி என்ன ஆக வேண்டும்? உன்னையே நீ மறந்து அவளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாயே......"

"நான் ஏங்கவில்லை என்று கூறமுடியாது. ஏங்கத்தான் செய்கிறேன், வாஸ்தவம். ஆனால்......"

"என்ன ஆனால்?"

"நான் ஏன் அவளுக்காக ஏங்குகிறேன் என்று கூறுவது கஷ்டம்......"

"கஷ்டம் ஒன்றும் இல்லை. நான் சொல்லுகிறேன் கேள். மோஹினியின் அழகுக்கு நீ பறிபோய் விட்டாய்......"

"இருக்கலாம்......"

"ஆனால் அது அவளுடைய அழகுக்காக மட்டும் அல்ல."

"அப்படியானால்?"

"அந்த அழகின் உறைவிடமான அவள் உடலையும் நீ இச்சிக்கிறாய்......"

"இல்லை. அவள் தேகத்தை நான் இச்சிக்கவில்லை."

"அப்படியானால் அவள் இன்று வராமற் போனதற்காக உனக்கு ஏன் இவ்வளவு நிராசை?"

"வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது இல்லையே என்ற வருத்தம் தான்."

"அவ்வளவுதான் என்றால் அவள் அழகை மனத்திலேயே நினைத்து நீ ஆனந்தப்பட்டுக் கொள்ளலாம். அவளது சான்னித்தியத்தை விரும்ப வேண்டிய தேவை இல்லை......"

"ஆனால் உண்மையாக எனக்கு அவள் உடலின் மீது விருப்பம் கிடையாது."

"ஒருகால் இப்பொழுது உனக்கு அந்த ஆசை இல்லாமலிருக்கலாம்; அது ஏற்படுவதற்கு இன்னும் ஓரிரண்டு படிகள் தாம் பாக்கி......"

"அது முடியாத காரியம்!"

"பைத்தியம் நீ. அவள் அழகு உனக்கு வேண்டியிருக்கிறது அல்லவா? அந்த உடல் இல்லாமல் அந்த அழகுக்கு உறைவிடமேது?"

உள்ளம் தடுமாறியது. அப்படியும் இருக்கலாமோ என்று எண்ணியது. ஆனல் தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாமல், "ஆனல் என்னைப் பொறுத்தவரையில் அந்த உடலை விரும்பாமல் அவள் அழகை மாத்திரம் அநுபவித்து ஆனந்தம் கொள்ள நினைத்துள்ளேன்" என்றது.

"அது இயலாத காரியம்."

"முடியுமானல் நான் அவளுக்கு......உதவி புரிய வேண்டுமென்றிருக்கிறேன்..."

"முதலில் அந்த எண்ணம் இருக்கலாம். கடைசி வரையிலும் கூட இருக்கலாம். உதவியும் செய்யக்கூடும். ஆனல்..."

"ஆனல் என்ன?"

"இதயத்தைத் தாமரைக்குத்தான் ஒப்பிடுகிருர்களே ஒழிய தாமரை இலைக்கு அல்ல!"

"அதனல் என்ன?"

"தாமரை இலையானல் அது தண்ணீருடன் ஒட்டாது வேறுபட்டு நிற்க இயலும். தாமரையோ மலரவேண்டுமானல் தண்ணீரிலேயே, அந்தச் சேற்றிலேயே நின்ருகவேண்டும். இப்பொழுது நீ அந்தத் தண்ணீரில்தான் நின்றுகொண்டிருக்கிருய். பாதி மலர்ந்தும் விட்டாய்."

"அப்படியானல்?"

"இரண்டே இரண்டு வழிகள்: நீரிலேயே, சேற்றிலேயே நின்று மலர்ந்து மணம் வீசவேண்டும்; இல்லாவிட்டால் வெளியே வந்து, மலர்வதையே மறந்து அகாலத்திலே வாடிப்போக வேண்டும்."

"அப்படியானல் தாமரை மலர்வது தவரு?"

"தவறென்று நானெங்கே சொன்னேன்? மலர வேண்டுமானல் அதற்கு அதன் ஆசிரய ஸ்தானமான தண்ணீரும் சேறும் வேண்டும் என்றேன்..."

"நான் மலரத்தான் வேண்டும்."

"நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனல் அதற்கு இன்றியமையாததான ஓரிரு அம்சங்களைத்தான் சொன்னேன்."

"இப்பொழுது ஒரு வேளை சேற்றில் நிற்க வேண்டி யிருக்கலாம். ஆனல் மலர்ந்த பிறகாவது அழகின் ராசியாகி சுகத்தின் வழிகாட்டியாகலாம் அல்லவா?"

"ஆகக்கூடும். ஆனால் ஒரே ஒரு கணம்தான்! மறுநாள் வாட வேண்டியதுதான்."

இதயம் வேதனையுற்றது. இந்த அறிவைத் தோற்கடிக்கத் தன்னால் இயலவே இயலாது என்று சங்கடப் பட்டது. கடைசியாக, "அப்படியானால் உலகத்தில் இதயம் என்பதே இருக்கக் கூடாதா என்ன? பிரபஞ்சம் முழுவதும் உன் கொடிய ஆட்சிக்கே உட்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லுகிறாய்?" என்றது.

"அப்படிப்பட்ட ஆசை எனக்கில்லை. உனக்கும் இடமுண்டு; வெகு உயர்தரமான இடமுண்டு. ஆனால் நான் கூறியது உன்னுடைய சக்தியைப்பற்றியும் யோக்கியதையைப் பற்றியும் மட்டுமே. உடலில் கூட நான் உனக்கும் உயர்ந்த ஸ்தானத்தில் வசிக்கிறேன்..."

வசந்தன் தனது நண்பன் வீட்டை அடைந்தான். வழக்கமாக அங்கே வரும் நண்பர்கள் கூடியிருந்தார்கள். அரட்டை ஆரம்பமாகி யிருந்தது. ஆனால் வசந்தனின் கவனம் எங்கோ லயித்திருந்தது. நான்கு நாட்களாகக் காணாத மோஹினியைப் பற்றியே நினைத்த வண்ண மிருந்தான். அரட்டையில் விவாகத்தைப்பற்றிய பேச்சு எப்படியோ தலைகாட்டிற்று. நண்பர்களில் வயதானவனாகக் காணப்பட்ட ஒருவன் சொன்னான்: "இந்தக் காலத்துப் பையன்களுக்குக் கல்யாணம் என்றால் முள் குத்துவது போல் இருக்கிறது. ஆணும் சரி, பெண்ணும் சரியே; அதே தான். இப்பொழுது நீங்களே பாருங்கள், நம்ம வசந்தன்......" என்று வசந்தன் இருந்த பக்கம் ஜாடையாகப் பார்த்துப் பேச்சைப் பாதியில் நிறுத்தினான். வசந்தன் பேசாமலே இருந்தான். அதைப் பார்த்து இன்னொருவன் அவன் வாயைக் கிளறினான்.

"ஓஹோ! வசந்தனுடைய கல்யாணமா? ஆனமாதிரியே தான். அவன் சொல்வதும் சரிதான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இதுவரையிலும் அது ஒரு தேவையாக அவனுக்குத் தோன்றவில்லை; அதனால் செய்து கொள்ளவில்லை..."

இதைச் சொன்னவன் வசந்தனுக்கு நெருங்கிய நண்பனானதால் சங்கோசமின்றிக் கூறிவிட்டான். வசந்தனும் சிரித்துக் கொண்டே, "ஆமாம் தம்பி, கல்யாணமாகாதவர்களைக் கண்டால்

கல்யாணம் செய்து கொண்டு அவதிப் படுகிறவர்களுக்குப் பொருமை. அதனுல்தான் இப்படிப்பட்ட பேச்சு, இல்லையா?" என்று கேட்டான்.

"எங்களுக்கேன் பொருமை? வீட்டில் மனைவி, மக்கள்..."

"அதுதான் பொருமைக்குக் காரணம். வீடு நிறையக் குழந்தைகள் இருப்பதால் 'ரொமான்ஸு'க்கு அவகாசம் இல்லையென்று..."

"கல்யாணம் ஆனவர்களுடைய 'ரொமான்ஸை'ப்பற்றி உனக்கென்ன தெரியும்? விடு அந்தப் பேச்சை."

"ஆமாம் தம்பி, அது எனக்கெப்படித் தெரிய முடியும்? குழந்தைகள் அழ ஆரம்பித்த உடனே பெண்டாட்டியின் மீது எரிந்து விழும் 'ரொமான்ஸை'ப்பற்றி நான் என்ன அறிவேன்?..." என்று கூறி வசந்தன் சிரித்தான்.

"அப்படியானுல் விவாகம் செய்து கொள்ளும் உத்தேசமே உனக்கு இல்லை யென்று சொல்லு......" என்று முதலில் பேசியவன் கேட்டான்.

"நமக்கெல்லாம் யாரப்பா பெண் கொடுப்பார்கள்? விட்டுத்தள்ளு......"

பெரியவன் அநுபவத்தின் முத்திரையுடன் மீண்டும் தொடர்ந்தான்: "அதெல்லாம் ஒன்றும் இல்லை. இந்தக் காலத்துப் பையன்களுக்கு, ஆணும் பெண்ணும் சேர்ந்து பேசிப் பழகி அப்படியே ஒன்ருக இருக்க வேண்டும் என்பதுதான் அபிப்பிராயம். விவாகம் என்ருல் அவர்களுக்கு அது ஒரு கால் கட்டு..."

"அப்படியானுல் விவாகம் ஒரு கால்கட்டு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லையா?" என்று வசந்தன் சவால் விடுத்தான்.

"கால் கட்டு என்று ஏன் சொல்ல வேண்டும்? நாமாக விரும்பிச் செய்து கொள்ளுவது தானே?"

"நாமாக வேண்டுமென்று செய்து கொண்டதானுலும் அறியாமல் செய்து கொண்டது. நான் முந்தாநாள் சொன்னேனே, விவாகம் என்பது ஒரு எலிப்பொறிபோல என்று. உள்ளே என்ன என்னவோ தின்பண்டங்களெல்லாம் காணப்படுகின்றன. பாவம், எலி பக்ஷணத்தின் ஆசையால் உள்ளே சென்று விடுகிறது. சென்ற பின் வெளியே வர மார்க்கமில்லை என்பதை

அறிந்து தின்பண்டத்தையும் தின்னுமல் வெளியே வரவும் முடியாமல் திண்டாடுகிறது......"

"இதெல்லாம் உங்கள் கற்பனை......விவாகம் என்பது என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டுமானுல் செய்து கொண்டு பார்க்க வேண்டும்."

"செய்து கொண்டு அல்ல ஸ்வாமீ, செய்து கொள்ளாமல் பார்க்க வேண்டும்! செய்துகொண்டு விட்டால் முடிந்தே போயிற்று!......பிறகு பார்த்தாலென்ன, பார்க்காவிட்டால் என்ன?"

முதலில் பேசியவனுக்குச் சரியான பிடி கிடைத்தாற்போலா யிற்று. உற்சாகத்துடன் அவன் வார்த்தைத் தொடர்ந்தான்.

"அதுதான், அதுதான், நான் சொல்வதும் அதேதான். உங்களுக் கெல்லாம் தாம்பத்தியத்தின் சுகம் மாத்திரம் வேண்டும், ஆனல் அந்தக் கடமை வேண்டாம். அதன் இன்பம் வேண்டும், பொறுப்பு வேண்டாம். அப்படித்தானே?"

"அப்படியானுல் நீங்கள் வசந்தனை என்ன செய்யச் சொல்லு கிறீர்கள்?" என்று மூன்ருமவன் வேண்டுமென்று தூண்டினுன்.

"நான் என்ன சொல்லப் போகிறேன்? சீக்கிரமே நமக்கெல் லாம் விருந்துச் சாப்பாடு போடட்டும் என்றுதான் சொல்லு கிறேன். விவாகம் செய்து கொண்டு சுகமாக இருக்கட்டும். வரும்படியோ வேண்டிய அளவு வந்து கொண்டிருக்கிறது......"

"அது சரி ஸ்வாமி, ஆனல் இது வரையில் எந்தப் பெண்ணைப் பெற்றவரும் தம் கிருபா கடாட்சத்தை என் மீது அநுக்கிரஹிக்க வில்லையே......"

"இந்தப் பேச்சு என்னிடம் வேண்டாம். நீ இப்பொழுது 'உம்' என்று சொல்லு. மூன்று நாட்களில் முப்பது பெண்களைக் கொண்டு வந்து காண்பிக்கிறேன்......"

"ஓஹோஹோ...பெரிய பிரதிக்ஞையாய் விட்டதே..." என் ருன் இரண்டாமவன்.

"சரிதான் சார். அதிகம் சொல்ல வேண்டாம். பெண்க ளென்ருல் கடைத்தெருவில் விற்கும் மாம்பழமா என்ன?" என்று வேண்டுமென்றே கேட்டான் வசந்தன்.

"அதைப்பற்றியெல்லாம் உனக்கென்ன? நீ சொல்லு, கல் யாணம் செய்து கொள்கிறேன் என்று."

"விஷயம் அவ்வளவு சுலபமல்ல ஸ்வாமீ. இந்த நாட்களில் யாரும் பெண்ணைக் கொண்டு வந்து காட்டவே சம்மதிப்பதில்லை. பையனைப் பெற்றவர்கள்தாம் தங்கள் பிள்ளையைக் கொண்டு போய்க் காட்டிவிட்டு வர வேண்டும்" என்று வசந்தன் சிரித்தான்.

"அப்படிப் பார்த்தால் யாரையும் யாருக்கும் காண்பிக்க வேண்டிய அவயமே இல்லை! விடிந்தெழுந்து இருட்டும் வரையில் ஆபீசிலும், தெருக்களிலும், அங்கேயும் இங்கேயும் பார்த்துக் கொண்டே இருப்பவர்களுக்கு இந்த, 'பெண் பார்க்கும் நாடகம்' எதற்காக?"

"விவாகமே ஒரு நாடகம். 'பெண் பார்த்தல்' அந்த நாடகத்திற்குப் பீடிகை. பீடிகை இல்லாமல் நாடகம் ஏது?"

"அப்படியானால் இந்தப் பீடிகை இப்பொழுதெல்லாம் தெருக்களிலேதான் என்று சொல்லுங்கள்."

"விவாகங்களே தெருக்களில் நடந்திருக்கின்றனவாம். பின்பு இந்தப் பெண் பார்த்தலைப்பற்றி என்ன சொல்லக் கிடக்கிறது?"

நண்பர்களின் அரட்டை நடந்துகொண்டே இருந்தது. இது வரையிலும் பேசாமலே உட்கார்ந்திருந்த நான்காவது நண்பன் திடுதிப்பென்று, "எது எப்படிப் போனாலும் சரி. நீங்கள் வீணாக வாதம் செய்ய வேண்டாம். இன்னும் மூன்று மாசத்தில் வசந்தன் கல்யாணம் செய்துகொண்டே தீருவான்" என்றான்.

"அதென்னடா அது! அவனுடைய ஜாதகம் கீதகம் பார்த்து வைத்திருக்கிறாயா என்ன?"

"ஜாதகம் என்னத்திற்கு? ஐயா சொன்னால் சொன்னது தான். பாருங்களேன்!"

"என்னடா அது, என்ன சமாசாரம்? சொல்லடா" என்று ஒருவன் வசந்தனுக்குச் சமீபம் வந்து அவன் முதுகைத் தடவிக் கொடுத்த வண்ணம் ரகசியமாகக் கேட்டான்.

"அடேபோடா. அவனொரு பைத்தியம். பொறியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் எலி! மற்றொரு எலியும் உள்ளே வரட்டுமே என்று பார்க்கிறான்......"

மேலுக்கு வசந்தன் இப்படித் தட்டிக்கழித்தானே ஒழிய உள்ளுக்குள்ளே அவனுக்கு உதைத்துக் கொண்டது. 'எந்த நம்பிக்கையின்பேரில் இவன் இப்படிச் சொல்லுகிறான்? ஒருகால் நானும் மோஹினியும் சேர்ந்து பேசிக்கொண்டிருந்ததை எங்கே

யாவது பார்த்து விட்டிருப்பாளோ?' என்று மனத்தைப் போட்டு அலட்டிக் கொண்டிருந்தான்.

உள்ளேயிருந்து பலகாரமும் டீயும் வந்ததும் விவாகத்தைப் பற்றிய சர்ச்சை நின்றது. வசந்தனின் விவாகத்தில் அவன் நண்பர்கள் காட்டிய ஆவலும் தூரச் சென்றது. ஆனால் வசந்தன் மனமோ வெகு தொலைவிலே சென்று கொண்டிருந்தது. 'ஆனந்தன் மோஹினியை இன்னும் அதிகமாகத் துன்புறுத்தத் தொடங்கினால்?' என்ற எண்ணம் மீண்டும் தோன்றி அவனை வதைத்தது. டீ முடிந்ததும் சீட்டாட்டம் ஆரம்பமாயிற்று. வசந்தன் கையில் ராணிச் சீட்டு வந்தபொழுதெல்லாம் அந்தச் சித்திரத்தின் பின்னிலையிலே மோஹினியின் மோஹன வடிவம் அவன் கண்களில் தோன்றிக்கொண்டிருந்தது.

டீ சாப்பிட்டு முடிந்ததும் மோஹினி தன் சிகையை அலங்கரித்துக் கொள்வதில் ஈடுபட்டாள். கழுத்தைக் குலுக்கிக் குலுக்கி எதிரே யிருந்த கண்ணாடியில் ஓரிரு முறை தன்னையே பார்த்துக் கர்வங் கொண்டாள். மனம் மத்தியான்னம் அவள் கண்ட கனவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவை அதை நினைத்துக் கொண்டபொழுது அவள் உடல் மயிர்க்கூச் செறிந்தது. ஒவ்வொரு முறை முகம் சிவப்பேறியது. நடுநடுவே, தன்னுடன் இருந்தவன் வசந்தன் என்பதை நினைத்துக் கொண்ட பொழுது மனம் நாணிற்று; அதோடு கூட இது சரியல்ல என்றும் தோன்றிக் கொண்டிருந்தது. அந்த எண்ணத்தைத் தொடர்ந்து வசந்தன் பால் தன் உணர்ச்சிகள் எத்தகையனவாய் இருக்கின்றன என்பதை ஆராயத் தொடங்கினாள். தனக்கும் வசந்தனுக்கு மிடையே வளர்ந்து விட்டிருந்த அநுதாபமும், அன்பும் எந்த வகையைச் சார்ந்தவை என்பதைக் குறித்து எண்ண மிடலானாள். வசந்தனது மிருதுவான சுபாவம், அந்தச் சுபாவத்திற் கேற்ப, துன்புறுபவர்கள் பால் அவனுக்கு ஏற்பட்டுள்ள அநுதாப உணர்ச்சி, ஓரிரு முறையே என்றாலும் ஸ்பஷ்டமாக அவனால் வெளியிடப் பட்ட அவனது சௌந்தரிய மோகம் இவையெல்லாம் மோஹினியின் மனத்தைக் கொள்ளை கொண்டன. அவள் மனம் அடிக்கடி அவனைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டது. அந்த ஆசையில் ஆனந்தனுக்குத்

தன்னால் எந்த வகையிலும் துரோகம் சம்பவிக்க வில்லை என்று அவள் நம்பினாள். வசந்தன் எவ்வளவு நெருங்கத் தக்கவனானாலும் தான் ஆனந்தனின் மனைவி—அவனது துர்ப்பாக்கிய மனைவி—என்ற எண்ணத்தையும் மறப்பது அவளால் இயலவில்லை. அதனாலே, வசந்தனுடன் கனவிலே ஒரு கணம் அவள் அநுபவித்தது போன்ற ஆனந்தம் கனவிலல்லாமல் வாழ்க்கையில் ஆனந்தனுடன் அநுபவிக்க முடியவில்லை; இனிமேலும் அநுபவிக்கும்படியான அறிகுறிகள் இல்லை என்பதை நினைத்துக் கொண்ட பொழுது அவளுக்குத் துக்கம் பொங்கி வந்தது.

இப்படியாக அவள் மனம் ஒரு நிலையின்றித் தத்தளித்துக் கொண்டே இருந்தது. ஒரு புறம் நினைவை விட்டு அகற்றமுடியாத அந்தக் கனவில் கண்ட இன்பம்; மற்றொருபுறம் அவைகளைத் தொடர்ந்து வந்து அந்த இன்ப நினைவுகளைப் பாழாக்கிக்கொண் டிருந்த தனது வாழ்க்கையின் கடுமையான உண்மை நிலை! ஒரு புறம் வசந்தன்! மற்றொருபுறம் ஆனந்தன்!

மோஹினி பின்னலைப் பின்னிக் கொண்டே இருந்தாள். வாசலில் பூக்காரி அழகிய மல்லிகை மலர் மாலைகளைக் கொண்டு வந்தாள். விழிப்புற்றிருந்த போதிலும் இன்னும் கனவிலேயே இருப்பதாக உணர்ந்த மோஹினி மாலையை வாங்க வேண்டு மென்று நினைத்தாள். கடந்த ஆறேழு மாதங்களில் ஒரு நாள் கூட அவள் பூ வைத்துக் கொள்ளவில்லை. இப்பொழுது மாத்திரம் ஏன் வாங்க வேண்டும் என்று தோன்றியது ஒரு முறை. அவளது தடுமாற்றத்தைக் குறிப்பால் அறிந்து கொண்ட பூக்காரி, "எடுத்துக் கொள்ளம்மா, மாலை அழகாக இருக்கிறது!" என்றாள்.

"வேண்டாமடி...வேண்டாம்..."

"எடுத்துக் கொள்ளம்மா. உன்னைப் போல இருப்பவர் களெல்லாம் பூ வைத்துக் கொள்ளாவிட்டால் வேறு யார் தான் வைத்துக் கொள்வார்கள்?"

"வேண்டாம் அம்மா. ஏன் சும்மா? வேறே எப்பவாவது வாங்கிக் கொள்ளுகிறேன்."

"சரிதான் வாங்கிக் கொள்ளம்மா. மகாலட்சுமி போல இருக்கே. என் பூவை வைத்துக் கொண்டு பார். உன் ஐயா சொக்கிப் போவாரு!" என்று கூறிச் சிரித்தாள் பூக்காரி.

"வாங்கிக்கோ, மோஹினி. புஷ்பம் வேண்டாமென்று யாராவது சொல்லுவார்களா?" என்று அவள் தாய் உள்ளிருந்தபடியே தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

அன்று சாயங்காலம் மோஹினி வெளியே உலாவச் சென்ற பொழுது அவள் கூந்தலில் சூடியிருந்த மல்லிகை நன்ருக மலர்ந்திருந்தது. அவள் மனத்திலே மத்தியான்னம் கண்ட கனவு மீண்டும் மலர்ந்திருந்தது. ஒன்றைப் போல இன்னென்றும் மனத்தை மயக்குவதாய் இருந்தது.

* * *

மறுநாள் தாதரிலிருந்து போரிவிலிக்குத் திரும்பிய வசந்தன் ஸ்டேஷனிலிருந்து தன் அறைக்குச் செல்லும் பொழுது மோஹினியின் வீட்டைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. அவள் வீட்டெதிரே வந்ததும் மிகவும் மெதுவாகவே நடந்து சென்ருன்—முடியுமானல், அகஸ்மாத்தாக மோஹினி வெளியே வந்தால் ஒரு முறையாவது பார்க்கலாமே என்று! சாயங்காலமும் அப்படியே. ஆனல் வசந்தனின் ஆசை ஈடேறவில்லே. மறுநாள் காலே வழக்கப்படி ரெயிலுக்கும் மோஹினி வரவில்லே. 'ஏதோ தடை ஏற்பட்டிருக்கும். அடுத்த வண்டிக்கு வந்து விடுவாள்' என்று நினைத்துக் கொண்டு வசந்தன் தானும் காத்துக் கொண்டு நின்ருன். மோஹினி அப்பொழுதும் வரவில்லே. அவன் அன்று ஆபீஸுக்கு நேரங்கழித்துச் செல்ல வேண்டியதாயிற்று. சாயங்காலம் வழக்கமாக அவள் திரும்பும் வண்டியிலும் காத்திருந்து பார்த்து ஏமாற்றம் கொண்டான். மறுநாளும் அதே கதை. வசந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மோஹினி எங்கே மறைந்து விட்டிருப்பாள்? தன்னைப் பற்றியே அவள் வீட்டில் ஏதாவது எக்கச் சக்கமாக நடந்து போய் அவள் ஒரு மூலேயில் உட்கார்ந்து விட்டாளோ என்று சந்தேகித்தான். அவளேக் காணவும் சமாசாரத்தை அறிந்து கொள்ளவும் அவன் செய்த பிரயத்தனங்களெல்லாம் பலனற்றவையாகப் போகவே அவன் மனம் மிகவும் நிராசை யடைந்தது. எவ்வளவு தான் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டாலும் கூட அன்று முழுவதும், ராத்திரியும் ஏதோ ஒரு குறை, சஞ்சலம், வருத்தம் அவனே வதைத்துக் கொண்டிருந்தது.

அந்த வாரம் முழுவதும் வசந்தன் மோஹினிக்காக எங் கெங்கோ தேடினன். அவர்கள் வீட்டெதிரே எவ்வளவு முறை சென்றிருப்பானே! நாராயணராவை அவனுக்கு அரை குறை யாகத் தெரியும். அப்படியில்லாமல் அவர் முழுதும் பரிசய மில்லாதவராக இருந்தாலாவது ஏதேனும் சாக்கு வைத்துக் கொண்டு ஒரு முறை அவர் வீட்டுக்குள் போய் விட்டு வரலாம்! என்று தோன்றியது. மோஹினி இவ்வளவு அருகிலிருந்தும் கூட எவ்வளவு தொலேவாகப் போய் விட்டாள்! அவள் இருக்கும் வீடு அவனுக்குத் தெரியும்! அவள் ஆனந்தனின் மனேவி என்பதும் அவனுக்குத் தெரியும்! இவைகளேத் தவிர அவள் என்ன வானள் என்பதைத் தெரிவிக்கக் கூடிய வேறு எந்த அம்சமும் தனக்குத் தெரியாது என்பதை நினேத்த பொழுது வசந்தனுக்கு விசித்திரமாக இருந்தது. அவள் காலேஜுக்குப் போகிருள். ஆனல் பம்பாயில் உள்ள கணக்கற்ற காலேஜுகளில் அவள் படிப்பது எதிலோ? அப்படித்தான் எந்தக் காலேஜ் என்பதைத் தெரிந்து கொண்டாலும் அங்கே போய் யாரை, என்ன வென்று கேட்பது? கடைசியில், சனிக்கிழமை சாண்டாக்ரூஸில் சந்தித் திருக்க வேண்டியவள் அடுத்த சனிக்கிழமை வந்தும் கூட எங்கேயும் காணப்படாமலிருக்கவே வசந்தன் நினேத்தான்: 'ஏதேனும் சம்பவம் நடந்தே இருக்க வேண்டும். அதன் பயனுக அவள் எங்கேயாவது ஊருக்குச் சென்றிருக்க வேண்டும். இனி அவளேப் பார்க்க வேண்டு மானல் அகஸ்மாத்தாக எப்போதாவது காணப்பட்டால்தான். இல்லாவிட்டால் ஆனந்தனேயோ பாஸ் கரனேயோ சந்தித்தால் அவர்களுடன் பேசும் பொழுது சாமர்த் தியமாகப் பேச்சுக் கொடுத்து அவளேப் பற்றிய சமா சாரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லே' என்று ஒரு தீர்மானத்திற்கு வந்தான். இந்த ஒரு வாரத்தில் அவனது நிராசை எவ்வளவோ குறைந் திருந்த போதிலும் மோஹினியை நினேத்துக் கொள்ளும் போது மாத்திரம் அவள் இல்லாத குறை ஒரிரு கணம் அவனே வாட்டிக் கொண்டிருந்தது.

## 5

மோஹினி பூனவுக்கு வந்து மூன்று வாரங்கள் ஆகியிருந் தன. மறுநாள் காலே வண்டியில் பம்பாய்க்குத் திரும்பிச்

செல்லத் திட்டமிட்டிருந்தாள். பரீக்ஷை ஆரம்பிப்பதற்கு இரண்டே நாட்கள் தான் இருந்தன. ஆகையால் அன்று மத்தியான்னத்திலிருந்தே அவள், புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தாள். கடைவீதிக்குச் சென்று சில சாமான்கள் வாங்க வேண்டியிருந்ததால் சீக்கிரமே அலங்காரத்தை முடித்துக் கொண்டு புறப்படத் தயார் செய்துகொண்டாள். தாய் பக்கத்து வீட்டில் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். கண்ணாடியில் மற்றொரு முறை முகத்தைப் பார்த்துக்கொண்டு தன்னுடைய 'ஹாண்ட் பாக்' கைக் கொண்டு வருவதற்காகத் தனது அறைக்குச் செல்லத் திரும்பியவள், தலைவாசலில் யாரோ வந்துகொண்டிருப்பதைக் கண்டு நின்று கவனித்தாள். வந்தவன்—பாஸ்கரன்!

மோஹினி நின்ற இடத்திலேயே நின்றாள். முதல் முதலாக அவள் மனத்தில் தோன்றிய எண்ணம் வீட்டில் வேறு யாரும் இல்லை என்பதுதான்! பாஸ்கரன் தானே முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"பள்ளிக்கூட விஷயமாகக் கொஞ்சம் வேலையிருந்ததால் நேற்று வந்தேன். அப்படியே பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். ஒன்றும் விசேஷம் இல்லை."

"ஊம்."

"தாய் வீட்டில் இல்லையா?"

"இல்லை. ஏன்? அவளைப் பார்க்கவேண்டுமா?"

"அப்படி யொன்றும் இல்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்டேன். இருந்தால் பார்த்து விட்டுப் போகலாம்......"

தாய் வீட்டில் இல்லாதது நல்லதே ஆயிற்று என்று பாஸ்கரன் உள்ளுக்குள்ளேயே ஆனந்தமடைந்திருக்க வேண்டும். அவன் எண்ணத்தை அறிந்து கொண்ட மோஹினி உடனே தெரிவித்து விட்டாள்.

"இங்கே பக்கத்து வீட்டிலேதான் இருக்கிறாள்......கூப்பிடுகிறேன்."

பாஸ்கரன் மோஹினியைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான். அப்பொழுதுதான் நன்றாகத் தன்னை அவள் அலங்கரித்துக் கொண்டிருந்தாள். மிகவும் அழகுடன் காணப்பட்டாள். அன்றி, கடந்த இருபது நாட்களாகத் தாயின் அன்புப் பார்வையின் கீழ் இருந்ததனாலோ என்னவோ, பம்பாயி

விருந்து புறப்பட்ட பொழுது இருந்ததைவிட உடம்பு நன்ருகத் தேறி வளர்ச்சியுற்றி ருந்தாற்போன்று காணப்பட்டது.

மோஹினி பாஸ்கரனை வாசலில் கண்டது முதல் ஒரே கேள்வியால் பீடிக்கப்பட்டாள். 'பாஸ்கரன் எதற்காக வந்திருக்கக் கூடும்?' என்பது தான் அந்தக் கேள்வி. அவன் கூறிய காரணம் அவ்வளவு பொருத்தமாக இருக்க வில்லை. அது உண்மையான காரணமாக இருக்கும் என்றும் அவளுக்குத் தோன்றவில்லை. ஏதோ ஒரு சாக்குச் சொல்லிக்கொண்டு தன்னைக் காணவே அவன் வந்திருக்க வேண்டுமென்று அவள் சந்தேகமடைந்தாள். உண்மை யும் அதுவே தான். கடந்த மூன்று வாரங்களில் மோஹினிக்காகப் பூனுவுக்குப் போய் வரவேண்டுமென்று பாஸ்கரன் எவ்வளவோ முறை நினைத்துக் கொண்டான். ஆனல் அதற்கு நேரம் கிடைக்கா ததால் வர முடியவில்லை. கடைசியில் ஆனந்தனை இரண்டொரு முறை சந்தித்து மோஹினி பம்பாய்க்குத் திரும்பி வரும் நாளைத் தெரிந்து வைத்துக் கொண்டான். பம்பாயிலிருந்து அவள் புறப் பட்ட பொழுது அவளுடன் சேர்ந்து பிரயாணம் செய்ய அவன் போட்ட திட்டம் பலிக்க வில்லை. எனவே அவள் திரும்பி வரும் போதாவது அவளைச் சந்திக்கலாமென்று நினைத்துச் சரியான நாளைத் தெரிந்து கொண்டு, அன்று மத்தியான்னமே பூனுவுக்கு வந்திருந்தான். முதல் நாளே அவன் வந்ததாகச் சொன் னதும் பொய். பம்பாயிலிருந்து வந்து பூனு ஸ்டேஷனில் இறங் கியதும் நேராக மோஹினியின் வீட்டிற்குத்தான் வந்திருந்தான்.

அவனுடன் என்ன பேசுவது என்று மோஹினிக்கு விளங்க வில்லை. கடைசியில் பாஸ்கரனே கேட்டான்.

"நீ நாளைக்குத்தானே புறப்படுகிருய்?"

"ஏன்?"

"பரீக்ஷை வந்துவிட்டதாமே. ஆனந்தன் சொன்ஞன்......"

"என்னவென்று சொன்ஞர்?"

"பரீக்ஷைக்காக இன்று அல்லது நாளை புறப்பட்டு வருவாய் என்று சொன்ஞன்."

"ஆமாம். புறப்படவேண்டும்..."

"எப்பொழுது?" பாஸ்கரன் சம்சயத்துடனே கேட்டான்.

மோஹினிக்கு அவனது அந்தரங்கம் புரிந்தது. உண்மையைச் சொன்ஞல் பாஸ்கரன் கண்டிப்பாகத் தன்னை விடாமல் பின்

பற்றுவான் என்பதை அறிந்து கொண்டு வேண்டுமென்றே பொய் சொன்னாள்.

"நாளை நின்று மறுநாள் பரீக்ஷை ஆரம்பம்......நாளைக்கு மத்தியான்னம் வண்டிக்குப் புறப்பட்டால் போதும்......"

"மத்தியான்னம் மிகவும் வெயிலாயிற்றே? காலை வண்டியிலேயே போனால் நல்லது......"

தான் நினைத்தது சரி என்று தோன்றியது மோஹினிக்கு.

"காலையில் என்றால் அவசர அவசரமாகப் புறப்பட வேண்டும். அதுவுமல்லாமல் அம்மா சாப்பிட்டு விட்டு மத்தியான்ன வண்டிக்கே போ என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள்..."

இருவரும் மீண்டும் பேசாதிருந்தனர். பாஸ்கரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனத்திலே என்ன எண்ணங்கள் தாண்டவம் புரிந்து கொண்டிருந்தனவோ!

"நீங்கள் எப்பொழுது புறப்படுகிறீர்கள்?" என்று மோஹினி அவனைக் கேட்டாள்.

"என்னுடையது ஒன்றும் நிச்சயமில்லை. பார்க்கவேண்டும். இன்னும் வேலை முடியவில்லை. இன்று சாயங்காலத்திற்குள் வேலை முடிந்து விட்டால் நாளைக் காலையிலே புறப்பட்டு விடுவேன். நீ மத்தியான்ன ரெயிலில் போவதானால்"......என்று பாதியில் நிறுத்தினான் அவன்.

"எனக்காக நீங்கள் தாமதிக்க வேண்டாம். வீணில் உங்களுக்குத் தொந்தரவு..." என்று உபசாரமாக மேலுக்கு அவள் கூறிய போதிலும், 'உங்கள் மனத்தில் இருப்பது எனக்குத் தெரியும். வாயை மூடிக்கொண்டு உங்கள் வழியைப் பார்த்துக்கொண்டு போங்கள்' என்று கூறும் பாவம் அவள் முகத்தில் இருந்தது. ஆனால் பாஸ்கரன் அவ்வளவு சுலபத்தில் விட்டு விடுபவனாக இல்லை.

"இதிலென்ன தொந்தரவு? சேர்ந்தே போனால் போயிற்று" என்றான்.

"எனக்கு யாரும் கூட வரவேண்டியதில்லை. வரும்போது தனியே வரவில்லையா?" என்று மோஹினி கொஞ்சம் சிடுசிடுப்போடேயே கூறினாள். பாஸ்கரனுக்கு முகத்திலடித்தாற்போலாயிற்று.

தட்டித் தடுமாறிக்கொண்டே, "என்னவோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். அதுவுமல்லாமல் ஆனந்தனும் ஒரு வார்த்தை சொல்லியிருந்தான்......"

"என்ன வென்று?"

"நான் திரும்பும்போது நீயும் வந்தால் கூட அழைத்துக் கொண்டு வா என்று." பாஸ்கரன் இப்படிக் கூறியது முழுப் பொய்.

"அவர் அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டார். கண்டிப்பாகச் சொல்லியிருக்க மாட்டார்!" என்றாள் மோஹினி. பாஸ்கரனுக்கு மீண்டும் முகத்திலறைந்தாற் போலிருந்தது அவள் கூறியது. இது வரையிலும் அவர்கள் பேச்சிலே நிலவிய சாந்தம் வெறும் வேஷம் என்பது இருவருக்கும் தெரியலாயிற்று. அடிபட்ட பாஸ்கரனின் பொறுமை சிறிது சிறிதாகக் கரைந்து கொண்டு வந்தது. ஆனால் அவனால் ஒன்றும் செய்யக் கூடவில்லை.

"உனக்கு என் மீது நம்பிக்கை இல்லை. ஆனால் என்னை நம்பாமல்......"

"நம்பாமல்?"

"உனக்குக் கதியில்லை. இதைத் தெரிந்துகொள்......"

மோஹினியால் இதற்குமேல் பொறுக்க முடியவில்லை. கடு கடுப்புடனே அவள் கூறினாள்: "உங்கள் மனத்தில் இருப்பது எனக்குத் தெரியும். நீங்கள் வந்தது எதற்காக என்பதும் தெரியும். உங்களை நம்புவதும் நம்பாததும் பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம். ......இப்பொழுது இங்கே வேறென்ன வேலை? நான் வெளியே போக வேண்டும்......அம்மாவைக் கூப்பிடுகிறேன். அவளுடன் பேசிக்கொள்ளுங்கள்......" என்று வாசலை நோக்கிச் சென்றாள் மோஹினி.

"வேண்டாம். அம்மாவை ஏன் அழைக்கிறாய்? பேசிக் கொண்டிருக்கிறாளோ என்னவோ. எனக்கொன்றும் முக்கியமாகப் பேசவேண்டியதில்லை. வெறுமே பார்த்துக்கொண்டு போகலாமென்றுதான் வந்தேன்" என்று கூறிப் புறப்படத் தயாரானான் பாஸ்கரன்.

மோஹினி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள், "எனக்குத் தெரியும் 'பார்த்துவிட்டுப் போகும்' லட்சணம். பம்பாயில் எவ்வளவு முறை பார்த்ததில்லை?" என்று. ஆனால் பாஸ்கரன்

புறப்பட்டே விட்டதைக் கண்டு சமாதான மடைந்து உபசார வார்த்தைக்காக, "அப்படியானல் போய்விட்டு வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஊம்" என்று கூறிவிட்டுப் பாஸ்கரன் புறப்பட்டு விட்டான். ஆனல் போவதற்கு முன்பு மீண்டும் ஒரு முறை கேட்டான்.

"அப்படியானல் நீ நாளை மத்தியான்னம்தான் புறப்படு கிருயா?"

"ஆம்" என்ருள் மோஹினி.

பாஸ்கரன், "என்னைப்பற்றி ஒன்றும் நிச்சயம் இல்லை. பார்ப் போம்......" என்று உபசாரமாகக் கூறிவிட்டுத் தெருவில் இறங்கி நடந்தான். 'நாளை மத்தியான்ன வண்டிக்குப் புறப்படுவ தாகச் சொல்லிச் சனியனைத் தட்டிக் கழித்தாயிற்று' என்று மோஹினி சமாதானமடைந்தாள். பாஸ்கரனே, 'எப்படியும் அவள் புறப்படும் வண்டியையாவது தெரிந்துகொள்ள முடிந்ததே' என்று மனச்சமாதானம் அடைந்தான். 'எங்கே தப்பி ஓடுகிருள் பார்ப்போம். நாளை மத்தியான்ன வண்டியில் பார்த்தே தீருவது' என்றும் தீர்மானம் செய்து கொண்டான்.

மோஹினி கடைவீதியிலிருந்து திரும்பி வந்தபொழுது தாய் வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள். மகள் மறுநாள் தான் புறப்படுகிருள் என்ருலும் அப்பொழுதிருந்தே தாயின் உள்ளத்தைப் பிரிவினை ஏக்கம் பிடித்துக் கொண்டது. அவள் இதய வேதனையைப்போலவே வெளியேயும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

"மோஹினி, என்ன இவ்வளவு நேரம் செய்து கொண்டு விட்டாய்? இருட்டிப்போய் விட்டதே! இவ்வளவு நேரம் என்ன செய்தாய்?"

"என்ன செய்வது. திரும்பும்பொழுது பஸ்ஸுக்காகக் காத் துக் காத்துப் போதும் என்ருய்விட்டது. கடைசியில் நடந்தே வந்து விட்டடேன்!"

"பாவம்! எவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிருய்! கால் வலி எடுத்திருக்குமே. இல்லையா?" என்ருள் தாய். அவளது வாத்ஸல்யத்தை நினைத்து மோஹினிக்குத் துக்கம் உண்டாயிற்று. தன்னைத்தவிர தன் தாய்க்கு வேறு யார் இருக்கிருர்கள்? ஆனல்

அந்தத் துக்கத்திலே சுகமும் இருந்தது. "இவ்வளவு நேரம் என்ன செய்தாய்?" என்ற கேள்வி பம்பாயிலும் வழக்கமாகக் கேட்கப்படும் கேள்விதான். அதே கேள்வியைத்தான் இப்பொழுது அவள் தாயும் கேட்டாள். ஆனால் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம்! "எவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறாய்!" என்று தாய் கேட்டாள். பம்பாயில் தன்னை இப்படி விசாரிப்பவர்கள் யார்? இதை நினைத்துக் கொண்டபொழுது அவள் கண்களில் நீர் துளித்தது. தாய்-மகள் இருவருடைய இதயவீணைகளிலும் ஒரே தந்தி மீட்டப்பட்டது.

"நாளைக்கு நீ போகத்தான் வேண்டுமா, மோஹினி?"

"நாளை நின்று மறுநாள் பரீக்ஷை. நாளைக்குப் புறப்படாவிட்டால் எப்படி?"

"நாளைக்கு மத்தியான்னமாவது புறப்படு. சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!"

"வேண்டாம் அம்மா. காலையிலேயே புறப்பட்டுப் போகிறேன். நான்கு மணி நேரத்தில் என்ன வந்துவிட்டது?"

தாய் பேசாமலிருந்தாள். ஒன்றரை வருஷமாக ஒரு முறை கூடத் தன் மகளைப் பார்த்திராத அந்தத் தாயின் இதயம் இன்னும் ஒரு நான்கு மணிநேரம் அதிகமாகத் தன்னுடன் அவள் இருக்கட்டும் என்று ஆசைப்பட்டது ஆச்சரியமல்ல. மோஹினிக்கும் தன் தாயின் இதய வேதனை தெரிந்துதான் இருந்தது. ஆனால் மத்தியான்ன வண்டி என்று நினைத்தாலே பாஸ்கரனின் ஞாபகம் வந்து அந்த எண்ணத்தைக் கைவிடும்படிச் செய்தது. அன்று சாயங்காலம் பாஸ்கரன் வராமலிருந்தால், மோஹினி தாயின் இச்சைப்படி மத்தியான்ன வண்டியிலேயே போக ஒத்துக் கொண்டிருப்பாள்.

தன் தாயின் ஒவ்வொரு வார்த்தையிலும் காணப்பட்ட ஓர் அசுவாரஸ்யத்தைக் கண்டு பொறுத மோஹினி கடைசியாகத் தாயைக் கேட்டே விட்டாள். "ஏனம்மா, ஏன் இவ்வளவு அல்லல் பட்டுக் கொள்ளுகிறாய்? காலையிலிருந்து நானும் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்."

"என்னவோ, வெகு நாள் கழித்து வந்திருக்கிறாயே, இன்னும் நான்கு நாட்கள் இருப்பாய் என்றிருந்தேன்......"

"ஆம் அம்மா. நான்தான் என்ன செய்யட்டும்? பரீக்ஷைக்குப் போகாமலிருந்தால் வியர்த்தம். எனக்கு மாத்திரம் புறப் பட்டுப் போக மனசு இருக்கிறதென்று நினைத்தாயா?

"இருபது நாளும் எப்படி ஓடிப்போயிற்ளே, தெரியவில்லையே, மோஹினி."

"எனக்கும் அப்படியே. பம்பாயில் எவ்வளவோ வேலைகள் இருந்த போதிலும் நாட்களை எண்ணிக்கொண்டே கழிக்க வேண்டியிருந்தது. இங்கே ஒரு வேலை வெட்டி இல்லாமல் உட்கார்ந்திருந்தும்கூட நாட்கள் எவ்வளவு சிக்கிரம் ஓடி விட்டன!"

"நீ புறப்பட்டுப் போகிருயே என்றுகூட எனக்கு வருத்தமில்லை. இங்கே எவ்வளவு நாள்தான் உட்கார்ந்திருக்க முடியும்? ஆனல் இனி உன் கதி எப்படி என்று......"

"ஆவது ஆகட்டும். அதற்கு யோசித்து வருத்தப்பட்டு என்ன ஆகப்போகிறது?"

"உன் எஜமானரின் பரீக்ஷையும் முடியட்டும். பிறகு மறுபடியும் சொல்லிப்பார். அவர் மனத்தை மாற்றப் பிரயத்தனம் செய்."

"இப்பொழுது எவ்வளவு முறை பிரயத்னம் செய்ய வில்லை? இனி என்ன ஆக வேண்டியிருக்கிறது? தெய்வந்தான் அவரைச் சரியான வழிக்குத் திருப்ப வேண்டும்" என்று மோஹினி மனத்தில் சொல்லிக் கொண்டாலும் அதை வேளியே சொல்லித் தாயின் மனத்தை நோக வைப்பானேன் என்று முணு முணுத்தாள், "ஊம். நீ சொல்கிறபடியே செய்கிறேன்" என்று.

"என்ன ஆனலும் அவர் புருஷன். நீதான் அவரை வழிக்குக் கொண்டுவர வேண்டும்."

"அவர் மாத்திரமானல் விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கவே இருக்காது. மற்றவர்களின் கிருத்திருமத்தினலே தான் இவ்வளவு தொந்தரவும்......"

"அதை அவர் தெரிந்து கொள்ளும்படி செய். சொல்லிப் பார்......"

"சொன்னல் அவருக்கு அசாத்தியக் கோபம் வந்துவிடுகிறது. கோள் சொல்லுகிறேனென்று நினைத்துக் கொள்கிருர்."

"உண்மையைச் சொல்லுவதற்குப் பயம் ஏன்?"

"அவர் நம்பவேணுமே?"

"ஆயிற்று. எவ்வளவு நாள் நடக்கும்?......நீயே கூடுமான வரையிலும் அடங்கிப்போ......"

இருவரும் சிறிது மௌனமாக இருந்தனர். மோஹினி யோசிக்கத் தொடங்கினாள்:

'அடங்கிப் போவதென்றால் எப்படி? அவர்கள் கால் தூசியாக விழுந்துகிடக்க நான் ஒப்பினால் மாத்திரம்தான் அது முடியும். ஆனால் அது என்னால் இயலாத காரியம்' என்று. ஆனால் தாய் வருத்தப்படுவாளே யென்று மீண்டும் அவள் பேசாதிருந்தாள்.

ராத்திரி சாப்பிடும்பொழுதுகூட மோஹினி கொஞ்சம் அதிகமாகவே சாப்பிட்டாள். பிறகு தாயைப் பார்த்துச் சொன்னாள்: "பாரம்மா, நீ பரிமாறினாலே எப்பவும் இப்படித்தான். இன்றைக்கு எனக்கு வயிறு வெடித்துவிடும் போல் இருக்கிறது."

"சரிதாண்டி. நீயும் உன் பேச்சும். அப்படி எவ்வளவு சாப்பிட்டு விட்டாய் இப்போது?"

"அப்படியானால் இன்னும் எவ்வளவு சாப்பிட வேண்டுமென்கிறாயம்மா?"

"என்னவோ பரிமாறினேன். நீ வெறுமே பேசிக்கொண்டுதான் இருக்கிறாய். இன்று ஒரு நாளாவது வயிறு நிறையச் சாப்பிடம்மா. நாளையிலிருந்து மறுபடியும் இருக்கவே இருக்கிறது......"

மோஹினிக்குத் தொண்டை அடைத்துக்கொண்டு வந்தது. தாய் கூறுவதும் உண்மை என்பதை உணர்ந்தாள். நாளை பம்பாய்க்குப் போய்விட்டால் பிறகு 'இன்னும் கொஞ்சம் சாப்பிடு' என்று அன்போடு சொல்லக்கூடியவர்கள் அங்கே யார் இருக்கிறார்கள்? இதை நினைத்துக்கொண்டதும் அவள் உள்ளம் வேதனையால் அறுபட்டது. தன் உணர்ச்சிகளைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு தாயின் சமாதானத்திற்காகப் பேசினாள்:

"நீ ஏன் வருத்தப்படுகிறாய் அம்மா? எல்லாம் சரியாகப் போய்விடும். அவருடைய பரீக்ஷை மாத்திரம் முடியட்டும், பார்ப்போம். எல்லாம் தானே சரியாகிவிடும்."

"ஆகட்டுமடியம்மா. உன் பேச்சுப் பலிக்கட்டும். சத்திய நாராயணனுக்குப் பூஜை செய்விக்கிறேன். நீ சுகமாக இருக்க வேணுமடி பெண்ணே...நீ சுகமாக இருக்க வேண்டுமென்பதொன்றே இனி என் பிரார்த்தனை..." என்று கண்ணீர் பெருக்கி

ளுள் தாய். மோஹினியாலும் கண்ணீரை அடக்கிக்கொள்ள முடியவில்லை. தாயும் மகளும் மனம் விட்டு அழுதனர். சுகத்தோடு கூடிய எதிர்காலத்தை இருவரும் ஆசித்தனர். அதற்காக முறையிட்டார்கள். பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். எதிர் காலம் எப்படியிருக்குமோ என்று அறியாமல் வருந்தினர். ஒருவருக்கொருவர் தாங்களே சமாதானம் செய்து கொண்டனர்.

* * *

மோஹினியும் அவள் தாயும் அவளது எதிர்காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த அதே வேளையில் அங்கே ஆனந்தனும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். போரிவிலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு 'லோக'லில் ஒரு மூலை ஆசனத்தில் அமர்ந்து ஒரே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டான். 'பரீக்ஷையோ வந்து விட்டது. இன்னும் பத்து நாட்களில் முடிந்தும் போய்விடும். பிறகு?...அக்காவின் வீட்டிலிருந்து கொண்டு மீண்டும் முன் போலவே பிரதி தினமும் ஏதாவதொரு சம்பவம் நடக்கவிடாமல், இருவரும் எங்கேயாவது தனியாகக் குடித்தனம் ஆரம்பிக்கலாமா? ஆனால் இவ்வளவு நாட்களாக அக்காவின் வீட்டில் உட்கார்ந்துகொண்டு அவளால் போஷிக்கப்பட்டு, அவள் கணவர் மூலமே வேலையையும் சம்பாதித்துக்கொண்ட நான் இப்பொழுது திடீரென்று வேறுகப் பிரிந்து போவது எப்படி? நாராயணராவ் இதற்கு ஒப்புக்கொள்ளக்கூடும். ஆனால் அது மனப் பூர்வமான சம்மதமாக இல்லாமல், 'தொந்தரவு இல்லாமல் போனால் போதும்' என்ற அலுப்பிலும் வெறுப்பிலும் கொடுக்கும் சம்மதமாக இருக்கும். இதையெல்லாம் சரிப்படுத்திக் கொண்டு தனிக் குடித்தனம் வைத்து விடுவது என்று நிச்சயம் ஆனால் வீடு கிடைக்க வேண்டுமே. அதுவோ மிகவும் அசாத்தியமானது. அப்படியானால் வேறு என்னதான் செய்வது?'...... எவ்வளவு யோசித்தாலும் ஆனந்தனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. நடு நடுவே மோஹினியின் உருவம் அவன் கண்ணெதிரே நின்றது. மனம் அவளை நேரில் பார்க்க ஆசைப்பட்டது. அவளைப் பார்த்து மூன்று வாரங்களாகி யிருந்தன. மறு நாள் வருவாள். ஸ்டேஷனுக்குப்

போக வேண்டும்........' என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே வண்டி தாதரில் வந்து நின்றது.

ஏகப்பட்ட கும்பல். இறங்க முற்படுபவர்கள் பத்துப்பேர் என்றால் உள்ளே ஏற முயன்று கொண்டிருந்தவர்கள் இருபது பேர். ஆனந்தன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே ஜனங்களின் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த இரண்டு மூன்று பேரும் எழுந்திருந்து போய்விட்டதால் கொஞ்சம் விசிராந்தியாகக் கால்களை நீட்டிக் கொண்டு தாராளமாக உட்கார்ந்து கொண்டான். ஜனங்கள் திமுதிமு வென்று உள்ளே ஏறிக் கொண்டே இருந்தனர். பெண்கள்,தாங்கள் பெண்கள் என்பதையே மறந்தும், புருஷர்கள், பக்கத்தில் பெண்கள் இருக்கிறார்களென்பதை அறியாமலோ, அறிந்துமே வேண்டுமென்றே அவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டும் வண்டியில் ஏறினர். ஆனந்தன் பார்த்துக்கொண்டே இருந்தான். கும்பல் சிறிது தணிந்ததும் மெதுவாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்—வசந்தன்! ஆனந்தன் உட்கார்ந்த இடத்திலிருந்தே அவனை அழைத்தான்.

"ஹலோ, வசந்தராவ்..."

"ஓ......"

"வா, இப்படி வா."

"எங்கே, இடமே இல்லையே?......"

"வா வா, இதிலேயே உட்கார்ந்து கொள்ளலாம்......" என்று கொஞ்சம் நகர்ந்து இடம் உண்டாக்கிக் கொடுத்தான் ஆனந்தன். நடுவிலே நின்று கொண்டிருந்த ஜனக்கும்பலைத் தாண்டி வசந்தன் ஆனந்தனுக்கருகில் சென்று கிடைத்த சிறு இடத்தில் அமர்ந்து கொண்டான்.

"என்ன இவ்வளவு நேரமாய் விட்டது இன்றைக்கு?" என்று கேட்டான் ஆனந்தன்.

"நேரமென்ன? ஏறக்குறைய இந்த வேளைக்குத்தான் நான் வழக்கமாகத் திரும்பிப் போவது. தாதரில் சாப்பிட்டுவிட்டுப் புறப்படுவதற்கு இந்த நேரம் எப்படியும் ஆகிவிடுகிறது.

வசந்தனுக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. 'மோஹினி இவனுடைய மனைவி. என்னோடு எவ்வளவு நம்பிக்கையுடன் பேசித் தன் துக்கத்தையெல்லாம் என்னிடம் சொன்னாள்!'

இவனைவிட அவளே வசந்தனுக்கு என்ன காரணத்தினாலோ நெருங்கியவளாகக் காணப்பட்டாள். ஆனந்தனை எவ்வளவோ நாட்களாகப் பார்க்க வேண்டுமென்றிருந்தான். மோஹினியிடமும் வாக்குக் கொடுத்திருந்தான். இன்று அகஸ்மாத்தாக ஆனந்தனைச் சந்திக்க நேர்ந்தது.

"ஏது, மிகவும் அபூர்வமாக இருக்கிறது! உன்னைப் பார்த்து எவ்வளவோ நாட்களாய் விட்டன. நானே ஒரு நாள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்றிருந்தேன்" என்று பேச்சை ஆரம்பித்தான் வசந்தன்.

"வந்திருக்கக்கூடாதோ? நானும் உன்னைப் பார்த்து ஒரு மாதத்திற்கு மேல் இருக்கும். நீ எங்கேயாவது லீவ் வாங்கிக் கொண்டு போயிருக்கிறாயோ என்று நினைத்தேன்."

"எங்கே, லீவு ஏது மண்ணாங்கட்டியேது? ஒரே சக்கர வாழ்க்கைதான். 'ரொடீன் லைப்'...நடக்கிறது."

"அது உண்மை. நானும் எங்கும் அதிகமாக வெளியே போவதில்லை. பரீட்சை வந்து விட்டது."

"என்றைக்கு உங்களுக்குப் பரீட்சை?"

"அடுத்த வாரம்."

"எப்படிப் படித்திருக்கிறாய்?"

"என்னத்தைப் படிப்பது? ஏதோ இருக்கிறது. எவ்வளவு படித்தாலும் அவ்வளவுதான். மனத்தில் அமைதி இல்லை. அதுவுமல்லாமல் "டிபார்ட் மெண்டல்' பரீட்சை. தங்களுக்கு எவ்வளவு ஆட்கள் வேண்டுமோ அவ்வளவு பேரைத்தான் 'பாஸ்' செய்விப்பார்கள். என்னவோ, கடவுள் அருள் இருந்தால் இந்த முறை...... பார்க்கலாம்."

"சும்மா அதைரியப்படாதே. நிச்சயமாக நீ பாஸ் செய்து விடுவாய்" என்று வசந்தன் சலுகையுடன் கூறினான். ஆனந்தனுக்கு அவன் அப்படிப் பேசியது இதமாக இருந்தது. இருபது இருபத்திரண்டு நாட்களுக்கு முன்னால் மோஹினியும் வசந்தனும் பேசிக்கொண்ட விஷயத்தைப் பாஸ்கரன் தனக்குத் தெரிவித்தது நினைவுக்கு வர அதைப்பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணித் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த ஆனந்தனுக்கு வசந்தனின் சலுகைப் பேச்சு மிகவும் உபயோகமாக இருந்தது. வசந்தனுக்கும் ஆனந்தனோடு

மோஹினியைப் பற்றிய பல விஷயங்கள் பேச வேண்டியிருந்தது. முக்கியமாக அவளைப்பற்றிய சமாசாரம் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

''வேறென்ன சமாசாரம், வசந்தா?'' என்றான் ஆனந்தன்.

''என்னிடம் என்ன சமாசாரம் இருக்கிறது? அதுதான் சொன்னேனே...காலையில் போரிவிலியிலிருந்து சர்ச்கேட்...மத்தியான்னம் ஆபீஸ்...சாயங்காலம் மறுபடியும் சர்ச்கேட்டிலிருந்து போரிவிலி.''

''மிகவும் அலுப்பாகப் போய்விடுகிறது ஒவ்வொரு சமயத்தில். அதனாலேயே சென்ற ஒரு மாதமாக இந்த ரெயிலில் பிரயாணம் செய்வதையே நிறுத்திவிட்டேன். போரிவிலிக்கு நான் போய் மூன்று வாரங்களாகிவிட்டன.''

''ஓஹோ! அப்படியானால் இப்பொழுது நீ போரிவிலி வரையிலும் எனக்குக் கூட்டாளியா? சரி. நல்லதாயிற்று. என்ன இன்றைக்குத் தாதரை விட்டுப் போரிவிலிப் பிரயாணம்?''

''அதுதான் சொன்னேனே, போய் மூன்று வாரமாகி விட்டதென்று. அக்காவைப் பார்த்துவிட்டு வரவேண்டும். அத்துடன் அவர்களிடம் ஒரு சமாசாரமும் சொல்ல வேண்டியிருக்கிறது.''

''என்ன சமாசாரம்?''

''நாளைக்கு என் மனைவி வருகிறாள், பூனாவிலிருந்து. எனக்கும் படித்துப் படித்து அலுப்பாயிருந்தது. அவர்களுக்குச் சமாசாரத்தைத் தெரிவித்தாற்போலும் இருக்கட்டுமென்று புறப்பட்டேன்.''

''அப்படியானால் உன்னுடைய மிஸஸ் இப்பொழுது ஊரில் இல்லையா?''

''அவள் பூனாவுக்குப்போய் மூன்று வாரமாயிற்று.''

''அப்படியானால் அவள் பரீட்சை முடிந்து விட்டதா?''

''ஓ...இல்லை இல்லை. பரீட்சை நாளன்றைக்குத்தான் ஆரம்பம். அதற்காகத்தான் இப்பொழுது அவள் வருகிறாள். அதற்காகவே நம்பர் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வரவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் மறுபடியும் நாழிகையாகிவிடுமோ என்று போகவில்லை.''

''அதற்கென்ன? நான் நாளைக்கு யூனிவர்ஸிடிப் பக்கம் போகும்போது பார்த்துக்கொண்டு வருகிறேன்.''

"இல்லே. பரீட்சை எல்பின்ஸ்டன் காலேஜிலேயே நடக்கிறது' இனியென்ன, நாளேக்குக் காலேயில் ஸ்டேஷனுக்கு வரவேண்டிய வன்தானே? கோட்டைக்கும் போக வேண்டியிருக்கிறது. அப்படியே பார்த்துக்கொண்டு வந்தால் போயிற்று......"

தானாக எதையும் கேட்காமலே தனக்கு வேண்டிய சமாசாரங் களெல்லாம் ஆனந்தனின் பேச்சிலிருந்தே வெளிப்பட்டதைக் கண்டு வசந்தனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஆனந்தனுக்கு உற்சாக மூட்டும் எண்ணத்துடன் வசந்தன், "அப்படியானல் இந்த முறை இருவருக்கும் பரீட்சை. மஜாதான். ஒருவரை ஒருவர் மனப்பூர்வமாக 'கங்க்ராசுலேட்' பண்ணுவதற்கு நல்ல சந்தர்ப்பம்" என்று சிரித்துக்கொண்டே சொன்னன்.

"அவள் சமாசாரத்தை விட்டுத்தள்ளு. நான் தான் முக்கியமாக இந்த முறை பாஸாகவேண்டும். மேலே காலி ஸ்தானங்களெல்லாம் அப்படியே பூர்த்தி ஆகாமல் இருக்கின்றன."

"இவ்வளவு சுய நலம் உனக்குக் கூடாது ஆனந்தா... என்ன சொன்னலும் சம பாத்தியதை கொண்டாடும் நாளப்பா இது..."

"அதே தான் தொந்தரவு. பார் வசந்தா, சம உரிமை என்று ஏதோ சொல்லுகிருர்களே, இது எனக்குக் கொஞ்சங் கூடச் சம்மதமில்லே. எவ்வளவானலும் பெண். அவள் ஆணின் ஆதீனத்தில் தான் இருக்க வேண்டும்."

ஆனந்தனின் இந்த அபிப்பிராயம் வசந்தனுக்குச் சரி யென்று படவில்லே. மேலும் அவனுக்கும் மோஹினிக்கும் இடையே வளர்ந்து கொண்டிருந்த பிளவு பெரும்பாலும் ஆனந்தனின் இந்த மனேபாவத்தினல்தான் இருக்கக் கூடும் என்று தோன்றவே அவன் ஆனந்தனேப் பார்த்துச் சொன்னன்:

"ஆதீனத்தில் என்று சொல்லாதே. ஆணுக்குச் சரியாக என்று சொல். அப்படியானல் தான் எல்லாம் சரியாக நடக்கும்."

வசந்தன் இதைக் கூறியபொழுது மோஹினியின் அபிப்பிராயத்தையே அவன் ஆனந்தனெதிரே சமர்ப்பிப்பது போலிருந்தது.

"அது முடியாத காரியம். முடியாதது மாத்திரம் அல்ல, துரோக......"

"இந்த விஷயத்தில் மிகவும் கர்நாடகம் நீ என்று தோன்று கிறது."

"கர்நாடகமும் இல்லே, ஒன்றும் இல்லே. அவர்கள் நம்முடைய ஆதீனத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னவுடனே நாம் அவர்களே வேண்டியபடி துன்புறுத்தலாம், வேண்டியவாறு நடத்திக் கொள்ளலாம் என்பவை அல்ல அதன் அர்த்தம். இதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் இருவரும் சமம் என்றால் அது தொந்தரவுக்கு வழி..."

"என்னவானாலும் இருவரும் சேர்ந்து கலந்து கொண்டே சம்சாரத்தை நடத்திக் கொண்டு போக வேண்டும்."

"நான் சொல்லுவதும் அதே தான். குடும்பம் சரியாக நடக்க வேண்டுமானால் அதற்குத் தலைவன் ஒருவன் தான் இருக்க வேண்டும். இருவரும் சம மென்றால் பிளவு பட்ட குடும்பம் தான்..."

"இருவர் என்ற பிறகு வேற்றுமை இருக்கத்தான் இருக்கும். அந்த வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண வேண்டும், அவ்வளவுதான்..." என்று வசந்தன் தன் அபிப்பிராயத்தையே தொடர்ந்தான்.

"இருவரும் சமம் என்று ஆன பிறகு ஒற்றுமை எங்கிருந்து வரும்?"

"அதனால் என்ன? இருவருக்கும் லட்சியம் ஒன்றுதான். இருவரும் சுகமாக, சந்தோஷமாக வாழ வேண்டு மென்பது தானே லட்சியம்?"

"ஆமாம்...அவ்வளவு அறிவு இந்தக் காலத்துப் பெண்களுக்கிருந்தால்......"

வசந்தனுக்குச் சந்தர்ப்பம் சரியாகக் கிடைத்தது. அவன் ஆனந்தனைப் பார்த்து, "அதை நான் அவ்வளவு சுலபமாக ஒப்புக் கொள்ள மாட்டேன், ஆனந்தா. இன்றில்லா விட்டால் நாளையாவது நீ உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டி வரும். முழுவதும் மாற்றிக் கொள்ளாவிட்டாலும் அதில் சிறிதாவது வேறு பாட்டை நீ ஒத்துக் கொண்டே ஆக வேண்டியிருக்கும்!" என்றான்.

"அது எப்படி முடியும் வசந்தா? இந்தப் பிரச்னை இவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு இதில் ஆத்ம கௌரவம் வந்து விடுகிறதே. நீ என்னை அறிவாய்; நான் உன்னை அறிவேன். நான் என் சொந்த அநுபவத்திலிருந்து சொல்லுகிறேன்.

ஒத்துப் போவது என்றால் அதில் ஆத்ம கௌரவம் குறுக்கிடுகிறது.”

ஆனந்தன் தானே தன் விஷயத்தை ஆரம்பித்தது வசந்தனுக்கு அநுகூலமாயிற்று. அவனுடன் மோஹினியைக் குறித்துப் பேச வேண்டியிருந்தது. அதற்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்தாற் போலாகவே, வசந்தன் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

“இது பிறருடைய தனிப்பட்ட விஷயம். நான் பேசலாமோ பேசக்கூடாதோ தெரியவில்லை...” என்று உபசாரமாக ஆரம்பித்தான். ஆனால் அவன் விவேகம் உள்ளுக்குள்ளேயே அவனை ஏசிக்கொண்டிருந்தது, ‘மோஹினியுடன் பேசும்போது எங்கே போயிற்று இந்த உபசார வார்த்தை?’ என்று.

ஆனந்தன் சொன்னான்: “சங்கோசமில்லாமல் பேசலாம். உனக்குத் தெரியாத விஷயம் ஏதும் இல்லை. எனக்கும் மோஹினிக்கும் ஒத்துக் கொள்ளாமலிருப்பது சகலரும் அறிந்த விஷயமாகி விட்டிருக்கிறது. என்பேரில் தப்பில்லாததனால் அந்த விஷயமாக நான் ஏதும் வருத்தப்படவில்லை......”

“வருத்தப்படா விட்டாலும் நீ யோசிக்கவேண்டும். மிகவும் நுட்பமான விஷயம் இது. இருவரின் சுக வாழ்வு என்ற பிரச்னை இதிலே அடங்கியிருக்கிறது...”

“ஆமாம். ஆனால் இது அவளுக்குத் தெரிய வேண்டாமா?”

“இருவருக்கும் தெரிய வேண்டும். என்ன அபிப்பிராய பேதமிருந்தாலும் கூடுமான வரையில் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டும். சமரசம் ஒன்று தான் இந்த இக்கட்டிலிருந்து விடுபட வழி.”

“ஒரு வகையில் நான் இதை ஒத்துக் கொள்ளுகிறேன். நீ என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள். மனைவி என்ற பிறகு அவள் எனக்குக் கட்டுப்பட்டுத்தானே இருக்க வேண்டும்? சமரஸம் வேண்டும் என்று கூறும் அளவுக்கே பேச்சு வரக்கூடாது. அப்படி வந்தால் அதை இருவரும் ஒப்புக்கொண்டு அதன்படி நடக்க வேண்டாமா?”

“அவள் ஒப்புக் கொள்ளலாம்... இருவரும் தோற்கவேண்டும், இருவரும் வெல்லவேண்டும்” என்றான் வசந்தன் சந்தேகத்தோடு ஆனந்தனைப் பார்த்துக் கொண்டே.

"அப்படியிருந்தால் ஒரு கஷ்டமும் இல்லை, வசந்தா. சமரஸம் சாத்தியமானல் அவள் என் ஆதீனத்தில் இருக்கவேண்டும் என்னும் பேச்சை விட்டு விடக்கூடும் நான். ஆனல்..."

ஆனந்தன் பேச்சளவுக்கு இப்படிச் சொன்னனே ஒழியக் கிரியாம்சையில் வரும்பொழுது அவன் எப்படி நடந்து கொள்ளுகிருனென்பதைப் பற்றி மோஹினி வசந்தனுக்கு ஏற்கனவே கூறியிருந்ததால் ஆனந்தனின் பேச்சை வசந்தன் அவ்வளவாக முக்கியத்துவம் கொடுத்துக் கேட்கவில்லை. தான் ஏறக்குறைய மோஹினியை ஆதரித்தே பேசிக் கொண்டிருப்பதையும் வசந்தன் உணர்ந்தான். ஓரிரு நிமிஷங்கள் பேசாமலிருந்தான். ஜன்னல் வழியாக வெளியே இருட்டில் எட்டிப் பார்த்தான். வண்டி ஜோகேஸ்வரியைத் தாண்டி இருளில் முன் சென்று கொண்டிருந்தது.

கடைசியில் ஆனந்தனே சொன்னன்: "அவளுக்கு இந்த, 'சமத்துவம்' என்ற பைத்தியம் பலமாகப் பிடித்திருக்கிறது. தான் போகும் வழி தப்பு என்று அவள் என்றுமே ஒத்துக்கொள்ளப் போவதில்லை. அப்படியிருக்கும் போது அவளோடு சமரஸம் எப்படிச் சாத்தியமாகும்?"

"நான் அப்பொழுதே சொன்னேனே. இதில் ஒருவர் தப்பு, மற்றவர் சரி என்று வாயால் சொல்வது ஒரு புறம் இருக்கட்டும்; அப்படிக் குறிப்பாக ஒருவர் உணர்த்துவதால் கூட மற்றவருக்கு மனம் புண்படக் கூடும். சரிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றிருந்தால் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடிய விஷயங்களையே கொண்டு வரக்கூடாது. சிறிது காலத்திற்காவது பத்துச் சமாசாரங்களில் ஐந்து ஒரு மனப்பட்டு நடந்தால் மற்றவை மெதுவாகத் தாமே சரியாகக்கூடும்......"

ஆனந்தன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு யோசனை செய்து சொன்னன்.

"உன் பேச்சு கொள்கையளவில் மிகவும் சுலபமாகக் காணப்படுகிறது. வாழ்க்கையில் அது அவ்வளவு சுலபமல்ல. இது வெறும் அறிவு சம்பந்தப்பட்ட விஷயமல்ல வசந்தா, உணர்ச்சிகளுக்கும் இதில் இடம் உண்டு. இதயத்தின் பிரச்னை இது. ஒரு முறை மனம் நொந்து போய் விட்டால்..."

"அது சரி. அந்தப் பேச்சு இருவருக்கும் பொருந்தும்..."

"நீ அவளை ஆதரித்தே பேசுவதுபோலிருக்கிறதே வசந்தா?..."

இந்தக் கேள்வியை ஆனந்தன் சகஜமாகச் சிரித்துக் கொண்டே கேட்காமலிருந்தால் வசந்தனுக்கு ஆச்சரியமாயிருந் திருக்கும். ஆனால் ஆனந்தனின் குரலில் எந்த விதமான அதிருப் தியோ அன்றி அசூயையோ காணப்படவில்லை. ஆகையால் வசந்தன் நிதானமாகப் பதில் கூறினான்.

"நான் யாரை ஆதரித்தும் பேசவில்லை. அப்படிப் பார்க்கப் போனால் இருவர் சார்பிலும் பேசுகிறேனென்று சொல்லுவது தான் சரி. ஏனெனில் இருவரும் எனக்கு வேண்டியவர்கள். இருவரும் தங்கள் வேற்றுமைகளை அகற்றிவிட்டு ஒன்றாக இருக்க வேண்டுமென்பதே என் அபிலாஷை."

"நான் வேண்டிய அளவு முயன்று பார்த்துவிட்டேன் வசந்தா. என்ன என்ன வேண்டுமென்று கேட்டாளோ அவைகளை யெல்லாம் கொடுத்திருக்கிறேன். சொன்னபடி யெல்லாம் கேட்டிருக்கிறேன். அவள் தாளத்திற்குத் தக்கபடி குதித்திருக்கிறேன் என்றுகூடச் சொல்லலாம். இருந்தாலும்... அவளுக்குத் தான் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்ற அறிவே இருப்பதாகத் தெரியவில்லை..."

"கூடிய மட்டும் நிதானமாக அவள் மனத்தை வசப்படுத்திக் கொள்ளவேண்டும், அவ்வளவுதான்..."

"அதென்னவோ சரிதான். ஆனால் அது அசாத்தியம் என்று தோன்றுகிறது. எவ்வளவிருந்தாலும் மனுஷனுக்குள்ள பொறுமை தானே எனக்கும்..."

ஆனந்தனின் பேச்சில் நிராசை உருவெடுத்துக் கொண் டிருந்தது.

வசந்தன் சொன்னான்: "அப்படியானால் உங்கள் எண்ணம் தான் என்ன? என்னால் ஏதாவது உபகாரம் ஆகவேண்டுமானால் நான் எதையும் செய்வேன். நீங்கள் இருவரும் எனக்கு வேண்டி யவர்கள். ஏதாவது குறிப்பிட்ட சிக்கல் இருந்தால் அதைச் சுலப மாக விடுவித்து விடலாம்..."

"உனக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் யார்தான் என்ன செய்ய முடியும்? முக்கியமாக, மனம் சுத்த மடைய வேண்டும். ஒருவருக்கொருவர் எந்த வகையிலும் சந்தே கத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது, இல்லையா?"

"சந்தேகமில்லாமல்!"

"அவளுக்கு யாரும் எந்த விஷயத்திலும் எதிர் பேசக் கூடாது. எல்லாவற்றிலும் தன்னுடையதே மேல் கையாக இருக்க வேண்டுமென்றால் நாலு பேர் இருக்கும் வீட்டில் அது எப்படி முடியும்?"

"அப்படியிருந்தால் அது தப்புத்தான்..."

"எப்பொழுதும் அதே தகராறுதான். வர வர அவளுடைய இந்த, 'மனம் போன போக்கு' மிகவும் அதிகமாகி விட்டிருக்கிறது. எனக்கும் மிகவும் வெறுத்துப் போய்விட்டது. படிப்பும் ஓடவில்லை. அதனால்தான் ஓர் இரண்டு மூன்று வாரமாவது பூனாவுக்குப் போய்த் தாயுடன் இருந்து விட்டு வரட்டுமென்று அனுப்பினேன்."

ரெயில் காந்திவல்லியைக் கடந்து முன் சென்று கொண்டிருந்தது. இருவரும் இறங்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். வசந்தன் சொன்னான்: "இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னால் ஒரு நாள் தாதரில் பார்த்தேன்..." என்று கூறி நிறுத்தினான்.

"ஆமாம். அவளே சொன்னாள், ஊருக்குப் போவதற்கு முன்னால்."

"என்ன வென்று?"

"ஒன்றும் விசேஷம் இல்லை. ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உன்னைச் சந்தித்தாளாம். பாஸ்கரனும் சொன்னான். ஆனால் அவனுக்குத் தூரத்திலிருந்து உன்னை அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது......"

வசந்தனுக்கு விஷயம் பட்டென விளங்கியது. பாஸ்கரன் தன்னையும் மோஹினியையும் பார்த்துவிட்டு ஆனந்தனிடம் ஏதோ கலகம் மூட்டியிருக்க வேண்டும்; அதன் பலனாகத்தான் மோஹினி பூனாவுக்குப் போகவேண்டி வந்திருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது.

இருவரும் ரெயிலை விட்டு இறங்கினர். தண்டவாளத்தைச் சேர்ந்தாற்போலவே நடந்து செல்ல வேண்டுமென்று விரும்பிய ஆனந்தன், "இப்படியே போகலாம் வா, வசந்தா. அப்படிப் போனால் வீண் சுற்று......" என்றான்.

"ராத்திரி வேளை. ஏன் தண்டவாளத்திற்குப் பக்கத்தில் நடக்கவேண்டும்? மேலும், மெயில் வண்டிகள் வரும் சமயம்......"

என்று வசந்தன் கூறியதும் ஆனந்தனும் அதை ஒப்புக் கொண்டான். இருவரும் பிறகு வெளிப்பக்கத்து வழியாகவே நடந்து சென்றனர். இருவரும் மௌனமாகவே நடந்து கொண்டிருந்தனர். இருவரின் மனத்திலும் ஒருத்தியைப் பற்றிய யோசனையே தான். மோஹினி விடுவிக்க முடியாத ஒரு பிரச்னையாக நின்றாள் அவ்விருவருக்கும். தெருவைத்தாண்டி இருட்டில் குறுக்கு வழியாகச் சென்று கொண்டிருந்தபொழுது வசந்தன் சொன்னான்:

"உனக்கு விசித்திரமாகப்படலாம். இந்த உங்கள் பிரச்னையைப்பற்றி நான் பல முறை யோசித்திருக்கிறேன். உண்மையாகச் சொல்லுகிறேன், நீங்கள் இருவரும் எவ்வளவோ சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழவேண்டியவர்கள். வீணில் எவ்வளவு அவதிப்படுகிறீர்கள்! என் பேச்சைக் கேட்பதானல் சாத்தியப்பட்ட வரையில் எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொண்டு போகவேண்டும்."

"நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்கிறேன், வசந்தா. சுகமாக வாழவேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லையா? எங்கள் விஷயத்தை நாலுபேர் பேசும்படியாயிற்று என்பதை நினைக்கும் பொழுது எனக்கு ஒவ்வொரு முறை இந்த உயிரை ஏன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனல் நான் ஒருவன் மாத்திரம் இதைக்குறித்து வருத்தப்பட்டுப் பிரயோசனம்?"

"அப்படியானல் இதற்கு என்ன உபாயம், பரிகாரம்?"

"நான்தான் சொல்லிவிட்டேனே. நான் ஒன்றைப்பற்றியும் கவலைப் படுவதில்லை. எல்லாம் அவள்பாடு......"

"எவ்வளவானலும் ஸ்திரீதானே, ஆனந்தா? நீதான் புத்தி சொல்லவேண்டும்; அவளுக்குக் கற்பிக்க வேண்டும்......"

"நீ ஒரு பைத்தியம். அந்த அவசியமே அவளுக்கு இல்லை!"

"அப்படியானல்?"

"அப்படியானல்? தன் வினை தன்னைச் சுடும்..."

"நான் வருந்துகிறேன். நீ இப்படிக் கை கழுவக்கூடாது; மனத்தையும் தளர விடக்கூடாது. நடந்து போனதை மறக்கா விட்டால் எப்படி? The past must be buried, இல்லையா?"

இருவரும் ஆனந்தன் வீட்டெதிரே வந்திருந்தனர். ஆனந்தன் ஏதோ யோசனை செய்து கொண்டிருப்பவன் போல் காணப்பட்

டான். கடைசியாகச் சொன்னன்: "அது சரி. பேச்சளவில் மாத்திரம் தான் என்று தோன்றுகிறது, The past never dies. கடந்து போனவைகளெல்லாம் அழிவதே இல்லை போலிருக்கிறது, இல்லையா? Or does it? சரி, பார்ப்போம்... வேறென்ன?"

"வாயேன் என் அறைக்கு எப்பொழுதாவது. நாளை, நாளை நின்று மறு நாள், எப்பொழுது சௌகரியமோ வா."

"நாளை, மறு நாள் முடியாது. திங்கட்கிழமையிலிருந்து பரீட்சை. அது முடிந்த பிறகு வருகிறேன்."

"கண்டிப்பாக வா."

"கண்டிப்பாக வருகிறேன்..."

"அச்சா, குட் நைட்!"

ஆனந்தன் தன் வீட்டு வாசற்படியில் ஏறினன். வசந்தன் தன் அறையை நோக்கி நடந்தான்.

## 6

மறுநாள் காலை மோஹினி பூனு ஸ்டேஷன் பிளாட் பாரத்தில் காலடி எடுத்து வைத்ததும் முதல் முதலாக அவள் கண்டது கேட்டருகிலேயே காத்துக் கொண்டு நின்றிருந்த பாஸ்கரனைத்தான். தாயை விட்டுப் பிரிந்து வந்த துக்கம் ஏற்கனவே இதயத்தைப் பிழிந்து கொண்டிருந்தது. பாஸ்கரனைக் கண்ட பிறகோ அந்தத் துக்க மெல்லாம் ரோஷமாக மாறியது. கடைசியாக அவன் தன் பிடிவாதத்தில் ஜயித்து விட்டானே என்று நினைத்து ஆத்திர மடைந்தாள். இருந்தாலும், 'இப்படி என்னைப் பின்பற்றி இவன் செய்யப் போவது தான் என்ன? வரட்டும் என் அருகே, ஒரு முறை நன்ருகப் பாடம் கற்பிக் கிறேன்' என்று மனத்தைத் தைரியப் படுத்திக் கொண்டு முன்னல் நடந்தாள். அதே சமயத்தில் பாஸ்கரன் அசட்டுச் சிரிப்போடு அவளெதிரே வந்து நின்றுன். மோஹினி அவனைப் பார்த்தும் பார்க்காதவள் போல முன் சென்றுள். அவள் கூடப் பெட்டியையும் படுக்கையையும் சுமந்து கொண்டு ஒரு கூலி சென்று கொண்டிருந்தான்.

"அடேடே, என்ன இது! மத்தியான்னம் ரெயிலில் போவதாகச் சொல்லி விட்டுக் காலை ரெயிலுக்கே புறப்பட்டு விட்டாயே?" என்றுன் பாஸ்கரன்.

மோஹினி ஒன்றும் கூறவில்லை. ஆனால் பாஸ்கரன் விடுபவனாக இல்லை. மீண்டும் கேட்டான்:

"ஏன்? அதற்குள்ளாகப் புரோகிராம் மாறிவிட்டதா?"

"ஆமாம்......நீங்கள் எப்படி இப்பொழுது வந்தீர்கள்?"

இப்படி நேருக்கு நேர் அவள் கேட்பாளென்று அவன் எதிர் பார்த்திருக்க வில்லை. எனவே தட்டித்தடுமாறிக் கொண்டே பதில் சொல்ல வேண்டியதாயிற்று.

"என் விஷயம் என்ன கேட்கிறாய்? நேற்றே சொல்லி யிருந்தேனே? வேலைமுடிந்து விட்டால் காலை ரெயிலிலேயே புறப்பட்டு விடுவேன் என்று. சொன்னபடி நேற்று சாயங்காலமே வேலை முடிந்து விட்டது. இனி இங்கே இருந்து கொண்டு என்ன செய்வது என்று புறப்பட்டு விட்டேன். அவ்வளவுதான்" என்று சிரித்துக் கொண்டே சகஜமாகப் பேசுபவன் போல் ஒரு பொய்யைக் கூறினான் பாஸ்கரன். மோஹினி சாமான்களை எடுத்துச் சென்று கொண்டிருந்த கூலியையே கவனித்துக் கொண்டிருந்தாள். பாஸ்கரனுக்குத் தான் வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள வெகு நேரம் செல்ல வில்லை. ஒருவேளை தன்னிடமிருந்து தப்பித்துச் செல்லுவதற் காகவே அவள் முதல் நாள் தன்னிடம் மத்தியான்ன வண்டியில் போவதாகப் பொய் சொல்லியிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றவே, தான் சாதுரியமாக நடந்து கொண்டு விட்டதாக எண்ணிப் பெருமைப் பட்டுக் கொண்டான். காலை வண்டிக்கு வந்து பார்ப்பதென்றும் ஒரு சமயம் மோஹினி அந்த ரெயிலிலேயே போவதாக இருந்தால் தானும் அதிலேயே புறப் பட்டு விடுவதென்றும் முதல் நாளே திட்டம் போட்டு விட்டிருந் தான். அதனாலேதான் தன் ஒரே சாமானாகிய கைப் பையோடு அவன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தான்.

மோஹினியோடு கூடவே நடந்து கொண்டிருந்த பாஸ்கரன் அவளைப் பார்த்து, "டிக்கட்டு வாங்கியாயிற்று?" என்று கேட்டான்.

"ஊம்."

"நான் இன்னும் வாங்கவில்லை. அப்பொழுதே வாங்க வேண்டுமென்று போனேன். ஏராளக் கூட்டமாக இருந்ததால் வந்து விட்டேன். இப்பொழுது கூட்டம் அநேகமாகக் குறைந்

திருக்குமென்று நினைக்கிறேன்" என்று பாஸ்கரன் பேசிக் கொண்டே இருந்தான். மோஹினி அவனையோ அவன் பேச்சையோ சட்டையே செய்யாமல் இருந்ததைக் கண்டு அவனுக்கு ஆத்திரமாக இருந்தது. ஆனால் அதற்காகத் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை உணர்ந்து பேசாதிருந்தான். கடைசியாக டிக்கட்டு வாங்கி வருவதாகக் கூறிவிட்டு வெளியிலே சென்றான் பாஸ்கரன்.

பாஸ்கரனின் இந்தப் பலஹீனத்தைக் கண்டு அவள் ஒரொரு சமயம் பரிதாபம் கொண்டாள். இப்படிப்பட்ட பலரைத் தான் தன் விரல் நுனியில் ஆட்டிவைக்கலாம் என்ற கர்வமும் ஒவ்வொரு முறை தோன்றியது. ஆனால் இவை யெல்லாம் கணநேர பாவங்கள் தாம். பாஸ்கரனின் நோக்கம் அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனாலேயே அவள் மனம் அவனை வெறுத்தது. சில சமயங்களிலோ, எதற்கும் துணியக்கூடிய இவன் என்ன செய்து விடுவானோ என்று மோஹினியின் இருதயம் பயத்தாலும் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இப்படிப்பட்டவர்கள் சாதாரணமாகத் தாங்கள் தேடித்திரியும் பெண்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப் படியும் குணமுடையவர்களாயிருப்பதால் மோஹினிக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. அதனால் தான் ஒரு நாள் இல்லாவிட்டால் மற்றொரு நாள் பாஸ்கரனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டு மென்று தீர்மானித்திருந்தாள்.

பெண்கள் இண்டர் கம்பார்ட்மெண்டில் கூட்டமே இருக்க வில்லை. ஒரிருவர்தான் தங்கள் பெட்டி படுக்கைகளுடன் உட்கார்ந் திருந்தனர். மோஹினி ஜன்னலுக்கருகே ஒரு நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டு சாமான்களை மேல் தட்டில் வைத்துவிட்டு ஹாய்யாக உட்கார்ந்து கொண்டாள். தாயை விட்டுப் பிரிந்து வந்த துக்கம் இன்னும் அடங்கியிருக்கவில்லை. அந்தத் துக்கம் நடுநடுவே அலைபோல் வந்து அவள் இதயத்தை அழுத்திக் கொண்டிருந்தது. அழுது அழுது கண்கள் சிவந்திருந்தன. தாயின் அன்பை நினைக்கும்போதெல்லாம் அவளுக்கு, "இந்த உலகில் வேறு யார் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தாய் மாத்திரம் இருக்கட்டும்" என்று தோன்றிக் கொண்டிருந்தது.

ரெயில் புறப்படும் நேரம் சமீபித்துக்கொண்டிருந்தது. ஒவ் வொரு ஜன்னலாக அவசர அவசரமாக எட்டிப் பார்த்துக்

கொண்டே பாஸ்கரன் வந்து கொண்டிருப்பதைக் கண்ட மோஹினி தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள். இருந்தாலும் பாஸ்கரனிடமிருந்து அவளால் தப்ப முடியவில்லை. பாஸ்கரன் கடைசியாக அவளைக்கண்டு விட்டான்.

"ஓ. இங்கே உட்கார்ந்திருக்கிறாயா? எங்கெல்லாம் நான் தேடினேன். இன்னும் அந்தப் பக்கம் உட்காரலாமே!...வேண்டிய இடம் இருக்கிறதே......"

"இங்கேயுந்தான் இருக்கிறது" என்று வெடுக்கென்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் மோஹினி.

"அங்கேயே வந்தாயென்றால் நன்றாயிருக்கும் மோஹினி. பேசிக்கொண்டு உட்காரலாம்......உன்னோடு எவ்வளவோ பேச வேண்டிய சமாசாரங்கள் இருக்கின்றன."

"எனக்குப் பேச விருப்பம் இல்லை."

"இந்தப் பைத்தியக்காரத் தனத்தை விட்டுவிடு இனி. போதும். வேண்டியது ஆகிவிட்டது......" என்று என்ன என்னவோ சொல்லிக்கொண்டே போனான் பாஸ்கரன். கார்ட் விசில் ஊதி விட்டார். வண்டி புறப்பட்டது. பாஸ்கரன் பக்கத்தில் இருந்த ஆண்கள் கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொண்டான்.

தலைகாம் ஸ்டேஷன் சமீபித்துக் கொண்டிருக்கும்போதே ஸ்பெஷல் டீ தட்டு ஒன்றைத்தாங்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தான் ஒரு 'வெயிட்டர்.' அவனுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்தான் பாஸ்கரன். தட்டை மோஹினிக்கு அருகில் வைக்கும்படி அவனுக்கு உத்தரவிட்டான் பாஸ்கரன். அப்படியே அவன் டிரேயை வைத்துவிட்டுப் புறப்பட்டுப்போன பிற்பாடு பாஸ்கரன் பேசத்தொடங்கினான்.

"டீ நன்றாக இருக்கிறது, சாப்பிடு மோஹினி."

"எனக்கு டீ வேண்டியதில்லை. நான் ஏற்கனவே குடித்தாயிற்று."

"ஏற்கனவே எப்பொழுது?"

"வீட்டிலிருந்து புறப்படும்பொழுது."

"அதற்குப் பிறகு இரண்டு மணி நேரமாய் விட்டதே இப்பொழுது. எடுத்துக்கோ. உனக்காகவேதான் வரவழைத்தேன்."

"எனக்கு வேண்டாம்!"

"உனக்காகத்தான் வரவழைத்தேன், மோஹினி! எடுத்துக் கொள். ஏன் இப்படிச் செய்கிறாய்? சுற்றிலும் பார்ப்பவர்கள் நாலு பேர் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள்?"

"அதைப் பற்றி நீங்கள் யோசித்திருக்க வேண்டும்; நானல்ல......"

"நான் எல்லாவற்றையும் யோசித்துத்தான் இருக்கிறேன். வேண்டுமென்றேதான் உனக்காகத் தருவித்தேன்."

"அதனால்தான் நான் வேண்டாமென்கிறேன்."

"ஏன்?"

"எனக்காக வரவழைத்தது சரிதான். ஆனால் வரவழைத்தவர் நீங்கள் என்பதனால்தான் எனக்கு வேண்டாம்."

பாஸ்கரனுக்குக் கன்னத்தில் அறைந்தாற் போலாயிற்று. ஆனால் அவன் பின்னடையவில்லை. அவளருகிலேயே வந்து உட்கார்ந்து கொண்டு மீண்டும் வற்புறுத்தத் தொடங்கினான்:

"சும்மா நான்கு பேருக்கெதிரில் என் மானத்தை வாங்காதே. தெரிந்ததா? நானே 'கப்'பில் ஊற்றிக் கொடுக்கட்டுமா?" என்று கூறித் தட்டில் கையை வைத்தான்.

"நான்கு பேரின் அபிப்பிராயத்திற்காகப் பயந்து கொண்டு நான் இங்கே உங்களுடன் சரசமாட வேண்டிய தேவையில்லை... பேசாமல் நீங்கள் இங்கிருந்து எழுந்து போங்கள்..."

"போகிறேன் மோஹினி. நீ டீ குடித்துவிடு. அதன் பிறகு நான் போகிறேன்."

"அது முடியாது. நான் டீ குடிக்கமாட்டேன்!"

"இப்படி முரட்டுப் பிடிவாதம் பிடிக்காதே. இன்னும் யோசி. பத்துமுறை உனக்கு இந்தப் பேச்சைச் சொல்லியிருக்கிறேன்."

"எனக்குத் தெரியும். எல்லாவற்றையும் யோசித்தே செய்கிறேன், பேசுகிறேன். இங்கே என்னுடையவர் யாரும் இல்லையென்பதனால் இப்படிப் பேசுகிறீர்களா?"

"இங்கே மாத்திரம் என்ன? எங்கேயும் உன்னுடையவர் என்று யாரும் கிடையாது."

"அதற்காகத்தான் பேடித்தனமான இந்த வழியைக் கைப் பற்றிக் கொண்டு வந்தீர்களா?"

மோஹினியின் முகம் ரோஷத்தால் ஜ்வாலை வீசிக்கொண்டிருந்தது. அவள் உதடுகள் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

அவர்களைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்கள் வட இந்தியர்களாத லால் இவர்களுடைய பேச்சு அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் அடிக்கடி அவர்கள் இவ்விருவரையும் கவனிப்பதும் பிறகு கவனிக் காதவர்கள்போல் முகத்தை வேறு புறம் திருப்பிக்கொள்ளு வதுமாக இருந்தனர். ஏதோ புருஷன்-மனைவி தகராறுபோலிருக் கிறது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

"இது பேடித்தனம் அல்ல மோஹினி."

"அப்படியானால் அடிக்கு ஒரு பொய் சொல்லிக்கொண்டு ஏன் என் பின்னலைப் பிடித்துக்கொண்டே அலைந்து கொண்டிருக் கிறீர்கள்?"

"உன் பைத்தியக்காரப் புத்தியால் பாழாகிப் போகாதே என்று சொல்வதற்காகத்தான்."

"எனக்கு எது நல்லது எது கெட்டது என்பது நன்ருகத் தெரியும். எனக்காக நீங்கள் யோசித்து உங்கள் மண்டையைக் குழப்பிக் கொள்ள வேண்டாம்..."

"இந்த ஏளனப் பேச்சு இனி போதும் மோஹினி. நான் சொல்வதைக் கேள்..."

"என்ன நீங்கள் சொல்லுவது?"

"நிதானமாகக் கேட்டாயானால் எல்லாவற்றையும் சொல்லு கிறேன். ஏன் சிடுசிடுக்கிருய்?"

"நான் ஒன்றையும் கேட்கப் போவதில்லை. தெரிந்ததா? நீங்கள் இங்கிருந்து போகிறீர்களா இல்லையா?"

"இந்தப் பேச்சை நீ இங்கே சொல்லலாம். பம்பாய்க்குப் போன பிறகுதான் தெரியப் போகிறது."

மோஹினியின் இதயம் ஓர் அரைக் கணம் நடுங்கியது, தான் இல்லாத போது இவன் தன்னைப்பற்றி என்ன என்ன அவ தூறுகளை எல்லாம் கிளப்பி வைத்திருக்கிருனோ என்று.

"என்ன தெரிகிறதோ அங்கேயே தெரியட்டும். இங்கே ஒன்றும் வேண்டாம்."

"உனக்கேன் பைத்தியம் மோஹினி? உன் விஷயத்தில் ஆனந்தனின் மனம் மிகவும் ஆக்கிரோஷம் கொண்டிருக்கிறது..."

"அவ்வளவு மட்டுக்குமாவது புண்ணியம் கட்டிக் கொண் டீர்களே... இனியாவது உங்கள் ஆட்டத்தைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள்."

"நான் செய்தேனே, நீயே செய்து கொண்டிருக்கிறாயோ, யார் சொல்வது? இந்த முரட்டுத் தைரியத்தை விட்டுவிடு. உனக்கு எங்கும் ஆசிரயம் கிடைக்காது."

"உங்களுக்கு ஏன் அதைப்பற்றிக் கவலை?"

"அதைத்தான் நீ தெரிந்து கொள்ள வேண்டும். உனக்கு விரோதமாக நான் வேலை செய்கிறேன் என்று நீ எண்ணிக் கொண்டிருப்பதே தவறு. உனக்காக நான் எவ்வளவு கவலைப் படுகிறேன் என்பதை நீ அறிந்திருந்தால்......"

"எனக்கு அது தெரிய வேண்டிய அவசியம் இல்லை. எனக் காகக் கவலைப்படுபவர்கள் வேறு இருக்கிறார்கள்."

இதைச் சொல்லும் போது மோஹினியின் மனக்கண் ணெதிரே வசந்தனின் உருவம் தோன்றியது. பிறகு அது மறைந்து அந்த இடத்தில் ஆனந்தனின் உருவம் நின்றது.

"அதுதான் உன்னைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது."

"ஏன்? உங்கள் தம்பி என்னைப் பாழடிக்க வேண்டுமென்றே கல்யாணம் செய்து கொண்டாரா என்ன?"

"அது அவனுக்குத்தான் தெரியும். ஆனால் அவனது ஆசிரயம் உனக்கு இல்லாமற் போனால் நான் உனக்குச் சகாயம் செய்யச் சித்தமாக இருக்கிறேன் என்பதை மறக்காதே..."

"எனக்கு இந்தக் கடனுக்காகச் செய்யும் சகாயம் வேண்டியதே இல்லை."

"இந்தக் கடனுக்காகச் செய்யும் சகாயத்திற்காகவே நாளை நீ வாய் திறந்து யாசிக்க வேண்டியிருக்கும்."

"அது உங்கள் பைத்தியக்காரக் கற்பனை. அப்படிப்பட்ட கடன் சகாயத்தை நான் இரண்டாவது மனிதரிடமிருந்து அடைய வேண்டுமென்றிருந்தால் உங்களைவிடப் பத்து மடங்கு, ஆயிரம் மடங்கு நற்குணம் படைத்தவர்களிடமிருந்து, அதை அடைவேன். ஆனால் எனக்கு அது தேவையில்லை!"

"ஏன் இந்தப் பிடிவாதம்?"

"பிடிவாதமா? பெண்ணென்ற மாத்திரத்தில் நான் தெருவில் திரியும் நாயல்ல, தெரிந்ததா? நாலு பேரிடையே மானத்தோடு வாழ வேண்டியவள்."

"இப்பொழுது நடந்திருப்பவை எல்லாம் மிகவும் நன்றாகத் தான் நடந்திருக்கின்றன அல்லவா?"

"அதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டிய தேவை இல்லை."

"நான் தான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும். எங்கள் குடும்பத்தின் மானமே இப்பொழுது அழிந்து போகும் போலி ருக்கிறது உன்னுடைய நடத்தையால்."

"உங்கள் குடும்பம்! அதில் இடி விழட்டும்! சென்ற இரண்டு வருஷங்களாக அந்தக் குடும்பத்திற்காக நல்ல மரியாதை சம்பாதித்திருக்கிறீர்கள்."

"போதும் மோஹினி. வாயைத் திறக்காதே. உன்னுடைய எதிர் கால வாழ்வு முழுதும் என் கையில் அடக்கம் என்பதை மறக்காதே."

"என்ன செய்வதாக உத்தேசம்?"

"நீ இன்னொருவனுடன் கை கோத்துக் கொண்டு சென்றதை நான் கண்டிருக்கிறேன். பேசாமல் நான் சொல்கிறபடி கேட்டாயானால் எல்லாம் சரியாகப் போகும். ஒரு 'சான்ஸ்' கொடுக்கிறேன். யோசித்துப் பார்."

"நான் தான் ஒன்றிலும் சேர்த்தியில்லையே. நீங்கள் என்ன சொன்னால் என்ன?"

"இப்பொழுது எப்படித் தெரியும் அது?"

"தெரிகிற பொழுது தெரியட்டும். நான் எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் இருக்கிறேன்."

"இந்தப் பிடிவாதத்தில் இறங்காதே மோஹினி. வேண்டாம், இன்னும் பத்து முறை உனக்குச் சொல்லுகிறேன். நீ சுகமாக வாழ வேண்டும். வீணில் பின்னுக்குப் பச்சாத்தாபப்படுவதில் பயனில்லை பார். யோசனை செய்..."

எழுந்திருந்து பாஸ்கரனின் கன்னத்தில் பளீரென்று அறைய வேண்டும் போல் ஆத்திரம் கொழுந்து விட்டெரிந்தது அவள் உள்ளத்திலே. இருந்தாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள்: "நான் எல்லாவற்றையும் யோசித்திருக்கிறேன்... என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு வெட்கம் மானம் ஏதும் இல்லையா, என் பின்னே சுற்றிச் சுற்றி வந்து இப்படியெல்லாம் பேசுவதற்கு? சுக வாழ்வை வேண்டி, யார் என்ன சொன்னாலும் அதன்படி நடந்து கொள்ள என்னை என்ன வேசி என்று நினைத்துக் கொண்டீர்களா? நீங்கள்

இப்பொழுதே இங்கிருந்து எழுந்து செல்லாவிட்டால் நான் கார்டை வரவழைப்பேன். பேசாமல் எழுந்து செல்லுங்கள் இங்கிருந்து......"

கோப்பையில் பாஸ்கரன் ஊற்றி வைத்திருந்த டீ ஆறிப் போயிருந்தது. இருவரும் மௌனமாக இருந்தனர். கடைசியில் பாஸ்கரன் பேசினான்.

"அப்படியானால் டீ எடுத்துக் கொள்ளப்போவதே இல்லையா?"

"இல்லை..."

"எடுத்துக் கொள். என் பேச்சைக் கேள்..." என்று கோப்பையை அவளெதிரே பிடித்தான். மோஹினி கோப்பையை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு அரைக் கணத்தில் ஜன்னலுக்கு வெளியே கொட்டினாள். பாஸ்கரனால் இதைப் பொறுக்க முடியவில்லை. எழுந்து நின்றான். உச்சி முதல் உள்ளங்கால் வரை கோபத்தால் அவன் உடல் படபடத்தது. பேச்சாலும் செய்கையாலும் மோஹினி அவனை அவமானப்படுத்தி விட்டாள். அவன் பழிவாங்க உறுதி கொண்டான். அந்தக் கம்பார்ட்மெண்டில் இன்னும் இரண்டொரு பெண்மணிகள் இருந்ததால் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் அவன் என்னதான் செய்திருக்கமாட்டான்?

எழுந்து புறப்பட்டுக் கொண்டே பாஸ்கரன், "இது இவ்வளவு சுலபத்தில் முடிந்து போய்விடாது. தெரிந்து கொண்டாயா? இதை இவ்வளவோடு விட்டுவிட்டுப் பேசாமல் போய்விடமாட்டேன். இந்த டீயை நீ வெளியே கொட்டினாற் போல் உன் உயிரையே உன் உடலிலிருந்து கொட்டிவிடுகிறேனா இல்லையா பார். ஞாபகம் வைத்துக் கொள்" என்று கூறிவிட்டு விடு விடு வென்று சென்று விட்டான்.

"அந்தக் காரியம் அவ்வளவு எளிதல்ல. இந்த உயிர் அவ்வளவு சுலபமாகப் போவதாக இருந்தால் இது பிறந்தே இருக்காது" என்று மோஹினி மனத்திற்குள் சொல்லிக்கொண்டாள்.

வண்டி மேட்டிலிருந்து இறங்கிச் சென்று கொண்டிருந்தது. அவள் உள்ளத்தில் கோபம் எல்லாம் மறைந்து அவ்விடத்தில் பயம் தோன்றியது. சென்ற மூன்று வாரங்களாக எந்த விதமான மனக்கஷ்டமும் இன்றி நிச்சிந்தையாகக் கழிந்ததை நினைத்துக் கொண்டபொழுது தாயின் ஞாபகம் வந்தது.

அவளது அன்பின் ஆழத்தை நினைத்த போது கண்ணீர் பெருகியது. "இனிமேல் தினமும் விடிந்தெழுந்தால் இதே ரகளை தான். பயப்பட்டு என்ன ஆகப்போகிறது?" என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றாள்.

# 7

ஆகஸ்மாத்தாக ரெயிலில் சந்தித்த ஆனந்தனிடமிருந்து மோஹினியைக் குறித்து வேண்டிய தகவல்களை விசாரித்தறிந்து கொண்ட வசந்தனின் மனம் சாந்தமடைந்திருந்தது. அவள் இவ்வளவு நாட்களாக ஊரில் இல்லாமற் போனதன் காரணத்தை அறிய ஆவலுள்ளவனாக இருந்தான். அந்த ஆவலை இன்னும் ஓரிரண்டு நாட்களுக்காவது அடக்கிவைக்காமல் வேறுவழி புலப் படவில்லை. சனிக்கிழமை அவளுக்குப் பரீட்சை ஆரம்பம். பரீட்சை இடமும் தெரிந்திருந்தது. அன்றையதினம் காலை சுமார் 10-30 மணிக்குப் பரீட்சை மண்டபத்தின் வாசலருகே சென்று காத்துக்கொண்டு நின்றால் அவளைக் காணக்கூடும் என்ற நம்பிக்கை இருந்ததால் பரீட்சையின் முதல்நாள் அவளைப் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்திருந்ததை மாற்றிக் கொண்டான். ஆனந்தன் சொன்னதிலிருந்து பார்த்தால், முதல்நாள் அவளோடு கூடவே அவனும் வரலாம் என்று பட்டதால்தான் வசந்தன் அவ்வாறு தீர்மானித்தான். ஆகவே திங்கட்கிழமை காலை அவளுக்காகக் காத்துக்கொண்டு நிற்பது என்று நிச்சயம் செய்து கொண்டான்.

ஒரு வகையில் அவன் மனம் முன்செல்ல மறுத்துக்கொண் டிருந்தது. போனதடவை தானும் மோஹினியும் ஸ்டேஷனுக் கருகில் பேசிக்கொண்டு நின்ற சமாசாரம் ஆனந்தனின் காது களுக்கு எட்டியிருக்கிறது, பாஸ்கரனின் மூலமாக. மோஹினியும் அதை ஆனந்தனுக்குத் தெரிவித்திருந்தாள். ஆனால் முதலில் அவனுக்குச் சொன்னது யார்? முதலில் பாஸ்கரன் கூறியிருந்து அதன் மேல் ஆனந்தன் அவளைக் கேட்டு அவள் ஒத்துக்கொண் டிருந்தால் அதன் சொரூபமே வேறு. பாஸ்கரன் அந்தக் சந்தர்ப் பத்தை எந்த முறையில் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளக் கூடும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. மோஹினிக்குத் துன்பம் விளைவிக்க வேண்டும் என்னும்

நோக்கத்தில் ஒரு கால் அவன் வசந்தனின்மீதும் சந்தேகாஸ்பதமான வார்த்தைகளைப் பரப்பக் கூடும். அது அசாத்தியமென்று சொல்ல முடியாது. ஆகையால் மோஹினியைக் காணவும் பேசவும் அவனுக்கு எவ்வளவோ பரபரப்பாக இருந்தாலும் இந்த விஷயத்தில் அவசரப் பட்டு விடாமல் தகுந்த ஜாக்கிரதையுடன்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று நிச்சயித்தான்.

திங்கட் கிழமை காலை சரியாக 10-30 மணிக்கு எல்பின்ஸ்டன் காலேஜ் வாசலில் வசந்தன் தயாராகக் காத்துக்கொண்டிருந்தான். சர்ச்கேட்டில் இறங்கி வருபவர்கள் அந்த வழியாகத்தான் பரீட்சை மண்டபத்திற்குச் செல்லவேண்டி யிருந்ததாகையால் மோஹினியும் அந்த வழியாகத்தான் வரவேண்டும். அப்பொழுது கண்டிப்பாக அவளைப் பார்க்கலாம் என்று அங்கேயே காத்துக் கொண்டிருந்தான். வசந்தன் நினைத்தது சரியாயிற்று. 10-45க்கு அவசர அவசரமாக மோஹினி வந்துகொண்டிருந்தாள். அவளுடைய அவசரத்தில் எங்கே தன்னைப் பார்க்காமலே போய் விடுவாளோ என்று வசந்தன் பயந்தான். நான்கு ஐந்து அடிகள் முன்னால் வந்ததுமே மோஹினி அவனைப் பார்த்துவிட்டாள்! அவளுக்கு ஒரே ஆச்சரியம். தான் ஊருக்கு வந்து சேர்ந்து மூன்று நாட்களாகியும் அவனை இதுவரை சந்தித்திருக்கவில்லை. அப்படியிருக்கும்போது வசந்தன் இப்படி அகஸ்மாத்தாக எதிர்ப்பட்டால்? அவனெதிரே வந்து நின்றுகொண்டு வியப்பினால் கண்கள் மலர, "அட, நீங்களா? இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"இங்கே ஒரு நண்பருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று குறும்புச் சிரிப்புடன் மொழிந்தான் அவன்.

"பரீட்சை எழுத வருகிறாரா உங்கள் நண்பர்?"

"ஆமாம்!"

"நான் அங்கேயிருந்தே உங்களைக் கவனித்து விட்டேன். இருந்தாலும் நீங்களோ அல்லவோ, இங்கே எதற்காக வரப் போகிறீர்கள் என்ற சந்தேகம்......"

"எப்படியோ ஏதோ இங்கேதான் இருக்கிறேன்."

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"சொல்லாமல் கொள்ளாமல் மாயமாய் மறைந்து போகிற வர்களிடம் வேறு என்ன சொல்லுவது?" என்று கூறிச் சிரித்தான் வசந்தன்.

"மாயமாய் மறைய வேண்டி நேரிட்டது."

"ஏன்?"

"ஏனு? மோஹினி எப்போதும் இங்கேயே இருக்க வேண்டுமா?"

"அப்படியானுல் இப்பொழுது சுவர்க்க லோகத்திற்குப் போய் வந்தீர்களா?"

"ஆம். சுவர்க்கத்திற்குத்தான் போயிருந்தேன்!"

"அப்படியென்றுல்?"

"தாய் இருக்குமிடமே சுவர்க்கம். தாய் வீட்டிற்குச் சென்றி ருந்தேன்."

"அது எனக்குத் தெரியும்."

"யார் சொன்னுர்கள்?"

"யாரோ சொன்னுர்கள். நீங்கள் சொல்லாவிட்டால் எனக்குத் தெரியாமலே போய் விடுமா?"

"சொல்லுங்கள். யார் சொன்னுர்கள்?"

"ஆனந்தன்!"

"அவரைச் சந்தித்தீர்களா?"

"ஆம். அவனைச் சந்தித்ததனுலே தான் உங்களையும் சந்திக்க முடிந்தது. இல்லாவிட்டால்..."

"இல்லாவிட்டால்?"

"அதைப் பற்றி யெல்லாம் உங்களுக் கென்ன?"

"என்ன இன்றைக்கு எப்படி யெல்லாமோ பேசுகிறீர்கள்?"

"வருகிறேன் என்று சொல்லிவிட்டு வராமற் போனவர் களிடம் இப்படித்தான் பேச வேண்டும்."

"என் மேல் அவ்வளவு கோபமா?"

"நான் கோபித்துக் கொண்டால் சட்டை செய்வது யார்?"

"இப்படி யெல்லாம் பேசாதீர்கள்."

"அது இருக்கட்டும். ஏன் இப்படித் திடீரென்று ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டீர்கள்?"

"ஓ, அது ஒரு பெரிய கதை."

"சொல்லக் கூடாதா?"

"சொல்லாமல் என்ன?" என்று மோஹினி வசந்தனின் முகத்தைப் பார்த்தாள். 'உங்களுக்குச் சொல்லாவிட்டால் வேறு யாருக்குச் சொல்லப் போகிறேன்?' என்று கேட்பது போலிருந்தது அவள் கண்களில் தோன்றிய பாவம்.

"அப்படியானால் எப்பொழுது?" என்று வசந்தன் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே பரீட்சை முதல் மணி அடித்தது. அதைக் கேட்டதுமே வெளியே அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்த மாணவ மாணவிகள் தங்கள் தங்கள் புத்தகங்களை அடுக்கிக்கொண்டு மண்டபத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். மோஹினிக்கும் உடனே போக வேண்டும் என்று தோன்றியது.

"மணியாய் விட்டது. நான் போக வேண்டும்."

"அப்படியானால் எப்பொழுது? சாயங்காலம் பரீட்சை எப் போது முடிகிறது?"

"ஆறுமணிக்கு."

"அப்படியானால் ஆறுமணிக்கு நான் வரட்டுமா?"

"இன்றைக்கு வேண்டாம். எனக்கு வீட்டுக்குப் போக நேர மாய்விடும். நாளைப் பரீட்சைக்கு வேறு படித்தாக வேண்டும்..."

"பரீட்சை முடிவு என்றைக்கு?"

"வியாழக் கிழமை மத்தியான்னம்!"

"எத்தனை மணிக்கு?"

"இரண்டு மணிக்கு."

"அப்படியானால் அப்பொழுது வரட்டுமா?"

"ஊம்..."

"இதே இடத்தில்?"

"ஊம்..."

"மறுபடியும் ஏமாற்றி விடக்கூடாது..." என்று முறுவலித் தான் வசந்தன். "இல்லை..." என்று மோஹினியும் புன்முறுவல் செய்துகொண்டே உள்ளே சென்றாள். வசந்தன் மோஹினியைப் பார்த்துக் கொண்டே இருந்தான். மோஹினியும் ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு அவன் பார்வையிலிருந்து மறைந்தாள்.

வசந்தன் ஆபீஸுக்குப் போகும் வழியில் மோஹினியின் வார்த்தைகளையே நினைத்துக் கொண்டிருந்தான். "தாய் இருக்கும் இடமே சுவர்க்கம். சுவர்க்க லோகத்திற்குத்தான் போய் வந்திருக்கிறாள் போல் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்

டான். மூன்று வாரங்களில் அவள் உடலில் சிறிது மெருகும் வனப்பும் ஏறியிருந்தன. "உண்மையில் அவள் சுவர்க்க லோகத்து அப்ஸரஸ்தான்!" என்று அவன் வாய் திருப்பித் திருப்பிக் கூறியது.

## 8

திங்கட் கிழமையிலிருந்து வியாழக்கிழமை வரை வசந்தன் வியாழக்கிழமை மாலையையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தா னென்று சொல்லலாம். மோஹினி தன் மனத்தில் இவ்வளவு ஆழமாக ஆட்சி செலுத்தக்கூடும் என்று அவன் எதிர் பார்த் திருக்கவில்லை. அதை நினைக்கும் போதெல்லாம் அவன் தனக்கே சொல்லிக் கொள்ளுவான்: "இது சரியல்ல. இதைத் தடுக்கவே வேண்டும். எவ்வளவானாலும் அவள் மற்றொருவனின் உடைமை" என்று. ஆனால் மோஹினியின் சுந்தரவடிவம் கண்முன்னே தோன்றும்பொழுது, அதிலும் கடந்த இரண்டு மூன்று வாரங் களுக்குப் பிறகு இப்பொழுது தான் கண்ட மோஹன ரூபத்தை நினைத்துவிட்டாலோ, மற்ற நினைவுகளெல்லாம் மாயமாய் மறைந்து அவன் மனம் மோஹினிக்குப் பரிபூரணமாக அடிமையாகிவிடும். இப்படி மோஹினியிடம் பறிபோய்விட்ட தன் மனம் அவளை ஏதாவது தகாத சொல்லினால் புண்படுத்திவிடுமோ என்று அவ்வப் பொழுது அவனுக்குப் பயம் உண்டாகும். மோஹினி அவனுடன் சிறிதும் சங்கோசமின்றி சகஜமாகப் பேசுகிறாள். ஆனால் அவள் இதய வீணை அவனைக்குறித்து எந்த ராகத்தை மீட்டிக் கொண் டிருக்கக்கூடும் என்பது குறித்து அவன் இதுவரை யோசித்திருக்க வில்லை. திங்கட்கிழமை அவளைப் பார்த்ததிலிருந்து, அவளும் அவனைப் பார்க்கப் பெரும் ஆவலை வெளிப்படுத்தியதிலிருந்து வசந்தன் அவள் மனத்தின் ஆழத்தை அறிய ஆவலுள்ளவனாக இருந்தான். ஆகையால்தான் வியாழக்கிழமை சாயங்காலத்தை ஒவ்வொரு கணமும் எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

வியாழக்கிழமை ஆபீஸை அடைந்ததிலிருந்தே உடல் நலம் சரியில்லையென்றும் சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டுமென்றும் அடிபோட்டுக்கொண்டிருந்தான். சரியாக 1.30 மணிக்கு இனி தன்னால் வேலைபார்க்க முடியாதென்றும் தான் வீட்டுக்குப் போவ தாகவும் சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

வசந்தன் காலேஜுக்கருகில் வந்து நின்றபொழுது மணி இன்னும் இரண்டு அடித்திருக்கவில்லை. வெயில் தகித்துக் கொண்டிருந்தது. ஆனால் வசந்தனின் லட்சியமெல்லாம் பரீட்சை மண்டபத்திலிருந்து ஒவ்வொருவராக வெளியே வந்துகொண்டிருந்த மாணவிகளின் மீதே இருந்தது. மணி இரண்டடித்தது. மாணவர்களும் மாணவிகளும் குபுகுபுவென்று அலைபோல் மண்டபத்தை விட்டு வெளிவந்தனர். ஒவ்வொருவர் முகத்திலும் பரீட்சை முடிந்துவிட்டதென்ற உற்சாகம் நிரம்பியிருப்பது காணப்பட்டது. அந்த வேளைக்குப் பரீட்சையின் முடிவு என்ன ஆகும் என்ற நினைவைவிட ஒருவகையாகத் தொல்லை ஒழிந்ததே என்ற ஆசுவாசம்தான் பிரதானமாக இருந்தது. மோஹினி பின்னல் இரண்டு மூன்று மாணவிகளுடன் வந்து கொண்டிருந்தாள். எங்கே அவர்களுடனேயே அவள் சென்று விடுவாளோ என்று வசந்தன் பயந்துகொண்டிருந்த பொழுதே, மோஹினி அவனைக் கண்டு தலையசைத்துக் கண்களாலும் ஜாடை காட்டினள், 'அங்கேயே இருங்கள். இந்தச் சிநேகிதிகளை அனுப்பிவிட்டு வந்துவிடுகிறேன்' என்று.

மூன்று நான்கு நிமிஷங்களில் மோஹினி வந்துவிட்டாள். முகத்தில் ஆயாசம் நன்ருகக் காணப்பட்டாலும், அந்த ஆயாசத்திலும் ஒரு தனிக் கவர்ச்சி இருப்பதுபோல் பட்டது வசந்தனுக்கு.

"உஷ்......எப்படியோ ஒரு வகையாக முடிந்தது......"

"எப்படியிருந்தன பேப்பர்கள்?"

"அவ்வளவொன்றும் கடினமில்லை."

"நீங்கள் எப்படி எழுதியிருக்கிறீர்கள்?"

"நன்ருகவே எழுதியிருக்கிறேன். ஒன்றும் பயமில்லை."

"அப்படியானல் சரி, இப்பொழுதே நீங்கள் எனக்குத் தேநீர் விருந்து அளித்து விடலாமே, முன்கூட்டியே."

"ஓ எஸ். அதற்கென்ன? ஆனல் எனக்குப் பூரண திருப்தி இல்லை."

"ஏன்?"

"தேறுவது இருக்கவே இருக்கிறது, அதைப்பற்றி எனக்குப் பயமே இல்லை: Rank வரவேண்டுமென்று ஆசைப்பட்டேன்."

"இப்பொழுது வராதா?"

"பார்க்கவேண்டும். சரித்திரப் பாடத்தில் ஒரு தாள் நன்ருக எழுதவில்லை."

"ஒரு தாள் தானே ? அதனல் எவ்வளவு மார்க்குக் குறைந்து விடப் போகிறது?"

"மார்க்கு அதிகம் குறைந்து போகாதுதான். இருந்தாலும் அந்தப் பேப்பரும் நன்ருக எழுதியிருந்தால் எனக்கு இன்னும் தன்னம்பிக்கை அதிகமாக இருந்திருக்கும் இல்லையா?"

பேசிக் கொன்டே தங்களை அறியாமலே அவ்விருவரும் சர்வ கலாசாலைக் கட்டிடத்தைத் தாண்டி அதற்குப் பின்னலிருந்த பெரிய வீதி வழியே நடந்து கொண்டிருந்தனர்.

வசந்தன் கேட்டான்: "நாம் இப்பொழுது எங்கே போகிறேம்.?"

"எங்கேயும் இல்லை, நான் இப்பொழுது நேரே வீட்டிற்குச் செல்லவேண்டும்."

வசந்தனுக்கு உற்சாக பங்கம் ஏற்பட்டதை மோஹினி உடனே கவனித்தாள். தன் தவற்றை ஒப்புக்கொள்ளும் முறையில் அவள் சொன்னுள்: "நான் என்ன செய்யட்டும்? காலையில் மிகவும் நேரமாகிவிட்டது. சாப்பிடாமலே பரீட்சைக்குப் புறப் பட்டு விட்டேன். பரீட்சை முடிந்ததும் நேரே சாப்பாட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்."

"இவ்வளவுதானே?" வசந்தன் உற்சாகத்தோடு கேட்டான்: "சாப்பாட்டுக்கென்ன? எங்கே வேண்டுமானலும் சாப்பிடலாம்."

"வேண்டாம். வீட்டில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்."

தான் வெளியிட்ட அபிப்பிராயத்தைக் குறித்து மோஹினி யோசித்துக் கொண்டிருக்கிருளென்பதை ஊகித்த வசந்தன் வேறு ஒரு முறையைக் கையாண்டான்: "வருவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறீர்களா? அப்படியானல் நான் இங்கே வராமலே இருந்திருக்கலாம்!"

வசந்தனின் மனநிலை மோஹினிக்கு உடனே புரிந்துவிட்டது. வேறு வழி தோன்ருமல் அவள் சொன்னுள்: "நான் என்ன பண்ணட்டும்? மிகவும் அவசர அவசரமாகப் புறப்பட வேண்டி வந்து விட்டது. அந்தப் பதற்றத்தில் வருவதாகச் சொல்லி வந்து விட்டேன்."

"உங்களுக்காக யார் அப்படி வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?" என்ற வார்த்தைகள் அவன் நாக்கின் நுனி வரையில் வந்துவிட்டன. ஆனால் அப்படிக் கூறுவது சரியல்லவென்று உடனே, "நீங்கள் போவதானால் நான் உடனே காரியாலயத்திற்குத் திரும்பிப் போக வேண்டியதுதான்" என்றான். மோஹினிக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. தனக்காக அது வரையிலும் வந்து காத்து நின்றிருந்த வசந்தனுக்கு ஏமாற்றம் அளிக்க அவள் மனம் ஒப்பவில்லை. கடைசியாக, "அப்படியானால் ஒன்று செய்யலாம். நீங்கள் இப்பொழுது தாதர் வரைக்கும் வாருங்கள். வந்தீர்களானால் நமக்கு யோசிப்பதற்கு அரைமணி அவகாசம் கிடைக்கும்" என்றாள்.

"என்ன யோசிப்பதற்கு?"

"நான் இப்பொழுது போரிவிலிக்குப் போக வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி."

"என்னைப் பொறுத்த வரையில் அதைப்பற்றி யோசிக்க வேண்டிய தேவையேயில்லை!"

"உங்கள் மனத்திலிருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை நான் ஒப்புக் கொள்ளலாமா வேண்டாமா என்பதைப் பற்றி யோசிக்க எனக்கு அவகாசம் கொடுக்கக் கூடாதா?"

"ஆல் ரைட். தாதர் ஸ்டேஷனை அடைவதற்குள் தீர்மானம் செய்துவிட வேண்டும்" என்று வசந்தன் கூறினதும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

வசந்தனுக்குத் தெரிந்து விட்டது, வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டும் என்னும் அவள் தீர்மானம் அப்பொழுதே ஆட்டம் கண்டு விட்டது என்று! வசந்தன் நினைத்தது சரியாகவே போயிற்று...பரேல் ஸ்டேஷனைத் தாண்டும் போதே மோஹினியின் மனம் தீர்மானம் செய்து விட்டது. தாதரில் வண்டி நின்றதும் மோஹினி ஏதும் பேசாது இறங்கி நடந்ததும் வசந்தனுக்கு எல்லையற்ற உற்சாகம் உண்டாயிற்று. கீழே இறங்கி வந்ததும் அவள் முகத்தையே பார்த்த வண்ணம் கேட்டான்:

"ஏன், தீர்மானம் மாறிவிட்டதா?"

"பின் என்ன செய்வது? நீங்கள் இப்படிப் பிடிவாதம் செய்தால்?"

"நான் என்ன பிடிவாதம் செய்தேன்?"

"பிடிவாதம் செய்ய வில்லையா? அப்படி யானால் இங்கே வரும் வரையில் ஏன் பேசாமல் உட்கார்ந்திருந்தீர்கள்?"

"நீங்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வரும் வரை தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காகத்தான்!"

மோஹினிக்கு வசந்தனின் இந்தப் பதில் மிகவும் பிடித்திருந்தது. பிளாட் பாரத்தை விட்டு வெளி வந்ததும் அவள் கேட்டாள் : "இப்பொழுது எங்கே போவது?"

"நீங்கள் சாப்பிட வேண்டுமல்லவா?"

"சாப்பிட வேண்டுமென்று கட்டாயம் இல்லை!"

"நோ, நோ. சாப்பிடத்தான் வேண்டும். இங்கேயே சிவாஜி பார்க்குக்கு அருகில் நல்ல ஹோட்டல் ஒன்றிருக்கிறது. உட்கார்ந்து பேசுவதற்கும் நல்ல இடம். அங்கே போகலாமா?"

"ஊம்."

நடைபாதை வழியாக இருவரும் நடந்து சென்றனர். நகரில் தனக்குத் தெரிந்தவர்கள் அநேகர் உண்டு என்பதனாலோ, முன் ஒருநாள் பாஸ்கரன் தங்கள் இருவரையும் சேர்ந்தாற் போல் பார்த்துவிட்டதை நினைத்துக் கொண்டோ, எதனாலோ, வசந்தன் மோஹினியோடு சேர்ந்தாற்போல் புறப்பட்ட போதிலும் கொஞ்சம் எட்டவே நடந்து கொண்டிருந்தான். மோஹினியை மீண்டும் காணப்பெற்ற ஆனந்தம் ஒரு புறமானால், யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற பீதி மற்றொரு புறம் இருந்தது. இவ்விரண்டிற்கும் இடையே மோஹினியிடமிருந்து, கடந்த மூன்று வாரத்திய விசேஷங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்னும் ஆவல். யாராவது கவனிக்கிறார்களா என்று வசந்தன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. பத்து, இருபது கஜ தூரத்திற்குப் பின்னால் காலேஜ் மாணவன் ஒருவன் கையில் புத்தகங்களுடன் வந்துகொண்டிருந்தான்.

வசந்தன் கேட்டான்: "அதென்ன அப்படித் திடீரென்று ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டீர்களே?"

"ஆமாம். போகவேண்டியதாய் வந்து விட்டது."

"போய்விட்ட பிறகு, நிர்ப்பந்தமாகப் போகவேண்டி வந்திருக்கும் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஏன், என்ன காரணம் என்றுதான் நான் கேட்பது" என்று கூறி வசந்தன் சிரித்தான்.

ஓரிரு நிமிஷங்கள் மோஹினி யோசித்தாள். அவள் ஊருக்குப் போகுமுன் வீட்டில் ஏதாவது சம்பவம் நடந்திருக்க வேண்டு மென்று அநுமானித்த வசந்தன் கேட்டான்:

"மீண்டும் ஏதாவது பேச்சு வார்த்தை வளர்ந்ததா என்ன?"

"இல்லை. அன்றைக்குச் சொன்னேனே? அந்தச் சனிக் கிழமை ராத்திரியே அவர்களெல்லோரும் கூடிப்பேசி வைத்திருந் தார்கள் போலிருக்கிறது. நாராயணராவ் இவரிடம் ஸ்பஷ்டமாகக் கூறியே விட்டார், இனிமேல் அவருடைய வீட்டில் நாங்கள் இருப்பது இயலாத காரியம் என்று"

"பிறகு?"

"பிறகு என்னுடைய பரீட்சை வரையிலுங்கூட நான் அங்கே இருக்காமல் பூனாவுக்குப் போக வேண்டுமென்று நிச்சயம் செய்தார்கள் போலிருக்கிறது."

"உங்களுக்கு அப்பொழுதே அதைச் சொல்லவில்லையா?"

"இல்லை. எனக்கு அப்பொழுது தெரிந்திருந்தால் அடுத்த புதன்கிழமை உங்களைச் சந்தித்தபோது சொல்லியிருப்பேனே!"

"அப்படியானால் உங்களுக்கு எப்பொழுது சொன்னார்கள்?"

"புதன்கிழமை சாயங்காலம் நான் வீட்டுக்குப்போன உடனே ஒரே வார்த்தையில் தெரிவித்தார்கள், 'மறுநாள் நான் பூனாவுக்குப் புறப்படத் தயாராக வேண்டும்' என்று."

"யார்?"

"நாத்தனார். மத்தியான்னம் இவர் வந்து அப்படிச் சொல்லி விட்டுப் போயிருப்பதாகச் சொன்னாள். ஆனால் அது பொய். முதலிலேயே எனக்குத் தெரிவிக்கக் கூடாது என்று இருந் திருக்கிறது அவர்கள் மனத்தில்."

"முதலிலேயே தெரிவித்திருந்தால் என்ன ஆகிவிடுமாம்?"

"யார் கேட்பது அவர்களை? என்னிடம் அவர்கள் நடந்து கொள்ளுவது இதே மாதிரித்தான் எப்பொழுதும்."

மோஹினியின் குரலில் துக்கம் நிரம்பியிருந்தது. அதே குரலில் மீண்டும் சொன்னாள்: "இவளை எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்கலாம் என்றிருக்க வேண்டும் அவர்களுக்கு."

"இது என்ன பெரியதனமோ? என்ன கர்வமோ?"

இருவரும் ஹோட்டலை அடைந்தனர். சிறியதானாலும் நேர்த்தியாக இருந்த ஓர் அறையை அடைந்து அமர்ந்து

கொண்டனர். வெளியே உக்கிரமான வெயில் காய்ந்து கொண்டிருந்த போதிலும், அறைக்குள் பரவியிருந்த இனிமையான வெளிச்சம் சுவர்களில் பூசப் பெற்றிருந்த இளம் பசுமை நிறத்தைப் போலவே மனோஹரமாக இருந்தது. அவர்கள் உள்ளே நுழைந்ததுமே மேலே இருந்த மின்சார விசிறி சுழல ஆரம்பித்தது. பின்னாலேயே ஹோட்டல் பையன் ஆஜரானான்.

"சாப்..."

"ஏ, தேகோ. ஏக் கரி தோன் ரைஸ் லாவ்..."

"ஔர் குச்...சாப்...?"

"ஔர் ஏக் ஆரஞ்ச் ஜூஸ்..."

"ஜீ சாப்..." பையன் மறைந்தான். அவன் முதுகுக்குப் பின்னாலேயே ஸ்பிரிங் கதவு தானாகவே மூடிக் கொண்டது.

வெயிடர் கொண்டுவந்து வைத்த தட்டுகளிலிருந்து ஸ்பூன், போர்க் இவைகளைக் கையிலெடுத்துக்கொண்டே மோஹினி பேச ஆரம்பித்தாள்.

"அன்றைய தினம் நீங்கள் எனக்காக வெகு நேரம் காத்திருந்து பார்த்திருப்பீர்கள், இல்லையா?"

"அடேயப்பா. காத்துக் காத்துப் போதுமென்றாய்விட்டது. ஒருமணி நேரத்திற்கும் மேலாகவே நான் அங்கே காத்திருந்திருப்பேன்......"

"ஐயோ பாவம்! எனக்கும் அதே யோசனை. அன்று முழுவதும் அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருந்தேன்."

மோஹினிக்குத் தான் அன்று கண்ட கனவின் நினைவு உண்டாயிற்று. அவள் இதயத்தில் இனமறியாத ஒரு கிளர்ச்சி பொங்கிற்று. அதனால் அவளது உதடுகளில் பாதி அலர்ந்த மல்லிகை போன்ற சிறு முறுவல் தோன்றியது.

வசந்தன் சொன்னான்: "ஆனால் எனக்கு ஒன்றுமே தெரியாது. உங்களைப் பற்றி ஒன்றுமே எனக்குத் தெரிந்திருக்கவில்லை. உண்மையாக, வெகு நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு உங்கள் மீது மிகவும் கோபப்பட்டேன்."

"பிறகு?"

"பிறகு என்ன மண்ணாங்கட்டி? நின்று நின்று வெயிலில் வாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்றேன்."

"நானும் நாள் முழுவதும் மாத்திரம் அல்ல, இங்கிருந்து புறப்பட்டதிலிருந்து யோசித்துக்கொண்டே இருந்தேன், எப்படி யாவது உங்களுக்குத் தெரியப்படுத்திவிட வேண்டுமென்று."

"ஏன் தெரியப்படுத்தவில்லை?"

"எப்படி முடியும்? காலையில் சாமான்களை மூட்டை கட்டு வதற்கே சரியாயிருந்தது. அதுவுமல்லாமல் 'இவர்' வேறு அங்கே வந்திருந்தார், என்னை ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போவதற்கு."

"அங்கே போனதும் ஒரு லெட்டர் எழுதியிருந்தாலும் போதும்."

"அப்படியும் யோசித்தேன். உங்கள் ஆபீஸ் விலாசம் தெரிந் திருந்தால் எழுதியிருப்பேன். இருந்தாலும் பயமாயிருந்தது. வேறு யார் கையிலாவது கடிதம் கிடைத்து விட்டால் என்ன ஆகுமோ என்று!"

"யார் கையிலும் கிடைக்காது. ஒரு கடிதம் எழுதியிருந்தால் பின்னல் எனக்கு எவ்வளவோ தொந்தரவுகள் ஏற்பட்டிரா."

"தொந்தரவு என்ன?"

"இரண்டு மூன்று நாட்கள் எங்கெங்கேயோ உங்களைப் பார்ப்பதற்காக அலைந்தேன். ஒரு வாரம் முழுவதும் தவருமல் காலை ரெயிலிலும் மாலை ரெயிலிலும் தேடினேன். உங்கள் காலேஜில் போய் விசாரிக்கலாமென்றாலோ எந்தக் காலேஜ் என்று தெரியாது. அதுவுமல்லாமல் பரீட்சை இவ்வளவு நெருங்கியிருக்கும் பொழுது காலேஜுக்கு யார் வருவார்கள்? கடைசியில் ஒரு வாரமாகியும் எங்கும் காணப்படாததால் ஊரில் இருக்கமாட்டீர்களென்று நிச்சயம் செய்துகொண்டு பேசாமல் இருந்து விட்டேன்......"

"நீங்கள் பூனவுக்கு வந்தாலும் வருவீர்கள் என்று நினைத்தேன்."

"நீங்கள் போயிருப்பது பூனவுக்குத்தான் என்பது தெரிந்திருந் தால் வந்திருந்தாலும் வந்திருப்பேன். ஆனல் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. பூனவுக்குப் போயிருக்க வேண்டும் என்றும் நினைத்தேன். ஆனல் விலாசம் தெரியாது. ஒன்றுமே நிச்சயமாகத் தெரியாமல் என்ன செய்வது? நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பே னென்பது உங்கள் கற்பனைக்குக் கூட எட்டாது."

வசந்தனின் உள்ளத்து ஆழத்திலிருந்து வந்த இந்த வார்த்தைகள் மோஹினியின் இதயத்தைத் தொட்டன. அவள் உள்ளத்தில் அன்பு பெருகியது. "என்னால் உங்களுக்கு எவ்வளவு தொந்தரவு?" என்று சொல்ல வேண்டும் என்று நினைத்தவள், அது வெறும் உபசார வார்த்தையாகப் போய் விடுமென்று நினைத்துச் சொல்லவில்லை.

"அப்படியானால் எப்படித் தெரிந்தது?"

"எப்படியோ தெரிந்தது. நீங்கள் சொல்லாவிட்டால் எனக்குத் தெரியவே தெரியாதா?"

"ஏன் உங்களுக்கு இந்தப் பிடிவாதம்?" என்று அவள் கேட்ட போது அவளது பாவம் அவனை உன்மத்தனாக்கியது. "ஒய்யாரி" என்று அவன் மனம் சொல்லிற்று. அதற்கு மேலும் அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஆனந்தன் சொன்னான்."

"அவரைச் சந்தித்தீர்களா?"

"அவனைச் சந்தித்ததனால்தான் உங்களைச் சந்திக்க முடிந்தது என்று சொல்லவில்லையா?"

"என்றைக்குச் சந்தித்தீர்கள்?"

"நீங்கள் ஊரிலிருந்து வருவதற்கு முதல் நாள்."

"என்ன சொன்னார்?"

"அவன் என்ன சொல்லுவது? நான்தான் என்னவென்று கேட்பது? அப்படிப் பேச்சு நடந்தது. மறுநாள் நீங்கள் வரப் போவதைப் போரிவிலியில் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக அவன் போய்க் கொண்டிருந்தான். அதே 'லோக'வில் நானும் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். பேச்சு வாக்கில் நான் வேண்டிய விஷயங்களை யெல்லாம் கிரஹித்துக் கொண்டேன்.

"கெட்டிக்காரர்தான் நீங்களும்!"

"கெட்டிக்காரனோ மண்டுவோ! இருபது நாட்களாக மண்டையை உடைத்துக் கொண்டிருந்த பிரச்னைக்கு அன்று முடிவு ஏற்பட்டது."

"அப்படியானால் திங்கட்கிழமை நீங்கள் பரீட்சை மண்டபத்திற்கு வந்தது அவர் சொன்னதன் பேரிலேதானா?"

"ஆமாம்!"

"அப்படியானால் யாரோ நண்பருக்காகக் காத்துக் கொண் டிருப்பதாகச் சொன்னீர்களே?"

"ஆமாம். நண்பருக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன்."

"அவரைச் சந்தித்தீர்களா?"

"ஓ, சந்திக்காமலென்ன?"

"யாரவர்?"

"இப்பொழுது என் எதிரே உட்கார்ந்திருக்கிறாரே, அவரே தான்!" என்று கூறி வசந்தன் சிரித்தான்.

மோஹினிக்கு வசந்தனின் பேச்சில் உற்சாகம் உண்டா யிற்று. அவள் நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். சாப்பாடு நன்றாக இருந்தது. ஆனால் மோஹினிக்குச் சாப் பாட்டைவிட வசந்தனின் பேச்சே இனிமையாக இருப்பது போல் பட்டது. எனவே அவள் கேட்டாள்:

"உண்மையாகவா?"

"உண்மையாகத்தான். உங்களுடன் பேசியதும் புறப்பட்டு விட்டேனே, பார்க்கவில்லையா?"

"பார்த்தேன். ஆனால் எனக்கு அது தோன்றவே இல்லை."

மோஹினியின் முகம் மலர்ந்த ரோஜாவைப் போலிருந்தது. ஒரு நிமிஷம் பொறுத்து அவள் கேட்டாள்: "வேறு என்ன சொன்னார் அவர்?"

"யார்?" என்று வசந்தன் வேண்டுமென்றே சிரித்துக் கொண்டு கேட்டபின் மோஹினி வசந்தனின் குறும்பைப் புரிந்து கொண்டாள். ஒய்யாரமாகச் சொன்னாள்: "யாரென்று உங்களுக்குத் தெரியும். சொல்லுங்கள். வேறு என்ன சொன்னார்?"

"ஒன்றும் விசேஷமாக இல்லை. ஆனால் அவன் பலமான யோசனையில் இருக்கிறான்."

"என்ன யோசனை?"

"இனிமேல் எப்படி, என்ன என்று தான்."

"ஏனாம்?"

"ஏனென்றால்? போரிவிலியில் இருந்தால் மீண்டும் மீண்டும் அதே தொந்தரவுதான். அவனுக்கும் 'சீ' என்றாய் விட்டது."

"அவ்வளவு மட்டுமாவது உறைத்ததே, அதைச் சொல் லுங்கள்."

"இருந்தாலும் மறுபடியும் மறுபடியும் மனம் தடுமாறு கிறான்."

"அந்தத் தடுமாற்றம் இந்த ஜன்மத்தில் நிற்கப் போவதில்லை!"

"அப்படியில்லை. இந்த முறை பரீட்சை முடிந்ததும் ஏதேனும் ஒரு முடிவு செய்து விடவேண்டும் என்று சொல்லிக் கொண் டிருந்தான்."

"எவ்வளவோ முறை ஆயிற்று இந்த மாதிரி. மீண்டும் மீண்டும் அதே பாடம் தான்."

"கண்டிப்பாக இல்லை. நான் பேச்சுக் கொடுத்தேன். அவனும் மனம் விட்டுப் பேசினான். இருந்தாலும் விசித்திர சுபாவம்..."

"ஏன்?"

"கட்டுப்பெட்டித்தனமான எண்ணங்கள் அவனுடையவை. முக்கியமாகப் புருஷன்—மனைவி சம்பந்தமாக..."

"எனக்குத் தெரியாதா? பெண் என்றால் கால் தூசிக்குச் சமம். மனைவி என்றால் தாசி!"

"நானும் அவனுக்குச் சொன்னேன், 'இன்றில்லாவிட்டாலும் நாளை உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்; மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்' என்று."

"அதற்கு என்ன சொன்னார்?"

"என் பேச்சு அவனுக்கு அவ்வளவாகச் சரி என்று படவில்லை போலிருந்தது."

"அவருக்குச் சரி என்று படவே படாது. நான் நூறு முறை முயன்று பார்த்தாய் விட்டது."

"இருந்தாலும், ஏதோ இருக்கும் குற்றம் குறைகளை ஒருவருக் கொருவர் அநுசரித்துக் கொண்டு தான் போக வேண்டு மென்று வற்புறுத்திச் சொன்னேன்."

"என்ன சொன்னார் அதற்கு?"

"தான் எவ்வளவோ முறை அந்த வகையில் முயன்று பார்த்தாய் விட்டது என்றான்."

"அவர் அப்படி முயன்று பார்த்ததாக எனக் கென்னவோ தெரியவில்லை! எனக்குத் தெரிந்து அவர் செய்த பிரயத்தன மெல்லாம் ஒன்றேதான்—என்னைப் பூராவாகப் பணிய வைத்து மண்ணில் விழுந்திருக்கும்படி செய்வது தான்."

மோஹினியின் முகம் கம்பீரமாக இருந்தது. கடந்த நாட்களின் அநுபவம் அவளது ஆத்மாபிமானத்திற்குக் கொடுத்த அடியின் நோவு அந்தக் கணம் அவள் முகத்தில் தோன்றிக் கொண்டிருந்தது. இருவரும் இரண்டொரு நிமிஷங்கள் பேசாமல் உட்கார்ந்திருந்தனர்.

கடைசியாக வசந்தன் சொன்னான்: "நான் என்னால் ஆன வரையில் சொல்லியிருக்கிறேன். என் பேச்சை அவன் முழுவதும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் இனிமேல் சிறிது மிருதுவாக நடந்து கொள்ளக்கூடும் என்று தோன்றுகிறது. மேலும் இப் பொழுது மூன்று வாரமாக நீங்கள் ஊரில் இல்லாததால் அவன் அவ்வளவு நிஷ்டூரமாகப் பேசமாட்டான். ஆகவே அவன் அடுத்த தடவை வரும் பொழுது நீங்கள் கொஞ்சம் நயமாகவும் சாதுரியமாகவும் நடந்து கொண்டு அவன் மனத்தை உங்கள்பால் இழுத்துக் கொள்ள வேண்டும்."

மோஹினியின் முகம் வாடியிருந்தது. ஆனந்தனின் அன்பைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்காக அவள் செய்த பிரயத்தனங்களில் ஏற்பட்ட தோல்வியின் நிராசை அவள் இதயத்தைக் கவ்விக் கொண்டிருந்தது.

சாந்தமாகவே அவள் கூறினாள்: "என் மேல் அவருக்கு அதிக மோகம் இருக்கிறது. எனக்கு அது தெரியும். ஆனால் அவரைப் பிடித்திருப்பது சந்தேகப் பேய். என்ன செய்தும் என்னால் அந்தச் சந்தேகப் பேயை ஓட்ட முடியவில்லை!"

"ஆமாம். அவனும் சொன்னான்."

"என்ன வென்று?"

"தெளிவாக ஒன்றும் சொல்லவில்லை. 'இருவரும் ஒன்றிப் போக வேண்டும், ஒருவருக் கொருவர் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் இருவரது நடத்தையும் சம்சயத்திற்கு இடம் கொடுப்பதாக இருக்கக்கூடாது' என்றான்."

"அதுதான், அதுதான், எனக்குத் தெரியும். எந்தச் சிறிய விஷயத்திலும் என் மீது சந்தேகப்படுவது என்று ஆரம்பித்தால் நான் தான் என்ன செய்வது?"

இருவரும் மௌனமாக இருந்தனர். வெய்டர் வந்து ரூபாய் வாங்கிக் கொண்டு சென்றான்.

மோஹினி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "இனி புறப்படலாமா?" என்ருள்.

"ஊம்" என்று கூறிக் கொண்டே வசந்தன் எழுந்திருந்தான். இருவரும் ஹோட்டலுக்கு வெளியே வந்து ஒரு நிமிஷம் நின்றனர்.

"நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்று மோஹினி கேட்டாள்.

"ஏன், நீங்கள் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டீர்களா?"

"போக வேண்டாமா? எவ்வளவு நேரமாய் விட்டது?"

"என்ன அவ்வளவு அவசரம்? பரீட்சைதான் முடிந்து விட்டதே!"

"இந்தப் பரீட்சை முடிந்தாலும் வீட்டுப் பரீட்சை தினமும் இருக்கவே இருக்கிறதே!"

"நித்தியச் சாவுக்குப் பயப்படுபவர் யார்?"

"இருந்தாலும் அது சாவு தானே?"

"இது வரையிலும் வந்தது வந்து விட்டோம். கடற்கரைக்குச் சென்று காற்று வாங்கிக் கொண்டு வரலாம்..."

"மிகவும் நேரமாகிவிடும்" என்று சொன்னுள் மோஹினி அரை மனத்துடன்.

"எவ்வளவு நேரமாகிவிடும்? பக்கத்தில்தானே!" என்று மோஹினியின் முகத்தைப் பார்த்தான் வசந்தன். 'நீங்கள் வந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்! எனக்கு அதனல் எவ்வளவு சமாதானம்! வரக்கூடாதா?' என்று வேண்டிக்கொள்வது போலிருந்தது அவன் பார்வை. மோஹினிக்கு அது புரிந்திருக்க வேண்டும். அவனுடன் புறப்பட்டு விட்டாள். எதிரேயிருந்த நடைபாதையின்மீது உலவியபடி காலங்கழித்துக் கொண்டிருந்த காலேஜ் மாணவனைக்கண்டு வசந்தன் சென்னுன்: "பார்த்தீர்களா இந்தப் பையனை. அப்பொழுதே நான் இவனைப் பார்த்தேன். அங்கெங்கோ திரிந்து கொண்டிருந்தான். படிப்பு எழுத்து ஒன்றும் கிடையாது."

"எங்கள் காலேஜிலும் அப்படித்தான். எவ்வளவோ மாணவர்கள் வகுப்புக்கு மட்டம் போடுவதே தொழிலாகக் கொண்டிருக்கிருர்கள். அப்படி மட்டம் போடுவதானல் காலேஜிலேதான் ஏன் சேருகிருர்களோ?" என்ருள் மோஹினி.

வழிநெடுக, பாஸ்கரன் பூனுவுக்கு வந்த விஷயத்தையும், ரெயிலில் நடந்த சம்பவத்தையும் மோஹினி வசந்தனுக்கு விவரித்தாள்.

பத்துநிமிஷங்களுக்குள் இருவரும் கடற்கரையை அடைந்து ஜனங்கள் உட்காருவதற்காகப் போடப்பட்டிருந்த சிமெண்டு பெஞ்சின்மீது உட்கார்ந்தனர். பெஞ்சு மிகவும் சிறியதாக இருந்ததால் இருவரும் நெருங்கி உட்கார வேண்டியிருந்தது பேச்சு சுவாரஸ்யத்தில் திடீரென்று திரும்பும்பொழுது ஒருவர் தோள் மற்றவருக்கு இடிக்கும்படி இருந்தது. மாலை நேரமானதும் ஜனக்கும்பலால் நிரம்பிவிடும் அந்தக் கடற்கரை அப்பொழுது காலியாக இருந்தது. மாலை வெயில் முகத்தில் சுரீர் என்று அடித்துக் கொண்டிருந்தாலும் அலைகளின்மீது தவழ்ந்து வந்து கொண்டிருந்த காற்றினால் அந்த வெயிலும் மனோஹரமாகவே இருந்தது. தலைமீது விசிறிகளைப்போல அசைந்துகொண்டிருந்த தென்னை மரங்கள் 'சுய்' யென்று சப்தித்துக் கொண்டிருந்தன. மோஹினியின் தோளைத் தொட்டு வசந்தன் சொன்னான்: "நான் உங்களை ஒன்று கேட்கலாமா?"

மோஹினியின் இதயம் பரபரப்புற்றது. ஆனால் வசந்தன் தகாத வார்த்தை ஏதும் கூறமாட்டானென்ற நம்பிக்கையினால் அவள் தலையசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

"நான் உங்களுடன் இனி ஏகவசனத்தில் பேசலாமா?"

"ஓ, எஸ்! அதனால் என்ன?"

"நீங்கள், தாங்கள் என்று பேசினால் ஏனோ மனம் விட்டுப் பேசுகிற மாதிரியே படுவதில்லை."

"எனக்கும் அப்படியேதான்."

"அப்படியானால் நீங்களும் அப்படியே பேசலாம்."

"சே சே. என்னால் முடியாது. நீங்கள் மாத்திரம் அப்படிப் பேசினால் போதும்."

"ஏன்?"

"ஏனா? நான் சொல்லமாட்டேன்."

அந்த ஒரு வார்த்தையினால் எவ்வளவோ எட்ட இருந்த மோஹினி அவனுக்கு வெகு நெருங்கியவளாகிவிட்டாற் போன்று தோன்றியது வசந்தனுக்கு. அவளது இதய ஆழத்தை அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருந்த அவனுக்கு மோஹினியின் இந்தப்

பேச்சு, அவள் இதயத்தின் ஒரு பகுதியைத் திறந்து காட்டியது. எதிரே விசாலமாகப் பரவிக் கிடந்த நீர்ப் பரப்பையே கவனித்துக் கொண்டிருந்த அவன் ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தான்.

மோஹினி கேட்டாள்: "கடல் எவ்வளவு அழகாயிருக்கிறது! இல்லையா?"

"ஊம்! ஜுஹுவுக்கு முன்னால் இது எம்மாத்திரம்?"

"அன்றைக்கு ஜுஹுவுக்குப்போக வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தோமே!..."

"ஆமாம். ஆனால் நீ தான் எல்லாவற்றையும் கெடுத்து விட்டாயே."

மோஹினியின் கண்ணெதிரே அவள் கண்ட கனவு மீண்டும் தோன்றியது. அந்தக் கனவில் அவளுக்கு ஏற்பட்ட அநுபவத்தின் நினைவு அவளை மயிர்க் கூச்செறியச் செய்தது. அன்று, கனவில் தன்னிடம் அவ்வளவு நெருங்கியிருந்த வசந்தன் இன்று நிஜமாகவே அப்படி இருக்கிறான் என்பதை எண்ணி அவள் மெய்ம் மறந்தாள்.

"ஜுஹுவுக்கு வராததால் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டாலும் எனக்கு ஏற்படவில்லை."

"எப்படி?"

"நான் ஜுஹுவிற்குப் போயிருந்தேன்!"

"என்றைக்கு?"

"அன்றைக்கே தான்!"

"உனக்காக ஜுஹு பூனாவுக்கு வந்திருந்ததா என்ன?"

"ஆம். அன்று மத்தியான்னம் ஜுஹு பூனாவுக்கு வந்திருந்தது."

"உனக்கென்ன பைத்தியமா?" என்று கேட்டுக்கொண்டே அவள் கையைத் தொட்டான் வசந்தன்.

"அன்று மத்தியான்னம் முழுவதும் எனக்கு ஜுஹுவைப் பற்றியே கனவு!"

"என்ன கனவு?"

மோஹினிக்கு மீண்டும் உடல் புளகித்தது. இதயம் படபடவென்று இன்பத் துடிப்புத் துடித்தது.

"முதலில் ஒருத்தியே தான் உலாவிக் கொண்டிருந்தேன். மாலை நேரம் மனோரம்மியமாக இருந்தது. பிறகு இன்னொருவர் வந்து சேர்ந்தார்..."

"யார்?"

மோஹினி ஜாடையாக அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். அவள் திரும்பிய பொழுது அவள் தோள் அவன் தோளோடு உராய்ந்தது.

"யாரோ ஒருவர்!" என்றாள் மோஹினி.

"யாரென்பது அடையாளம் தெரியவில்லையா?"

"தெரியாமல் என்ன?"

"அப்படியானால் யார்?"

"இப்பொழுது என் அருகில் இருப்பவரே தான்!" என்று கூறி மோஹினி கெட்டியாகச் சிரித்தாள்.

"கெட்டிக்காரிதான் நீ" என்று வசந்தன் அவள் கையை அமுக்கிப் பிடித்தவண்ணம் கூறினான். "என் பேச்சைச் என் மேலேயே திருப்பி விட்டாயே!"

அவர்கள் பேச்சு நடந்து கொண்டே இருந்தது, கடற் கரையில் வீசிக் கொண்டிருந்த காற்றைப் போல இடை விடாமல். இளங்காற்றினால் உடலுக்கு இன்பம் ஏற்பட்டது போல அவர்கள் பேச்சினால் இருவரது உள்ளங்களும் இன்பம் அடைந்தன. ஆகையால் இருவரும் மலர்ந்த முகத்தோடு காணப் பட்டனர்.

தூரத்தில் யாரோ ஓரிருவர் வருவது போல் காணப் பட்டது. அதைப் பார்த்து மோஹினி சொன்னாள்:

"இனி புறப்படுவோம். மிகவும் நேரமாகி விட்டது. ஜனங்கள் வர ஆரம்பித்து விட்டார்கள்."

"ஆமாம்" என்று அவனும் கூற இருவரும் எழுந்து புறப்பட்டனர். அங்கிருந்து புறப்படுவதில் இருவருக்கும் மனமே இல்லை. ஆனால் அங்கேயே தங்குவதென்பதும் முடியாத காரியம்.

தாதரை வந்தடைந்ததும் வசந்தன் கேட்டான்: "இப் பொழுது நீ போரிவிலிக்குப் போக வேண்டுமா?"

"ஊம்......நீங்கள்?"

"நான் இப்படியே நண்பர்கள் வீட்டுக்குப் போகிறேன்."

"நான் போய்ச் சேருகிற நேரத்திற்கு 'இவர்' வந்திருப் பாரோ என்னவோ?"

"இன்றைக்கு வரும் முறையா?"

"ஆமாம். அவர் பரீட்சை நேற்றே முடிந்து விட்டது. இன்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்..."

"ஓஹோ!" என்று வசந்தன் மோஹினியைப் பார்த்தான். மோஹினிக்கு அவனது பார்வையின் பொருள் விளங்கியது. ஆனால் வெட்கம் ஏதோ ஒரு திடமான நிச்சயத்துடன் இருதயத்தில் போராடிக் கொண்டிருந்தது. வசந்தன் இடது புறத்துத் தெருவில் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. மோஹினியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "மறுபடியும் எப்பொழுது சந்திப்பது?" என்று கேட்டான்.

"இப்பொழுது சொல்ல மாட்டேன்!"

"ஏன்?"

"இன்று இரவு 'அவர்' வந்து என்ன என்ன சொல்லப் போகிறாரோ பார்க்க வேண்டும். என்ன என்ன ஏற்பாடுகள் நடக்கப் போகின்றனவோ?"

"ஆமாம். அது உண்மையே!"

"எது இல்லாவிட்டாலும் காலை 9-30 மணி வண்டி இருக்கவே இருக்கிறதே!"

"ரெயிலுக்கு நீ ஏன் வருகிறாய்? உன் பரீட்சை முடிந்து விட்டது!"

"எனக்குக் காலேஜ் இல்லாவிட்டாலும் உங்களுக்கு ஆபீஸ் இருக்கவே இருக்கிறது!"

"அது சரி......"

"அப்படியானால் அடுத்த வாரம் பார்ப்போமா, சௌகரியப் பட்டபோது?"

"ஓ, கே" என்றான் வசந்தன் உற்சாகத்தோடு. பிறகு, "அப்படியானால் புறப்படுகிறாயா?" என்றான்

"புறப்படத்தானே வேண்டும்!"

"அச்சா!" என்று கூறி வசந்தன் விடைபெற்றுக் கொண்டான்.

மோஹினி மெல்ல அசைந்து நடந்து சென்றாள். அவள் மறையும் வரையில் வசந்தன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"ஆனந்தன் பாக்கியசாலி!" என்று முணுமுணுத்துக்கொண்டே வேகமாக அடி எடுத்து வைத்து நடந்தான். வலது புறம் நடை பாதையின் மீது அவன் ஒரு மணி முன்னதாகப் பார்த்த மாண வன் அலைந்து கொண்டே இருந்தான்.

* * *

வசந்தன் மோஹினியை விட்டுப் பிரிந்தபொழுது மணி நான்கு. சில நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று பார்த்தான். யாரும் ஆபீஸிலிருந்து வந்திருக்கவில்லை. மோஹினியோடு ஜோடியாகக் காலங்கழித்து மெய்ம்மறந்திருந்த அவன், தான் ஆபீஸுக்கு 'மட்டம்' போட்டுவிட்டுச் சீக்கிரமே வந்து விட்டவன் என்பதையே மறந்திருந்தான். வீட்டில் நண்பர்கள் இல்லாததைக் கண்டபிறகுதான் அவனுக்கு அந்த நினைவு வந்தது. ஆறுமணி வரையில் எங்கெங்கோ அலைந்து காலத்தைக் கழித்தான். பிறகு நண்பர்கள் வீட்டிற்குச் சென்றான். அரட்டையும் தேநீர் சாப்பிடு வதும் நடைபெற்றன. ஏனோ வசந்தனுக்கு அப்பொழுது மிகவும் களைப்பாய் இருந்தது. சாதாரணமாக மத்தியான்ன நேரத்தைக் குளுமையாக ஆபீஸில் கழிப்பவன் அன்று மாலை முழுவதும் வெயிலில் அலைந்திருந்தான். ஸ்டேஷன் வரையில் நடந்து சென்று அங்கிருந்து போரிவிலிக்குச் செல்ல அவனுக்கு விருப்பம் இருக்க வில்லை. ஒன்பது மணி சுமாருக்குத் தன் நண்பனையும் உற்சாக மூட்டி இருவரும் ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடுவதென்றும் அதன் பிறகு ஏதாவது நல்ல சினிமாவுக்குச் செல்லுவதென்றும் திட்டமிட்டுக்கொண்டு மத்தியான்னம் மோஹினியுடன் சென்றி ருந்த ஹோட்டலுக்கு நண்பனை அழைத்துச்சென்றான். மத்தி யான்னம் அவர்களிருவரும் உட்கார்ந்து சாப்பிட்ட அந்த அறை இப்பொழுதும் காலியாகவே இருந்தது. மத்தியான்னம் இருந்த அதே வெய்டர், வசந்தனைக் கண்டதும் சிரித்துக்கொண்டே எதிர் கொண்டழைத்து அவனது உத்தரவுக்காகக் காத்து நின்றான்.

நண்பர்களிருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். வசந்தன் சொன்னான்: "இங்கே சாப்பாடு பிரமாதம். ஆனால் சார்ஜ் தான் மிகவும் அதிகம்."

"இருந்தாலும் பரவாயில்லை" என்று கூறிவிட்டு நண்பன் மேலே தொடர்ந்தான். "இங்கே நானும் நீயும் வந்து பிரயோசனம் இல்லை, வசந்தா. இங்கே வரவேண்டுமானால், கூட அழகான

கூட்டாளி இருக்க வேண்டும். அப்படி வருபவர்கள் நாலு காசு அதிகமாகக் கொடுக்கவும் தயங்கமாட்டார்கள்.''

நண்பன் சொல்லுவது வசந்தனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனாலும் அவன் சொல்லுவது உண்மை தானே! மத்தியான்னம் தான் மோஹினியுடன் அங்கே வந்திருந்த பொழுது வெய்டரிடம் எவ்வளவு பணம் கொடுத்தோம் என்பதும் அவன் மீதி எவ்வளவு திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தான் என்பதும் ஒன்றும் அவன் நினைவில் இல்லாததை எண்ணி, "ஆம், நீ சொல்லுவது சரிதான்'' என்று நண்பனின் பேச்சை ஒப்புக் கொண்டான்.

வெளியே மானேஜருடன் யாரோ பேசிக்கொண்டிருந்தனர். முதலில் சாதாரணமாக மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்த அவ்விருவரும் சிறிது சிறிதாகக் குரலை ஏற்றிப் பெரிய வாய்ச் சண்டையில் இறங்கி விட்டாற் போல் இருந்தது. ஹோட்டலில் இருந்த எல்லோருடைய கவனமும் அங்கே திரும்பி விட்டது. மானேஜரோடு பேசிக் கொண்டிருந்தவன் குரல் வசந்தனுக்குப் பரிசயமான குரலாக இருக்கவே அவன் ஆவலோடு அந்தச் சண்டையைக் காது கொடுத்துக் கேட்டான்.

''என்ன ஐயா, நீங்கள் ஹோட்டல் வைத்திருப்பதே இதற்காகத்தானே?''

''அதைப்பற்றி யெல்லாம் கேட்க நீங்கள் யார்?''

''எனக்கு உங்களிடமிருந்து உண்மையான சங்கதியை அறிய வேண்டியிருக்கிறது. அந்தப் பெண் இன்று ஓர் ஆடவனுடன் உங்களுடைய ஹோட்டலுக்கு வந்திருந்தாளா என்று நான் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை!''

''பதில் சொல்லவேண்டு மென்ற நிர்ப்பந்தமில்லாவிட்டாலும் யோக்கியரானல் சரியானபடி பதில் சொல்லுவீர்!''

''நீங்களும் அப்படியேதான் என்பதை மறந்து விட்டீர்கள். ஏதாவது ஒழுங்காகப் பேசுவதானல் இங்கே நின்று பேசலாம்... இல்லாவிட்டால்... புறப்படுங்கள்.''

''நான் போகிறேன். இந்த மாதிரி இடத்தில் காலடி வைப்பது கூடத் தப்பு.''

"இருக்கட்டுமே. உங்களை யாரும் இப்பொழுது இங்கே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவில்லையே!"

"நான் காரியமாகத்தான் வந்தேனே ஒழிய வெட்டிப் பேச்சுக்கு வரவில்லை. ஆனால் நீங்கள் இப்படிப் பொறுப்பில்லாத வராக இருப்பீர் என்று நான் எண்ணியிருக்கவில்லை."

"மிஸ்டர்! கொஞ்சம் நாக்கை அடக்கியே பேசுங்கள். போனால் போகிறதென்று உங்களுடன் இது வரையில் மரியாதை யாகப் பேசி வந்தேன். நீங்கள் அதைக் காப்பாற்றிக் கொள்ளுவ தாகக் காணோம். இது சண்டை போடும் இடமல்ல. தெரிந்ததா?"

"எனக்கொன்றும் சண்டை போட வேண்டுமென்று ஆசை இல்லை. நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட் டால் நான் பேசாமல் போய் விடுகிறேன்."

"என்ன நீங்கள் கேட்க வேண்டுவது?"

"இன்று மத்தியான்னம் சுமார் இரண்டு மணிக்கு ஒரு காலேஜ் பெண் யாரோ ஓர் ஆடவனுடன் இங்கே வந்திருந்தாளா இல்லையா?"

"வந்திருக்கலாம். இங்கு வருவோர் போவோர் பெயரை யெல்லாம் நாங்கள் குறித்து வைத்துக் கொள்ளுவதில்லை."

"பெயரைக் குறித்து வைத்துக் கொள்ளாவிட்டாலும், யார் யார் வந்து போகிறார்கள் என்பதைப் பார்க்காமல் கூடவா இருப்பீர்கள்?"

"யார் வந்தாலென்ன? அவர்களை யெல்லாம் நான் கவனித்து வைத்துக் கொள்ளுவதில்லை."

"அப்படியானால் இங்கே எவன் வேண்டுமானாலும் எவளை யாவது இழுத்துக் கொண்டு வந்து சாப்பிட்டும் சரசமாடியும் கொம்மாளமடித்தாலும் உங்களுக்கு அதைப் பற்றி அக்கறை யில்லை?"

"இதோ பாருங்கள் மிஸ்டர், இங்கே யார் வந்தாலும் என்னைப் பொறுத்த வரையில் அவர்கள் சாப்பிடவும் சிற்றுண்டி உண்ணவும் வருவதாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும். சாப் பிடும் பொழுது அவர்கள் ஒருவரோடொருவர் சலுகையுடனும் சரசமாகவும் பேசிக் கொண்டால் நான் அதற்குத் தடை விதிக்க முடியுமா என்ன?"

"அதற்கு நீர் இடம் கொடுப்பது சரியா என்று கேட்கிறேன்."

"மறுபடியும் சொல்லுகிறேன். நான் இங்கே அவகாசம் செய்து கொடுப்பது அவர்களுடைய உணவு பலகாரத்திற்குத் தான். அவர்கள் மற்றபடி எப்படி நடந்து கொள்ளுகிறார்கள், பேசுகிறார்கள் என்பது எனக்குச் சம்பந்தப்படாத விஷயம்."

"அப்படியானால் யார் வந்து இங்கே என்ன கூத்து அடித் தாலும் கேட்பாரில்லை யென்று ஆயிற்று."

"இங்கே பாருங்கள் சார், கொஞ்சம் சாந்தமாகப் பேசுங்கள். வீணில் பொரிந்து தள்ள வேண்டாம்...... இரு காதலர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பதானால் கொஞ்ச நேரத்திற்கு இங்கே வந்து சுகமாகக் காலங்கழித்துவிட்டுப் போனால் உங்க ளுக்கு ஏன் அவ்வளவு கோபம்? அப்படிப்பட்டவர்களைக் கண் டால் அவர்கள் ஆனந்தத்தைக் கண்டு எனக்குச் சந்தோஷம் தான் உண்டாகிறது."

"இது தான் அநீதிக்கு ஊக்கமூட்டுவது!"

"இருக்கலாம், உங்கள் எண்ணத்தில். இப்படிப்பட்ட பேச்சில் எனக்கு அநுபவம் உண்டு. அது என்னவென்பது எனக்கு நன்றாகத் தெரியும்."

"அவள் வேறு யாராகவாவது இருந்தாலோ அன்றி கல்யாணமாகாதவளாக இருந்தாலோ நான் இதில் தலையிட மாட்டேன்."

"உங்களுக்கு அந்தப் பெண் என்ன உறவு?"

"அவள் என் தம்பியின் மனைவி!"

"அப்படியானால் இதில் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருவானேன்? இதில் யாராவது கோபித்துக் கொண்டு சண்டைக்கு வர அதிகாரமுடையவர்கள் உண்டென்றால் அவர் அந்தப் பெண்ணின் புருஷர் தானே?"

"இப்பொழுது இப்படித்தான் பேசுவீர்கள். சந்தர்ப்பம் வரும் போது தெரியும்."

"அவள் எங்கே இருப்பவள்?"

"போரிவிலி."

வசந்தனுக்குத் தெரிந்து போயிற்று, இதுவரையில் நடந்த பேச்சு மோஹினியைப் பற்றித்தான் என்று. பேசிக் கொண் டிருந்தவன் பாஸ்கரன் என்பதையும் அவன் அறிந்து கொண்டான். அவன் மன நிலை விசித்திரமாக மாறியது. ஒரு

புறம் பயம்; மற்ஞெரு புறம் பாஸ்கரனேடு அப்பொழுதே போய்ச் சண்டைக்கு நின்ருல் வார்த்தைக்கு வார்த்தை வளர்ந்து நாலு பேர் எதிரில் எவ்வளவு அவமானம் உண்டாகிவிடும் என்ற நினைப்பு. வசந்தனின் முகம் விகாரமாக மாறியது. நண்ப னுக்கோ ஒன்றும் முழுவதும் புரியவில்லை. வசந்தனுக்கு மோஹினியுடன் தான் அங்கே வந்திருக்கக் கூடாது என்று தோன்றியது. ஆனல் இதற்குள்ளாகப் பாஸ்கரனுக்கு எப்படி இந்த விஷயம் எட்டியது என்று விளங்கவில்லை.

மானேஜர் பாஸ்கரனைக் கேட்டுக்கொண்டிருந்தார்: "அவர் களிருவரும் போரிவிலியிலிருந்து வந்திருந்தார்களா?"

"அவள் பரீட்சை எழுதியிருக்கிருள். இன்று மத்தியான்னம் தான் பரீட்சை முடிந்தது. பரீட்சை முடிந்ததுமே இருவரும் இங்கே வந்திருக்க வேண்டும்."

"கூட வந்த அவன் யார்?"

"அதுதான் எனக்கும் இப்பொழுது தெரியவேண்டும். அவன் யாரென்று மாத்திரம் தெரிந்திருந்தால் இந்நேரத்திற்கு அவன் மண்டையை உடைத்திருப்பேன்."

"அவர்கள் இங்கே வந்திருந்தார்களென்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"எனக்கு நிச்சயமாகத் தெரியும். மூன்றுமணி சுமாருக்கு இந்தப் பக்கம் வந்து நான்கு மணி வரையிலும் இங்கே இருந் திருக்கிருர்கள்."

"அதுதான் உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்கிறேன்?"

பாஸ்கரன் மிகவும் சாந்தமாகப் பேசத் தொடங்கினன். மானேஜர் விஷயத்தை அறிய ஆவல் காண்பித்த உடன் அவன் கோபம் தணிந்து விட்டது.

"இதைப் பாருங்கள் மானேஜர் சார்,......இது மிகவும் ஸீரியஸ் விஷயம். இதை நாம் எப்படியும் தடுத்தே ஆகவேண்டும். இதில் உங்கள் ஒத்தாசை வேண்டும்."

வசந்தன் உள்ளிருந்து கேட்டுக்கொண்டே இருந்தான். சாப்பாடு எப்பொழுதோ முடிந்துபோயிருந்தது. ஹெட்வெய்டர் பில் கொண்டுவந்து கொடுக்கும்போது வசந்தனை ஜாடையாகப் பார்த்ததைக் கவனித்த வசந்தன் அவனைப் போசாமலிருக்கும்படி

சைகை காட்டினன். 'என்மானம் உன் கையில் இருக்கிறது' என்று சொல்லுவதுபோல் இருந்தது வசந்தனின் பார்வை.

"உங்கள் கோரிக்கை சரிதான். ஆனல் என்னல் இதில் ஒன்றும் செய்ய முடியாது" என்று மானேஜர் கையை விரித்தார்.

"ஏன்?" என்ருன் பாஸ்கரன்.

"முதலாவது, வந்தவர்கள் யார், என்ன என்பது ஒன்றும் எனக்குத் தெரியாது......"

"உங்கள் 'சர்வ'ரைக் கேட்டால் சொல்லுகிருன்."

"அவனுக்கென்ன சார் தெரியும்? இங்கே வருபவர்களுடைய பெயரையும் விலாசத்தையுமா அவன் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிருன்?"

"அதுசரி. ஆனல்......"

மானேஜர் 'ஹெட் வெய்டர்' என்று கூப்பிட்டார். வசந்தனுக்கு உடலிலிருந்து உயிர் போய்விட்டது போலிருந்தது. இனி தப்ப முடியாது என்று அவனுக்குத் தோன்றிவிட்டது.

"ஜீ சாப்......"

"இவர் சொல்லுகிறபடி மத்தியான்னம் இங்கே யாராவது வந்திருந்தார்களா?"

"ஆமாம்......"

"யாரென்று தெரியுமா?"

"தெரியாது. அவர்கள் வந்தது இதுதான் முதல் தடவை!"

"என்ன சாப்பிட்டார்கள் அவர்கள்?"

"ஒரு சாப்பாடு, ஓர் ஆரஞ்ச் ஜூஸ்."

"அவர்களை மறுபடியும் உன்னல் அடையாளம் தெரிந்து கொள்ள முடியுமா?"

"இல்லை, முடியாது. நான் அவ்வளவு நன்ருக அவர்களைக் கவனிக்க வில்லை."

"அச்சா......"

வசந்தன் நீண்ட பெருமூச்சு விட்டான். நண்பனுக்கோ ஒன்றும் புரியவில்லை. வசந்தன் ஏன் அந்தச் சம்பாஷணையில் அவ்வளவு கவனத்துடன் ஈடுபட்டிருக்கிருன் என்று அவனுக்கு விளங்கவில்லை.

"சரி, புறப்படப்பா போவோம். போதும்; இந்தக் கதை நமக்கெதற்கு?" என்று நண்பன் வசந்தனைத் துரிதப்படுத்தினன்.

"உனக்கு இன்னும் புரியவில்லையா?"

"என்னவோ கொஞ்சம் புரிந்தது. எப்படியோ நாசமாய்ப் போகட்டும். நீ புறப்படு, போவோம்"

"போகலாம் இருடா......"

அந்தக் கணத்தில் வசந்தன் வெளியே செல்லுவதே சாத்திய மில்லை என்பதை அவன் என்ன கண்டான் பாவம்? இருவரும் சிகரெட்டைப் பற்ற வைத்தனர்.

மானேஜர் சொல்லிக் கொண்டிருந்தார்: "பார்த்தீர்களா? எங்களுக்கு ஏன் சார் ஒருவரைக் கண்காணிக்கும் பொறுப்பு? காலையிலிருந்து சாயங்காலத்திற்குள் ஆயிரம் பேர் வருகிறார்கள், போகிறார்கள்......"

"இருந்தாலும் இது போன்ற விஷயங்களில் நீங்கள் சிறிது கவனத்தைச் செலுத்துவது நல்லது......"

"அது முடியாத காரியம். என்னவோ உங்கள் மனச்சமா தானத்திற்காக வெய்டரைக் கூப்பிட்டுக் கேட்டேன். ஒருவேளை ஆசாமி யார் என்று தெரிந்தாலும்கூட அவர்களுக்குத் தெரியாமல் இப்படி நம்பிக்கைத் துரோகமாக நடந்து கொள்வது எனக்குச் சரியென்று படவில்லை."

"அவர்கள் மாத்திரம் மற்றொருவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா?"

"அது அவர்கள் பாடு. எனக்கென்ன சம்பந்தம்? இப்படி இங்கே வருவோர் போவோரைப் பற்றியெல்லாம் நான் பேசிக் கொண்டிருந்தால் மூன்றே நாளில் கடையை மூடிக்கொண்டு போக வேண்டியதுதான்."

"ஆனால் இந்தமாதிரி விஷயங்களை உதவியாகக் கொண்டு பிஸினஸ் வளர்த்துவதும் தவறு!"

"உங்கள் பேச்சை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள், மிஸ்டர்......தயவு செய்து அளவு மீறிப் பேசவேண்டாம்."

"நீங்கள் இதனால் மறைமுகமாக அக்கிரமத்திற்கு இடங் கொடுக்கிறமாதிரி ஆகிறது."

"மறைமுகமாக இன்னும் ஆயிரம் நடக்கலாம். அதற்கும் நமக்குமென்ன? நேரிடையாக நாம் எதிலும் சம்பந்தப் படாமல் இருந்தால் சரி. இங்கே வருபவர்கள் என்னுடைய வாடிக்கைக்

காரர்கள். அவர்களுக்கும் எனக்கும் வியாபாரத்தைத் தவிர வேறு சம்பந்தம் கிடையாது......”

“அதுசரி. ஆனால் இது ஒரு சமூகப் பிரச்னை என்பதனால் உங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டும்.”

“என்ன?”

“அவர்கள் மறுமுறை இங்கே வந்தால் நீங்கள் எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.”

“நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன்.”

“அதற்காக நீங்கள் எவ்வளவு கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்.”

“மறுபடியும் மரியாதை தவறிப் பேசுகிறீர்கள், மிஸ்டர்! பணத்திற்காக எதைவேண்டுமானாலும் செய்யக் கூடியவன் நான் என்று நினைத்துக் கொண்டீர்களா?”

“அப்படியல்ல...”

“பின் எப்படியாம்?”

“நீங்கள் உதவிசெய்தே ஆகவேண்டும் என்று சொன்னேன்.”

“அது வேறு பேச்சு. இன்னொரு முறை அவர்கள் வந்தால் பார்த்துக் கொள்ளலாம்.”

“என்னுடைய விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போகட்டுமா?”

“செய்யுங்கள்.”

வசந்தன் கதவிடுக்கு வழியாகப் பார்த்தான். பாஸ்கரன் தன் விலாசத்தை ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதிக் கொடுத்தான். மானேஜர் அதைத் தம்முடைய மேஜை டிராயரில் எடுத்துக் வைத்துக் கொண்டார்.”

பாஸ்கரன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த பொழுது மானேஜர் மீண்டும் கேட்டார்: “அவர்கள் இருவரும் இங்கே தான் வந்திருந்தார்களென்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?”

“எனக்கு முதலிலிருந்தே சந்தேகம். இன்று மத்தியான்னம் ஒரு மாணவனை அவளையே பின் தொடர்ந்து செல்லும்படி ஏவி யிருந்தேன். அவளோடு வந்தவன் யாராக இருக்கும் என்று எனக்கு ஒருவாறு தெரியும். இருந்தாலும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளத்தான் இங்கே வந்தேன்.”

வசந்தனுக்கு மின்னலைப் போல் பளிச் சென்று விளங்கியது, 'மத்தியான்னம் மூன்று முறை தான் கண்டிருந்த மாணவன் வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கவில்லை; பாஸ்கரனின் பிரதி நிதியாகத் தன்னையும் மோஹினியையும் கண்காணித்துக் கொண்டு தான் பின் தொடர்ந்து வந்திருக்கிறான்' என்று.

பாஸ்கரன் புறப்பட்டுப் போன ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஹெட் வெய்ட்டர் உள்ளே நுழைந்து வசந்தனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

வசந்தன் நண்பனைப் பார்த்து, "ஊம், கதை முடிந்தது. இனி புறப்படு" என்றான்.

"என்ன கதையோ என்ன மண்ணாங்கட்டியோ!" என்று கூறியபடி நண்பன் எழுந்திருந்தான். அவனுக்குப் பின்னாலேயே புறப்பட்ட வசந்தன் ஹெட் வெய்டர் கையில் ஒரு ரூபாயைத் திணித்தான். "தாங்யூ சாப்" என்றான் அவன். 'நான் தான் உனக்கு அதைச் சொல்ல வேண்டும்' என்று வசந்தன் மனத்திற்குள்ளாகவே நினைத்துக் கொண்டான்.

தெருவில் இறங்கும் பொழுது வசந்தன் ஆயிரம் யோசனைகளால் பீடிக்கப்பட்டான். அவன் புத்தியே தடுமாறிக் கொண்டிருந்தது. "இந்தப் பெரிய நகரத்தில் ஒரு நாளில் என்ன என்ன அக்கிரமங்களெல்லாம் நடக்கின்றனவோ!" என்றான் நண்பன். வசந்தன் அவன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அன்று இரவு அங்கேயே தங்க வேண்டுமென்று வசந்தன் முதலில் நினைத்திருந்த போதிலும் அப்படிச் செய்தால் நிம்மதியாக யோசிக்க முடியாதென்பதாலும் நண்பன் தன்னுடைய மனவேறுபாட்டைப் புரிந்து கொண்டு விடக் கூடும் என்ற பயத்தாலும் அப்பொழுதே போரிவிலிக்குப் புறப்பட்டு விடுவது என்று தீர்மானித்தான்.

மணி பத்தடித்து விட்டிருந்தது. தெருக்களில் ஜன நடமாட்டம் அநேகமாகக் குறைந்து போயிருந்தது. மத்தியான்னம் மோஹினியோடு தான் வந்த அதே வழியில் திரும்பிச் சென்றான். ஆனால் வரும் போது இருந்த ஆனந்தத்திற்குப் பதில் இப்பொழுது கவலையும் பீதியும் தான் அவன் மனத்தில் நிரம்பியிருந்தன. மோஹினி அவனுடன் இருந்த பொழுது ஏற்பட்ட சந்தோஷம் மறைந்து அதற்குப் பதில் அந்தச் சந்தோஷத்

திற்குள்ளே மறைந்திருந்த பீதி தலை காட்டியது. தாழம்பூவின் சுகந்தத்தில் மனத்தைப் பறிகொடுத்து அதன் அருகே சென்ற பொழுது அதில் வசிக்கும் சர்ப்பத்தைக் கண்டவன் போலிருந்தது அவன் நிலைமை.

வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்ட வசந்தன் தன் நிலைமையை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினான். 'இதன் முடிவு என்ன?' என்று யோசித்தான். மத்தியான்னம் தானும் மோஹினியும் ஹோட்டலில் ஒரு மணி நேரம் காலங்கழித்தது, பின்னர் கடற்கரையில் நெருங்கி நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தது, ஒருவருடன் ஒருவர் கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்டது இவை யெல்லாம் பாஸ்கரனுக்கு அந்த மாணவன் மூலமாகத் தெரிந்து போயிருக்கும். மோஹினியிடம் பல முறை தன் அபீஷ்டத்தை நிறை வேற்றிக் கொள்ள முயன்று பலனடையாமல் அவமானப்பட நேர்ந்த பாஸ்கரன் இப்பொழுது பழிவாங்காமல் விடமாட்டான் என்பதும், பாஸ் கரனின் சந்தேகம் முற்றும் தன் மேலே தான் விழுந்திருக்க வேண்டு மென்பதும் வசந்தனுக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது. அன்று ஒரு நாள் மோஹினியுடன் ஸ்டேஷனுக் கருகில் நின்று பேசியதைக் கண்டே கதை கட்டி, ஆனந்தனின் மனத்தில் விஷ வித்தை ஊன்றிய பாஸ்கரன் இன்று இவ்வளவு விஷயங்களை அறிந்து கொண்டபின் பேசாதிருந்து விடுவான் என்று எண்ண இடமே இல்லை. பாஸ்கரன் தான் தெரிந்து கொண்ட விஷயம் அனைத்தையும் ஆனந்தனுக்குத் தெரிவித்து விட்டால் அதன் முடிவு?

எப்படி எப்படி யோசித்தாலும் வசந்தனுக்குச் சரியான வழியே தோன்றவில்லை. வசந்தனின் எண்ணங்களைப் போலவே ரெயிலும் இருளைக் கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. வசந்தன் நினைக்கலானான்:

'நான் செய்தது தான் என்ன? ஹோட்டலில் அப்படிப் பயந்து போய் உள்ளே பதுங்கிக் கிடக்காமல் வெளியே வந்து நடந்த விஷயங்களைப் பகிரங்கமாகச் சொல்லி யிருந்தால் ஒரு தொந்தரவும் இருந்திருக்காது. ஆனால் அப்படி நான் வெளியே வந்து சொல்லியிருந்தாலும் யாரும் என்னை நம்பியிருக்க மாட்டார்கள். வீணில் அவமானம் தான் ஏற்பட்டிருக்கும்.

ஆகையால் நான் அங்கேயே மறைந்திருந்து விஷய மெல்லாவற் றையும் கேட்டுக் கொண்டதே நல்லதாயிற்று.'

மொத்தத்தில் நிலைமை அபாயகரமான கட்டத்தை அடைந்து விட்டது என்று அவனுக்குத் தோன்றியது. ரெயிலை விட்டிறங்கி வீடு நோக்கிச் செல்லும் பொழுது இன்னொரு கவலை அவனைப் பிடித்துக் கொண்டது. இந்த விஷயத்தில் தன்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அதிகமாகப் போனால் ஆனந்தனுக்கும் தனக்கும் மனஸ்தாபம் ஏற்படலாம். ஆனால் மோஹினி? அவளுக்குக் கஷ்டம் தயாராகக் காத்து நிற்பது போலிருந்தது. பாஸ்கரன் பேச்சைக் கேட்டு ஆனந்தன் கண்டிப்பாக அவளைத் துன்புறுத்துவான். ஒருகால் இதனால் ஏற்கனவே அவர்களிடை இருக்கும் பிளவு அகன்று கணவன் மனைவியர் என்றென்றும் பிரிந்து விடும்படியும் நேரிட்டு விடக் கூடும். அவர்களிருவரும் ஒன்றாக இருந்து சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழவேண்டு மென்ற எண்ணத்துடன் தான் கைக் கொண்ட முயற்சி அவர் களிருவரையும் நிரந்தரமாகப் பிரித்து விடுவதில் வந்து முடிந்து விட்டால்? இதை நினைத்த போது வசந்தனின் இதயம் நடுக்க முற்றது. மோஹினியுடன் முதலிலிருந்தே பேசாமல் இருந்திருந் தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது அவனுக்கு. தன்னால் அவளுக்குச் சுகம் இல்லாவிட்டாலும் துன்பமாவது இல்லாமல் இருந்திருக்குமே!

ஆனந்தனின் வீட்டைத் தாண்டி வசந்தன் தன் அறைக்குச் செல்லும் போது அந்த வீட்டின் நடு அறையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கவனித்தான்.

அந்த விளக்கொளியில் ஆனந்தனும் மோஹினியும் உட் கார்ந்து பேசிக் கொண்டிருப்பதையும் கவனித்தான்.

மோஹினி தன் மனத்தை வசந்தனுக்குப் பறிகொடுத்து விட்டாள். ஒவ்வொரு நிமிஷமும் அவளுக்கு அவன் நினைவாகவே இருந்தது. இன்னும் சில மணி நேரமாவது அவனுடனேயே இருந்திருக்கக் கூடாதா என்று அவளுக்குத் தோன்றிக் கொண் டிருந்தது. அவள் அருகே உட்கார்ந்திருந்தது ஆனந்தனானாலும் மோஹினியோ அவன் முகத்தில் வசந்தனின் உருவத்தைத்தான் கண்டு கொண்டிருந்தாள்.

அன்று மோஹினி வரவேண்டிய நேரத்திற்கு வராமற் போன போதிலும் அவள் நாத்தனார் கோப மூட்டக் கூடிய எந்தப் பேச்சும் பேசியிருக்கவில்லை. மோஹினி உற்சாகத்தோடு இருப்பது அவளுடைய பரீட்சை முடிந்து விட்டதனால் இருக்கக் கூடுமென அவள் நினைத்தாள். ஆனால் மோஹினியின் உள்ளத்து உவகையின் உண்மைக் காரணத்தை நாத்தனார் எப்படி அறிவாள்? மோஹினி வந்ததிலிருந்து அவளுடன் இதமாகவே பேசி ஆச்சரியத்தை உண்டு பண்ணியிருந்தாள் நாத்தனார். மோஹினிக்கு இதன் பொருள் விளங்கி விட்டது. அன்று மத்தியான்னத்திலிருந்து நாத்தனார் 'மூன்று நாள் லீவ்' வாங்கிக் கொண்டிருந்ததால், சமையலறையின் ஆட்சி தன் கையால் நடைபெற்றாக வேண்டுமே என்பதற்காகத்தான் நாத்தனாரின் இந்த அன்பு வேஷம் என்பதைக் கண்டு கொண்டாள். அன்று வியாழக்கிழமை யாகையால் நாராயணராவுக்கும், நாத்தனாருக்கும் இரவு சாப்பாடு கிடையாது. இரவு நேரங்கழித்து வந்த ஆனந்தனுக்கு மாத்திரம் பரிமாறிவிட்டுத் தானும் சாப்பிட்டாள் மோஹினி. இருவருடைய பரீட்சையும் முடிந்து விட்டது என்பதனாலோ அன்றி வழக்கமாக நிகழும் மனஸ்தாபங்கள் ஏதும் நிகழாததனாலோ அன்று ஆனந்தன் உல்லாசமான மன நிலையில் இருந்தான். மோஹினியும் உற்சாகத்துடன் இருந்தாள். ஆனால் அவள் உற்சாகத்திற்குக் காரணம் ஆனந்தனல்ல — வசந்தன்! ஜுஹு கனவு, ஏறக்குறைய அதே கனவு அன்று தாதர் கடற் கரையில் நனவாக மாறிய நினைவு, இவைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்து அவள் மனத்தை இன்பக் கடலில் மிதக்க விட்டிருந்தன.

"பரீட்சை எல்லாம் எப்படி எழுதினாய் மோஹினி?"

"நீங்கள்?,"

"ஒரு பேப்பரைத்தவிர மற்றவையெல்லாம் நன்றாக எழுதியிருக்கிறேன்."

"மொத்தத்தில் எப்படி?"

"பார்க்க வேண்டும். எங்கள் பரீட்சையில் பாஸ், பெயில் என்று சொல்லிவிடமுடியாது. முதல் ஏழெட்டு ஸ்தானங்களுக்குள் வரவேண்டும். இல்லாவிட்டால் பாஸானாலும் ஒன்றுதான், பெயிலானாலும் ஒன்றுதான்."

"படிப்பதென்னவோ நிறையப் படித்தீர்கள்!"

"படித்தேன். ஆனல்......"

"ஆனல் என்ன?"

"ஒவ்வொரு சமயத்தில் மனம் படிப்பில் செல்லவேயில்லே."

"ஏன்?"

"விவாகம் ஆனபிறகு படிக்கவேண்டிய நிர்ப்பந்தமே வரக்கூடாது!"

"அப்படியானல் விவாகம் செய்துகொண்டவர்களெல்லாம் படிப்புக்கு ஒரு நமஸ்காரம் போட்டுவிட வேண்டியதுதான?"

"அப்படியல்ல. படிக்க ஆரம்பித்தால் நினேவெல்லாம் வேறு ஒருவரிடம் சென்று விடுகிறது."

"ஓஹோ. ஆனல் எனக்கு அப்படியெல்லாம் ஆகவில்லே. பூனவுக்குச் சென்ற பிறகோ, இங்கே ஆறு மாதங்களில் படிக்காத படிப்பை அங்கே மூன்றே வாரங்களில் படித்து முடித்தேன்."

"ஊம். கேட்க வேண்டுமென்று நினேத்தேன். மறந்தே விட்டேன். பூனவில் எப்படி உனக்குப் பொழுது போய்க் கொண்டிருந்தது?"

"சொன்னேனே? எங்கேயும் வெளியே போகவே இல்லே. என்றைக்காவது ஒவ்வொரு நாள் சாயங்காலம் கடைவீதிப்பக்கம் போய் வருவேன். மீதி நேரமெல்லாம் அம்மாவுடன் அரட்டை அடிப்பதோ இல்லாவிட்டால் படிப்பதோதான் வேலே."

"அம்மா என்ன சொன்னள்?"

"அவள் என்ன சொல்வாள் பாவம்! நீங்கள் ஒரு நான்கு நாட்களாவது வந்து இருந்திருந்தால் நன்ருயிருந்திருக்கும் என்று சொன்னள்."

"ஏன்? நான் வந்திருக்க வேண்டுமா?"

"ஆமாம்; ஏன்? வரக்கூடாதா?"

"நீ தானே சொன்னய், நான் அங்கே வந்தால் வாய்ப்பூட்டு என்றும், அதனல் வரவேண்டாம் என்றும்?"

"என்னவோ சொன்னேன். நீங்கள் வந்திருந்தால் அவளுக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருந்திருக்கும்...வருவதே அபூர்வம்; இன்னெரு முறையாவது......"

"ஏது? மறுபடியும் பூனவுக்குப் போகவேண்டுமென்று ஆசை வைத்திருக்கிருய் போலிருக்கிறதே?"

"ஆமாம். ஆனல் தனியே அல்ல."

"பின்?"

"நீங்களும் வரவேண்டும்......"

அந்தக் கணத்தில் மோஹினியின் மனத்தில் விசித்திர எண்ணம் ஒன்று தோன்றியது. வசந்தனின் நினைவு அவளை வாட்டிக்கொண்டே இருந்தது. ஆனந்தனை வசந்தனென்றே நினைத்துக்கொண்டு அவள் பேசுவதுபோல் இருந்தது. ஆனால் அந்த ஒரே ஒரு கணம் வசந்தன் மறைந்தான். கண்ணெதிரே உட்கார்ந்திருந்தவன் ஆனந்தன்—வசந்தனுக்கு எல்லாவகையிலும் நேர் விரோதமான சுபாவம் உடைய ஆனந்தன்—தன்மேல் அன்பு கொள்ளாத கணவன்—என்ற உணர்வு தோன்றி மனத்தைக் குன்ற வைத்தது.

"என்னைக் கண்டால் அம்மாவுக்குக் கோபமில்லையா?" என்று ஆனந்தன் கேட்டான்.

"கோபம் எதற்காக? அப்படி ஒருவேளை கோபம் இருந்தாலும் அது குறையும்படியாக நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்......"

"ஓஹோ" என்று ஆனந்தன் அலட்சியமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் பொருள் மோஹினிக்கு ஸ்பஷ்டமாக விளங்கியது. 'ஆமாம், உனக்குக் கோபம் வராமல் நான் நடந்து கொள்ள வேண்டும். உன் தாய்க்குக் கோபம் வராமல் நான் நடந்து கொள்ள வேண்டும். அப்படியிருந்தால் உங்களுக்குச் சந்தோஷம், இல்லையா?' என்று கேட்பது போலிருந்தது அவன் சிரிப்பு. மோஹினி பேசாதிருந்தாள்.

"ஏன் மோஹினி, பேசாமலிருந்து விட்டாய்? என் பேச்சு உனக்குச் சரி என்று படவில்லையா?"

"உங்கள் இஷ்டம். நான் என்ன சொல்லக் கிடக்கிறது?"

"ஏன் இப்படி சுரத்தில்லாமற் பேசுகிறாய், மோஹினி?" என்று கேட்டுக்கொண்டே ஆனந்தன் அவளுக்கு வெகு அருகில் நெருங்கி அவள் கையைத் தன் கைகளில் எடுத்து வைத்துக் கொண்டான். ஆனந்தனின் உடலிலே உணர்ச்சி பரவிக் கொண்டிருந்தது. மோஹினி அசுவாரஸ்யமாக இருந்ததனால் அவனது வேகம் சிறிது தடைப்பட்டாலும், அவன் மனம் தன் லட்சிய சித்திக்காகப் பறந்து கொண்டிருந்தது. மோஹினியோ சிணுங்கத் தொடங்கினாள். அவள் தேகம் குறுகியது. குறுகிய அந்-

உடலிலே அவள் இதயமோ வசந்தனுக்காக மலர்ந்து நின்றது! பக்கத்திலிருப்பது ஆனந்தன் என்பதை நினைத்தவுடன் அந்த இதயமலர் வாடத் தொடங்கிற்று.

ஆனந்தன் அவளைத் தன்னருகே இழுத்து வைத்துக்கொண்டு, "என்ன மோஹினி இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டான்.

"என்ன செய்கிறேன்?"

"என்னைக் கண்டால் உனக்கு அசட்டையா?"

"நானே அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்!"

"இல்லை என்று நான் எப்படிச் சொன்னால் உனக்குப் புரியும்? இதயத்தினால் கூற வேண்டும்!"

"ஆம். வாயால் கூறினால் ஆகாது, உள்ளத்தால் கூற வேண்டும்!"

ஆனந்தன் பேசாமலிருந்தான். இரண்டொரு நிமிஷங்கள் கழித்து மீண்டும் சொன்னான் :

"இனியாகிலும் நாம் சுகமாக வாழ வேண்டும், மோஹினி."

"நான் வேண்டாமென்று சொன்னேனா?"

"வேண்டாமென்று வாயால் சொல்லாவிட்டாலும் காரியத்தில் அதை அசாத்திய மாக்கி வருகிறாய்!"

"இதே குறையை நானும் உங்கள் பேரில் சொல்ல முடியும்."

மோஹினி நினைத்தாள்: 'வசந்தனோடு பேசும் பொழுது மனம் எப்படிப் பறவை போல் ஆகாயத்தில் உல்லாசமாகப் பறக்கிறது! இவரோடு பேசும் போது ஏன் இந்த நீரசம்?' என்று. மோஹினி ஏதோ யோசிப்பதைக் கண்டு ஆனந்தன் கேட்டான்.

"என்ன யோசனை செய்கிறாய் மோஹினி?"

"ஒன்றும் இல்லை!"

"பொய். ஏதோ யோசனை செய்து கொண்டுதான் இருந்தாய்."

"ஆமாம். இனிமேல் நம் விஷயம் எப்படி என்று."

"அப்படி யென்றால்?"

"சுகமாக வாழ வேண்டும் என்றீர்களே?"

"ஆமாம்!"

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்."

"என்ன வென்று?"

"நீங்களே தானே சொல்லியிருந்தீர்கள், பரீட்சை முடிந்த பிறகு பார்ப்போம் என்று."

"ஆமாம். சொல்லியிருந்தேன். இன்று அத்திம்பேருடன் அதைப் பற்றிப் பேசியும் ஆயிற்று."

"என்ன சொன்னார் அவர்?"

"ஒன்றும் இல்லை. 'ஏன் வீணாக நாலுபேர் எதிரில் பேச்சுக்கு இடம் வைத்துக் கொள்ள வேண்டும்? ஒருவருக் கொருவர் அநுசரித்துக் கொண்டு இங்கேயே இருந்து விடலாம்' என்கிறார்!"

"அது முடியாது!"

"ஏன் முடியாது?"

"முடியாதென்றால் முடியாதுதான்! இத்துடன் நூறு முறை ஆய்விட்டது. மீண்டும் மீண்டும் இதே தானா?"

"இனியாகிலும் உன் பிடிவாதத்தை விடு மோஹினி."

"இனியாகிலும் என்று சொல்லுவதற்கு இப்பொழுது என்ன ஆகிவிட்டது உங்களுக்கு?"

"இனி என்ன ஆகவேண்டும்?"

"சுகமாகத்தானே இருக்கிறீர்கள்?" என்று கூறி மோஹினி பின்னுக்கு நகர்ந்து கொண்டாள்.

"ஆம், சுகமாகத்தான் இருக்கிறேன்" என்று ஆனந்தன் கடுகடுப்பாகவே கூறினான்.

மோஹினியின் மனத்தை நிராசை கவ்விக் கொண்டது. பரீட்சைக்குப் பிறகு தனிக் குடித்தனம் தொடங்க ஆனந்தன் ஏதாவது ஏற்பாடு செய்யக் கூடும் என்று அவள் கொண்டிருந்த நம்பிக்கையை ஒரே வார்த்தையால் அவன் பாழாக்கி விட்டான்

மோஹினியை அடைவதற்காக இவ்வளவு நாட்களாகக் காத்திருந்து, இன்று ஓடோடியும் வந்த ஆனந்தனுக்கு இப் பொழுது ஆத்திரம் பீறிக் கொண்டு வந்தது.

"மோஹினி, என் அருகில் வரமாட்டாய்?" என்று சாந்த மாகவே கேட்டான்.

"அருகிலே தானே இருக்கிறேன்!"

"பக்கத்திலே இருந்தாலும் எட்டியிருப்பவள் போலவே இருக்கிறாய்!"

"நீங்கள் எப்படி நினைத்துக் கொள்கிறீர்களோ அப்படித் தான் இருக்கும்."

ஆனந்தன் அவள் அருகில் நகர்ந்து அவளைத் தன்னருகே அணைத்துக்கொண்டு பேசினன்.

"அன்று ஏன் அப்படிச் சமையலறைக்குள் ஓடிப்போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டாய்?"

"சும்மாத்தான்."

"சும்மாவாவது அப்படிச் செய்வதென்றால் பைத்தியமா?"

"உங்கள் திருஷ்டியில் அப்படி இருக்கலாம். எனக்கு அப்படித் தோன்றவில்லை. தோன்றவும் தோன்றாது."

ஆனந்தன் அவள் கூறியதைக் கவனித்தானே இல்லையோ; மோஹினியின் உடலழகு அவனைப் பித்தனாக்கிக் கொண்டிருந்தது. அந்தச் சௌந்தரிய பிம்பத்தை அநுபவிக்க அவன் உடல் துடித்துக் கொண்டிருந்தது. அந்த வேட்கை அவன் கண்களில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மற்ற யாவையும் அவன் மறந்து விட்டான்... மோஹினிக்கு இதைக்கண்டு நிமிஷத்திற்கு நிமிஷம் வெறுப்பு வளரத் தொடங்கியது. அவள் முகத்தில் ஒரு புறம் பீதியும் மற்றொருபுறம் கண்டிப்பான ஒரு தீர்மானமும் போரிட்டுக் கொண்டிருந்தன. ஆனந்தனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றாள். ஆனந்தன் கண்களில் தீப்பொறி பறக்க, "மோஹினி" என்று கர்ஜித்தான்.

"என்ன?"

"உட்கார். நான் சொல்லுவதைக் கேள்."

"இப்படியே கேட்கிறேன். சொல்லுங்கள்."

"எங்கே போகிறாய் இப்பொழுது?"

"உள்ளே."

"ஏன்?"

"சும்மாத்தான்!"

ஆனந்தன் இதை ஆற்ற மாட்டாதவனாய்த் தானும் எழுந்து அவள் அருகே வந்து, "அது முடியாது. நீ எங்கேயும் போகக் கூடாது" என்றான்.

"நான் போகத்தான் வேண்டும்."

"போகக்கூடாது என்று நான் சொல்லுகிறேன்."

"என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"அந்தப் பேச்சு எனக்கு வேண்டியதில்லை."

"என்றால் இங்கே இருக்க முடியாது. நான் உள்ளே போயாக வேண்டும்."

"அது இன்றைக்கு முடியாத காரியம்!" என்று கூறி அவள் கையை இறுகப் பற்றிக்கொண்டான் அவன். மோஹினி விடுவித்துக்கொள்ளத் திணறினாள்.

"முதலில் என் கையை விடுங்கள்."

"முடியாது."

"விடத்தான் வேண்டும்...விடுங்கள்...ஊம்..."

படம் எடுத்த சர்ப்பம் போல் தோற்றமளித்தாள் மோஹினி. ஆனந்தனின் இரும்புப் பிடியிலே அவளது கை துவண்டு கொண்டிருந்தது. அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளுவதற்காக அவளது உடல் சர்வப் பிரயத்தனங்களையும் செய்துகொண்டு இருந்தது. அந்த ஆத்திரத்தில் உடலின் மீதிருந்த புடைவைத் தலைப்பு நழுவியதையும் அவள் பொருட்படுத்த வில்லை. அவளது அந்த முரண்டுதலிலே இடது கை வளையல்கள் மூன்று படபட வென்று முறிந்தன. எவ்வளவு முயன்றும் அவளால் ஆனந்தனிடமிருந்து விடுவித்துக்கொள்ள இயலவில்லை. அசகாயமான தனது நிலைக்காக அவள் இதயம் பதறியது. மற்றொரு முறை தன் பலங்கொண்ட மட்டும் திமிறினாள். அவள் கை ஆனந்தனின் கைகளிலிருந்து விடுபட்டது. ஆனாலும் அவனிடமிருந்து தப்புவித்துக் கொண்டு செல்ல அவளால் இயலவில்லை.

"நான் சொல்லுகிறபடி இப்பொழுது நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்."

"கேட்க முடியாது!"

"கேட்டுத்தான் ஆக வேண்டும்......"

"இனி என்றென்றும் அது என்னால் முடியாது!"

"முடியும்படி செய்து காண்பிக்கிறேன்."

"என் உயிர் உள்ளவரையில் உங்களால் அது முடியாது!"

ஆனந்தனுக்கு ரோஷம் நெற்றிக்கேறியது. தன் அறிவை இழந்தான். அவளுடைய இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "இன்று உன்னுடைய பிடிவாதம் பலிக்காது" என்று பல்லை நற நற வென்று கடித்தான்.

"உங்கள் முரட்டுத்தனமும் பலிக்காது" என்று சீறினாள் அவள்.

"நடக்காதா? ஊம்? நடக்காதாடீ?" என்று கூறி அவளை ஒரு தள்ளுத் தள்ளினான் அவன். சுருண்டு போய் அவள் படுக்கையில் தடாலென்று விழுந்தாள். "ஐயோ!" என்று கதறினாள். "நீ மனுஷனல்ல! மிருகம்! ராட்சசன்!" என்று அவள் மனம் அவனை நோக்கி அலறியது. ஆனால் மோஹினியின் உடலின்பத்தைப் பருகத் தயாராயிருந்த ஆனந்தனின் சக்திக்கு முன்னால் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனை விரும்பாத அவள் மனம் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவள் தேகத்திற்கு அந்தச் சக்தி இல்லாமற் போய்விட்டது!

## 9

மறுநாள் முழுவதும் அநேகமாக நடு அறையில் சுவருக்கு ஒட்டினாற் போல் நிலத்தின் மீது படுத்துக் கிடந்த மோஹினி எழுந்திருக்கவே இல்லை. நாத்தனாருக்கும் நாராயணராவுக்கும் விஷயம் ஒன்றும் தெரியாதிருந்ததனால் அதிகம் ஒன்றும் பேசாமல் காலைச் சமையல் ஏற்பாட்டை நாராயணராவே கவனித்துக் கொண்டார். சமையல் செய்து மனைவிக்குப் போட்டுவிட்டு, தானும் சாப்பிட்டு விட்டு, மோஹினிக்காக எடுத்து வைத்துவிட்டு அவர் ஆபீஸுக்குச் சென்று விட்டார். மோஹினி தான் படுத்தபடியே முனகிக் கொண்டும், பெருமூச்சு விட்டுக்கொண்டும், விம்மிக் கொண்டும் இருந்தாள். சுருண்டு படுத்துக் கிடந்த அவள் தோற்றம் அவள் மன வேதனையையும் உடல் வேதனையையும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவள் மனம் மாத்திரம் அவ்வப் பொழுது ஆவேசத்தால் சீறிக் கொண்டே இருந்தது. மின்னல் போன்று எல்லை மீறிச் சுற்றுப்புறமுள்ள பிரபஞ்சத்தையெல்லாம் சுட்டுவிடவேண்டும் என்று ஆத்திரம் கொண்டது. ஆனால் அவள் உடலோ அயர்ந்து, குன்றி, நொந்து போயிருந்தது. மன வேதனை கட்டு மீறிச் சென்ற பொழுது தன்னை இவ்வளவு அனர்த்தத்திற்கு ஈடுபடுத்தும் இந்த உடல் சுடுபட்டுப் பொசுங்கிப் போகக் கூடாதா என்று மனசோடு சொல்லிக் கொள்வாள்.

'ஏன் இந்த அடிமைத்தனம்?' என்று அவள் இதயம் முறையிட்டுக் கொண்டிருந்தது. இனி செய்ய வேண்டுவது

யாது என்பது அவளுக்கு விளங்கவில்லை. ஒரு விஷயத்தில் மட்டும் அசைக்க முடியாத தீர்மானத்திற்கு வந்திருந்தாள் அவள். அது ஆனந்தனுடன் அவள் சம்பந்தம் அன்ருேடு முடிந்தது என்பதுதான். மனிதத் தன்மையை மறந்து மிருகமாக நடந்து கொள்ளும் அவனை மற்ருெரு முறை கண்ணெடுத்துப் பார்ப்பதும் இயலாது என்று நிச்சயித்தாள். பாஸ்கரன், ஆனந்தன் இருவருடைய உருவங்களும் அவள் கண்ணெதிரே நின்றன. மோஹினி நினைத்தாள்: 'பார்க்கப் போனல் பாஸ்கரனே எவ்வளவோ மேல். அவனது காமம் மிருகத்தனத்திற்கு இறங்கவில்லை. என் மனத்தைத் தன்பால் திருப்பவாவது அவன் முயன்ருன்.' கடைசியாக அவள் மனம் சொல்லிற்று: "என்னவானல் என்ன? இருவரும் அவ்வளவேதான். ஒருவன் தன் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தான்; மற்ருெருவன் காரியத்தில் சாதிக்க முடியாததை மனத்திற்குள்ளாகவே ஆயிரம் முறை கற்பித்துக் கொண்டு இன்புற்றிருக்கக் கூடும்! இரண்டிற்கும் ஏதும் வித்தியாசமே இல்லை!"

மோஹினிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. பரீட்சை முடிந்த பிறகு எப்படியாவது ஆனந்தனுடன் மனசைச் சரிப்படுத்திக் கொண்டு வேறு குடித்தனம் வைத்துக் கொண்டு தனது சொப்பன மாளிகையை நிர்மாணித்து வசிக்க வேண்டும் என்னும் அவளது ஆசை சொப்பனமாகவே போய் விட்டது. ஆனந்தனின் காமவெறி அவளது அந்த ஆசையைச் சுட்டெரித்து விட்டது. "இன்று இந்த உலகத்தில் இனி என்னுடையவள் என் தாய் ஒருத்திதான்" என்று சொல்லிக் கொண்டாள். இந்த நரகத்திலிருந்து விடுதலை பெற்றே ஆகவேண்டும் என்ற திடமான முடிவுக்கு வந்து விட்டாள். ஆனல் எப்படி? அதை நினைத்தால் அவளது திட முடிவு சிறிது ஆட்டம் காணும்.

அவள் வசந்தனைப் பற்றி நினைத்தாள். ஆனல் அவனல் என்ன செய்ய முடியும்? எப்படியாவது முயன்று தன்னைத் தன் புருஷனுடன் சுகமாக வாழ வைக்க வேண்டும் என்பதற்காக அவன் செய்த பிரயத்தனங்கள் மண் மூடிப் போய் விட்டன. அவன் இனி செய்ய வேண்டியது ஏதும் பாக்கியில்லை. அவனது சகவாசமும் அவளுக்குச் சொப்பன சாம்ராஜ்யமாகத் தோன்ற

ஆரம்பித்தது. அவனைக் கண்டு இதற்குப் பரிகாரம் என்னவென்று கேட்கலாமா என்று நினைத்தாள். அது முடியாது என்று தோன்றியது. அவள் மனம், "இதற்குப் பரிகாரம் இந்த வீட்டை விட்டு வெளிக் கிளம்பினால் தான்! இது வரை கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தாய்; இனி மேற்கு நோக்கிச் சென்றுலொழிய வேறு வழி இல்லை!" என்று கடுமையான முடிவு கூறி விட்டது.

மனம் மிகவும் வேதனை யுற்ற பொழுது மோஹினி, "நான் ஏன் வாழ வேண்டும்? மடிந்து போனால் என்ன?" என்று கேட்டுக் கொண்டாள். ஆனால் அவளது பெண்மை வீறுடன் அவளுக்குக் கூறியது: "நீ இன்று சுலபமாகத் தற்கொலை செய்து கொண்டு விடலாம். ஆனால் உனக்கு என்ன ஏற்பட்டிருக்கிறது? உன்னைப் போல் இவ்வுலகில் இன்னும் எவ்வளவு பேரோ! லட்சக்கணக்கான பெண் உள்ளங்கள் கணவன் என்பவனின் அகங்காரத்திற்கும் அவனைச் சார்ந்த மற்றவர்களின் கொடுமைக்கும் பலியாகி உடைந்து போய் உள்ளன! அந்த லக்ஷக்கணக்கான உள்ளங்களின் துயரம் இன்று உனக்குப் புத்துயிர் ஊட்டட்டும். உனக்குச் சமாதானம் சொல்லுவது கடினம். ஆனால் வாழ்க்கை வாழ்வதற்கே. நீ பெண்! எவ்வளவு துயர் வந்தாலும் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழச் செய்யும் லோகமாதா நீ! நொந்த போது, குன்றிப் போன போது உலகத்தை உள்ளத்து அன்பால் புத்துணர் வளித்து உயிரூட்டி வளரச் செய்யும் சிருஷ்டியின் மாயை நீ! நீ வாழவே வேண்டும்! வாழவே வேண்டும்!"

சாயங்காலம் ஐந்து மணி சுமாருக்கு ஆனந்தன் பாஸ்கரனுடன் வீட்டுக்குள் நுழைந்தபொழுது மோஹினி அதே இடத்தில் படுத்துக்கொண்டே இருந்தாள். கூடத்திற்கு வந்ததும் ஆனந்தன் ஏதோ தையல் வேலை செய்து கொண்டிருந்த அக்காவை நோக்கி, "மோஹினி எங்கே?" என்று கேட்டான். அவன் குரலில் அதிசயமான ஆத்திரமும் கடுமையும் புலப்பட்டன அக்காவுக்கு! அதனால் அவளுக்கு ஒன்றும் பதில்கூறத் தோன்றவில்லை.

"மோஹினி!" என்று அதே குரலில் கூப்பிட்டான்.

சுவரோடு ஒட்டிப் படுத்திருந்த மோஹினி இடத்தைவிட்டு நகரவில்லை. ஆனால் அவனது குரலில் ஒலித்த கடுகடுப்பு அவளுக்கு உறைத்தது. இப்படித்திடீரென்று வந்து, வந்தவுடனே தன்னைக்

கூப்பிடுவதில் ஏதோ விபரீதம் இருக்கிறதென்று அவள் மனம் நடுங்க ஆரம்பித்துவிட்டது. ஆனால் அவளுக்கு ஆனந்தனின் மீது மரியாதையும் மிகுந்திருக்கவில்லை, அவனால் பயமும் தோன்றவில்லை.

நடு அறையின் வாசலண்டை வந்து நின்று ஆனந்தன் மற்றொரு முறை, "மோஹினி!......" என்று கெட்டியாகக் கூப்பிட்டான்.

அக்கா திக்பிரமை அடைந்தவளாய்ப் பாஸ்கரனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "என்ன பாஸ்கரா, என்ன சமாசாரம்?" என்று கேட்டாள்.

பாஸ்கரன் ஏதும் பதில் கூறவில்லை. மூன்று முறை கூப்பிட்டும் மோஹினி இடத்தைவிட்டு அசையாதிருந்ததைக் கண்டு ஆனந்தனின் கோபம் எல்லை மீறியது. அவளருகே சென்று அவளது வலக்கையைப் பிடித்துப் பலமாக இழுத்தான். மோஹினி சீறி எழுந்து தனது கையை விடுவித்துக்கொண்டு, "என்மேல் கைவைக்க வேண்டிய தேவையில்லை!" என்று கூறினாள்.

அவளது இந்தச் சீற்றத்தைக் கண்டு ஆனந்தனும் ஒரு கணம் திகைத்துப்போய் விட்டான். ஆனால் மீண்டும் கண்களில் நெருப்புப்பொறி பறக்க அவளைக் கூப்பிட்டான்:

"மோஹினி!......"

"என்ன?"

"நான் உன்னிடம் சில விஷயங்கள் கேட்க வேண்டும்!"

"எனக்கு உங்களுடன் பேசவேண்டிய தேவையில்லை."

"உனக்குத் தேவையில்லாமலிருக்கலாம். எனக்குத் தேவையாயிருக்கிறது. எனக்கு......"

"உங்களுக்கு எதுவும் தேவையாகத்தானிருக்கும்......"

"அதிகம் பேசாதே. நான் கேட்பதற்குச் சரியாகப் பதில் சொல். இப்பொழுதே எல்லா விஷயங்களுக்கும் ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும்."

"நேற்று ராத்திரியே ஏற்பட்டுவிட்டது அந்த முடிவு!"

"உன் மட்டில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எனக்கு இன்று தான் முடிவு செய்ய வேண்டும்."

"இருக்கலாம். நான் செய்யவேண்டியதென்ன இருக்கிறது?"

"வேண்டியது இருக்கிறது."

மோஹினி உள்ளே செல்லத் திரும்பினாள். ஆனந்தனால் தன் கோபத்தை அடக்க முடியவில்லை. நெற்றி நரம்புகள் புடைக்க, "மோஹினி, அங்கேயே நில். நீ உள்ளே போகக் கூடாது" என்று கர்ஜித்தான்.

"ஏன்?"

"என்னுடைய இந்தக் கேள்விக்கு முதலில் பதில் சொல்; பிறகு போகலாம், எங்கே வேண்டுமானாலும்......"

"என்ன உங்கள் கேள்வி?"

"நேற்று மத்தியான்னம் பரீட்சை முடிந்ததும் எங்கே போயிருந்தாய்?"

மோஹினிக்கு இது எதிர்பாராத கேள்வி அல்ல. எப்பொழுது ஆனந்தன் அவ்வளவு கோபமாகப் பேச ஆரம்பித்தானோ அப்பொழுதே அவளுக்குப் புரிந்து விட்டது, இது பாஸ்கரன் வேலையாகத்தான் இருக்க வேண்டுமென்று. அவன்தான் ஆனந்தனுக்கு ஏதாவது தூபம் போட்டிருக்க வேண்டும். கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்பது பற்றியும் அவளுக்குத் தயக்கம் இருக்கவில்லை. யாரையும் பொருட்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்த பிறகு யாரிடம் ஏன் பயப்பட வேண்டும்? மோஹினி பேசாதிருந்ததைக் கண்டு ஆனந்தனால் பொறுக்க முடியவில்லை. அதட்டிக்கொண்டே அவள் அருகே சென்று மீண்டும் கேட்டான்.

"நேற்று மத்தியான்னம் எங்கே போயிருந்தாய்?"

"நான் பதில் சொல்ல முடியாது!"

"சொல்லித்தான் ஆகவேண்டும்......" என்று ஆனந்தன் பல்லை நறநற வென்று கடித்தான். மோஹினி நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. அவள் குரல் நடுங்கவில்லை. முகத்தில் பயத்தின் சாயலும் இருக்கவில்லை. அதிசயிக்கத்தக்க கம்பீரத்துடன் அவள் கூறினாள்.

"நான் சொல்ல முடியாது!"

ஆனந்தன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் கையை ஓங்கினான். அக்கா ஓடிவந்து ஆனந்தனைத் தடுக்க நினைத்தாள். "ஆனந்தா, ஆனந்தா" என்று கூவினாள். அடி விழுந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குள் மோஹினி ஆனந்தனின் கையைப் பிடித்துப் பலமாகப் பின்னே தள்ளினாள்.

ஆனந்தன் உறுமினன்: "யாரோடு போயிருந்தாய் நேற்று மத்தியான்னம்? சொல்!......"

"சொல்ல முடியாது!"

"சொல்லத்தான் வேண்டும்........" என்று கூறி அவள் வலக்கையைப் பிடித்துத் திருகினன் அவன். இரண்டு மூன்று வளைகள் பட் பட் டென்று முறிந்தன.

"சொல். சொல்லாவிட்டால் இங்கேயே உன்னைக் குழி தோண்டிப் புதைத்து விடுவேன்."

"முதலில் என் கையை விடுங்கள்......விடுங்கள் முதலில்."

மோஹினியின் கண்களில் ஜலம் தேங்கி நின்றது. முகத்தில் வேதனை படர்ந்திருந்தது. ஆனந்தன் மிதமீறிய கோபத்தால் நடுங்கிக்கொண்டிருந்தான்.

"கையை விடமுடியாது. உன்னைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை. சொல் முதலில், யாரோடு கடற்கரைக்குச் சென்றிருந்தாய் நேற்று?"

மோஹினி உதட்டை அசைக்கவில்லை. உதடுகள் அசைந்த போதோ குரல் வெளிவரவில்லை. "ஐயோ" என்று உள்ளத்தை நடுக்கவைக்கும் ஆர்த்தநாதம் தான் வெளிப்பட்டது. அக்காவால் இதைக் கண்டு சகிக்க முடியவில்லை. கண்ணீர் சொரிந்து கொண்டே, "ஆனந்தா.........ஆனந்தா......" என்று குறுக்கிட்டாள். பாஸ்கரன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டே நின்றிருந்தான்.

"நீ பேசாமலிரு அக்கா. நடுவே வராமல் பேசாமல் போ" என்றான் ஆனந்தன்.

"அல்ல; நடந்ததுதான் என்ன ஆனந்தா?"

"எல்லாவற்றையும் அவள் வாயாலேயே கக்க வைக்கிறேன் பொறு."

"ஆனந்தா...பாஸ்கரா...நீயாவது சொல்லுடா, விஷயம் என்ன வென்று."

பாஸ்கரனின் வாயிலிருந்து வார்த்தைகள் கிளம்பவில்லை. அக்காவுடன் பேசிய ஆனந்தன் மோஹினியின் கையைத் தன் பிடியிலிருந்து விட்டிருந்தான். இரண்டு கைகளையும் மார்பின் மீது கட்டிக் கொண்டு கற்சிலை போல அவள் நின்றிருந்தாள்.

முகம் அமைதியாகக் காணப்பட்டது — கடல் போல. ஆனால் இதயமோ எரிமலையாயிருந்தது.

"மோஹினி, நீ பேசாவிட்டால் உனக்கு இன்று அழிவு காலம் தான்."

"பரவாயில்லை!"

"யாருடன் போயிருந்தாய் சொல்லிவிடு. இல்லாவிட்டால்......"

"சொல்ல முடியாதென்று பத்து முறை கூறிவிட்டேன். உங்களுக்கு எல்லாவற்றையும் சொன்னவர் அதையும் சொல்லவில்லையா?"

"எனக்கு எல்லாம் தெரியும்!"

"பிறகு என்னைக் கேட்பானேன்?"

"உன் வாயாலே வரட்டுமென்றுதான்."

"அதனால் உங்களுக்கு ஆகவேண்டியதென்ன?"

"என்ன ஆகவேண்டுமா? ஆகவேண்டியது என்ன பாக்கி வைத்திருக்கிறாய்?"

"மிகவும் சரி!"

"உன்னைப் போல் என் ஜீவன் வெட்கத்தை விட்டு விடவில்லை!"

"இல்லாததை விட்டு விடுவது எங்கிருந்து?"

"வாயை அடக்கு, மோஹினி...வாய் மிகவும் அதிகமாகப் போகிறது..."

"உங்கள் நிர்ப்பந்தம் எதற்காக எனக்கு?"

"பந்தம் பூராவும் அறுந்த பிறகு என்ன வேண்டுமானாலும் பேசலாம்."

"அது அறுந்து போய்ப் பழங்கதையாகி விட்டது!"

"பழங்கதை யானாலும் என் பெயருக்குப் புதுக் கதை ஒன்று வளர வேண்டியதில்லை."

"இந்தக் கதை கட்டுவதை நிறுத்தினீர்களென்றால் எல்லாம் நின்று போகும்."

"எனக்கு உன் உபதேசம் வேண்டியதில்லை."

"உங்கள் பேச்சே எனக்கு வேண்டியதில்லை!" என்று கூறி மோஹினி மீண்டும் உள்ளே போகத் திரும்பினாள். ஆனந்தன் மறுபடியும் அவளைத் தடுத்தான்.

"மோஹினி, இன்று எல்லா விஷயத்திற்கும் ஒரு முடிவு ஏற்பட்டு விடவேண்டும்."

"முடிவு ஆகிவிட்டது என்று தான் சொன்னேனே..."

மோஹினியின் இந்த முரண்டுத்தனம் ஆனந்தனுக்கு எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலிருந்தது.

"நான் சொல்லுகிறபடி நீ கேட்க வேண்டும்" என்று அதட்டினன்.

"நான் உங்கள் தாசியல்ல!"

"கேட்காவிட்டால் உனக்குக் கதிமோட்சம் கிடையாது."

"அது என்னல் முடியாது."

"அப்படியானல் நீ இங்கே இருக்கக் கூடாது."

"நீங்கள் சொல்லவேண்டிய அவசியமே இல்லே; நானே அதைத் தீர்மானித்து விட்டேன்."

ஆனந்தன் இதைக் கேட்டுக் கோபம் தாளாமல் அவளே அடிக்க மீண்டும் முற்பட்டபொழுது அவள் சடக்கெனப் பின்னுக்கு நகர்ந்துகொண்டு, "பேசாமல் தள்ளி நில்லுங்கள். என்னைத் தொட்டால் சும்மா விடமாட்டேன்" என்று கடுமையாக மொழிந்தாள்.

"என்னடி செய்து விடுவாய்?" என்று பல்லேக் கடித்தான் ஆனந்தன்.

"அதை வாயால் சொல்லப் போவதில்லே!"

"என்னடி கழற்றி விடுவாய் நீ?" என்று கூறிக்கொண்டே அவளேத் தன் பலங் கொண்ட மட்டும் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளினன் அவன். மோஹினி சுவரில் போய் மோதிக் கொண்டாள். ஆனந்தனே, கோபத்தால் கண் கால் தெரியாமல் பதறிக் கொண்டிருந்தான். மோஹினி இந்தக் கடும் தாக்குதலுக்கு அசைந்து விடவில்லே. அடிபட்ட பாம்பைப் போல் சீறி எழுந்தாள். ஆனந்தன் சொன்னன்.

"போ, புறப்பட்டுப்போ முதலில், இங்கே யிருந்து. போடீ, உன் இழவு போதும் இனி."

மோஹினி நகரவில்லே. பாஸ்கரன் தம்பியைச் சமாதானப் படுத்தினன்: "ஏண்டா வீணுக மனத்தை அலட்டிக் கொள்ளுகிருய்! வீணுக வார்த்தை வளர்த்துவதில் என்ன பிரயோசனம்...?"

பாஸ்கரனின் பேச்சைக் கேட்டு மோஹினிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அவனே ஏளனமாகப் பார்த்துவிட்டு ஆனந்த

னிடம் கூறினுள்: "ஆமாம். பேசி என்ன பிரயோசனம்? பேசாமலே கழுத்தை அறுத்து விடுங்கள். அவர் நன்ருகச் சொல்லிக் கொடுப்பார்."

"மோஹினி, வாயைத் திறந்தாயோ பார்" என்ருன் பாஸ்கரன்.

"பாவி!...என்னைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டிய தில்லை!"

"யாருமே உன் பெயரைச் சொல்ல வேண்டியதில்லை. போதுமடி! உன்னுல் வந்த வினை போதும். இந்த வீட்டை விட்டு இப்பொழுதே போ" என்ருன் ஆனந்தன்.

"இதோ போகிறேன்..."

"எவ்வளவு திமிருடன் நிச்சிந்தையாகச் சொல்லுகிருயடி?"

"யாருக்கு நான் பயப்படவேண்டும்?"

"ஆமாம். மானத்தையும் வெட்கத்தையும் துறந்த பிறகு பயம் எதற்காக?"

"நீங்கள் சொல்லியது உங்களுக்கேதான் திருப்பிச் சொல்ல வேண்டும். அதிகம் வேண்டாம்."

"நான் உனக்குப் பயப்பட வேண்டுமா?

"நான் அவ்வளவு அல்பப் புத்தியுடையவளல்ல. உங்களுக்குப் பயந்து நான் சாக வேண்டுமென்று நீங்கள் சொல்வது போல் நான் சொல்ல மாட்டேன்."

"போதுமடி உன் வாய்த் துடுக்கு! பல்லை உடைத்து விடுவேன்."

"வெண்ணெய் வெட்டி சிப்பாய்தான்!"

"போடி வெளியே. போ இங்கிருந்து" என்று உடலெல்லாம் கோபத்தால் எரிய மோஹினியைப் பிடித்துத் தர தரவென்று இழுத்து வந்து வாசலில் தள்ளினுன் ஆனந்தன்.

"நீங்கள் இவ்வளவு சிரமப்பட வேண்டாம். நானே போகிறேன்" என்று உள்ளே நடந்தாள் அவள். அக்கா அறிவிழந்து நின்று விட்டாள். அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டே இருந்தது. ஆனந்தனுக்கு எவ்வளவு நல்ல வார்த்தைகள் சொல்லியும் அவன் கேட்கும் நிலையில் இருக்கவில்லை.

"ஆனந்தா! என் பேச்சைக் கேள். சாயங்காலம் அவர் வந்து விடட்டும். பிறகு என்ன வேண்டுமானுலும் செய்து கொள்."

"அது முடியாது. இப்பொழுதே இவளைத் தெருவில் துரத்தி விட்டுத்தான் மறுவேலை!"

"ஆனந்தா..."

இரண்டே நிமிஷங்களில் மோஹினி நடு அறையிலிருந்து வெளியே வந்தாள். அவள் கையில் ஒரு சின்ன 'லேடீஸ் பேக்' மாத்திரம் இருந்தது.

ஆனந்தன் சீறினன்: "இந்த வீட்டிலிருந்து ஒரு துரும்பையும் நீ எடுத்துக் கொண்டு போகக் கூடாது. இந்த வீட்டுச் சாமான்கள் எதிலும் கைவைத்தால் கையை வெட்டி விடுவேன்!"

அக்காவுக்கோ ஒன்றும் விளங்க வில்லை. "மோஹினி... மோஹினி...எங்கே புறப்பட்டு விட்டாய்...மோஹினி" என்று புலம்பலானள்.

"எங்கேயோ போகிறேன். இந்த அதமர்களை விட்டு தூரச் செல்லுகிறேன்."

"மோஹினி...போகாதே அம்மா...அவர் வரட்டும்..."

"யாரும் வரவும் வேண்டாம், எதுவும் சொல்லவும் வேண்டாம்!"

"எங்கே தானடி போவாய், மோஹினி?"

ஆனந்தன் குறுக்கிட்டான்: "நீ ஏன் அக்கா புலம்புகிருய்? அவளுக்குப் போக வேண்டிய இடமும் சிநேகிதர்களும் எவ்வளவோ..."

"சீ! வாயை மூடுங்கள். வாயில் வந்ததைப் பேசிவிட வேண்டாம். நாக்கு அழுகிப் போய் விடும்!"

ஆனந்தன் மோஹினிக்கு எதிரே வந்து நின்று கொண்டான்.

"எங்கே போவதாக உத்தேசம்?"

"முதலில் இந்த இடத்தை விட்டு வெளியே—பிறகு தான் மற்ற யோசனை.

"அது அவ்வளவு சுலபமல்ல!"

"அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை!"

"ஆமாம். உன் வசந்தன் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருப்பான். அப்படித்தானே? இரண்டு பேரையும் வெட்டிப் புதைத்து விடுவேன், ஞாபகம் இருக்கட்டும்!"

"என்னைப் பற்றி மட்டும் பேசுங்கள். மற்றவர்களைப் பற்றிய பேச்சு என் எதிரே வேண்டாம்."

"வேண்டாமா? கடற்கரையில் அவனோடு சரஸமாடும் போது வேண்டும், இரண்டு பேரும் சேர்ந்து சிற்றுண்டி தின்று களிக்கும் போது வேண்டும், இப்பொழுது வேண்டாம்; இல்லையா? வெட்கங் கெட்ட மூதேவி!"

"மறுபடியும்..."

"உன் கையில் இருக்கும் அந்தப் பொன் வளையல்களை எடுத்து வைத்துவிட்டுப் போ."

அக்கா மீண்டும் குறுக்கிட்டு, "ஆனந்தா...ஆனந்தா ...வேண்டாம்" என்று சொன்ன போதிலும் அவன் கேட்க வில்லை. மோஹினி ஒரு நிமிஷம் தயங்கினாள். ஆனந்தனே அவள் வளையல்களைக் கழற்ற முன் வந்த பொழுது, "நீங்கள் அவ்வளவு பயப்பட வேண்டிய தேவையில்லை. எடுத்துக் கொடுத்து விட்டே போகிறேன். இந்தாருங்கள், உங்கள் வளையல்!... இதோ உங்கள் சங்கிலி" என்று அவைகளைக் கழற்றி ஆனந் தனின் மீது எறிந்தாள். கழுத்துச் சங்கிலியைக் கழற்றிய பிறகு மோஹினியின் கை மீண்டும் கழுத்தை நாடியது. ஒரு நிமிஷம் அங்கேயே நின்றது. துக்கம் கரை புரண்டோடக் கண்களில் மளமள வென்று நீர் பெருகிற்று. நடுங்கும் குரலில் மோஹினி ஆனந்தனைப் பார்த்துச் சொன்னாள்:

"இது நீங்கள் எனக்கு முதல் முதலில் அணிவித்த ஆபரணம்...இப்பொழுது இதுவே கடைசி ஆபரணமாகப் போகட்டும்...இதையும் எடுத்துக் கொள்ளுங்கள்...எனக்கு உங் களுடையது ஒன்றும் வேண்டாம்..." என்று சொல்லிக் கண் மூடித் திறக்கும் நாழிகையில் கழுத்திலிருந்த மாங்கல்யத்தை அறுத்து ஆனந்தனின் முகத்தில் வீசி எறிந்தாள்! அந்த மங்கல சூத்திரம் அவன் நெற்றியில் பட்டுக் கீழே பாதங்களில் விழுந்தது!

அக்காவுக்கு என்ன செய்ய வேண்டு மென்றே விளங்க வில்லை. மோஹினி வெளியே செல்ல அடி எடுத்து வைத்தாள். "மோஹினி, மோஹினி, போகாதே...! எங்கே போவாய் மோஹினி...!" என்று வாசற்படியில் குறுக்கே நின்றுகொண்டு அவளைத் தடுத்தாள். மோஹினி மௌனமாக அரை நிமிஷம் நீர் நிரம்பிய கண்களுடன் நாத்தனாரைப் பார்த்தாள். மறு கணம் நாத்தனாரின் கைகளைத் தள்ளிவிட்டு வெளியே சென்று படிகளில்

இறங்கத் தொடங்கினாள். ஆனந்தன், "மோஹினி" என்று கத்தினான். ஆனால் அது அவள் காதுகளில் விழுந்ததாகத் தெரிய வில்லை.

ஆனந்தன் நின்ற இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான். பாஸ்கரன் தான் உட்கார்ந்திருந்த ஜன்னல் விளிம்பை விட்டு அசையவில்லை. அக்கா மாத்திரம் அழுது கொண்டே ஓடி வந்து, "ஆனந்தா, ஆனந்தா, இதென்னடா இப்படிச் செய்து விட்டாய்? போடா, போய்க் கொஞ்சம் பார். எங்கேயாவது போய் உயிருக்கு உலை வைத்துக் கொள்ளப் போகிறாள். போடாப்பா" என்று கதறினாள். "பாஸ்கரா, நீயாவது போய்ப் பாருடாப்பா" என்று பாஸ்கரனையும் வேண்டிக் கொண்டாள்.

பாஸ்கரன் தன் இடத்தை விட்டு எழுந்து நின்றான். ஆனால் மோஹினியைப் பின் தொடர்ந்து செல்ல அவனுக்குத் துணிச்சல் வரவில்லை. அக்கா மீண்டும் வராந்தாவில் வந்து நின்று கொண்டு, "மோஹினி, இங்கே வாடீ" என்று கூவினாள். மோஹினி அப்பொழுது கடைசிப் படியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தாள்.

கடைசிப் படியை விட்டு இறங்கும் பொழுது மோஹினிக்கு ஆற்ற மாட்டாத துக்கம் பொங்கி வந்தது. அந்த வேதனை ஆனந்தனின் அடியைவிட அதிக நோவை உண்டு பண்ணிற்று. ஒவ்வோர் அடி எடுத்து வைத்த பொழுதும், 'இன்றோடு இங்கே உன் கடன் தீர்ந்தது, பந்தம் அறுந்தது' என்று கூறிக் கொண்டே இருந்தது அவள் அந்தராத்மா. அந்த வீட்டைத் திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாதென்று தீர்மானித்தாள். மறுபடியும் கடைசி முறையாகப் பார்த்து விடுவோம் என்னும் ஆசை பலப் பட்டது. பின்னால் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வையில் என்ன வேதனை இருந்ததோ! எத்தகைய நிராசை குடி கொண்டிருந்ததோ! புக்ககத்தாரின் கொடுமை தாளாமல் தற்கொலை புரிந்து கொள்ள எண்ணி வீட்டை வீட்டுக் கிளம்புமுன், அமைதியாகப் படுத்துறங்கிக் கொண்டிருக்கும் தன் அன்புச் சிசுவைக் கடைசி முறையாகப் பார்த்துவிட்டுச் செல்லும், துர்ப்பாக்கிய மருமகளின் துயரம் நிறைந்திருந்தது அப் பார்வையில். மோஹினி சொல்லிக் கொண்டாள்: "இந்த வீட்டை என் கனவின் மாளிகையாக்க வேண்டு மென்றிருந்தேன். இங்கே என் சொப்பன சாம்ராஜ்யம் வைபவத்தோடு நடக்க வேண்டும் என நினைத்திருக்

தேன். ஆனால் இனி இந்த வீடே எனக்கு ஒரு சொப்பனமாகப் போய் விட்டது. இதன் நினைவு என் பிடரியைப் பின் தொடர்ந்து வரும் வேதாளமாகி விட்டது.''

மோஹினி மீண்டும் ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்த்தாள். வாசலில் யாரும் காணப்படவில்லை. அந்தக் கணத்தில் அவள் உணர்ந்தாள், தனக்கு இனி யாரும் இல்லை என்பதை!

ஆனந்தன், "எங்கே போவாய்?'' என்று கேட்டபொழுது, "முதலில் இந்த வீட்டை விட்டு வெளியே — பிறகுதான் யோசனை'' என்று சொல்லியிருந்தாள். இப்பொழுது அவளைச் சுற்றி உள்ளவை யெல்லாம் அவளை நோக்கி எள்ளிச் சிரித்துக் கொண்டே, "எங்கே, எங்கே போவாய்?'' என்று கேட்பது போலிருந்தது. வழி தினமும் நடந்து நடந்து பழக்க மானதுதான். ஆனால் அப்பொழுது அவளுக்கு அது முற்றும் புதியதாகத் தோன்றியது. ஊர் காடாகத் தோன்றியது; மனை மயானமாகப் பரிணமித்தது; எதிர் காலம் இருட் கடலாகக் காட்சி யளித்தது. மோஹினிக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது — அந்த ஜூஹூ கனவின் முடிவு என்ன வாயிற் றென்று! அங்கே வழி தெரியாமல் திணறினாள்; அவளுக்கு வழிகாட்ட வேண்டு மென விரும்பியவன் எங்கோ மறைந்து விட்டிருந்தான். கை பிடித்தவன் கடும் புலி போல் சீறிக் கொண்டிருந்தான்! காலின் கீழ் இருந்த பூமி இரண்டாகப் பிளந்து விட்டது போல் இருந்தது. ஆனால் அவளது அந்தராளத்தில் ஒரு சிறு குரல் கூறியது: "ஏன் யோசிக்கிறாய், மோஹினி? இன்று உன்னுடைய விடுதலை ஆயிற்று. உனது பெண்மை இன்று விடுதலை பெற்றது. உலகம் என்பது ஆனந்தனின் வீடு மாத்திரம் அல்ல! உலகம் முழுவதும் ஆனந்த பாஸ்கரர்களால் நிரம்பி யிருக்க வில்லை. அதில் வசந்தனைப் போன்றவர்களும் வசிக் கிறார்கள். நீ தவறியவள் என்று சமூகம் உன்னை எதிர்த்து நின்று அமானுஷ ஹிம்ஸைக்கு உன்னை ஆளாக்கும்! நீ பதிதை என்று இகழ்ந்துரைக்கும்! பாவி என்று சபிக்கும்! ஆனால் இன்று உன் கட்டுகள் அறுந்தன! உனக்குத் துயர் விளைவிக்கும் அந்தச் சமூகத்தைக் கண் திறந்து உண்மையைக் காணச் செய்யும் சக்தி உனக்குண்டு! இது உனது விமோசன காலம். ஆனால் இதுவே உனக்கு சோதனைக் காலமும் ஆகும்.''

கால்கள் அடி எடுத்து வைத்துக் கொண்டே இருந்தன. வேறு தெருவில் திரும்பும் பொழுது மீண்டு மொருமுறை தன் வீட்டைத் திரும்பிப் பார்த்தாள்—ஐயோ என்று முனகியது அவளது உள்ளம்.

போரிவிலி ஸ்டேஷனுக்கு வந்து ஒரு பெஞ்சியின் மீது அமர்ந்துகொண்டாள் மோஹினி. இதுவரையில் எவ்வளவு முறை அவள் அந்தப் பெஞ்சியின்மீது அமர்ந்திருக்கிருள்! ஆனல் இன்று அங்கே அவள் உட்கார்ந்த பொழுது ஏற்பட்ட அவளது உணர்ச்சிகளை எப்படி விவரிக்க முடியும்? அந்த வீட்டை, அந்த ஸ்டேஷனை, அந்தப் பெஞ்சியை, சுற்று முற்று முள்ள பிரபஞ்சத்தை இனி என்றும் நீ பார்க்க மாட்டாய்—இதோ இதுவே உனக்குக் கடைசித் தருணம் என்று கால புருஷன் அவள் முன்னே நின்று கூறிக் கொண்டிருந்தது போல—ஆதுரத்துடனும் கருணையுடனும் கண் கலங்க, பொங்கி வழிந்த கண்ணீர் திரை போட அவைகளை யெல்லாம் கண்டு நெடி துயிர்த்தாள்.

காரியாலயங்களிலிருந்து ஜனங்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். 'வசந்தனை இப்பொழுது சந்திக்க முடிந்தால்?...' என்று ஒரு கணம் எண்ணிஞள் அவள். ஆனல் மறு கணமே, 'எப்படி இனி இந்த முகத்தோடு அவரைப் பார்ப்பது? என்னல் அவருக்கு அவமானம்! இன்னும் இதனல் என்ன என்ன தொல்லைகள் அவருக்கு ஏற்படுமோ, யார் அறிவார்கள்? நல்லது செய்யப் போய்த் தலைக்கு ஆபத்தைத் தேடிக் கொண்ட மாதிரி யாயிற்று அவருக்கு! பாவம்!' என்றெல்லாம் எண்ணலாஞள். வசந்தன் அப்பொழுது எதிரே வந்து நின்ருலும் அவனுடன் பேசும் தைர்யம் அவளுக்கு இருந்திருக்காது.

ரெயில் வந்தது. அவள் யந்திரம் போல அதிலேறிஞள். அது புறப்பட்டது, மெதுவாக. சிறிது சிறிதாக வேகம் அதிகரித்தது. கட கட வென்ற சப்தத்திலே யாரோ கேட்பது போலிருந்தது அவளுக்கு—"இன்ருேடு உன் அவதாரம் முடிந்தது! ...முடிந்ததா? அன்றி முதலாயிற்ரு?" என்று. வெளியே இருள் சூழ ஆரம்பித்தது. இருளும் வெளிச்சமும் சந்திக்கும் காலம். அது மோஹினியின் வாழ்க்கையில் இப்பொழுது ஏற்பட்டுள்ள சந்திகாலத்தின் பிரதி பலிப்பாக இருந்தது!

வசந்தன் வழக்கம் போல ஒன்பது மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்தபடியே எதையோ படித்துக் கொண்டிருந்தான். மத்தியான்னத்திலிருந்து அவன் மனம் மோஹினியைப் பற்றிய பல யோசனைகளால் குழம்பிக் கிடந்தது. இனமறியாத ஏதோ ஒரு வேதனை அவன் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது. காரணம் என்ன வென்று அவனுக்கே விளங்கவில்லை. தர்க்கத்திற்கும், முன்யோசனைக்கும் எட்டாத வகையில் அவன் மனம் ஏதோ ஒரு விபரீதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் இருந்தது. படித்துக் கொண்டே இருந்தான். ஆனால் மனம் ஒரு நிலையில் நிற்க வில்லை. புத்தகத்தி லிருந்து அவன் கவனம் திரும்பும் பொழுது சுற்றுப்புற அமைதி பீதியை உண்டுபண்ணுவதாக இருந்தது. மூந்தாநாள் சாயங்காலம் ஹோட்டலில் நடந்தவைகளை அவ்வப்பொழுது நினைத்துக்கொண் டிருந்தான். வெளியே யாரோ கதவைத் தட்டினார்கள்.

"வசந்தா!..." என்று குரல் கேட்டது.

"யார்?...இதோ வந்தேன்..." என்று கூறிக் கொண்டே வசந்தன் சென்று கதவைத் திறந்தான். அவன் எதிரே நின்ற னர்—ஆனந்தனும் பாஸ்கரனும்!

வசந்தன் இதயம் 'பகீர்' என்றது. அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆபத்து வந்து விட்டது என்பதை உணர்ந்தான். தான் பயப்பட வேண்டிய பிரமேயம் ஏதும் இல்லை என்று சொல்லிக் கொண்டாலும் அந்தக் கணத்தில் தைரியம் அவனைக் கைவிட்டது போலவே உணர்ந்தான். அந்தச் சந்தர்ப்பத்தை ஒளிவு மறைவு ஏதும் இல்லாமல் தைரியமாகவே எதிர்த்து நிற்க வேண்டு மென்று சங்கல்பம் செய்து கொண்டான். ஆனந்தனின் முகம் நிச்சலனமாகவும் களையற்றும் காணப் பட்டது. சந்தேகமே உருக் கொண்டு வந்தாற் போன்று நின்றிருந்தான் பாஸ்கரன். வேறு சந்தர்ப்பமாக இருந்தால், தன் வீட்டுக்கு வந்திருக்கும் ஆனந்தனை எவ்வளவு குதூகலத்துடன் வர வேற்றிருக்கலாம் என்று நினைத்து மனம் புழுங்கினான் வசந்தன்.

"வாருங்கள், உள்ளே உட்காருவோம்..." என்று அவர்களை அழைத்தான்.

இருவரும் உள்ளே வந்தமர்ந்தார்கள். வசந்தனுக்கு என்ன பேச வேண்டு மென்பதே புரிய வில்லை. ஆனந்தனுக்கும்

பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லே. கடைசியாக வசந்தனே பேச்சைத் துவக்கினன்:

"என்ன இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்களே?..."

"உன்னுடன் சிறிது பேச வேண்டியிருக்கிறது" என்ருன் ஆனந்தன்.

"என்ன?"

"விஷயம் மிகவும் 'ஸீரியஸா'னது."

"என்ன, என்ன விஷயம்?"

பாஸ்கரன் குறுக்கிட்டுப் பேசினன்: "போதுமப்பா இந்த வேஷம். இனிமேல் இதெல்லாம் நடக்காது. தெரிந்ததா?"

பாஸ்கரன் இப்படிப் பேசியது வசந்தன் எதிர்பாராதது அல்ல வென்ருலும், அந்தப் பேச்சு அவனுக்கு வெறுப்பை உண்டாக்கிற்று. எனவே அவனே மட்டந்தட்ட வேண்டுமென நினைத்தான்.

"விஷயம் என்ன வென்று சொல்லாமல் இப்படிப் பேசிக் கொண்டு போனல் எனக்கொன்றும் புரியவில்லே."

"புரியவில்லேயா? எப்படிப் புரியும்? இப்பொழுது புரியாது. சீக்கிரம் புரியப் போகிறது" என்ருன் பாஸ்கரன் கடுமையாக.

வசந்தனல் இதைப் பொறுக்க முடியவில்லே. அவன் ஆனந்தனேப் பார்த்துச் சொன்னன்: "உங்களிருவரில் இப்பொழுது நான் யாருடன் பேச வேண்டும்? முதலில் அது நிச்சயமாகட்டும்!"

"அதை அப்புறம் நிச்சயித்துக் கொள்ளலாம். முதலில் மோஹினியை வெளியே அனுப்பு......"

"மோஹினி!..."

"ஆம். மோஹினி! இந்த வேஷம் வேண்டாமென்று முதலிலேயே சொன்னேனே!"

"மோஹினி! அவள் ஏன் இங்கே வருகிருள்? அதுவும் இந்த வேளேயில்?"

"இங்கே வராமல் வேறு எங்கே போவாள்? பேசாமல் அவளே அனுப்பிவிடு. இல்லாவிட்டால் போலீஸ் 'கம்ப்ளெய்ண்ட்' கொடுக்க வேண்டியிருக்கும்."

"பாஸ்கரராவ்! நீங்கள் மரியாதைப்பட்ட ஒரு மனுஷனுடன் பேசிக்கொண்டிருப்பதை மறந்து விட்டாற் போலிருக்கிறது..."

43
1-27

"அடாடா, மரியாதைப்பட்ட மனுஷரே! உங்கள் யோக்கியதை எனக்கு நன்ருகத் தெரிந்திருக்கிறது!"

"உங்களைப் போல் நானும் பேசமுடியும். தெரிந்ததா? ஆனல் நான் அப்படிப் பேசமாட்டேன்."

"எங்களுக்கும் அநாவசியமான பேச்சு வேண்டாம். நாளைக்கு உங்கள்மீது 'அடல்டரி கேஸ்' போடப்போகிருேம். அப்பொழுது உங்கள் கண்ணியமும் யோக்கியதையும் கோர்ட்டில் பிரகாசிக்கட்டும்!"

"எல்லை மீறிப் பேசவேண்டாம், பாஸ்கரராவ்..."

"எல்லை மீறி நடப்பவரைப்பற்றிப் பேசும்போது இப்படித் தானே பேசவேண்டும்?"

ஆனந்தன் பாஸ்கரனைத் தடுத்தான்: "நீ பேசாமலிரு பாஸ்கரா."

"எதற்காகடா சும்மா இருக்கவேண்டும்? கேஸ் போட்டே விடுகிறேன். பிறகு தெரியட்டும்..."

வசந்தனுக்குக் கட்டுக் கடங்காத கோபம் மூண் டெழுந்தாலும் மிக்க சிரமத்துடன், சாந்தமாகவும் கம்பீரமாகவும் பேசத் தொடங்கினன்.

"இதோ பாருங்கள்...பாஸ்கரராவ், இந்த விஷயத்தில் நீங்கள் தலையிடாமலிருப்பதே நல்லது. தெரிந்ததா?"

"நீ செய்வதை யெல்லாம் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்கச் சொல்லுகிருயா?"

"நீங்கள் செய்ததை யெல்லாம் உங்கள் தம்பி கண்ணல் கண்டிருந்தால் நிலைமை இவ்வளவு தூரம் வந்திருக்கவே இருக்காது!"

பாஸ்கரனுக்கு மண்டையில் ஓங்கி அடித்தாற்போலிருந்தது. இருந்தாலும் தைரியத்தை இழந்தவனுகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனந்தனைப் பார்த்துச் சொன்னன்: "நட ஆனந்தா, இவனுக்குப் போலீஸ்தான் சரியான வழி..."

ஆனந்தன் கோபத்தோடு சொன்னன்: "பொறுடா, பாஸ்கரா. நீ பேசாமலிரு பார்க்கலாம் முதலில்."

"வசந்தா, எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. எனவே உண்மையை மறைக்காமல் நீ எல்லாவற்றையும் இப்பொழுது சொல்லிவிடவேண்டும்."

வசந்தன் சாந்தமாகப் பதில் கூறினன்:

"உனக்கு எல்லா விஷயமும் தெரியாது. தெரிந்த கொஞ்சமும் தப்பாகத் தெரிந்துகொண்டிருக்கிருய். உண்மையான விஷயம் உனக்குத் தெரிந்திருந்தால் இங்கே வரவேண்டிய தேவையே இல்லை."

"எனக்குச் சந்தேகமே இல்லை!"

"எதைப்பற்றி?"

"மோஹினியும் நீயும் நெருங்கிப் பழகியது பற்றி."

"நீ இப்படிப் பேசுவது மோஹினிக்கு அநியாயம் செய்வதாகும்."

"நீங்களிருவரும் சேர்ந்து எனக்குத் துரோகம் செய்திருக்கிறீர்கள். அதை யோசித்தாயா?" என்ருன் ஆனந்தன் கடுமையாக.

"என்னல் உனக்கு ஏதும் அநியாயம் நேர்ந்திருந்தால் இந்தக் கணம் உனது பாதங்களைத் தொட்டு மன்னிப்புக் கேட்கத் தயாராயிருக்கிறேன்."

"பாதங்களைத் தொடுவதுடன் அங்கிருக்கும் பாதரட்சைகளைக் கழற்றி என்னை அடிக்கவும் அடிப்பாய், அப்படித்தானே?"

"இப்படிப் பேசவேண்டாம் என்று சொன்னேனே, ஆனந்தா."

"ஏன் பேசக் கூடாது? எனது நம்பிக்கைக்கும் நட்புக்கும் துரோகம் செய்து விட்டாய். அதற்கு என்ன சொல்லுகிருய்?"

"நான் நம்பிக்கைத் துரோகம் செய்யவில்லை."

"போதும் மூடிவைப்பது..."

"ஒளிவு மறைவே கிடையாது. உள்ளதைத்தான் சொல்லுகிறேன்."

"எனக்கு நம்பிக்கை இல்லை!"

"உனக்கு நம்பிக்கை யில்லாவிட்டால் நான் என்ன சொல்லியும் பயனில்லை."

"ஒரு முறையல்ல, இரண்டு முறை நேரில் கண்டவர்கள் சொன்ன பிறகும் எப்படி உன்னை நம்புவது?"

"என்னத்தைக் கண்டார்களாம் நேரில்?"

"நீங்களிருவரும் சேர்ந்து உலாவப் போனதையும் நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்து கொண்டு அந்நியோந்நியமாகப் பேசிக் கொண்டிருந்ததையும்..."

"யார் பார்த்தவர்கள்?"

"யார் பார்த்தாலென்ன? நேற்று மத்தியான்னம்கூட இரண்டு மணி நேரம் நீங்கள் இருவரும் ஒன்றாக இருந்திருக்கிறீர்கள்..."

"இல்லை யென்று நான் சொல்லவில்லை."

பாஸ்கரன் வெற்றியடைந்து விட்டவனைப் போல் நடுவே குறுக்கிட்டான்.

"இல்லை யென்று எப்படிச் சொல்லுவாய்? நீங்கள் எங்கேங்கே சென்றீர்கள், என்ன என்ன செய்தீர்கள் என்பவை எல்லாம் தெரிந்து விட்டன."

"இருக்கலாம்...எனக்கும் எல்லா விஷயங்களும் தெரிந்து தான் இருக்கின்றன. நான் சொல்ல வேண்டியவைகளும் எவ்வளவோ இருக்கின்றன, கொஞ்சம் பொறுங்கள்."

பாஸ்கரன் பேசாமல் இருந்தான். மோஹினியின் மூலமாக வசந்தனுக்குத் தான் செய்தவைகளெல்லாம் தெரிந்திருந்து இப்பொழுது இவன் அவைகளை வெளிப் படுத்திவிட்டால் என்ன செய்வது என்ற பயம் பாஸ்கரனைப் பிடித்துக் கொண்டது.

"நீ என்ன சொல்ல வேண்டி யிருக்கிறது?"

"முதலில் நீ சொல்லவேண்டியதைச் சொல்லு...முக்கியமாக ஒரு விஷயம்; இதுவோ மிகவும் சிக்கலான பிரச்னை. நாம் ஏதும் ஒளிவு மறைவின்றி ஸ்பஷ்டமாகப் பேசவேண்டி யிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது."

"எனக்கு ஒரே ஒரு விஷயம் தெரியவேண்டும். நீங்கள் இருவரும் ஒருவரோடொருவர் சகஜமாகவும் சங்கோஜ மில்லாமலும் பேசியும் பழகியும் வந்தது உண்மையா இல்லையா?"

"சகஜம், சங்கோஜமின்மை என்றெல்லாம் சொல்லுகிறாய். இவைகளை நீ என்ன அர்த்தத்தில் கூறுகிறாயோ தெரியாது. ஒரு வார்த்தை நான் முதலிலேயே சொல்லிவிட விரும்புகிறேன்... நானும் மோஹினியும் பலமுறை சந்தித்ததும், பேசிக்கொண்டதும் உண்மை."

"நேற்று மத்தியான்னம்?"

"நேற்று மத்தியான்னமுந்தான்."

"இன்று நான் அதைப்பற்றி மோஹினியைக் கேட்டதற்கு அவள் ஏதும் பதிலே கூறவில்லை. ஏன் அவள் அப்படிப் பிடிவாதம் செய்யவேண்டும்?"

"அவள் அப்படிச் செய்திருந்தால் அது மிகவும் தவறு! அப்படிச் செய்வதால் எவ்வளவு விபரீதமான சந்தேகத்திற்கு இடமுண்டாகும் என்ற யோசனையே இல்லாமல் செய்த காரியமாகும் அது."

"மூன்றாநாள் நீ என்னை ரெயிலில் சந்தித்தபொழுது இதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?"

"என்னவென்று சொல்லுவது? சொல்லவேண்டியதுதான் என்ன இருந்தது? ஏன், தாதரில் ஒரு மூறை சந்தித்ததாகக்கூடச் சொன்னேனே!"

வசந்தன் தானகவே அன்று அதைச் சொன்னது ஆனந்தனுக்கு ஞாபகம் வரவே அவன்மீது கொஞ்சம் நல்ல எண்ணம் உண்டாயிற்று.

"இன்று உங்கள் வீட்டில் என்ன நடந்தது?"

"நேற்று நடந்த விஷயம் முழுவதும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக அவளைக் கேட்டேன். அவள் வாயே திறக்கவில்லை. என்னுலும் கோபத்தை அடக்க முடியவில்லை."

"பிறகு?"

"பேசாவிட்டால் இந்த வீட்டில் என்னேடு இருக்காதே, போ வீட்டைவிட்டு என்று அதட்டினேன். அவள் அதைக் கேட்டதும் புறப்பட்டே விட்டாள்."

"எங்கே?"

"எங்கே என்ன? இங்கேதான் வந்திருக்க வேண்டுமென்று இங்கே தேடிக்கொண்டு வந்தோம்."

"அநியாயமடா ஆனந்தா!...அக்கிரமமடா இது...!"

வசந்தனின் குரல் நடுக்கத்திலிருந்தே அது அவனது இதயத்தைப் பிளந்துகொண்டு வந்த வார்த்தை என்பதை ஆனந்தன் உணர்ந்தான். அந்தக் குரல் ஆனந்தனின் உள்ளத்தையும் தொட்டது.

வசந்தன் மறுபடியும் சொன்னன்: "அநியாயம் செய்துவிட்டாய் ஆனந்தா."

"என்னல் வேறு என்ன செய்ய முடியும்? நான்தான் எவ்வளவு பொறுத்துக்கொள்ள முடியும்?"

"நீ மிகவும் அவசரப் பட்டுவிட்டாய்!"

"நீ சுலபமாகச் சொல்லிவிட்டாய். நான் கேள்விப்பட்ட சமாசாரத்திற்கு, வேறு யாராக இருந்தாலும் அந்த நிமிஷத்திலேயே அவனைக் கொன்று புதைத்திருப்பார்கள்."

"என்ன நீ கேள்விப்பட்டது, அப்படிப்பட்ட சமாசாரம்?"

"நேற்று மாலை நீங்கள் இருவரும் சேர்ந்து ஹோட்டலில் உண வருந்தினீர்கள். அதற்குப் பிறகு அரட்டை அடித்தீர்கள். அதன் பின் கடற்கரைக்குச் சென்று உல்லாசமாகப் பொழுதுபோக்கினீர்கள்... இப்படியெல்லாம் நடந்தது முதல்தடவையும் அல்ல..."

"ஆனந்தா, நீ என்மீது நம்பிக்கையுடனும், மனம்விட்டும் பேசுவது பற்றி மிக்க சந்தோஷம். நான் உனக்கு இதனால் மிகவும் கடமைப்பட்டவனாவேன். என்றாவது சமயம் வாய்க்கும்போது ஒருநாள் நான் இதைக் குறித்து உன்னுடன் விவரமாகப் பேச வேண்டுமென்றுதான் இருந்தேன். உன்னை ரெயிலில் சந்தித்த போது அந்த நோக்கத்தோடுதான் என் மனத்தைச் சிறிது திறந்து காட்டினேன்......"

ஆனந்தன் பேசாமல் கேட்டுக் கொண்டே இருந்தான். வசந்தன் மேலும் தொடர்ந்தான்:

"இந்த விஷயத்தில் நான் தலையிட்டே இருக்கக் கூடாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் அப்படிச் செய்ய வேண்டியது நிர்ப்பந்தமாக ஏற்பட்டு விட்டது. முகத்தினெதிரே நல்லவன் போலும் நம்பகமாகவும் பேசி முதுகுக்குக் பின்னால் மற்றொருவனின் வாழ்வைப் பாழ் படுத்த வேண்டும் என்னும் நீச எண்ணம் நல்ல வேளையாக எனக்கு இல்லை..."

"உன் பேச்சை நான் ஒப்புக் கொள்கிறேன் வசந்தா. ஆனால் சந்தேகத்திற்கு வேண்டிய அளவு இடமிருக்கிறதே!

"அந்தச் சந்தேகமே இன்று உங்கள் வாழ்வின் இன்பத்தை நாசம் செய்துள்ளது. நீங்கள் சுகமாக வாழ வேண்டு மென்பதற்காகவே நான் முயன்றேன். கடைசியாக அது எனக்கே களங்கத்தில் வந்து முடிந்திருக்கிறது..."

வசந்தன் மௌனமாக இருந்தான். உண்மையில் மோஹினிக்கு இந்த நிலை ஏற்படத் தானே காரணம் என்று அவன் மனம் குத்திக் கொண்டே இருந்தது. அவள் வாழ்க்கையில் சுகம் அடையட்டும் என்பதற்காக அவன் செய்த பிரயத்தனம் அவளை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டதை நினைத்த பொழுது,

சமூக வாழ்வில் மனிதனின் நிலை எப்படித் திரிந்து அவனைப் படுகுழியில் தள்ளிவிடுகிறது என்ற ஞானோதயம் அவனுக்கு அப்போது உண்டாயிற்று.

"பலமுறை பார்த்து விட்டேன் வசந்தா. ஒவ்வொரு முறையும் சந்தேகத்தைக் கிளறும்படியான சந்தர்ப்பங்களே தான். கேட்டால் நேரான, ஒழுங்கான பதிலே கிடையாது."

"மோஹினியின் நடத்தை சந்தேகத்திற்கு இடங்கொடுத்திருக்கக் கூடும்...அதற்குக் காரணம், உன்னுடைய, களங்கமுற்ற மனம்! அவள் சுபாவத்தை ஓரிரு முறை சந்தித்ததிலேயே நான் அறிந்துகொண்டு விட்டேன். கேள்வி கேட்கும்பொழுதே சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டு கேட்டால், யாரும் சரியான பதில் சொல்லமாட்டார்கள்; சொல்ல முடியாது. அப்படிச் சந்தேகத்தால் பிரேரேபிக்கப்பட்டுக் கேட்கும் கேள்விகள் எதிரியின் சுயமரியாதைக்கும் கௌரவத்திற்கும் பங்கம் விளைவிப்பதாகும்."

"அப்படியானால் நான் அவளை ஒன்றுமே கேட்கக்கூடாதா?"

"கேட்கலாம். ஆனால் உனக்கு அவள்மேல் சந்தேகம் இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ளாமல் சகஜமாகக் கேட்க வேண்டும். அதுவுமல்லாமல் நீ கேட்கும் விஷயம் நீயே கண்ணால் கண்டதாக இருந்தால் மாத்திரம்தான் கேட்கவேண்டும். என்னை நம்பு ஆனந்தா... உன் குறை எனக்கு நன்றாகத் தெரியும்... உன் சந்தேகமே நிரபராதியான மோஹினியைப் படுகுழியில் தள்ளி விட்டது..."

ஆனந்தனுக்கு வசந்தனின் பேச்சில் நம்பிக்கை அதிகரித்தது. நிலைமைக்கு வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்டிருக்கிறான் வசந்தன் என்பதாக எண்ணாமல் உண்மையிலேயே விஷயங்கள் அவன் கூறுகிறபடியேதான் இருக்குமோ என்று தோன்றிய பொழுது ஆனந்தனின் இதயத்தை இனமறியாத சோகம் கவ்விக் கொண்டது. பாஸ்கரனை ஜாடையாகப் பார்த்துக் கொண்டே வசந்தன், "நான் இப்பொழுது உன்னை இரண்டொரு விஷயங்கள் கேட்கக்கூடுமா ஆனந்தா!" என்றான்.

"கேளேன்!"

"நேற்று நாங்கள் சேர்ந்து உலாவப் போனதை நீயே பார்த்தாயா?"

"இல்லை."

"யார் சொன்னார்கள்?"

"பாஸ்கரன்."

பாஸ்கரன் நாற்காலியில் முள் மேல் இருப்பது போல் தத்தளிக்க ஆரம்பித்தான். அவனைப் பயம் பற்றிக் கொண்டது. முகம் களையிழந்தது.

"தாதர் ஸ்டேஷன் அருகே நாங்கள் பேசிக் கொண்டு நின்றதைச் சொன்னது யார்?"

"அதுவும் அவனே, பாஸ்கரனேதான்."

"அதைச் சொல்லும் போது மோஹினியுடன் பேசிக் கொண்டிருந்தவன் நான் தான் என்பதை உனக்குச் சொல்லவில்லை, அல்லவா?"

"ஆமாம். அடையாளம் தெரியவில்லையாம்."

"அதெப்படித் தெரியாமல் போகும் ஆனந்தா? நாங்கள் இருவரும் பேசிக் கொண்டு நின்றது ஸ்டேஷனுக் கெதிரில்; வெளிச்சத்தில். அவளை அடையாளம் புரிந்து கொண்டார், என்னை மாத்திரம் அடையாளம் தெரியவில்லை. ஆச்சரியம்! என்னை அவர் பார்த்தது அது முதல் முறை அல்ல."

வசந்தனை இப்பொழுதே மடக்கிவிட வேண்டு மென்று நினைத்த பாஸ்கரன், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நீ என்னதான் சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"எல்லாவற்றையும் சொல்லுகிறேன், கொஞ்சம் பொறுங்கள். நான் கேட்கும் கேள்விகளுக்கு ஒளிக்காமல் பதில் சொல்லுவீர்களா?"

"உன்னோடு நான் பேச வேண்டிய தேவையில்லை."

"அவ்வளவு சுலபமாகத் தப்பிவிட முடியாது, மிஸ்டர் பாஸ்கரராவ்... உங்கள் ஆட்டத்தை யெல்லாம் இன்று அம்பலப் படுத்தியாக வேண்டி யிருக்கிறது. நான் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்."

பாஸ்கரனுக்குக் கை கால்கள் உதற ஆரம்பித்தன. ஆனந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் ஏதோ பேச வேண்டு மென்று நினைத்தான். ஆனால் அதற்குள்ளாக வசந்தன் பாஸ்கரனைக் கேட்டான்.

"போன புதன் கிழமை நீங்கள் பூனுவுக்கு ஏன் போயிருந்தீர்கள்?"

பாஸ்கரனுக்குப் பதில் கூற நா எழவில்லை.

"போன புதன் கிழமை!... நான் எங்கேயும் போகவில்லை."

"பொய் சொல்லாதீர்கள். சென்ற புதன் கிழமை நீங்கள் பூனுவுக்குச் சென்றிருந்தீர்கள்."

"ஓஹோ...போன வாரமா?" என்று ஞாபகம் வந்தவன் போல் நடித்துக் கொண்டு, "ஆமாம், போயிருந்தேன். எங்கள் பள்ளிக்கூட விஷயமாகப் போயிருந்தேன்" என்றான் பாஸ்கரன்.

"இருக்கலாம். மோஹினியின் தாய் வீட்டிற்கும் சென்றீர் களல்லவா?"

"ஆமாம்."

"எதற்காக?"

"எதற்காக வென்றால்? சும்மா, பார்த்து விட்டு வரலா மென்றுதான்."

"யாரை?"

"மோஹினியையும் அவள் வீட்டு ஜனங்களையும்."

"மோஹினியின் தாயைப் பார்த்தீர்களோ?"

"இல்லை. அவள் வீட்டில் இருக்கவில்லை."

"தாயை அழைத்து வருகிறேனென்று மோஹினி சொன்ன போது ஏன் வேண்டாம் என்று கூறி விட்டு அவசர அவசரமாகப் புறப்பட்டு வந்து விட்டீர்கள்?"

பாஸ்கரனுக்கு இதற்கு மேல் தாளமுடியவில்லை. தான் இனி தப்புவது கடினம் என்பதை அறிந்து கொண்டு கோபங் கொண்டவன் போல் நடித்து, "ஏது, என்னை நீ குறுக்கு விசாரணை செய்வது போலிருக்கிறதே! உன் குற்றத்தை மறைக்க என் மீது பழி சுமத்துகிறாயா?" என்று கேட்டான்.

"உங்கள் மீது நான் பழி சுமத்த வேண்டிய தேவையில்லை. நீங்கள் கோபப்பட வேண்டிய தேவையும் இல்லை. இன்னும் ஒரே ஒரு கேள்வி..."

"நான் இனி ஒன்றுக்கும் பதில் கூற முடியாது."

"நீங்கள் சொல்லியே ஆக வேண்டும். யாரைப் படுகுழியில் தள்ளலாமென்று நினைக்கிறீர்கள்? இன்று உங்கள் தம்பியின் வாழ்வைப் பாழடித்தீர்கள். அந்த அறியாப் பெண்ணைத்

தெருவில் தள்ளினீர்கள். இவ்வளவும் போதாதென்று இப்போது என் மீது படையெடுத்திருக்கிறீர்களா? அவ்வளவு சுலபத்தில் நீங்கள் தப்பிவிட முடியாது...you can't escape... you can't தெரிந்ததா? நீங்கள் பூனாவிலிருந்து எப்பொழுது திரும்பி வந்தீர்கள்?"

"வெள்ளிக் கிழமை காலையில்."

"அன்று காலையில் நீங்கள் பூனா ஸ்டேஷனில் மோஹினிக்காகக் காத்துக் கொண்டிருந்தீர்களல்லவா?"

"அவளுக்காக நான் ஏன் காத்து நிற்க வேண்டும்? அவள் மத்தியான்ன வண்டியில் வருவதாகச் சொல்லி யிருந்தாள்..."

"அப்படியானால் மோஹினி ஸ்டேஷனுக்கு வரும் வரையில் நீங்கள் ஏன் டிக்கட் வாங்கவில்லை?"

பாஸ்கரன் இந்தக் கேள்வியைக் கேட்டு விழித்தான். ஆனந்தனோ பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தான். வசந்தன் மேலும் கேட்டான்: "எனக்கு எல்லாம் தெரியும் மிஸ்டர் பாஸ்கரராவ்—I know everything! ரெயிலில் நீங்கள் மோஹினியை என்ன கேட்டீர்கள்?"

"இல்லாததையும் பொல்லாததையும் அபாண்டமாகக் கூற வேண்டாம், வசந்தா."

"இல்லாததைக் கேட்கவில்லை. உண்மையைத்தான் கேட்கிறேன். மோஹினியை என்ன கேட்டீர்கள்?"

"நான் அவளை என்ன கேட்க முடியும்? அவள் பெண்கள் கம்பார்ட்மெண்டில் இருந்தாள்."

"ஆமாம். அது எனக்குத் தெரியும்! நீங்கள் அந்தக் கம்பார்ட்மெண்டுக்கே தேநீர்த் தட்டை எடுத்துக் கொண்டு சென்றீர்கள்... முதலில் அவளைச் சாப்பிடும்படி கெஞ்சினீர்கள். பிறகு அதட்டினீர்கள். அப்பொழுதும் உங்கள் பேச்சை அவள் கேட்காமற் போகவே அவளைப் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்தீர்கள்."

"வாய்க்கு வந்ததை உளருதே...வசந்தா..."

"உங்களைப் போல அல்ல நான். இதோ பார் ஆனந்தா, மோஹினியின் பேரில் உனக்கு உண்டான சகல சம்சயங்களுக்கும் இந்த 'மஹானுபாவரே' காரணம். அவர் வாயிலிருந்தே வேண்டிய மட்டும் விஷயங்களை வரவழைத்து

விட்டேன். உங்கள் தாம்பத்திய வாழ்க்கையைப் பாழடித்த புண்ணியம் இந்தப் பெரிய மனிதரின் கைங்கரியம். சென்ற ஒரு வருஷமாகவே இவர் அவளைச் சுற்றித் திரிகிறார். நான் இந்த வார்த்தையைச் சொல்லுவதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். எவ்வளவானாலும் அவர் உன் தமையனார்.”

ஆனந்தன் தன் நிலை மறந்தான். “பாஸ்கர்!...” என்று கூறிப் பற்களை நற நற வென்று கடித்தான்.

“கோபங் கொண்டு பிரயோசன மில்லை ஆனந்தா. நீ இன்னும் யோசனை செய்ய வேண்டும்.”

“இந்த விஷயங்களை யெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டு மென்றால் உன்னிடத்தில் அவளுக்கு எவ்வளவு சலுகை இருக்கிறது என்பது தெரிகிறது...” என்று ஏளனமாகவும், அவனைச் சிக்க வைக்க ஒரு கடைசிப் பிரயத்தனமாகவும் கேட்டான் பாஸ்கரன். ஆனால் பாஸ்கரன் படுதோல்வியே அடைந்தான்.

“ஆமாம் மிஸ்டர், அவளுக்கு அவ்வளவு சலுகை என்னிடம் இருக்கிறது வாஸ்தவம். ஆனால் பேசும் சலுகை இருந்த மாத்திரத்தில், அவள் உடலைத் தீண்டும் சலுகை இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. எல்லோரும் பெண்ணை நீங்கள் பார்க்கும் திருஷ்டியிலே பார்ப்பதில்லை; பார்க்கவும் கூடாது...”

பாஸ்கரனால் இதற்குமேல் பொறுக்க முடியாமற் போகவே தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேறு உபாயத்தைத் தேட வேண்டியதாயிற்று. எனவே அவன் சொன்னான்: “நானும் இப்படி எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன், பெரிய மனிதர்கள் போல் பேசிப் பலரைப் பாழாக்குபவர்களை! எழுந்திருடா ஆனந்தா...நான் எல்லாவற்றையும் உனக்குச் சொல்லுகிறேன். இவனுடன் பேசிக் கொண்டு உட்கார்ந் திருந்தால் அவ்வளவு தான்...கேஸ் போட்டாலொழிய இவன் வழிக்கு வர மாட்டான்.”

பாஸ்கரனின் வார்த்தைகளை ஆனந்தன் காதில் போட்டுக் கொண்டதாகவே தோன்றவில்லை. இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மனம் யோசிக்கும் சக்தியையே இழந்துவிட் டிருந்தது. பாஸ்கரனின் கபடம் அவனுக் குத் தெரியாமல் போகவில்லை. அங்கிருந்து போனால் போதும்

என்று பாஸ்கரன் அவசரப்படுவது அவன் குரலில் நன்ருக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. வசந்தன் அதை அறிந்து கொண்டான்.

வசந்தன் சொன்னுன்: "என்மேல் கேஸ் போடலாம் பாஸ்கரராவ். ஆனல் நீங்கள் போட முடியாது. ஆனந்தா, உனக்கும் சொல்லுகிறேன். சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் மனம் விட்டுச் சொல்லி விட்டேன். நான் எங்கே வந்து சொன்னுலும் இவைகளையே தான் சொல்ல வேண்டுமே யன்றி வேறில்லை. உங்களுக்கு இன்னும் சந்தேகம் நீங்கவில்லை யென்ருல் வேண்டியபடி விசாரித்துப் பாருங்கள். கேஸூம் வேண்டுமானல் போடுங்கள். ஆனல் ஒரு வார்த்தை; இப் பொழுது நடை பெற்றிருக்கும் அநியாயத்தை எந்தக் கோர்ட்டும் சரி செய்யப் போவதில்லை. இனி கோர்ட்டுக்குப் போவது வெந்த புண்ணில் வேல் நுழைப்பது போலாகும். ஆனந்தா, கோர்ட்டில் நீ உன் மனைவி நடத்தை தவறியவள் என்று பகிரங்கப் படுத்த வேண்டும். அது உனக்கு அவமானம், எனக்கு அநியாயம், மோஹினிக்கு உயிர் போக்கும் அபாண்டம்! எனவே யோசித்துப் பார்...உனக்குத் தோன்றியதைச் செய்..."

வசந்தன் பேச்சை நிறுத்தினன். எல்லாரும் வாயைக் கட்டிருற் போன்று உட்கார்ந்திருந்தனர். பாஸ்கரன் வசந்தனின் முகத்தைப் பார்க்கவே கூசினன். பயங்கரமான அமைதி அந்த அறையில் குடி கொண்டது. ஐந்து நிமிஷங்கள் அப்படியே இருந்தனர். பிறகு வசந்தன் மீண்டும் ஆரம்பித்தான்.

"என்னை நம்பு என்று நான் பலவந்தப் படுத்தக் கூடாது. என்னைப் பற்றி எங்கே வேண்டுமானுலும், எப்படி வேண்டு மானுலும் விசாரித்துக் கொள்ளலாம். ஆனல் ஒரு பேச்சு இப் பொழுதே சொல்லி விடுகிறேன். என் வீடு முழுவதையும் தேடிப்பார்த்து விடுங்கள்..."

ஆனந்தனல் துக்கத்தைத் தாள முடியவில்லை. அடைக்கும் தொண்டையில் வசந்தனைப் பார்த்துச் சொன்னுன்: "வசந்தா, அநியாயம் செய்து விட்டேனடா உனக்கு நான். என்னை நீ மன்னிக்க வேண்டும்."

"எனக்கு நீ அநியாயம் செய்ய வில்லை. செய்ய இருந்தாய். மோஹினிக்குத்தான் பெரிய அநியாயத்தைச் செய்து விட்டாய்.

உனக்கு எப்பொழுது சந்தேகம் தோன்றியதோ உடனே என்னிடம் வந்து கேட்டிருக்கக் கூடாதா?"

"தவறு...நான் செய்தது முழுதும் தவறு, வசந்தா."

"என்னிடம் வந்திருந்தாயானல் எல்லாவற்றையும் சொல்லியிருப்பேன். நாளை அல்லது நாளை நின்று நானே உன் வீட்டிற்கு வர வேண்டு மென்றிருந்தேன்."

விஷயம் தன் கையை விட்டு நழுவி விட்டதை உணர்ந்தவனைப் பாஸ்கரன் பேசாமலிருந்தான். ஆனல் அங்கேயே இன்னும் நின்று கொண்டிருப்பது அவனல் இயலவில்லை. தானொருவனே அங்கிருந்து வெளியேறுவதும் முடியாத காரியம்.

"அதெல்லாம் எனக்குத் தெரியும், நீ புறப்படுடா ஆனந்தா, ....முதலில் புறப்படு இங்கிருந்து...தன் தவறை மறைக்கப் பெரிய கதை அளக்கிறன்...புறப்படு...ஊம்...இங்கே உட்கார்ந்து கொண்டு எதைச் சாதித்தமாதிரி? முதலில் அவள் என்ன ஆனள் என்பதைப் பார்ப்போம்..." என்று ஆனந்தனைத் துரிதப் படுத்தினன் பாஸ்கரன். ஆனந்தனின் கையைப் பிடித்து அவனை எழுப்பி நிறுத்தியே விட்டான். ஆனந்தனுக்குத் துக்கம், பரிதாபம், பச்சாத்தாபம். அவனல் வசந்தனை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

"நான் அப்புறம் வருகிறேன் வசந்தா..." என்றான்.

"எப்பொழுது வேண்டுமானலும் வா...என்னல் ஏதாவது உதவி வேண்டியிருந்தால் எப்பொழுதும் செய்யத் தயாராயிருக்கிறேன். உன்னைப் பார்த்து எனக்கு மிகவும் விசனமுண்டாகிறது. ஆனந்தா...உங்கள் இருவரையும் சுகமாக வாழ வைக்க நான் பிரயத்தனம் செய்தேன். ஆனல் பெருந் தோல்வி அடைந்தேன். எதைத் தவிர்க்க விரும்பினேனே அதுவே நடந்து விட்டது...இது நம் எல்லோருடைய துர்ப் பாக்கியம்."

பாஸ்கரன் ஏதும் பேசாமல் அப்பொழுதே வெளிக் கதவண்டை போய் நின்று விட்டான். 'ஆனந்தா' என்று இரண்டு முறை கூப்பிட்டும் விட்டான். ஆனந்தன் புறப்படும் பொழுது மீண்டும் வசந்தனைப் பார்த்து, "உன்னல் எனக்கு மிகவும் சகாயம் ஆயிற்று" என்றான்.

"இல்லை ஆனந்தா...அது தான் இல்லை."

"உனது நட்பாவது கடைசியில் எனக்கு மிஞ்சிற்று."

"பெரிய துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் உனக்கு இது சிறிய சமாதானம். இன்று நீ மோஹினியை இழந்து விட்டாய். அதன் முன்பு எனது நட்புக்கு என்ன விலை?"

ஆனந்தன் பேசாமலிருந்தான். வசந்தனின் உதார இதயத்தை வியந்தவண்ணம் அங்கிருந்து புறப்பட்டான். அவனும் பாஸ்கரனும் சேர்ந்தாற்போல் இருட்டில் நடந்து சென்று கொண்டிருந்தனர். எப்படியாவது ஆனந்தனுடன் பேசி அவன் மனத்தில் தன்னைப் பற்றி ஏற்பட்டுள்ள கசப்பை அகற்ற வேண்டு மென பாஸ்கரன் யோசித்துக் கொண்டிருந்தான். வசந்தனுக்கு விரோதமாகப் பேச ஆரம்பித்தான். ஆனால் ஆனந்தன் அவன் பேச்சு ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ள வில்லை. அவன் கேட்ட கேள்விகளுக்கும் ஒன்றும் பதில் கூறவில்லை. ஆனந்தனின் அந்த நிலைமையைக் கண்டு பாஸ்கரனுக்கும் தான் செய்தது பெருந்தவறு என்று பட்டது. இருள் நன்றாகக் கவிந்து கொண்டது—ஆனந்தனின் மனத்தைத் துக்கம் கவ்வியது போல. தெரு விளக்குகளையும் அணைத்து விட்டிருந்தார்கள். ஆனந்தனுக்கு நம்பிக்கையின் கிரணமே எங்கும் தென்படவில்லை. வானத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டிச் சிரித்து அவனைக் கேலி செய்வது போல் காணப்பட்டன.

## 10

நடந்து போனவைகளை யெல்லாம் நினைத்து நினைத்து ஐந்தாறு நாட்கள் வசந்தனால் தன் துக்கத்தைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. ஆனந்தனும் பாஸ்கரராவும் தன்னைத் தேடி வந்து போன மறுநாள் அவன் ஆபீஸுக்குக் கூடச் செல்ல வில்லை. தன் அறையை விட்டு அவன் வெளிப்படவில்லை. மோஹினியின் சகல துக்கங்களுக்கும் தானே காரணமாகி விட்டதை அவன் மனம் குத்திக் காட்டிக் கொண்டே இருந்தது. 'நான் யாருக்கும் அநியாயம் செய்ய நினைக்க வில்லை. முடியுமானால் அவளுக்கு நன்மை செய்ய வேண்டு மென்று, ஆனந்தனுடன் அவள் சுகியாக வாழவல்லவா நான் முயற்சி எடுத்துக் கொண்டேன்? நினைத்தது ஒன்றாக, நடந்தது நேர்மாறாக விபரீதத்தில் முடிவுற்று விட்டால் நான் செய்யக் கூடியதுதான்

என்ன?' என்றெல்லாம் மனம் புழுங்கினன். ஆனல் தீர்க்கமான யோசனையில் மூழ்கும் போது அவன் சொல்லிக் கொள்ளுவான்: "மோஹினியின் விஷயத்தில் நான் எவ்வளவு நல்ல எண்ணத் தோடும் பரிசுத்த மனத்தோடும் சகவாசம் ஆரம்பித்திருந்த போதிலும் சமீபத்தில் என் மனம் சிறிது சஞ்சல முற்றுத் தகாத ஆசையால் களங்க முற்றதை மறக்க முடியுமா?" என்று. அவனது அந்தச் சஞ்சலம் - தகாத ஆசை - அவள் பேரில் ஏற்பட்ட பச்சாத்தாப உணர்ச்சிப் பெருக்கிலே தோன்றிய ஒரு பைத்தியக்கார எண்ணமாக இருந்திருக்கலாம். ஆயினும் தன் மனம் அவ்வாறு களங்க முற்றதனலேதான் தான் செய்த பிரயத்தனம் கை கூடாமற் போய் விட்டதாக அவனுக்குத் தோன்றியது. தன் மனத்தின் பலஹீனத்தை நினைந்து வருந் தினன். மோஹினி தன் தாய் வீட்டுக்குத்தான் சென்றிருக்க வேண்டும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இருக்க வில்லை.

ஆருவது நாள் அவன் வெளியிலிருந்து வீடு திரும்பிய பொழுது ஓர் உறை அவன் அறையில் கிடந்தது. உறை மிகப் பெரியதாக இருந்தது. விலாசத்தைப் பார்த்தான். பெண்ணின் கையெழுத்து. வசந்தனின் உள்ளத்திலே ஓர் இன்பம் மின்னிச் சென்றது. உறையைக் கிழித்துப் பார்த்தான். மோஹினி தான் எழுதியிருந்தாள், பூனுவிலிருந்து.

பூன
25—3—42

ஸ்ரீ வசந்தராவுக்கு,

வந்தனம். என்னுடைய இந்தக் கடிதத்தைக் கண்டு நீங்கள் ஆச்சரியம் அடையக் கூடும். படித்து முடித்த பிறகு துக்கமும் ஏற்படலாம். ஆனல் எழுதித்தான் ஆக வேண்டு மென்று தோன்றியதால் எழுதுகிறேன். உங்கள் மனத்திற்கு நோவுண் டாகுமானல் தயவு செய்து மன்னியுங்கள். சென்ற முறை நான் பூனுவுக்கு வந்த பொழுது கடிதம் எழுத வேண்டு மென்று நினைத்தேன். ஆனல் அப்பொழுது எழுத வேண்டு மென்ற ஆசையிருந்தாலும் தைரியம் இருக்கவில்லை. இப் பொழுதோ வேண்டிய அளவு தைரியம் இருக்கிறது, ஆனல் எழுத வேண்டு மென்ற ஆர்வம் இல்லை. இருந்தாலும் எழுதுகிறேன். இதற்குக் காரணம் சொல்ல வேண்டு மானல், முதலாவது, என் துக்கத்தை உங்களிடம் தெரிவித்து

உங்கள் மனத்தை நோக வைக்க விருப்பமில்லை; இரண்டாவதாக, எழுதித்தான் என்ன பிரயோசனம் என்கிற நிராசை. எப்படியிருந்த போதிலும், இதுவரை நீங்கள் என்மீது மிக்க அநுதாபத்தோடு இருந்திருக்கிறீர்கள். என் துயரக் கதைகளுக்குச் செவி மடுத்து, பச்சாத்தாபம் தெரிவித்திருக்கிறீர்கள். அந்த நம்பிக்கையினாலேதான் இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய சின்னஞ் சிறு கஷ்டங்களையும் கேட்டு அநுதாபம் காட்டிய உங்களுக்கு, இப்பொழுது என் வாழ்வே முறிந்து சின்ன பின்னப் பட்டுப் போனதைத் தெரிவிக்காமல் எப்படி இருப்பேன்?

வியாழக் கிழமை சாயங்காலம் தாதரில் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு நான் வீடு திரும்பிய பின்னர் நடந்த சமாசாரங்களில் சில உங்களுக்கு இதற்குள்ளாகத் தெரிந்திருக்கலாம். என் கணவனாக இருந்த ஆனந்தன், அவர் அண்ணன் பாஸ்கரன் இருவரும் உங்களிடம் வந்து உங்களுக்குத்தொந்தரவு விளைவித்திருக்கக் கூடும். அவர்கள் மூலமாக உங்களுக்கு நடந்தவை சிறிதாவது தெரிந்திருக்க வேண்டும். அநேகமாக நான் உங்களிடம் தான் சரண் புகுந்திருப்பேன் என்று அவர்கள் என்னைத் தேடி உங்கள் அறைக்கு வந்திருக்க வேண்டும். நான் பம்பாயிலேயே இருந்திருந்தால் எல்லாவற்றையும் உங்களுக்கு விவரமாகச் சொல்லலாம். ஆனால் என்னால் அங்கே ஒரு நிமிஷமும் தங்க முடியாதென்று தோன்றியதால், வெள்ளிக் கிழமை ராத்திரியே நேரே புறப்பட்டு இங்கே வந்து விட்டேன். என்னைச் சுற்றியுள்ள உலகமெல்லாம் அழிந்து போய் விட்ட போதிலும் என்னைப் பெற்ற தாய் எனக்கு இருக்கிறாள்! அவள் மடியில் சரண்புக வேண்டி ஓடி வந்தேன். தாய் இருக்கும் இடமே சுவர்க்கம் என்று ஒரு முறை உங்களுக்குச் சொன்னேனல்லவா? ஆனால் இன்று என் தாய் இருக்கும் இடம் சுவர்க்கமாக இல்லை. நரகத்திலிருந்து ஓடி வந்த எனக்கு ஒரு வெறும் புகலிடமாக மாத்திரம் இருக்கிறது. அவளருகே இருந்தும் என் மனம் பழைய ஆனந்தத்தை, அன்புணர்ச்சியை அநுபவிக்க இயலாமல் தவிக்கிறது. ஆனால் இந்தப் பரந்த உலகில் அவளை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

ஆனந்தனுக்கும் எனக்கும் இடையே நிலவியிருந்த சம்பந்தத்தை நன்கு அறிந்த உங்களிடம் நான் எதையும் மறைக்க வேண்டிய தேவையில்லை. சமூகமே திரண்டு ஒன்றாக நின்று நம்மைச் சுட்டிக் காட்டிக் குற்றம் சாட்டக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்ட இன்று யாரிடமிருந்தும் எதையும் ஒளிக்க வேண்டியதில்லை. ஆனால் மற்றவர்களை இகழ்வதனாலேயே

தங்களை உயர்ந்தவர்களாக்கிக் கொள்ளப் பார்ப்போர் என் வார்த்தையைக் கேட்கத் தயாராயிருக்க மாட்டார்கள். அவர்கள் கேட்க வேண்டு மென்ற ஆசையும் எனக்கில்லை. நீங்கள் காது கொடுத்துக் கேட்கத் தயாராயிருப்பீர்கள்; என் நிலையை அறிந்திருக்கிறீர்கள்; சிறிதளவாவது என் மனத்தைக் குடைந்து சென்று அங்கு நிலவுகிற உணர்ச்சிகளைக் கண்டறிந் திருக் கிறீர்கள் என்பதனுலே தான் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டியதை, ஆனல் மற்றவர்கள் காது கொடுத்துக் கேட்காததை உங்களெதிரே கூறுகிறேன். வியாழக் கிழமை ராத்திரி எதிர்பார்த்தபடி ஆனந்தன் வீட்டிற்கு வந்திருந்தார். ஆனல் அன்று அவர் என்னுடன் பழகியது எனக்கு நரக வேதனையாக இருந்தது! என் உள்ளத்தை விரும்பாது உடலை மட்டும் விரும்பிய ஆனந்தனின் காம வெறி அவரை அன்று என்னிடம் மிருகத்தனமாக நடந்து கொள்ளச் செய்தது. அன்று என் உடல் அவருக்குப் பணிந்தது; மனமோ அவரிட மிருந்து பிரிந்து ஆகாயத்தில் சஞ்சரித்தது. அப்பொழுதே எனது தீர்மானமும் உறுதி பெற்றது, புருஷன் என்று சொல்லிக் கொண்டு மிருகத்திலும் கேடு கெட்டவராக நடந்து கொள்ளும் அவர் சகவாசம் இனி வேண்டாம் என்று!

அன்று இரவு ஒரு மகத்தான இரவாக முடிந்தது. ஒருவார காலத்திற்குள்ளாக நீங்கள் என் மனத்தை எவ்வளவோ வகையில் மாற்றியிருந்தீர்கள். உங்கள் அறிவுரையின்படி நான் என்றைக்கும் இருந்ததைவிட அதிகமாக அப்பொழுது பணிந்து போகத் தயாராக இருந்தேன். உங்கள் சந்திப்பின் பலனுக ஆனந்தனுடன் மனம் விட்டுப் பேசி எங்களிடையே ஏற்பட்டிருந்த பிளவைச் சரிப்படுத்திக் கொண்டு சுகமாக வாழ்க்கையைத் தொடங்கலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தேன். அன்று இரவு மாத்திரம் ஆனந்தன் என்னுடன் மனம் ஒன்றிப் பேசியிருந்தால், எனக்கும் அவ்வாறு பேச இடம் அளித்திருந்தால் எங்கள் எதிர்காலமே வேறு விதமாக இருந்திருக்கும்! ஆனல் அன்று மாலை வீட்டிற்கு வந்ததிலிருந்து அவர் மனம் ஒரே விஷயத்தை நாடிக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. அவரது ஒவ்வொரு பேச்சிலும் அங்க அசைவிலும் எனது உடலின் மேலுள்ள மோகமே வெளிப் பட்டு நின்றது. அது எனக்கு வெறுப்பை அளித்தது. இந்த உடல் என்றைக்கானலும் அவருடையதே; உண்மை. ஆனல் இந்த உள்ளமும் அவருக் காகவே காத்திருந்தது. ஆனல், உள்ளத்தை வேண்டாது உடலை மட்டும் வேண்டிய அவருடைய அன்றைய நடத்தை எனக்குத் தீராத வெறுப்பையும் அருவருப்பையும் உண்டாக்

கிற்று வேண்டிய வரையில் மிருதுவாகப் பேசிப் பார்த்தேன். அவரது உள்ளன்பைப் பெற முயன்றேன். ஆனால் அவருக்கு அதெல்லாம் அப்பொழுது வேண்டியிருக்க வில்லை. எனவே அன்று அவர் என் உடலைத் தம் வசமாக்கிக் கொண்டு என் உள்ளத்தைச் சுடுகாட்டிற்கு விரட்டியடித்தார்!

மறு நாள் மாலை வரையிலும் என் மனம் பட்ட வேதனையை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஆனால் எனது அவமானம் இன்னும் பூர்த்திபெற வில்லை என்பதைப் பிறகுதான் அறிந்தேன். நாம் சில நாட்கள் முன்னர் தாதரில் உணவருந்தியது, கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தது இவைகளெல்லாம் அவருக்கு எப்படித்தான் தெரிந்தனவோ? அவர் அன்று பேசிய பேச்சுக்களிலிருந்து அதெல்லாம் பாஸ்கரன் வைத்த கொள்ளியாகத்தான் இருக்க வேண்டுமென்று அறிந்து கொண்டேன். அன்று பாஸ்கரன் நம்மைப் பின் தொடர்ந்தே வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு யாரையாவது அந்த வேலைக்கு நியமித்திருக்க வேண்டும். எப்படியானாலும் அன்று இரவு அவர்கள் கடைசி முடிவுக்காகவே வந்தது போலிருந்தது. என்றும் போல் அன்றும் தகாத கேள்விகள்! அதே சந்தேகம்! ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காமத்தைத் தவிர வேறு சம்பந்தமே இருக்க முடியாது என்பது அவர்களது ரத்தத்தில் ஜன்ம ஜன்மாந்தரமாக ஊறிப் போயிருக்கும் கொள்கை. ஆணும் பெண்ணும் கூடிப் பேசினால் பேச்சோடு நிற்கமாட்டார்கள் என்பது அவர்கள் வாதம். இந்த வாதமே அவர்கள் சந்தேகம் பலம் பெறுவதற்கு உரமிட்டது. அவர்களது சந்தேகம் என் வாழ்வைப் பாழாக்கிற்று. அவர் கேட்ட கேள்விக்கு நான் பதில் கூற முடியாதென்றேன். நான் உண்மையையே கூறியிருந்தாலும் அவர்கள் அதை நம்பமாட்டார்களென்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருக்கும்போது எதற்காகப் பதில் சொல்ல வேண்டும்? அதுவுமல்லாமல் கடைசி வரையிலும் கேள்வி ஒன்றேதான். அதுவும் சந்தேகம் என்னும் விஷத்தோடு கூடிய கேள்வி. அந்தக் கேள்வியை அவர் ஆத்திரத்தில் கேட்டிருக்கக் கூடும். ஆனால் அதற்குப் பதில் கூறுவதென்பது சுயமரியாதை கொண்ட யாருக்கும், சுயகௌரவம் கொண்ட எவருக்கும் இயலாத காரியம். என்னைப் பொறுத்த வரையில் அது எப்பொழுதும் அப்படியே நடந்திருக்கிறது. வேறு யாரும் என் நிலையில் இருந்திருந்தால் அப்படியேதான் நடந்துகொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கேட்ட கேள்விக்கு நான் சரியான பதில் சொல்லாததால் வீட்டை விட்டு வெளியேற வேண்டுமென்ற உத்தரவு பிறந்தது. வீட்டிலுள்ள எந்த வஸ்து

வையும் நான் எடுத்துச் செல்லக்கூடாதென்றும் சொல்லி விட்டார். உடலின்மேல் அணிந்து கொண்டிருந்த நகைகளையும் கழற்றிவைத்து விட்டுப்போக வேண்டுமென்றார். அதேமாதிரி எல்லாவற்றையும் கழற்றி வைத்து விட்டேன்—மாங்கல்யத்தை யுங் கூடத்தான். முதல்நாள் இரவு இடது கை வளையல்களை யும், அன்று மத்தியான்னம் வலது கை வளையல்களையும் அவர் தம் கையாலேயே உடைத்து விட்டிருந்தார்!

எனக்கும் அவருக்கும் இடையே புருஷன்-மனைவி என் றிருந்த பிணைப்புக்கு—பெயருக்கு மட்டிலும் ஏற்பட்ட பிணைப் புக்கு—அறிகுறிகளாக இருந்த வளையல்களும், மாங்கல்யமும் அன்று என்னை விட்டகன்றன. அந்தக் கணமே நான் விடுதலை பெற்றவளானேன். ஆனால் அந்த நிமிஷத்திலிருந்தே எனக்குச் சுதந்தரத்தின் பயம் ஏற்பட்டுவிட்டது. என் உள்ளம் நடுங் கிற்று. விடுதலை வேண்டுமென்று விரும்பினேன், ஆத்திரப் பட்டேன். ஆனால் அந்த விடுதலை எனக்குக் கிடைத்த அப் பொழுது நான் அதை அடியோடு வெறுத்தேன். இதற்குக் காரணம்—நான் வேண்டிய விடுதலை அந்த விடுதலை அல்ல. எனக்கு வேண்டியிருந்த சுதந்தரத்தின் பொருள் அவர்கள் யாருக்கும் விளங்கவில்லை. எனக்கு வேண்டியது, தான்தோன்றி யாக, தத்தாரியாகத் திரியவேண்டிய சுதந்தரம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் சுதந்தரம் என்பது மனம்போனபடி தெருவில் திரிவது அல்ல என்பதை அறியாத மூடமல்ல நான். அவரிடம் நான் வேறெதையும் வேண்டவில்லை. நான் ஒரு மனிதப் பிறவி, எனக்கும் மனிதத் தன்மையும் உணர்ச்சிகளும் உண்டு என்பதை அங்கீகரிக்குமாறுதான் வேண்டினேன். அதற்காகவே அவருடன் போராடினேன், பிடிவாதம் பிடித் தேன். அந்தப் பிடிவாதத்தில் இன்று நான் வெற்றி பெற்று விட்டேன். ஆனால் இந்த வெற்றிக்காக நான் எதை இழந் தேன்? எனது தாம்பத்திய வாழ்க்கையை, சமூகத்தில் எனக்கு இருந்திருக்க வேண்டிய ஸ்தானத்தை இழந்து நிற்கிறேன். இழந்த என் வாழ்வை இனி நான் திரும்பப் பெறுவது இயலாத காரியம். என் மனிதத் தன்மையைக் காப்பாற்றிக் கொள் வதற்காக, மிருகமாக வாழ நான் ஒப்பாதபோது நடந்து கொண்டதை வேண்டியவர்கள் வேண்டியபடி திரித்துக் கூற லாம். நான் என் உள்ளத்தை வேறு யாருக்கோ பறிகொடுத்து விட்டு அவர்மேல் மோகம் கொண்டிருப்பதாக ஆனந்தன் நினைத்துக்கொண்டார். நான் அந்தச் சிறையிலிருந்து தப்பிய பொழுது எந்த நிர்ப்பந்தத்தால் உந்தப்பட்டு அந்த முடிவுக்கு வந்தேன் என்பதை அறியாத பாஸ்கரன் என்னைத் தன் வலையில் போட்டுக் கொள்வது இனி வெகு சுலபம் என்று மனப்பால்

குடித்தான். நாத்தனருக்கும் அவரது எஜமானருக்கும் என் நடத்தை அவர்கள் பண்புக்கும் கலாசாரத்துக்கும் விரோதமாக இருப்பதாகப் பட்டது. ஆனல் இவர்களில் ஒருவராவது நான் ஏன் அப்படி நடந்து கொள்ளுகிறேன் என்பதைப் பற்றி நினைக்கவே இல்லை; அதைப்பற்றி யோசிக்கவும் இல்லை. அவரவர்கள் தங்களுக்குத் தோன்றியதைக் கற்பனை செய்துகொண்ட போதிலும் எல்லோரும் ஏறக்குறைய என் நடத்தையின் விபரீதத்திற்கு ஒரே ஒரு காரணத்தைத்தான் கற்பித்துக்கொண்டனர் — அதுதான், நான் விபசாரி என்பது!

கட்டும் திட்டமும் இல்லாத வாழ்வு இல்லை என்பதை நான் அறியாதவளல்ல. பிறந்தது முதல் சுடுகாடு ஏகும் வரையில் ஆயிரம் கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டு வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிற மனிதர் இந்த வாழ்க்கையில் சுதந்தரம் வேண்டும் என்று ஆசிப்பது வீண் கனவு. வேறு எந்தக் கட்டுகள் இல்லாமற் போனலும் நாம் நமது பெற்றோரின் குழந்தைகள் என்ற தளை, அவர்களது ஆஸ்தியில்லாவிட்டாலும் ரத்த சம்பந்தம் என்ற தளை, நாம் எவ்வளவுதான் சுதந்தர எண்ணம் கொண்டவர்களானலும் நம்மைச் சுற்றியுள்ள சமூகவாழ்வு என்கிற இரும்புச் சங்கிலி, நமது உடலின், நமது மனத்தின், நமது மனிதத் தன்மையின், கடைசியாக நாம் நாமே; வேறு யாரும் அல்ல என்ற தளைகள் ஒன்ரு இரண்டா! விவாகம் நிச்சயமானபொழுது நான் இப்படிப்பட்டவரின் மனைவியாக ஒப்பமாட்டேன் என்று சொல்லியிருந்தால் எனக்கு விவாகமே நடந்திருக்காது. ஆனல் அந்தத் தளையை ஒப்புக் கொண்ட நான், என் தனிவாழ்க்கையை, என் மனிதத் தன்மையை இழக்க ஒப்புக்கொள்ள வில்லை. என்னைச் சுற்றியிருந்தவர்கள், என் வாழ்க்கையில் குறுக்கிட்டவர்கள் எதை நான் மிக்க ஜாக்கிரதையோடு பாதுகாத்துக்கொள்ள விரும்பினேனே அதையே நான் இழக்க வேண்டுமென்ருர்கள்; அதற்காகவே முரண்டு செய்தார்கள். ஆனந்தனுக்கு நான் தாசியாக வேண்டியிருந்தது, பாஸ்கரனுக்கு நான் வேசியாக வேண்டியிருந்தது, நாத்தனருக்கு நான் வீட்டு வேலைக்காரியாக வேண்டியிருந்தது. இன்னும் யார் யாருக்கு நான் என்ன என்னவாக ஆகவேண்டியிருந்ததோ!

எனக்கு இவையொன்றும் வேண்டியிருக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஆனந்தனின் மனைவியாக விரும்பினேன். அவரது சகதர்மிணியாக விரும்பினேன். மனிதப் பிராணி என்ற சுதந்தரத்துடனும் மனைவி என்ற கட்டுப்பாடுடனும் வாழ நான் ஆசை கொண்டேன். அந்த அஸ்திவாரத்தின் மீது

சொப்பன மாளிகையை நிர்மாணித்தேன். அதற்குச் சுகம் என்ற தோரணத்தைக் கட்டி அலங்கரித்தேன். அந்த வீட்டிற்கு ஆனந்தன் அரசன். நான் அவரது அரசியாகி, அவரது பாதசேவை செய்து வந்தேன். அப்படியிருக்கும் பொழுது ஆனந்தன் அரசனுகவும் நான் அவரது தாசியாகவும் மாற வேண்டி வந்தது. ராஜா - ராணி என்ற சம்பந்தம் நீங்கி எஜமானன் - சேவகி என்ற சம்பந்தம் தலை காட்டிற்று. சுகம் என்னும் தோரணங்கள் அறுந்து விழுந்தன. நான் கனவு கண்ட பூந்தோட்டம் கட்டாந்தரையாயிற்று. எனது சொப்பன மாளிகை இடிந்து தரைமட்டமாயிற்று. இந்தத் துக்கத்திஞல் இன்று என் உள்ளம் உடைந்துபோய் விட்டது. இனி நான் ஏன் வாழவேண்டு மென்றும் தோன்றுகிறது. எனக்கு வேண் டியது, கணவன், புக்ககம் என்ற கட்டுப்பாடில்லாது சுயேச்சை யாகத் திரிய வேண்டும் என்னும் ஆசையாக இருக்குமானல் இன்று நான் வெற்றிப் பெருமிதத்தில் திளைத்துக் கொண்டிருக்க வேண்டும். சுகவாழ்க்கை என்ற ஆசை இன்று எனக்கு இல்லை—அது வாடிப்போய் விட்டது, வெயிலில் வாடும் மலரைப்போல.

வாழ்வின் எந்தச் சக்தி என்னை உங்கள் பால் கொண்டு சேர்த்ததோ நான் அறியேன். உங்கள் அநுதாபம் என்னைச் சிறைப் பிடித்தது. அந்த அநுதாபத்திற்காகவே நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். அதனாலே தான் வேறு யாரிடமும் பேசாத, பேசக் கூடாத மொழிகளை உங்களெதிரே மனம் விட்டுப் பேசி னேன். இப்பொழுது என் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறேன். அதனுல் தான் சொற்ப காலத்திற்குள்ளே நம்மிருவ ரிடையே ஓர் அந்நியோந்நியம் வளர்ந்தது. ஆனுல் ஒவ்வொரு நிமிஷமும் என்னை நானே கேட்டுக் கொள்வேன்: 'இந்த அந்நியோந்நியம் என்னை வேறு விபரீத வழியில் இறக்கி விட்டால்?' என்று. உங்க ளுடன் இருந்தபோதெல்லாம் நான் கூரிய வாள் முனையில் இருப் பது போலவே இருந்தேன். அன்று கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பொழுது என் மனம் சிறிது சஞ்சலம் அடைந்து எல்லையை மீற இருந்தது. ஜுஹுவைப் பற்றி நான் கண்ட கனவையும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். வழி தவறிச் செல்ல என்னை உந்திக்கொண்டிருந்த மனத்தின் கோளாறேதான் அந்தக் கனவு! உங்களிடம் ஒளிக்காமல் சொல்லுகிறேன். அந்தக் கனவில் நாம் புரிந்த சரசமும் சல்லா பமும் ரதியையும் மன்மதனையும் வெட்கித் தலை குனியச் செய்யும். இதை எழுத எனக்கு எவ்வளவோ வெட்கமாகத் தான் இருக்கிறது. ஆனுலும் அது கனவு, என் மனத்தின் பிடிப்புக்கு அடங்காத விஷயம். வேண்டாம் என்று விரும்பினல்

தடுக்கக்கூடியவையல்ல கனவுகள். ஆனால் அப்படிப்பட்ட இன்பத்தை அடைய என் மனம் ஆசைப்பட்டதுண்டு என்பதை மறுக்க மாட்டேன். அன்று நடந்த துர்ச்சம்பவம் நமது அந்நியோந்நியத்திற்கு ஓர் எச்சரிக்கை! நல்ல வேளையாக நமது நெருங்கிய தொடர்பு தீய வழியில் இறங்காமல் அது நம்மைக் காப்பாற்றியது. கால் தவறி வழுக்கி விழ இருந்த சமயத்தில் எச்சரிக்கை செய்தது போலாயிற்று. இன்னும் சில நாட்கள் நமது நட்பு நீடித்திருந்தால் ஒருநாளில்லாவிட்டால் ஒரு நாள் என் ஆசை கட்டுக்கடங்காமற் போய் வழி தவறியிருந் தாலும் தவறியிருப்பேனோ என்னவோ! அழகின் இருப் பிடமான இந்த எனது உடலில் ஓடும் ரத்தம் வெப்பமுடையது தான்! காமன் என்னை விடவில்லை; நறுமணத்தின் ஆசை காட்டி என்னை மயக்குவதில் இருந்தான்! மண்ணில் முளைத்த செடி நான்! அந்த மண்ணுக்குள்ள அம்சம் என் உடலில் இல்லாமற்போகுமா? என்னிடம் ஏற்பட்ட இந்த மாறுதலை நான் உங்களிடமும் கண்டேன். என்னைப் போலவே உங்களிடமும், முதலில் அநுதாபத்தோடு தோன்றிய அன்பு திசை கெட்டு வேறு வழியில் செல்ல ஆரம்பித்தது. உங்களையும் அறியாமலே நீங்கள் காமத்திற்குப் பலியாக இருந்தீர்கள். நமது நல்ல காலத்தினால் நாம் சரியான சமயத்தில் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகி நமது தூய்மை யைக் காப்பாற்றிக் கொண்டோம்! நமது அந்நியோந்நிய பாவம் வெறும் நட்போடு நின்றது! அதனாலே தான் குற்ற மில்லா நெஞ்சுடன் இன்று இவ்வளவு தைரியமாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

எனக்குச் சுகத்தைத் தேடப் போய் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் துன்பத்தைத் தருவித்துக் கொண்டீர்கள். நல்லது செய்யப் போய் அபவாதத்தை ஏற்றுக் கொண்டீர்கள். அவமானத்தையும் வரவழைத்துக் கொண்டீர்கள். எனது துன்பத்திற்காக நான் வருந்தவில்லை. அது எனக்கு என்றைக்கும் இருந்திருக்கிறது. ஆனால் எனக்காக நீங்கள் வீணான மன வேதனைக்கு ஆளானதை நினைத்துத்தான் வருந்துகிறேன். என்னை நீங்கள் மன்னியுங்கள். இந்த வேண்டுகோளைத் தவிர வேறு எந்த வகையிலும் உங்களுக்குச் சமாதானம் சொல்ல முடியாதவளாக இருக்கிறேன். எந்தச் சக்தி நம்மைச் சந்திக்க வைத்ததோ அதுவே உங்களுக்குத் துக்கத்தையும் தந்தது; அதே சக்தி எனது சொப்பன மாளிகையையும் இடித்துத் தகர்த்தது. அதே சக்தியின் பிரபாவத்திற்குட் பட்டே சுபாவத்தில் நல்லவரான ஆனந்தன், பாஸ்கரன் போன்றவர்களுக்குப் பலியானார். தானும்

108,002

பாழடைந்ததோடு என்னையும் பாழாக்கினர். சுகத்தின் சாம்ராஜ்யமாக இருக்க வேண்டியதைச் சுடுகாடாக்கினர். அவர் அப்படிச் செய்தார் என்று சொல்லுவது கூடத் தவறு. யார் என்னத்தைச் செய்ய முடியும்?

இன்று நான் கதிபற்றவளாகி விட்டேன். தகப்பனில்லாத பரதேசியாகிய நான் இன்று புருஷனை அடைந்துள்ள விதவையாக இருக்கிறேன். வீட்டில் தாயின் ஆசிரயம் இருந்தாலும் சமூகத்தில் ஆசிரயம் இல்லாத அநாதையாகி விட்டேன். ஆனால் நான் நிரபராதி என்ற ஆத்ம விசுவாசம் இருக்கிறது. வாழ வேண்டுமென்ற ஆசையும் எனக்கு இருக்கிறது. ஆனால் அந்த ஆசைக்காக என் ஆத்மாவை விற்றுவிட நான் தயாராயில்லை. நான் இனி என்ன செய்வேனோ, வாழ்ந்திருந்து எதைச் சாதிக்கப் போகிறேனோ ஒன்றையும் இப்பொழுது சொல்ல மாட்டேன். உலகத்தைச் சீர்திருத்த நான் கிளம்பவில்லை. அந்தச் சக்தி என்னிடம் கண்டிப்பாக இல்லை. மனிதனாகப் பிறந்தவன் மனிதத் தன்மையோடு வாழ்வதுதான் ஆத்மவிகாசத்திற்கு முதல்படி என்பது என் துணிபு. அந்தத் துணிவு என்னை எங்கு இழுத்துச் செல்லுமோ அங்கு செல்லுகிறேன். உங்கள் அநுதாபம் எனக்கு வழிகாட்டி. உங்கள் உள்ளத்தை அறிந்துள்ள நான் உங்களிடம் வேறு எதையும் யாசிக்கப் போவதில்லை. இப்பொழுது நான் உங்களிடமிருந்து பெற்றுள்ள உபகாரத்தின் சுமையையே தாங்க முடியாதவளாக இருக்கிறேன். நூறு விதங்களில் நான் உங்களுக்குத் தொல்லைக்கும் தொந்தரவுக்கும் காரணமாக இருந்து விட்டேன். ஆனால் உங்களைத் தவிர வேறு யாருக்கும் என் உள்ளத்தைத் திறந்து காட்டுவது அசாத்திய மென்று தோன்றியதனாலும் அப்படி நான் செய்தாலும் அதனால் ஏதும் பயன் கிடையாது என்பதை அறிந்திருப்பதனாலும் இந்த நீண்ட கடிதத்தை எழுதி உங்களுக்கு மேலும் தொந்தரவளித்து விட்டேன். அதற்காகவும் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனந்தன் உங்களிடம் முன் போல் மீண்டும் நட்புக் கொண்டிருந்தால் முடியுமானால் இந்தக் கடிதத்தை அவருக்கும் காட்டுங்கள்; அதுவும் அவர் பார்க்க விரும்பினால்தான். நமஸ்காரம்!

யாருக்கும் வேண்டாதவள்,

மோஹினி.

---

DB / 6-27